ஜோதி

ஆசிரியர் வெ. சாமிநாத சர்மா

சுடர் 1 டிசம்பர் 1937 கதிர் 5

அடுத்த பக்கங்களில்

நமது நியாய சபை	தலையங்கம்	1
உலகத்திலே என்ன நடக்கிறது?	—	10
சீன தேசிய கீதம்	—	14
ஜப்பானிய தேசிய கீதம்	—	15
சிறை மீட்சி—ஓரங்க நாடகம்	ஸ்ரீ. ஸ்ரீ. ஆச்சாரியா	16
ராம்ஸே மாக்டோனல்ட்	—	22
ஸர் ஜகதீச சந்திர போஸ்	—	23
பண்டிதர் கு. பக்கிரிசாமிப் பிள்ளை	—	24
ராக்பெல்லர் நீண்ட காலம் வாழ்ந்ததன் ரகசியம்	டி. கோபால கிருஷ்ணய்யா M. A., M. Sc., Ph. D.	25
மாஸ்கோ—ருஷ்யாவின் தலை நகரம்	ஐ. மா.	29
உலகத்திலுள்ள பெரிய நகரங்கள்	—	32
அம்பி அறம் வளர்த்த முதலியார்	எஸ். சோமசுந்தர தேசிகர் (இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை)	33
அலாடின் விளக்கு	ஜே. ஆர் லவல்	35

பர்மிய மன்னர்களின் கீழ் அரசாங்க முறை	கு. கோ. கிருஷ்ணன் B. Sc., (Hons)	36
அசோகன் சாஸனங்கள்	"மௌத்கல்யன்"	38
ஞானக் களஞ்சியம்	—	42
ஜார்ஜ் யூல்	ஒரு காங்கிரஸ் வாதி	44
இவ்வளவு பணமா?	—	45
அயர்லாந்தில் மூன்று நாட்கள்	நமது அந்நிய நாட்டு நிருபர்	46
புராதன ரோம தேசத்துக் கல்வி முறை	வி. கே. ஜெயலட்சுமி அம்மாள் B. A., B. ED.,	51
கடன் ஒரு—சனியன்	—	55
கனகாவின் கடிதங்கள்	"சரசா"	56
எழுபத்தாறு வயது குழந்தை!	வி. ஏ. சுந்தரம்	58
பாசிஸம்—பொதுவுடமை—ஜனநாயகம்	ரதிலால் தேசாய் M. A., (OXON)	61
கடவுளைப் பற்றி—	எஸ். கே. நாராயண ஐயர் B. A., B. L.,	64
என் தாய் நாடு	நாராயண வாமன் திலகர் மொழி பெயர்த்தவர்: பொ. திரிகூட சுந்தரம் பிள்ளை M. A., B. L.,	69
இப்படியும் நடக்குமா?	—	70
துலாக்கோல்	—	72
புலவர்கள் பட்டபாடு	முத்துசாமி கார்த்திகேயன்	75
சைக்கிள் யாத்திரை	சி. டி. வி. ராஜன்	78
இந்தியாவின் வியாபாரம்—ஒரு வருஷத்தில்	—	81
வாயு மண்டலத்தின் உயர மென்ன?	"விஞ்ஞான போதகர்"	83
நமது அரசியல் டைரி	—	89
அன்றாட உலகம்	—	95
விசுவ விசித்திரம்	படங்கள்	99
மாணவர்களின் பிரதிக்ஞை	வி. தேவாச்சாரியன்	105
வல்லரசுகளின் கப்பற் படை பலம்	—	107
நமது நிருபர்களுடன்—	—	109
முஸ்லீம் கவியரசர் ஸர் முகமது இக்பாலின் சில பாடல்கள்	தி. பி.	112

சித்திர விளக்கம்.

ஓடி விளையாடு பாப்பா
    நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா
    ஒரு குழந்தையை வையாதே பாப்பா
சின்னஞ் சிறுகுருவி போலே
    நீதிரிந்து பறந்துவா பாப்பா
வன்னப் பறவைகளைக் கண்டு
    மனதில் மகிழ்ச்சிகொள்ளு பாப்பா
கொத்தித் திரியுமந்தக் கோழி
    அதைக் கூட்டிவிளையாடு பாப்பா
எத்தித்திருடுமந்தக் காக்காய்
    அதற்கிரக்கப்படவேணும் பாப்பா

ஃ ஃ ஃ ஃ

உயிர்களிடத்தில் அன்பு வேணும்
    தெய்வம் உண்மையென்றுதானறிதல் [வேணும்
வயிரமுடைய நெஞ்சுவேணும்
    இது வாழும்முறைமையடி பாப்பா

பாரதியார்.

ஜோதி

சுடர் 1 டிசம்பர் 1937 கதிர் 5

சரிதான்

இந்திய தேசியகீதம் தற்காலிகமாக இன்னது தான் இருக்க வேண்டுமென்பதைப்பற்றி இனி அதிகமான வாதப் பிரதி வாதங்கள் இராதென்று நம்புகிறோம். ஏனென்றால் கல்கத்தாவில் தேசியத் தலைவர்கள் கூடி வந்தேமாதர கீதத்தின் முதல் இரண்டு அடிகளையே தேசிய கீதமாக உபயோகிக்க வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார்கள். எல்லாத் தேசிய ஸ்தாபனங்களும் இனி இந்த வழக்கத்தைக் கைக் கொள்ளும் என்று எதிர் பார்க்கிறோம். இதில் பாஷை வேற்றுமைகளையோ மாகாண வேற்றுமைகளையோ கொண்டு புகுத்த வேண்டா மென்று கேட்டுக் கொள்கிறோம். மூலத்திலுள்ள இரண்டு அடிகளை அப்படியே பாடுவதுதான் நல்லது. அதன் மொழி பெயர்ப்பை, அந்தந்த பாஷைகளில், பின்னர் வேண்டுமானால் விவரித்துச்சொல்லலாம். இந்தியாவெங்கணும் ஒரே குரலில் இந்தக் கீதம் ஒலிக்க வேண்டுமென்பது நமதுவிருப்பம். சுயமரியாதையுடையவர்கள்தான் பிறரிடமிருந்து மரியாதை பெற முடியும். அதைப் போல, நமது தேசிய கீதத்தை நாம் கௌரவித்தால்தான், பிறர் அதற்கு மரியாதை செலுத்துவர். இந்த முதல் இரண்டடிகளை தேசிய கீதமாக ஏற்றுக் கொள்வதில் நமது முஸ்லீம் சகோதரர்களுக்கு எவ்வித ஆட்சேபமும் இராதென்று நம்புகிறோம். மற்ற தேசியகீதங்களைப் பற்றிப் பரிசீலனை செய்ய அறிஞர் பலர் அடங்கிய சபை யொன்று அமைக்கப் பட்டிருக்கிறது. இந்தச் சபையினர், முடிவான ஒரு தேசிய கீதத்தை நிர்ணயிக்கிற வரையில் பங்கிம் சந்திரருடைய இந்த வந்தேமாதர கீதத்தின் இரண்டு அடிகளைத் தேசிய கீதமாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

தனி மாகாணங்கள்

இடத்திலும் காலத்திலும் உலகம் எவ்வளவு சுருங்கிக் கொண்டு வருகிறதோ அவ்வளவுக்கவ்வளவு வகுப்புணர்ச்சிகளும், பாஷை வித்தியாசங்களும் விரிந்து கொண்டு வருகின்றன. சிறப்பாக இந்தியாவில் இப்பொழுது இவை தலை தூக்கி நிற்கின்றன.

இவற்றை அவ்வளவு பிரமாதமாகப் பொருட்படுத்த வேண்டிய தில்லையென்றாலும், இவை தேசிய வாழ்விலே தோன்றுகிற கொப்புளங்களைப் போல் நமது கண்களை உறுத்துகின்றன. இப்பொழுது ஆந்திர நாட்டார், தங்களுக் கென்று தனி மாகாணம் வேண்டுமென்று கிளர்ச்சி செய்து வருகின்றனர். காங்கிரஸ் கட்சியினர், மந்திரிப் பதவிகளை ஏற்றுக் கொண்ட பிறகு, இந்தக் கிளர்ச்சி சிறிது வலுத்து நிற்கிறது. இதற்குக் காரணம் என்ன வென்று ஊகிக்க முடியவில்லை. இதே மாதிரி, கன்னட மொழியைத் தாய் மொழியாகக் கொண்டுள்ள அன்பர்கள், கர்நாடக மாகாண மென்று தனி மாகாண மொன்று வகுக்க வேண்டு மெனக் கோருகின்றனர். ஆனால் பொதுவாக, இந்தியாவை இப்பொழுது பதினொருமாகாணங்களாகப் பிரித்திருப்பது சரியான பிரிவினையல்லவென்பது நமது அபிப்பிராயம். ஜனங்களுடைய ஒற்றுமையைக் குலைக்கக் கூடிய மாதிரிதான் இந்த மாகாணங்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. மொழி வாரியாக இந்த மாகாணங்களைப் பிரித்து விடுதல் மிகவும் நல்லது.

ஹரிஜன் மேயர்

சென்னை நகரசபையின் மேயராகத் தெரிந்தெடுக்கப் பட்ட ஸ்ரீமான் சிவ ஷண்முகத்தை நாம் பாராட்டுகிறோம். ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்களில் இவர் தான் முதன் முதலாக இந்தக் கௌரவத்தை வகிக்கிறார். எல்லா வகையிலும் போலவே, இதிலும் நமது தமிழ் நாடு வழி காட்டியிருப்பது குறிப்பிடத் தக்கது. ஆனால் ஹரிஜனங்களென்று அழைக்கப் படுகிற இவர்களெல்லாருமே கூடிய சீக்கிரத்தில் ஹிந்து சமூகம் என்கிற மகா சமுத்திரத்திலே கலந்து அந்தப் பெயராலேயே அழைக்கப் பட வேண்டு மென்பது நமது விருப்பம். தீண்டாமையை சாஸ்திர பூர்வமாகவும் அநுபவ பூர்வமாகவும் நாம் அங்கீகரியாத போது, ஹரி ஜனங்கள் என்று ஒரு சமூகத்தைப் பிரித்து வைத்து அவர்களை அந்தப் பெயரால் அழைப்பானேன்?

விடுதலை

விசாரணையின்றி வீடுகளிலும் கிராமங்களிலும் பந்தோபஸ்தில் வைக்கப்பட்டிருந்த சுமார் 1100 அரசியல் வாதிகளை வங்காள அரசாங்கத்தார் விடுதலை செய்திருக்கின்றனர். இதற்காக அவர்களைப் பாராட்டுகிறோம். ஆனால் விடுதலை பெற்றவர்கள் காந்தியடிகளுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள். சுமார் இருபது நாட்களுக்கு மேல் கல்கத்தாவில், அரசாங்க உறுப்பினர் அனைவரையும் கலந்து பேசி, இந்த விடுதலையை ஏற்படுத்திக் கொடுத்தது அவர் தான். விடுதலையடைந்தவர்களில் பெரும்பான்மையோர் இளைஞர்கள்; படித்தவர்கள்; தேசபக்தியும் உணர்ச்சியும் நிரம்பியவர்கள். இவையனைத்தையும் இவர்கள் தேச நிர்மாண வேலைகளில் செலுத்துவார்களென்று நம்புகிறோம்.

மகாத்மா—ஒரு தொண்டன்

<u>தொண்டன்:</u> அரசியல் லட்சியங்களை அடைவதற்காக பலாத்காரத்தையும் ரத்தம் சிந்துதலையும் நீங்கள் அங்கீகரிக்கிறீர்களா?

<u>காந்தி:</u> சரித்திரம் அப்படிக் கூறலாம். ஆனால் சமாதான முறைகளில் சுதந்திரத்தை யடையலாம் என்று நான் கருதுகிறேன்.

<u>தொண்டன்:</u> முடியாமற் போய் விட்டால்?

காந்தி - அப்படியானால் இந்தியா அழிந்து போகட்டும். எந்த வழியாகவும், பலாத்காரத்தையும் ரத்தஞ் சிந்துதலையும் நான் நடைமுறையில் கொணர மாட்டேன்.

இவர்தான் ஒரு ஞானி. லட்சியத்திற்காகப் பாடுபடுகிற மஹான். அந்த லட்சியம் குறுகிய வகுப்புக்குள்ளோ பிரிவுக்குள்ளோ அடங்கியிருக்க வில்லை, தம்மைச் சுற்றி யிருக்கும் சக்திகளினால் பாதிக்கப்படாமல் அவர் மனித சமூகத்தின் நன்மை என்ற ஒன்றினையே குறிக் கோளாகக் கொண்டிருக்கிறார்.

மகாத்மா காந்தியைப் பற்றி அறிஞர் ராதாகிருஷ்ணன் வரையும் சொற் சித்திரம் இது.

ராஜ பக்தி-தேச பக்தி

தங்கள் அரசருக்காக ஜனங்கள் சண்டை போடுகிறார்களென்று சொன்னால் அதில் அர்த்த மிருக்கிறது. ஆனால், தங்களுக்குச் சொந்தமில்லாத நாட்டிற்குச் சண்டைபோடுகிறோம் என்று இவர்கள் சொன்னால் அதில் என்ன அர்த்தம் இருக்கிறதென்று தெரிய வில்லை.

என்று சொல்லிவிட்டு, 'ஆதலின் நமது நாட்டின் சுதந்திரத்திற்காக முதலில் நாம் பாடு பட வேண்டாமா' என்று நம்மைக் கேட்கிறார் ஸர் வாஸிர் ஹுஸேன். தேய்பிறை நிலையில் இருக்கிற ஜனாப் ஜின்னா கட்சியின் செவிகளில் இஃதெவ்வளவு தூரம் விழும் என்பது நமக்குத் தெரியாது. ஆனால் எவ்வளவு சீக்கிரத்தில் அவர்கள் காதில் இது விழுகிறதோ அவ்வளவு நல்லது அவர்களுக்கும் தேசத்திற்கும்.

பிஜ்னோர் தேர்தல்

ஐக்கிய மாகாணத்தில் பிஜ்னோரில் நடைபெற்ற இடைத் தேர்தல், நமது முஸ்லீம் லீக் சகோதரர்களுக்கு ஒரு பெரிய விழிப்பை உண்டு பண்ணியிருக்கும் என்று நம்புகிறோம். அப்படி விழிப்பு உண்டு பண்ணவில்லையானால், அதிர்ச்சியையாவது உண்டு பண்ணியிருக்க வேண்டும். இந்த இரண்டும் அவர்களுக்கு உண்டாகவில்லையானால் எவ்விதத்திலும் திருத்தியமைக்க முடியாத நிலையில் அவர்கள் இருக்கிறார்கள் என்றுதான் கொள்ள வேண்டும். காங்கிரஸ் சார்பாக நின்ற அபேட்சகருக்கும், முஸ்லீம் லீக்-சார்பாக நின்ற அபேட்சகருக்கும் இடையே ஐயாயிரம் ஓட்டுகள் வித்தியாசம் இருக்கின்றன. இதனால் பாமர ஜனங்களுக்குள், வகுப் புணர்ச்சி ஒன்றுமே இல்லையென்பது நன்கு விளங்குகிறது. ஹிந்து வாகட்டும், முஸ்லீம் ஆகட்டும் பொருளாதார நிலையில் எல்லாருமே ஒன்று பட்டவர்களாக இருக்கிறார்கள். எல்லாருமே பிரிட்டிஷ் ஆட்சிக்குட் பட்டவர்களாகவும் இருக்கிறார்கள். இந்தியாவுக்கு ஏற்படுகிற கௌரவமோ, அகௌரவமோ இரண்டு பேரையும் சார்ந்தது தான். இந்த நிலையிலேயுள்ள சாதாரண ஜனங்களிடத்தில் சென்று, வகுப்புணர்ச்சி என்ற விஷத்தை ஊட்டுதல் சரியான செயலாகாது. தவிர சென்ற முஸ்லீம் லீக் கூட்டத்திற்குப் பிறகு, முஸ்லீம்கள் ஆயிரம் ஆயிரமாகக் காங்கிரசில் சேர்ந்து கொண்டு வருவது, தேசத்தின் ஜீவ நாடி எந்தத் துடிப்பில் துடித்துக் கொண்டிருக்கிறதென்பதை நமக்கு நன்றாகத் தெரிவிக்கின்றது. இதை ஜனாப் ஜின்னா கட்சியினர் விரைவினில் உணர்ந்து கொள்ளுதல் நல்லது.

ஹிந்து மகா சபை

இந்தச் சமயத்தில் ஹிந்து மகா சபையினருக்கும் ஒரு வார்த்தை. காங்

கிரஸையோ, மற்ற ஸ்தாபனங்களை யோ, தூஷித்துக் கொண்டு வகுப் புணர்ச்சியை வலுப்படுத்திக் கொண்டு வருவதனால், தேசத்திற்கு எவ்வித நன்மையும் உண்டாகாது. காங்கிரஸ், தேசத்தின் முற்போக்கான சக்திக ளனைத்தையும் இழுத்துக் கொண்டு செல்கிற ஒரு ரதம். இதனை முட்டுக் கட்டைபோட்டு நிறுத்த முயல்வது சிறு பிள்ளைத் தனமேயாகும். தவிர, நமது அபிப்பிராயத்தில் ஹிந்து மகா சபையென்றும் முஸ்லீம் லீக் என்றும் தனி ஸ்தாபனங்களே வேண்டாமென்று கருதுகிறோம். இவை யாவும் காங்கிரசில் ஐக்கியமாகி விடுதல் நல்லது. டாக்டர் மூஞ்சேயும் பாய் பரமானந்தரும், தங்களுக்கு இதுவரை ஏற்பட்ட சறுக்கல்களுக் குப்பிறகுகூட இந்த உண்மையை உணர்ந்து கொள்ளவில்லை யென்றால் இவர்களே ஹிந்து மகா சபையாக இருந்து கொள்ள வேண்டியதுதான்.

சக்ரவர்த்தியின் உதாரணம்

சென்ற சில வருஷங்களாக இந்தி யாவிலிருந்து ஏராளமான தங்கம் வெளி நாடுகளுக்குச் சென்று கொண் டிருக்கிறது. இதனால் விளையும் தீங்கு களை பொருளாதார நிபுணர்கள் பல முறை வற்புறுத்திச் சொல்லியிருக் கிறார்கள். ஆனால் தேசிய அரசாங் கம் இல்லாத ஒரு குறையினால் இந் தத் தங்க ஏற்றுமதியை நம்மால் தடுக்க முடியவில்லை. மற்றொரு நாட் டிலே என்ன நடக்கிறதென்று பாருங் கள். ஈரான் (பர்ஷியா) தேசத்துச் சக்ரவர்த்தி, தமது சொந்தத் தங் கத்தை யெல்லாம், 'ஈரான் நேஷ னல் பாங்கி'க்கு நன்கொடையாகக் கொடுத்து விட்டார். வெளி நாட்டு வியாபாரிகளுக்குத் தங்கத்தை விற் காமல், பாங்கிக்கே விலைக்கு விற்கு மாறு ஜனங்களிடையே பிரசாரம் நடை பெறுகிறது. இப்படி அந்த நாட்டின் பொருள்கள் அந்த நாட் டிலேயே தங்குவதனால், தேசத்தின் பொருளாதார அஸ்திவாரம் வலு வடைந்து நிற்கிறது. ஆனால் ஈரான் ஒரு சுதந்திர நாடல்லவா!

ருஷ்யாவில் மதுவிலக்கு

ருஷ்ய அரசாங்கத்தின் வருமானத் தில், கலால் இலாகாவிலிருந்து கிடைக் கிற வருமானம் முக்கியமானது. ஆனால் இப்பொழுது அந்த அரசாங் கத்தார் மதுவிலக்கு முறையை தீவிர மாக அநுஷ்டானத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். நகர சபைகளின் நிருவாகத்திற் குட்பட்ட பிரதேசங் களில் உள்ள, மதுபானக் கடைகள் பலவற்றை மூடிவிடுமாறும், தொழிற் சாலைகள் பக்கத்திலேயுள்ள கடைகளை யும் வேலைசெய்யும் நேரங்களில் மூடி விட வேண்டு மென்றும், வீதிகளில் குடித்துச் செல்கிறவர்களுக்கு அபரா தமோ பதினைந்து நாள் சிறை வாசத் தண்டனையோ விதிக்கப்படு மென்றும் உத்திரவுகள் பிறந்திருக்கின்றன. சேலம் ஜில்லாவில் மதுவிலக்குச் சட் டத்தை அமுலுக்குக் கொண்டுவந் திருப்பது 'கனவு உலகத்தில் வாழ்வ தாகும்' என்று கூறிக்கொண் டிருக்கிற நண்பர்கள் இதைக் கவனிப்பார்களா?

சமாதானப் பரிசு

1937-ம் வருஷத்து நோபல் வெகு மதி—உலக சமாதானத்திற்காக— லார்ட் செஸிலுக்கு அளிக்கப்பட் டிருக்கிறது. இதைப்பற்றி நமக்கு எவ் வித தகராறும் இல்லை. சர்வதேச சங்கம் ஆரம்பித்தது முதற்கொண்டு, இவர், அதன் நடவடிக்கைகளில் சம் பந்தப்பட் டிருக்கிறார். பிரிட்டிஷ் சர்வதேச சங்கத்தின் கிளை ஸ்தாப

னத்தின் தலைவராகப்பல வருஷகாலம் இருந்திருக்கிறார். ஆனால், இவரை விட இந்தச் சமாதானப் பரிசுக்குரியர் வேறொருவர் இல்லையா? தன்னுடைய தேசம் என்கிற குறுகிய வட்டத்திலே நின்று சுழன்றுகொண்டிராமல், 'என் தாய் நாட்டுச் சுதந்திரத்தை விட அஹிம்சையும் சத்தியமும் மேலானவை' என்று முழங்கிக்கொண்டு, அகில ஜீவராசிகளின் க்ஷேமத்தையும் சதா கோரிக்கொண்டிருக்கிற ஒரு மகான் இல்லையா? அவர் இந்தியர் என்பதற்காக அவருக்கு இந்தச் சமாதானப் பரிசு வழங்கப்பட வேண்டுமென்று நாம் கூறவில்லை. 'ஒரு லான்ஸ்பரியோ, ஒரு ஐஸக் புட்டோ உயர்ந்த தத்துவங்களைப் பற்றிப்பேசலாம்; ஆனால் ஒரு பெரிய நெருக்கடிக்கு எதிரே, முரண்பட்ட பல கொள்கைகளின் முன்னிலையிலே இந்தப் பெரிய இந்தியத் தலைவரை விட வேறு யாராவது இந்த உலகத்தில் சத்தியத்தையும் அஹிம்சையையும் உபதேசிக்கிறவர்கள் இருக்கிறார்களா?' என்று ஸர் ராதா கிருஷ்ணனுடன் சேர்ந்துகொண்டு நாம் கேட்கிறோம்.

கல்விச் சீர்திருத்தம்

'இன்றைய உலகில் கல்விச் சீர்திருத்தத்தைப் பற்றிப் பலராலும் பேசப்பட்டு வருகிறது. அப்படியானால் தற்போதைய கல்வி முறையில் என்ன தவறு இருக்கிறது? மனிதனுடைய அறிவையும், தைரியத்தையும், முயற்சியையும், திறமையையும் இஃது அதிகப்படுத்தவில்லையா? ஓர் எண்ணத்திற்காக, ஒரு சக்திக்காக ஆயிரக்கணக்கான பேர் தங்கள் எல்லாவற்றையும் அர்ப்பணம் செய்துவிடக் கூடிய துணிச்சலை இந்தக் கல்வி முறை உண்டு பண்ணவில்லையா? இப்படியெல்லாமிருந்தும், நாகரிகம் அடைந்துள்ள நாடுகள் பலவற்றுள்ளும் விஷப் புகையைத் தடுத்துக் கொள்ளக் கூடிய முகமூடிகள் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வழங்கப் படுகின்றன. இதன் அறிகுறி என்ன? எதைச் சொன்னாலும் மனதிலே நன்றாகப் பதித்துக் கொள்ளக் கூடிய இளைஞர்களை, கல்வி ஸ்தாபனங்கள் தங்கள் வசப்படுத்திக் கொண்டு, இளைஞர்கள் உள்ளத்தில் இயற்கையாக அரும்பியிருக்கும் உலக எண்ணத்தை முறித்து அதற்கு ஒரு வளைவு கொடுத்து விடுகிறார்கள். அநாகரிகர்களை நாகரிகப்படுத்துவதுபோக, நமது கல்வி நிலையங்கள், நாகரிகர்களை அநாகரிகப்படுத்தி விடுகின்றன. ஒருவனுடைய கழுத்தை முறிப்பதனால் விளைகிற தீங்குகளைக் காட்டிலும், அவனுடைய மனத்தை முறிப்பதுதான் நிரந்தரமான தீங்கை உண்டுபண்ணுகிறது. இந்த மாதிரியான பிரசாரம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறவரையில் உலகத்தில் சமாதானம் எங்கே நிலவப்போகிறது?'

தற்போதைய கல்வி முறைக்கு வக்காலத்து வாங்கிப் பேசிக் கொண்டு வரும் ஸ்ரீமான் கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார் போன்ற அறிஞர்களுக்கு இதனைச் சமர்ப்பிக்கிறோம்.

நாலரை மாதம்

சீன ஜப்பானிய யுத்தம் தொடங்கி நாலரை மாதங்களுக்குமேலாகின்றன. ஷாங்காய் ஜப்பானியர் வசப்பட்டு விட்டது. சீன அரசாங்கம், தனது தலை நகரத்தை நாங்கிங்கிலிருந்து வேறிடத்திற்கு மாற்றிக் கொண்டுவிட்

டது. இதுவரை, ஜப்பானியருடைய அறிக்கைப்படி, சுமார் ஐந்தரை லட்சம் சீனர்களும் பதினாயிரம் ஜப்பானியர்களும் இறந்து போயிருக்கலாம். சீனாவைப் பொறுத்த மட்டில் இந்த எண்ணிக்கை கொஞ்சம் மிகைப்படுத்திக் கூறப்பட்டிருக்கிறதென்பதில் ஐயமில்லை. சில தினங்களுக்குள், சீனாவைப் படுசூரணமாக்கி விடலாம் என்று ஜப்பான் நினைத்தது நிறைவேறவில்லையானாலும், அதன் ராணுவ உத்தேசங்கள் ஏறக்குறைய நிறைவேறிக் கொண்டு வருகின்றனவென்று சொல்ல வேண்டும். பத்திரிகை நிருபர்கள், சைனாவின் பலத்தைத் தூக்கி வைத்துப் பேசி, உலகத்தின் கண்ணைத் தங்கள் செய்திகளால் மூட முயற்சித்தாலும், சீனா, சறுக்கலான பாதையில் சென்று கொண்டிருப்பதை நன்றாகவே நாம் பார்க்கிறோம். இந்தக்காட்சி, நமது அநுதாபத்தை அப்படியே இழுக்கிறது. ஆனால் இத்தனை வருஷங்களாக, தான் உள் நாட்டுச் சண்டைகளிலேயே கவனஞ் செலுத்திக் கொண்டு வந்ததற்காக அது கழிவிரக்கங் கொள்ளும் என்று நினைக்கிறோம்.

ஜப்பான்

இந்த நிலையில் ஜப்பான் சிறிது மிடுக்கான தோரணையில் பேசுவது சகஜந்தானே. சமாதானம் வெகு தூரத்திலிருக்கிறதென்று ஜப்பானிய சக்ரவர்த்தி கூறுகிறார். இந்தச் சந்தர்ப்பத்தில், ஜப்பான் அநுஷ்டிக்கிற ராஜதந்திர முறைகள், அபிசீனிய யுத்தத்தின்போது முஸோலினி அநுஷ்டித்த ராஜ தந்திரத்தை விட விசித்திரமாயிருக்கின்றன. முதலிலே கொஞ்சம் கடுமையாகப் பேசுவது; பிறகு அதனின்று இறங்குவது; ஆரம்பத்தில் சில நிபந்தனைகளை விதிப்பது; பிறகு அவற்றைத் தளர்த்துவது; உலக சமாதானத்திற்காகத் தாங்கள் இந்தப் போராட்டத்தை நடத்துவதாகச் சொல்லிக்கொண்டே, ஆகாய விமானங்களிலிருந்து குண்டுகளை நிரபராதிகளான ஜனங்களின் மீது பொழிவது. இப்படியாக, தனது ராஜதந்திரச் சீட்டுகளை மாற்றி மாற்றிப் போட்டுக் கொண்டே, சீனாவில் தன் பாத்தியதையை ஊர்ஜிதப்படுத்திக் கொண்டு வருகிறது. ஆனால் உலக வல்லரசுகள், இந்த ஆக்ரமிப்பைக் கொஞ்சங்கூடத் தடுக்க முடியவில்லை. ப்ரஸ்ஸெல்ஸ் மகாநாட்டிற்கு வர முடியாதென்று சொன்ன ஜப்பானுக்கு, மற்ற நாடுகள் என்ன புத்தி கற்பித்தன? ஜப்பானின் செயல் நியாயமற்றதென்று இந்த மகாநாடு ஒரு விளக்கெண்ணெய்த் தீர்மானம் நிறைவேற்றியது, ஜப்பானுக்கு மூக்குக்குமேல் கோபம் வந்துவிட்டது. 1921-22ம் வருஷம் வாஷிங்க்டன் நகரில், அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான், சீனா, பிரான்சு, இத்தலி, நெதர்லாண்ட்ஸ், பெல்ஜியம், போர்த்துகல் ஆகிய ஒன்பது தேசத்துப் பிரதிநிதிகள் சேர்ந்து, சீனாவின் சுதந்திரத்தைக் காப்பாற்றுவதாக ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார்கள். ஆனால் அதில் கையெழுத்திட்ட ஜப்பானே, இப்பொழுது சீனாவின் சுதந்திரத்தை எவ்வளவு அழகாகக் காப்பாற்றிக் கொண்டு வருகிறது! அந்த உடன்படிக்கைக்கும், தான் இப்பொழுது தொடுத்திருக்கும் யுத்தத்திற்கும் எவ்வித சம்பந்தமுமில்லையென்று ஜப்பான் கூறுகிறது! ஜப்பானின் இந்த அத்துமீறிய செயலைக் கண்டிக்க உடன்படிக்கையில் கையெழுத்திட்ட மற்ற வல்லரசுகள், இந்த நாலரை மாதத்தில் என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டன?

ஆனால் அதற்கு மாறாக, மேற்படி உடன்படிக்கையில் கையெழுத்துப் போடாத ஜெர்மனியும், கையெழுத்துப் போட்டிருக்கிற இத்தலியும், சீனாவைச் சுரண்டுகிற முயற்சிகளில் ஜப்பானுக்குத் துணைசெய்ய ஆவல் கொண்டிருக்கின்றன!

எதிர் பார்த்ததுதானே

ப்ரஸ்ஸெல்ஸ் மகாநாடு எதிர் பார்த்தபடியே குழைந்து விட்டது. ஜப்பானுடைய படையெடுப்பு அக்கிரமமானது என்ற மகா நாட்டில் நிறைவேற்றப் பட்ட தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டு வரக் கூடிய சாதனங்களோ, சந்தர்ப்பங்களோ இல்லையாதலினால் மகாநாடு கலைந்து விட்டதென்று ஓர் அறிக்கை கூறுகிறது! வல்லரசுகள், உடன் படிக்கைகளுக்கு வைக்கிற மதிப்பும், 'வல்லான் வகுத்த வாய்க்கால'த் திருப்ப முடியாத இவைகளின் பலஹீனமான நிலைமையும் இதனின்று நன்கு வெளியாகிறதல்லவா?

பிரிட்டனும் பிராங்கோவும்

பிரிட்டனுடைய ராஜ தந்திரம் இந்தப் போக்கிலேதான் போகிறதென்று வரையறுத்துச் சொல்ல முடியாத நிலையில் இப்பொழுது இருக்கிறது. ஸ்பெயின் தேசத்திலே, செனோர் நெக்ரீனைப் பிரதம மந்திரியாகக் கொண்ட குடியரசு அரசாங்கம் வீழ்ந்து படவில்லை. அதற்கும் மற்ற வல்லரசுகளுக்கும் உள்ள தொடர்பு நீங்கிப்போக வில்லை. இந்த அரசாங்கம் சர்வ தேச சங்கத்தில் ஓர் அங்கம் வகிக்கிறது. ஆனால், தளபதிபிராங்கோவின் ஆதிக்கத்திற் குட்பட்டபிரதேசத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்தினர், ஒரு 'ஏஜெண்டை' நியமித்திருக்கின்றனர்! இதன் அர்த்தமென்ன? வியாபார நிமித்தமாக இந்த ஏற்பாடு செய்யப் பட்டிருப்பதாகச் சொல்லப் படுகிறது. பிராங்கோவின் ஆக்ரமிப்பை பிரிட்டிஷ் அரசாங்கம் ஆதரிக்கிறதா? அப்படியானால் அதை ஏன் பகிரங்கமாக வெளியிடக் கூடாது? நடுநிலைமைக் கமிட்டியின் பெயரால் பசப்பிக் கொண்டிருப்பானேன்? இத்தலி, ஜெர்மனி, போர்த்துகல் முதலிய நாடுகள், பிராங்கோவின் கட்சியை ஆரம்பத்திலிருந்தே ஆதரித்து வந்திருக்கின்றன. நடுநிலைமை என்று சொல்லிக் கொண்டே, ஜெர்மனியும், இத்தலியும் பிராங்கோவுக்கு உதவி செய்து கொண்டிருப்பது பகிரங்க ரகசியம். இதனால், இவை பிராங்கோவுக்குத் துணை செய்கின்றனவென்றால் அதில் ஆச்சரியப் படுவதற்கில்லை. பிரிட்டிஷ் ராஜதந்திரத்தைத் தான் நாம் தெரிந்து கொள்ள முடியவில்லை.

ஸ்பெயினில்

ஸ்பெயின் குழப்பம், முன்போல் இப்பொழுது அவ்வளவு உற்சாகத்தைக் கொடுப்பதில்லை. ஐரோப்பிய மகா யுத்தத்தில்கூட இப்படித்தான் ஆரம்ப உற்சாகம் இருந்தது. பின்னர் அது சகஜமாகிவிட்டது. ஆனால் ஸ்பெயின் தேச ஜனங்கள் இன்னும் பிடிவாதமாக—ருஷ்யாவின் உதவி இவர்களுக்கு இருக்கிறதென்று வைத்துக்கொண்டாலும்—இருப்பது வியக்கத்தக்கதேயாம். இந்தப்பிடிவாதமும், பிராங்கோவின் அட்டூழியமும் எத்துணை நாட்கள் இங்ஙனமே நீடித்து நிற்கும் என்பதுதான் தெரியவில்லை. பிராங்கோவின் ஆதிபத்தியத்திற்குட்பட்ட ஸ்பெயினிலே அந்நியர்களுக்கு விரோதமான உணர்ச்சி வலுத்துவருகிறதென்று, அந்தப் பிரதேசத்தைச்

சுற்றிப்பார்த்து வந்தவர்கள் தெரிவிக்கிறார்கள்.

பிராங்கோவின் ஸ்பெயினிலே உள்ள ஆகாய விமான நிலையங்களில், பிரதம உத்தியோகஸ்தர் முதல், கீழ்த்தர தொழிலாளி வரையில் எல்லாரும் ஜெர்மானியர்கள். அநேக கிராமங்களில், இத்தாலிய அநுமதிச் சீட்டின்றி பிரவேசிக்க முடியாது. அந்நியர்களிடத்தில், ஸ்பானியர்களுக்கு ஒரு துவேஷம் உண்டு. அது இரண்டுபக்கத்துச் சேனாதிபதிகளின் (அதாவது குடியரசுக் கட்சியின் சேனாதிபதிகள், பிராங்கோவின் சேனாதிபதிகள்) விரோதத்தையும் மறக்கடிக்கச் செய்து, அந்நியர்கள் மீதுள்ள துவேஷத்தை அதிகப்படுத்தும்.

இது வெர்னான் பார்ட்லெட்டினுடைய கருத்து. இந்த நிலைமை ஏற்பட்டால்தான், ஸ்பெயினுக்கு கதி மோக்ஷம் உண்டாகுமா?

ஜெர்மனியும் குடியேற்ற நாடுகளும்

வார்சேல் உடன்படிக்கையின் பயனாக, தான் இழந்த குடியேற்ற நாடுகளை மீண்டும்பெற ஜெர்மனி அவாவுறுகிறது. இந்தக் கூக்குரல், முன்னைவிட இப்பொழுது சிறிது உரத்தும், ஆக்ரோஷத் தொனியோடும் கேட்கிறது. இன்னும் ஆறு வருஷத்திற்குள் தனது பழைய குடியேற்ற நாடுகளெல்லாம் மீண்டும் தனக்குத்திரும்பி வந்துவிட வேண்டுமென்று ஹிட்லர் முழக்கம் செய்கிறான். ஆனால் இங்கிலாந்தோ, பிரான்ஸோ இதற்கு இணங்குமா? மூலப்பொருள்களைச் சுரண்டவும், ஜனங்களைக் குடியேற்றவும் இந்தக்குடியேற்றநாடுகள் தக்க வசதி ஸ்தானங்களாயிருக்கின்றன. முஸோலினி, அபிசீனியாவை விழுங்கிய தன் நோக்கமும் இதுதானே. ஜெர்மனிக்குக் கொடுக்கப்பட வேண்டிய குடியேற்ற நாடுகள்பெரும்பாலும் ஆப்ரிக்காவில் இருக்கின்றன. ஆப்ரிக்காவோ, ஐரோப்பிய வல்லரசுகளின் உறிஞ்சும் ரப்பர் குழாய் மாதிரி இருக்கிறது. யார் முதலிலே வாய்வைத்து வேகமாக உறிஞ்சுகிறார்களோ அவர்களுக்கு அதிகமாகக் கிடைக்கிறது. யாருக்குத்தான் இதனை விட்டுக் கொடுக்க மனம்வரும்? ஆனால் இந்தக் குடியேற்ற நாட்டுப் பிரச்னை, மறுபடியும் ஒரு பெரிய யுத்தத்தை மூட்டிவிடுமோ வென்று ஐரோப்பிய ராஜதந்திரிகள் அஞ்சுகிறார்கள்.

தெய்வப் பிரார்த்தனை

காந்தியடிகள் உடல் நிலை திருப்திகரமாயில்லாததைக் கண்டு எல்லாரும் கவலைப் படுகின்றனர். இந்தக் கவலை, உலகத்தின் மூலை முடுக்குகளில் சூழ்ந்திருக்கிறது. தென்னாப்பிரிக்காவில், ஜொஹான்னெஸ்பர்க்கிலுள்ள பிரபல மாதா கோயிலில், அந்தக் கோயில் பாதிரியார், காந்தியடிகள், விரைவில் குணமடைய வேண்டுமென்று (23-11-37ல்) பிரார்த்தனை நடத்தினார். இதில், இந்தியா அரசாங்க ஏஜெண்ட் ஜெனரலான சையத் ரஜா அலியும் கலந்து கொண்டார். காந்தியடிகள் எச்சமயத்தவருக்கும் எந்நாட்டவருக்கும் பொதுவானவர் என்பதற்கு இதைவிட வேறு உதாரணம் தேவையில்லையல்லவா? உலக மக்களின் இதயத்திலிருந்து உற்பத்தியாகிற இந்த நல்லெண்ணத்தின் சக்திகள், விரைவில் காந்தியடிகளை குணமடையச் செய்யும் என்பதில் என்ன சந்தேகம்?

மந்திரிகளின் நிலைமை

உரலுக்கு ஒருபுறம் இடி; மத்தளத்திற்கு இரண்டுபுறம் இடி. ஆனால் காங்கிரஸ் மந்திரிகளுக்கு நான்கு பக்கங்

களிலும் இடி. ஒரு பக்கத்தில், விரிவான அதிகாரங்களைத் தராத நிருவாகப் பொறுப்பு; மற்றொருபுறம் காங்கிரஸ் தலைமை ஸ்தாபனம்; பிறிதொரு புறம் அதிகமாக எதிர்பார்க்கிற வாக்காளர்கள்; வேறொரு பக்கம் துடித்துக்கொண் டிருக்கிற அபேதவாத சக்திகள். இவை யனைத்திற்கும் ஈடு கொடுத்துக் கொண்டு, உலக அபிப்பிராயத்தின் நன் மதிப்பைப் பெற வேண்டியவர்களா யிருக்கிறார்கள் நமது காங்கிரஸ் மந்திரிகள். காங்கிரஸ் கட்சியினர், நிருவாக பதவிகளி லிருப்பதால், சட்டம், ஒழுங்கு என்பவை யெல்லாம் சுலபமாகப் புறக்கணிக்கப் பட்டுவிடலாம் என்று சில அன்பர்கள் நினைக்கிறார்கள். இந்த மனப்பான்மை ஏற்பட்டிராவிட்டால், பம்பாய் அரசாங்கத்தார், ஷோலாப்பூர், ஆமதாபாத் முதலிய இடங்களில் 144வது தடையுத்திரவை அமுலுக்குக் கொண்டு வந்திருக்க வேண்டிய அவசியமே யிராது. சென்னைச் சட்ட சபைக் காங்கிரஸ் கட்சியினரும், பிரதம மந்திரி ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் அநுஷ்டித்து வருகிற நிருவாக முறைகளை அங்கீகரிப்பதாகத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டிய தேவையும் இராது. நமது அபேதவாத சகோதரர்கள் இந்தச் சமயத்தில்—காங்கிரஸ் கட்சியினரின் நிருவாகத் திறமை பரிசோதிக்கப் படுகிற இந்தக் காலத்தில்—அரசாங்கத்திற்குத் துணை செய்தல் இன்றியமையாததாகும். இவர்களுக்கும், அரசாங்க நிருவாகத்தை ஏற்றுக்கொண் டிருக்கும் காங்கிரஸ் கட்சியினருக்கும் கொள்கை வேற்றுமைகள் இல்லையே.

அப்படி யிருக்க, காங்கிரஸ் மந்திரிகளை ஏன் தர்ம சங்கடமான நிலைமையில் வைக்கிறார்கள்?

ஐந்து வருஷத் திட்டம்

மாகாண அரசாங்கங்களின் நிருவாகப் பொறுப்பு இப்பொழுது காங்கிரஸ் கட்சியினருடைய வசத்தில் வந்திருப்பதால், இவர்கள் தேச நன்மைக்குரிய திட்டங்களைச் செயல் முறையில் கொணர வேண்டுமென்பதற்காக ஸர் எம். விசுவேசுவரய்யா ஐந்து வருஷத் திட்டம் ஒன்றைத் தயாரித்திருக்கிறார். இந்தத் திட்டத்தின் அடிப்படையான நோக்கங்கள் மூன்று:—

(1) ஜனங்களுக்கு வேலை தேடித் தர வேண்டும்.

(2) அதிக உழைப்பினால் பொருள் உற்பத்தியை அதிகப் படுத்தி எல்லாருக்கும் பயன் படுமாறு செய்ய வேண்டும். இதன் மூலமாக ஜனங்களின் சராசரி வருமானத்தையும் வாழ்க்கை அந்தஸ்தையும் உயர்த்த வேண்டும்.

(3) திடகாத்திரமுள்ள, திறமையான, தன் தேவைகளைத் தானே பூர்த்தி செய்து கொள்கிற, செழிப்புள்ள ஒரு ஜன சமூகமாகச் செய்வதற்குரிய அபிவிருத்தி திட்டங்களை யெல்லாம் அமுலுக்குக் கொண்டு வருதல் வேண்டும்.

இவற்றை மாகாண மந்திரிகள் கவனித்திருப்பார்களென்று நம்புகிறோம். ஸர் விசுவேசுவரய்யாவின் பொருளாதார திட்டங்கள் வெறும் ஏட்டிலே கண்டு மகிழ்தற்குரியனவல்ல. அநுபவ சாத்தியமான வற்றையே அவர் கூறுவார். ஒவ்வொரு மாகாண மந்திரிச்சபையும், ஒரு நிபுணர் கமிட்டியை அமைத்து, இந்தத் திட்டத்தைப் பரிசீலனை செய்வார்களென்று எதிர் பார்க்கிறோம்.

உலகத்தில் என்ன நடக்கிறது?

ஜனநாயகம்: அட கண்ட்ராவியே! உங்கள் சண்டையில், என்னை யேன் குப்புறத் தள்ளி விட்டீர்கள்! எத்தனையோ காலமாக வாழ்ந்து வருகிறவனா யிற்றே!

(61ம் பக்கத்தில் தொடங்கும் கட்டுரையைப் பார்க்க,)



அண்ணன்: சிம்மம் ரொம்ப இளமா போயிட்டுது தம்பீ!

தம்பி: ஆமா அண்ணே! அதன் வாலிலே ஏறி மிதிச்சாக் கூட நம்மை பாத்து சிரிக்குது!

ஹிட்லரின் இரண்டு முகங்கள்

வெளி நாடுகளுக்கு ஒரு முகத்தினால் சமாதானப் பேச்சு பேசுகிறார். மற்றொரு முகத்தினால், உள் நாட்டில் என்ன அமுல் நடத்துகிறார் என்பதை நமது அன்பர் ஒருவர் வாயிலாகச் சிறிது கேளுங்கள்:--

"படம் பிடிப்பது ஜெர்மனியில் தடை செய்யப் படுகிறது. செய்திப் படங்களும், பத்திரிகைகளும், சினிமா போன்ற கலைகளும் அரசாங்கக் கண்காணிப் பில் 100 பங்கு பிரசாரமாய் இருக்கின்றன. பத்திரிகைக் காரர்களைப் பொறுத்தவரை சர்வாதிகார நாட்டைவிட அடிமை நாடு எவ்வளவோ மேல் என்று தோன்றுகிறது."



ஜப்பான்: *ப்ரஸ்ஸெல்ஸ் மகாநாட்டுத் தீர்மானத்திற்கு நான் வைக்கிற மதிப்பு இதுதான்!*



பாசிஸமே! ஏகாதிபத்திய ஆசையே! ஸ்பெயினையும், சீனாவையும் இந்தக் கோலத்திலே காணத்தான் விருப்பமா?



ஜப்பான் : வியாதியஸ்தருடைய நன்மைக்குத்தான் இந்த ஆபரேஷன்! அதோ பாருங்கள்! அவர் (வியாதியஸ்தர்?) எவ்வளவு நிம்மதியாகத் தூங்குகிறார்!

The Party Song of Kuomintang

(Chinese Nationalist Party)

(Temporarily used as Chinese National Hymn)

"San Min Chu Yi,
Our Party's aim,
To Rebuild the Republic,
And establish Universal Brotherhood.
"Press on, comrades,
Vanguard of the people!
Cease not your vigil,
But ever follow the Principles!
"Be diligent, be brave,
Be true, be loyal,
With one heart, one mind,
Carry through to the end."

சீன தேசீய கீதம்

(தற்காலிகம்)

(சீன தேசீயக் கட்சியினரால் பாடப் பெறுவது

*"சான் மின் சு யி,
நமது கட்சியின் லட்சியம் இதுவே,
குடியரசதனை மறுபடி யாக்கவும்
சகோதரத் துவமே சாரவும், உலகில்
முயலுமின் தோழரே, முன்னணிப் படைஞராய்.....
என்றும் சிரத்தை குன்றுத லின்றி
மூலா தாரம் மேலாய்க் கொள்வீர்
முயற்சியும் தைர்யமும் மொழியும் உண்மையும்
பக்தியும் இதயமும் பயிலும் எண்ணமும்
ஒரே வகைத்தாகக் குறித்தே
இறுதி வரைக்கும் ஏகுமின் தோழரே!"*

THE KIMIGAYO

The National Anthem Of Japan.

(An Unofficial English Rendering of the Kimigayo.)

A thousand years of happy reign be thine;
Rule on, my lord, till what are pebbles now
By age united to mighty rocks shall grow
Whose venerable sides the moss doth line.

ஜப்பானிய தேசீய கீதம்

(இதற்கு கிமிகாயோ என்று பெயர்)

காணுறுங் கூழாங் கற்கள் வளர்ந்தே
மருங்கே பாசி வளரும் வலிய
மலைக ளாக நிலைபெறும் வரையும்
மன்னா! நினது மகிழ்வுறும் ஆட்சி
ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் வளர்கவே.

ஜோதி

சிறை மீட்சி—ஓரங்க நாடகம்

—ஸ்ரீ. ஸ்ரீ. ஆச்சாரியா

பாத்திரங்கள் : கமலம், அவளுடைய மாற்றாந்தாய், காமப்பன், கிழ சுப்பன், சுந்தரன்.

முதல் காட்சி

கமலம்—(*அறையில் தனியாய் நின்று சாளரத்தின் ஒருசிறு துவாரத்தின் வழியாகப் பார்த்துக் கொண்டு*) 'அழகுக்கோர் அவதியுண்டோ' என்றார் கம்பர். உண்டு என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. அதோ காண்கிற சுந்தர புருஷனை விட அழகாக பிரம்மாவினால் எப்படி சிருஷ்டிக்க முடியும்? அவனது கண்ணொளியும், மூக்கமைப்பும், வாயழகும், முகக் காந்தியும்............இவ்வாறு சொல்லிக் கொண்டே போனால் முடிவே யிராது. இவைகளை எல்லாம் பிரம்மா எங்குதான் கண்டெடுத்தானோ, இப்படி ஒன்று சேர்க்க!........இவன் யாரோ? எங்கிருந்து வந்தானோ?........அந்தப் பாவி காமப்பன் ஜன்னல் கதவை அடைத்துப் பூட்டி யில்லா விட்டால் இவனைக் கண்ணாரக் கண்டு களிப்பேனே!........அட பேதை நெஞ்சே! அன்று கடலோரத்தில் இவனைக் கண்டபோது நீ கொள்ளை போனயே; அப்படியே இன்றைக்கும் செய்யப் பார்க்கிறாய்! அவனுடைய சௌந்தரிய மெங்கே! நானெங்கே! நீ என்னைச் சேர்ந்திருப்பதனால் அவன் உன்னை ஏற்க மாட்டான். நீ ஆசைப்படுவது முடவன் கொம்புத் தேனுக் காசைப்பட்டது போலாகும்.

[அறையை சுத்தம்செய்ய கிழ சுப்பன் வருகிறான்.]

சுப்பா, சுத்தம் செய்யும் போது ஜன்னல் கதவைத்திறந்து வைக்கா விட்டால் தூசி எப்படி வெளியே போகும். திறந்து வைத்துப் பெருக்கித்தள்ளு.

கி. சுப்பன்—நீ சொல்வது சரிதான். நீ எசமானியே; சொத்தை எல்லாம் உன் தந்தை உனக்கே வைத்தான். ஆனால் அதிகாரத்தை உன் மாற்றாந்தாயின் கையில்விடவே, அவள் தம்பி காமப்பன் இங்கு இட்டது சட்டமாயிருக்கிறது. நீ சொல்வதற்காகச் சற்றுத் திறந்து வைக்கிறேன்.

கமலம்—அப்பாட! இக்குளிர்ந்த காற்றையும், நீலவானையும், இனிய ஒளியையும், மனிதர் பொறாமை, என்னைப் போன்றவர்க்கு ஏனோ மறுக்கிறது? இவைகளை நானனுபவித்தால் காமப்பனுக்கு என்ன நஷ்டம்?

கி. சுப்பன்—அவனுக்கு உன்மேல் ஆசையாம்; உன்னையே மணக்கப் போகிறானாம். அதற்காக வெளியார் உன்னைப் பார்க்கலாகாதாம்; நீயும் வெளியாரைப் பார்க்கலாகாதென்கிறான்.

கமலம்—புஷ்பங்கள் மேல் ஆசை கொள்பவர்கள் இப்படி இருட்டறையில் அவைகளை வைக்கிறார்களா? இல்லையே! ஸ்திரீகளை மாத்திரம் புருஷர்கள் ஏன் இப்படிச் செய்யவேண்டும்?

கி. சுப்பன்—புருஷர்களைப் பழித்தென்ன பயன்? உன் சிறிய தாய் உடந்தையா யில்லாவிட்டால் காமப்பன் இப்படிக்கொடுமை செய்யத்துணிவானா?

கமலம்—உண்மைதான். எல்லாப் புருஷர்களுமா கொடியவர்கள்! அதோ தெருவில் ஒருவன் நிற்கிறான் பார், அவன் முகத்தில்தான் என்ன தயான

குணம்! என்ன இரக்கம்! கண்களில் என்ன குளிர்ந்த பார்வை! ஒருவன் கஷ்டப்படுவதைப் பார்த்துச் சகியான் என்பது அவன் தோற்றத்திலேயே தென்படுகிறதே!

கி. சுப்பன்—அதோ அங்கு நிற்கிறவன்தானே; எனக்கு அவனை வெகு நன்றாய்த் தெரியுமே. மிக்க நல்லவன். தங்கமான குணம்.

கமலம்—சற்று முன்பு நீ அவனோடு பேசிக்கொண்டிருந்ததனால் உனக்கு அவன் தெரிந்திருக்குமென்றே எண்ணினேன். 'நல்லாரைக் காண்பதுவு நன்றே' என்பதுபோல அவனைப்பற்றிக் கேட்பதுவும் நன்றல்லவா? அவன் யார்? சொல்லு.

கி. சுப்பன்—அவன் நன்கு படித்தவன்; தைரியசாலி; தயாளு; எளியவர்க்குற்றதுணை, நல்ல அழகுடையவன், ஆனால் ஏழை. அதனால் இக்குணங்கள் யாவும் வீண்தானே?

கமலம்—என் வீண் என்கிறாய்? பணம் இன்றில்லாவிட்டால் நாளைக்கு சம்பாதித்துக் கொள்ளலாம். உயர்ந்த குணம் அப்படி வருமா?

கி. சுப்பன்—உண்மைதான். அவனுக்கு நல்ல சாமர்த்தியம் உண்டு. ஒரு குறை மாத்திரம் அவனிடம் இருந்திரா விட்டால் இதற்குள் ஏராளமாகச் சம்பாதித்திருப்பான்.

கமலம்—அவனிடமா ஒரு குறையிருக்கிறதென்கிறாய்? அதெப்படி இருக்கமுடியும்! நீ எதைச் சொல்லுகிறாய்?

கி. சுப்பன்—அவனொரு அழகுள்ள பெண்ணைக் காதலிக்கிறான். அதுதான் அவனுக்குள்ள குறை.

கமலம்—காதலிப்பது ஒரு குறையாகுமா? (ஆவலோடு) அந்தப் புண்யவதி யார்? உனக்குத் தெரிந்தால் சொல்லேன். நல்லாரோடிணங்குபவளைத் தெரிந்துகொள்ள ஆசையாயிருக்கிறது.

கி. சுப்பன்—அவளை எனக்குத் தெரியும். ஆனால் உன்னோடு எப்படிச் சொல்லுகிறது!

கமலம்—ஏன்? நான் அதை யாருக்கும் வெளியிட மாட்டேன். நான் விரும்பினாலும் அதைச் செய்ய முடியாதே. அவள் எப்படிப் பட்டவள் என்பதைத் தெரிந்து கொள்ளலாமென்றே கேட்கிறேன்.

கி. சுப்பன்—(கண் கொட்டாது உன்னிப்பாய் நோக்கி) அப்படியானால் சொல்லுகிறேன். ஓப்பிலா எழில், கிளர்ந்தெழும் இளமை, தொடுதற்கினிய மேன்மை, மனம் கவரும் முகமலர்ச்சிஇவை கொண்ட மெல்லிய நங்கை யொருத்தியை நினைத்துப் பார். மென்னடையும், திரள்தோளும், நுட்கிடையும், ஒயிலுடலும், செவ்விதழும், கனிர்க்கையும் படைத்தவள் அவள். அவளுக்குத்தான் என்ன கன்னங்கள்! என்ன பற்கள்! என்ன கண்கள்!............

கமலம்—அவளிருப்பது இவ்வூரிலா?

கி. சுப்பன்—ஆமாம், இங்கு கிட்டத்தான்.

கமலம்—இதே தெருவிலா?

கி. சுப்பன்—எனக்கு இரண்டடி தூரத்தில்.

கமலம்—அப்படியானால் எனக்குத் தெரிந்திருக்குமே! அவள் பெயர்?

கி. சுப்பன்—அதை நான் சொல்லவில்லை.

கமலம்—இல்லையே, சீக்கிரம் சொல்லு. யாராவது வந்து விட்டால், கஷ்டம். இவ்வளவு கிட்ட இருக்கும் அந்த பாக்கியசாலியைத் தெரிந்து கொள்ளாத பாவம் என்னைச் சேரும்.

கி. சுப்பன்—அந்தப் பயம் உனக்கு வேண்டாம். அவள் உன் மாற்றாந் தாயின் மூத்தாள் மகள். அவள் பெயரையும் சொல்ல வேண்டுமா இனி?

கமலம் (திடுக்கிட்டு)—என் மாற்றாந் தாயின் மூத்தாள் மகளா! யாரைச் சொல்லுகிறாய்? அப்படிக் கிராது. என்றால் நம்பமுடியவில்லை.

கி. சுப்பன்—நீ இசைந்தால் அவனே நேரில் வந்து அதைச் சொல்லக்காத்திருக்கிறான்.

கமலம்—சுப்பா, நீ சொல்வது உண்மையானால் அவன் வெகு உஷாராயிருக்க வேண்டும். எதையும் நிதானித்துச் செய்யும்படி சொல். சிறிது பிசகினாலும் நம்மை ஆபத்தில் விட்டதாகும்.

கி. சுப்பன்—ஆபத்து நமக்கா! ஐயோ, அவன் அவசரக் காரனாயிற்றே! ஒரு கடிதம் நீ எச்சரித்து எழுதிக் தந்தால் அதை அவனிடம் சேர்க்கிறேன். அவன்உன் சொற்படி நடப்பான்.

இரண்டாம் காட்சி

கமலம், மாற்றாந்தாய், காமப்பன்.

காமப்பன்—அக்கா! அக்கா! கமலத்தின் கையைப் பார்த்தாயா? விரல்களில் மை பட்டிருக்கிறது!

மா. தாய் (கடிந்து)—என்னடீ கமலம், யாருக்காவது கடிதம் எழுதியனுப்பினாயா?

கமலம்—இதென்ன பேச்சு! நானாவது கடிதம் எழுதவாவது! கடிதம் எழுத எனக்கு யார்இருக்கிறார்கள்?

மா. தாய்—எனக் கென்னடீ தெரியும்? எந்த கழிசடைக்கோ, எந்த கள்ள புருஷனுக்கோ நீ எழுதியிருக்கலாம்!

கமலம்—வீட்டில் நீ பெரியவள் என்றால் வாய்க்கு வந்தபடி சொல்லிவிடுகிறதா?

காமப்பன்—கையை மறைக்கிறாள் பார். தான் தனியாகச் செய்தது யாருக்குத் தெரியும் என்று எண்ணுகிறாள்.

மா. தாய்—அப்படியா சமாசாரம். கையை இங்கு கொண்டாடீ.

கமலம்—போதும், போதும். என் கையை விடு, எனக்கு வலிக்கிறது

மா. தாய்—நீண்ட கடிதம் எழுதியிருக்கிறாய்; விரலெல்லாம் மையான தோடு கையும் வலிக்கிறதாக்கும்.

கமலம்—நான் அதைச் சொல்லவில்லை. நீ கெட்டியாய்ப் பற்றி இழுத்தால் ஏன் வலிக்காது?

மா. தாய்—ஏன் இப்படி மையாயிற்று?

கமலம்—விளக்கில் விரல் பட்டு சுட்டுப் போயிற்று. மசிக் கூட்டில் தோய்த்தேன். அப்படிச் செய்வது நல்லதென்று கேட்டிருந்தேன். அதனால் தான் மைபட்டது.

மா. தாய்—இது உண்மை என்றே வைத்துக் கொள்வோம். அடே காமு அலமாரியில் ஐந்து காயிதம் எண்ணி வைத்தேன்; அது சரியாயிருக்கிறதா பார்.

காமப்பன்—ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு!...........................

கமலம்—ஐந்தாவதைக் கொண்டு நான் ஒரு தாமரைப் பூ கத்திரித்தேன். அது கோணிப் போய் விட்டதால் அதைக் கிழித்து இச் சந்து வழியாய் வெளியே எறிந்து விட்டேன்.

காமப்பன்—கடிதம் எழுதி வெளியே எறிய ஒரு சந்து வைத்திருக்கிறாயா? அதை அடைத்து விடச் சொல்கிறேன் இரு.

கமலம்—உன்னை யார் கேட்டது! உன் கையில் முடிந்தால் ஜன்னலையே

எடுத்துவிட்டு சுவர் போட்டு விடுவாய்!

மா. தாய்—அது கிடக்கட்டும். இதோ இன்னொரு சாட்சியும் கிடைத்திருக்கிறது! இக் கட்டையில் புதுப் பேனு நேற்றுத்தான் கோத்து வைத்தேன். அது ஏன் இப்படி மையாய்க் கிடக்கிறது? அந்தத் தாமரைப் பூவை ஒரு முறை எழுதிப் பார்த்ததாகச் சொல்லப் போகிருய், அல்லவா?

கமலம்—இல்லை, கூட்டில் மசியிருக்கிறதா என்று அதைக் கொண்டு துழாவிப் பார்த்தேன்.

காமப்பன்—புளுகு நம்பர் மூன்று.

மா. தாய்—அடீ கமலம், நீ கெட்டிக்காரிதான். பொய் நன்ருகவே சொல்லுகிருய். ஆனல் அனுபோகம் போதாது. உண்மையை மறைக்க முயலும்போது உன் முகம் ஒவ்வொரு முறையும் இப்படி சிவப்புறலாகாது.

கமலம்—அபாண்டமான தொரு பழியைச் சுமத்தினல் யாருக்குத்தான் முகம் சிவக்காது?

மா. தாய்—ஆமாமடீ, நான் சுமத்தியது அபாண்டமான பழிதான்! கேள்வி பிறந்தவுடனே விரல் சுட்டதும், காகிதம் எண்ணுகையில் பூகத்திரித்ததும், பேனவை காட்ட அது கொண்டு துழாவியதும் குற்ற மற்ற செயல்கள் என்று எண்ணியே யன்றி, 'நான் தனிமையில் செய்ததை யார் கண்டார்கள்' என்று நீ கொண்ட ஒரு எண்ணத்தை மறைக்க அடுக்கடுக்காய் எவ்வளவு பொய் சொல்ல வேண்டியிருந்தது! விரலும் பேனவும் மை பட்டிருப்பதையும் காகிதம் குறைவதையும் பற்றி நீ ஆலோசிக்கவே யில்லையே! இனி நான் பார்த்துக்கொள்கிறேன். இவை இங்கிருந்தால்தானே இந்தக் கஷ்டமெல்லாம். என் அறையில் கொண்டு வைத்துக் கொள்கிறேன். எனக்கு வேலை இருக்கிறது, போகிறேன். உன்னேடு வாதம் செய்ய நேரமில்லை.

காமப்பன்—கமலம், நான் குற்றம் காட்டியதற்காக என் மேல் கோபமா? உன் மேல் எனக்குள்ள ஆசையினல் தான் அப்படிச் செய்தேன். என்னை மன்னித்து விடு.

கமலம்—போதும், போதும். உன் சகவாசமே வேண்டாம். என் பாதுகாப்புக்காகச் சித்தி தான் இருக்கிருளே, நீ எதற்கு இங்கு வந்து சேர்ந்தாய்?

காமப்பன்—உனக்காகவே தான். உன்னை எப்படியாவது மணக்க வேண்டுமென்றிருக்கிறேன். என்னை ஏன் வீணே கடிந்து பேசுகிருய்?

கமலம்—நீ விரும்பி விட்டதனல் பாதி கலியாணம் முடிந்து விட்டதென்று எண்ணுகிருய்? இன்னொரு பாதிக்கு நான் இருக்கிறேனே! என் விருப்பத்தை கவனிக்க வேண்டாமா?

காமப்பன்—உன்னைப் போன்ற சிறு குட்டிகளுக்கு விருப்பம் வேறு! உன் விவாக சமயம் வரை என் தமக்கை வசம் நீ விடப்பட்டிருக்கிருய். அது வரை இது அவள் வீடு. உன்னை நான் இங்குச் சிறை பிடித்து வைத்திருக்கிறேன். என்னை நீ மணந்தே தீர வேண்டும்.

கமலம்—நான் மாட்டேன் என்ருலோ?

காமப்பன்—பெண்ணைச் சிறை பிடித்து மணத்தல் நமது மரபுதானே! உன்னைக் கட்டாயப் படுத்தி மணப்பதில் ஒழுங்கீனம் இல்லை என்று யாவரும் ஒப்புக் கொள்வார்கள்.

கமலம்—இப்படி வஞ்சனையாய் என் வீட்டில் புகுந்து என்னைச் சிறைப் படுத்தி மணபபது மரபு என்று வெட்கமில்லாமல் சொல்லுகிருயே! எதிரிகளைக் கண்ணெதிரில் வென்று சிறை பிடித்தவனது தீரத்தனத்தில் மகிழ்வு

றும் மணமகள் அவனுக்கு மாலை சூட்டுவது தான் தமிழ் மரபு. என் விருப்பத்தை மிதித்துத் தள்ளி மணக்க விரும்பும் உன்னை நான் மன்னிக்கவும் வேண்டுமா?

காமப்பன்—மன்னிக்கா விட்டால் வேண்டாமே! என் தமக்கையோடு எல்லாம் பேசி விட்டேன். விவாகம் மூக்காலே மூன்று வீசம் முடிந்திருக்கிறது.

கமலம்—இன்னும் ஒரு வீசம் குறைவைத்திருக்கிறாயே, அதில் தெய்வம் குறுக்கிட்டு விவாகத்தைத் தடுக்கக் கூடுமல்லவா?

காமப்பன்—தெய்வம் ஏன் குறுக்கிடும்? நீ என் கையில் சிக்கியிருப்பதனாலேயே எனக்காகத் தான் நீ படைக்கப் பட்டாய் என்பது விளங்கவில்லையா? உன் ஜாதகப்படி நாளைக்கே உனக்கு விவாகம் எப்படியும் நடந்து விடுமாம். அதற்காக வேண்டிய ஏற்பாடுகளை இங்கு வீட்டில் செய்தாய் விட்டது. நீயாக ஒப்புக் கொண்டால் சள்ளையின்றி விவாகம் நடந்து விடும்; இல்லாவிடில் வலிக் கட்டாயமாய் நடக்கும். அவ்வளவுதான்.

கமலம்—ஆதரவற்ற ஒரு சிறு பெண்ணை நீ கட்டாயப் படுத்தினால் அந்தப் பாவம் உன்னை விடாது. நீ வரம்பு மீறினால், நானும் உயிர் துறந்தாவது அதை மீற வேண்டியிருக்கும். ஜாக்கிரதை!

காமப்பன்—இந்த ஊளை மிரட்டலுக்கு அஞ்சுபவன் நானன்று. உன்னை வரம்பு மீற விட்டால்தானே! இராப் பகல் நீ வெளிவராதபடி நானே காவல் காப்பேன்.

கமலம்—ஐயோ! திடுமென்று இப்போது விவாகம் எதற்கு? சிறிது காலம் பொறுக்கலாகாதா?

காமப்பன்—'சுபஸ்யசீக்ரம்'. சீக்கிரமாகவே சுப காரியம் நடக்கட்டுமே! ஜாதகமும் கட்டாயம் என்கிறதே?

கமலம்—என் விவாகம் கட்டாயம் நடக்க வேண்டியிருந்தால் எனக்குப் புருஷனும் கட்டாயமாக ஏற்பட்டுத்தானே இருக்க வேண்டும்?

காமப்பன்—அதற்கென்ன சந்தேகம்! அப் புருஷன் யார் என்பதை எனக்குள் பொங்கி எழும் உற்சாகமே எனக்குக் காட்டுகிறது.

கமலம்—அதுபோல் எனக்குள்ளும் ஒரு உற்சாகம் பிறக்க வேண்டாமா?

காமப்பன்—உனக்குள் பிறக்காவிட்டால் அதை யார் சட்டை செய்யப் போகிறார்கள்! நீயும் ஒரு மனுஷி மாதிரி பேசுகிறாயே!

கமலம்—அப்படியானால் நீ என்னை வதைக்காதே. போ வெளியே; போ. (காமப்பன் வெளியே போகிறான்) என்னுள் குமுறி எழும் சாகஸத்தை உலகம் பழிக்குமோ என்னவோ! நான் என் செய்வேன்! இச் சிறு வயதில் உதவியின்றி, அன்பின்றி, தனியாய் அடைபட்டு இங்குக் கிடக்கிறேனே! இதினின்றும் மீள முயல்வது ஒரு குற்றமாகுமா? கடவுளே! நீதான் எனக்குத் துணை!

[கிழ சுப்பன் வருகிறான்]

கி. சுப்பன்—உன்னைப் பெரியம்மா அழைத்துவரச் சொன்னார்கள். சீக்கிரம் வா.

கமலம்(அவன் காதோடு)—தெரிந்ததா? உண்மைக் காதலைக் காட்ட இதுதான் தருணம். இதை முனைந்து செய்யப் பின்வாங்க வேண்டாம் என்று சொல்லு. தப்பினால் அடியோடு காரியம் கெட்டுவிடும். ஜாக்கிரதை!

கி. சுப்பன்—கவலையே வேண்டாம். அவன் அஞ்சா நெஞ்சுடையவன்.

உன் விருப்ப மென்றால் அவனால் செய்யமுடியாத தொன்றுமில்லை.

மூன்றாம் காட்சி

கமலம், சுந்தரன்

சுந்தரன்—அப்பா! நான் எதிர் பார்த்ததை விட சுலபமாகவே காரியம் கைகூடிற்றே! கமலம், இனி யுனக்குக் கவலை இல்லையே? காமப்பன் இவ்வளவு பயங்கொள்ளி என்று நான் கனவிலும் எண்ணவில்லை. இரகசியமாய் இருவரை வைத்துக் கொண்டு விவாகத்தை முடித்து விடலாம் என்று பார்த்தான். மேளதாளங்களோடு நானும் பத்து நண்பர்களும் அவன் எதிர் பார்க்காதபடி அங்கு வரவே திடுக்கிட்டுப்போய் தன்னை என்ன செய்வார்களோ வென்று அஞ்சி அறைக்குள் புகுந்து கொண்டான். அன்புகூர்ந்து நீ என்னோடு வெளியேறினபோது உன் சிறிய தாய் அவனை என்ன தூண்டியும் பயன்படவில்லை.

கமலம்—அவனுள்ளம் இப்படிக் குழைந்ததும், எனக்குள் துணிவுண்டானதும் தெய்வச் செயல் என்றே சொல்வேன். அவர்களுக்கு இவ்வளவு காலம் கட்டுப்பட்டிருந்தும் காதல் என்ற மாத்திரத்திலே என் நெஞ்சு கிளர்ந்தெழுந்தது எனக்கே வியப்பாயிருக்கிறது.

சுந்தரன்—பண்டைக் காலத்தில் தமிழ் நாட்டில் மடலூர்ந்த மாதரசிகளுக்கு நீ ஒரு சிறிதும் குறைந்தவளன்று. அவர்கள் இரத்தம் உன் நாடியில் இன்னும் அப்படியே சுத்தமாய் ஓடுகிறது.

கமலம்—எனக்குள்ள அச்சம் ஒன்றுதான். ஊரார் என் செயலைப் பழித்தால் உனக்கு அவமானம் வருமே! என் செய்வது! நம்மைப் போன்ற ஏழைகளுக்கு மானந்தானே தனம்!

சுந்தரன்—பழிப்பதா! உன்னைத் தலைமேல் வைத்துக் கொண்டாடுவார்கள். சிறை மீட்டு மணப்பது நம்மிருவருக்கும் புகழ்ச்சிக் கிடமானதே. பணத்திற்கும் பதவிக்குமாக நீ என்னை விரும்பலாகாதென்றே நான் ஏழை என்ற பேச்சைப் பரவச் செய்தேன். நீயும் நானும் சுகமாய்க் காலங் கழிக்கப் போதிய தனம் எனக்குக் கடவுள் கொடுத்திருக்கிறார். உனக்கு அக்கவலையே வேண்டாம்.

[மாற்றாந்தாய் வருதல்]

மா. தாய்—அடி குலநாசகாரி! உனக்கு என்ன தைரியமடி! முன் பின் தெரியாத ஒருவனோடு இப்படி ஓடி விட்டாயே! மானங்கெட்டவளே, நான் கொடுத்தவனை வெறுத்தாய். சுயம்வரக் கன்னிபோல் உன் மனம் போனபடி மாலை யிட்டாய்! இத்தனை நெஞ்சுத் துணிவை உனக்கு யாரடி கொடுத்தது. பூனையைப்போ லிருந்தாயே?

கமலம்—என்னைப் பெற்றெடுக்காத தாயே! பூனையைப் புலியாக்கும் கொடியோய்! இத்தனை துணிவை எனக்குத் தந்தவள் நீயேதான்! வீட்டை எனக்குச் சிறையாக்கினாய். நான் வேண்டாதவனைக் கொணர்ந்தாய். அவனுக்கென்னைப்பிணைக்கவும் முயன்றாய். இப்பெரியோன் உனது முயற்சியைத் தடுத்து என்னை மீட்டிரா விட்டால் என் உயிரை மாய்த்துக் கொண்டிருப்பேன். அப்படி எனக்கு உயிர்ப் பிச்சை யளித்தவனை நான் மணக்கலாகாதா?

மா. தாய்—எனக்கு அடங்கி ஒழுக வேண்டிய நீ எப்படி உன்னிஷ்டம் போல் நான் வேண்டாதவனுக்கு மாலை யிடலாம்?

ராம்ஸே மாக் டோனல்ட்

ஸ்ரீமான் ராம்ஸே மாக்டோனல்ட். 1866-ம் வருஷம் அக்டோபர் மாதம் 12ந் தேதி ஸ்காத்லாந்திலுள்ள லாஸ்ஸிமவுத் என்ற ஊரில் பிறந்தவர்.

1894-ம் வருஷம் சுயேச்சைத் தொழிற் கட்சியை ஸ்தாபித்தார் 1900-ம் வருஷத்தில் இவர், பிரிட்டிஷ் தொழிற் பிரதிநிதித்துவ கமிட்டியின் காரியதரிசியாகத் தெரிந்தெடுக்கப் பட்டு அந்தப் பதவியை 1912-ம் வருஷம் வரையில் வகித்து வந்தார்.

1906-ம் வருஷத்தில் இவர், பார்லி மெண்டில் ஓர் அங்கத்தினராகத்தேர்ந் தெடுக்கப்பட்டார். அது முதற் கொண்டு 1932ம் வருஷம் வரை, பார்லி மெண்டில் இவருடைய செல்வாக்கு வளர் பிறைச் சந்திரன் போலவே வளர்ந்து வந்தது.

ஸ்ரீமான் மாக்டோனல்ட் சமாதானப்பிரியர். 1914-ம் வருஷம் ஐரோப்பிய யுத்தம் தொடங்கிய காலத்தில், பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இந்த யுத்தத்தில் தலையிடக்கூடாதென்ற கட்சியில் இவர் முக்கியஸ்தராயிருந்தார். இதனால் இவருக்குப் பல அவமானங்களும் கஷ்ட நிஷ்டூரங்கள் ஏற்பட்டன. ஸ்ரீமான் மாக்டோனல்ட் தேக சுகத்தை நாடி கடல் மார்க்கமாக தென் அமெரிக்காவுக்குச் சென்று கொண்டிருந்த போது வழியில் கப்பலில் மாரடைப் பால் தமது 71-வதில் இறந்து போனார்.



கமலம்—என் விவாக சமயம் வரை தான் உன் அதிகாரம். அச்சமயம் வந்து விட்டால் எனக்கு இஷ்டமானவனுக்குத்தான் மாலையிடுவேன். அதைத்தடுக்க உனக்கு அதிகாரமேது? இனி உன் தயவு வேண்டாம். உன்னிருப்பிடம் போய்ச் சேர்.

மா. தாய்—(வீடு திரும்பிப் போகையில்) ஐயோ, வீணாய்க் கெட்டேனே! அம்மெல்லியல் சிறுமியை அடக்கி வைத்திருந்தால் என் கடைசி காலத்திற்கு உதவுவாள் என்று எண்ணி மோசம் போனேனே! அவளைக் கட்டாயப் படுத்திக் காமப்பனுக்குக் கட்டி விட்டால் என் சொற்படி கிடப்பாள் என்று வீண் யோசனையல்லவோ செய்தேன்! அவளை நல்ல வழியில் நயமாய் நடத்தியிருந்தால் இப்படி அடியோடு என்னைத் துறந்திருப்பாளா! கேடுவான் கேடு நினைப்பான் என்பது போலக் கெடுவேன் கேடிழைத்தேன். ஐயோ!

கோடிது கோடிது வன்மை கோடிது!
பேரிது பேரிது நயமே பேரிது!

ஸர் ஜகதீச சந்திர போஸ்



ஸர் ஜகதீச சந்திரபோஸ், 23-11-37 திடீரென்று இறந்து போனார். அறிஞர் உலகத்திலேயே இஃதோர் அதிர்ச்சியை உண்டுபண்ணி விட்டது.

ஜகதீசர் 1858ம் வருஷம் நவம்பர் மாதம் 30ந் தேதியன்று டாக்கா ஜில்லாவிலுள்ள விக்கிரமபுரி என்னும் ஊரில் பிறந்தார். இவர் தகப்பனார் பகவான் சந்திர போஸ் என்பவர் டிப்டி மாஜிஸ்ட்ரேட்டாக இருந்து, எல்லாராலும் கௌரவிக்கப்பட்டு வந்தார். ஜகதீசர் இளமையில் பரித்பூரிலுள்ள கிராமப் பள்ளிக்கூடத்தில் பயின்றார். அப்பொழுது இவருக்கு வட மொழியிலும் வங்க மொழியிலும் நிரம்பிய ஞானம் உண்டாயிற்று. பின்னர் கல்கத்தாவுக்கு வந்து கலாசாலைப் படிப்பை முடித்துக் கொண்டு, உயர்தரக் கல்விக்காக லண்டன் சென்றார். அங்கே இவர் விஞ்ஞானத் துறையில் பல அறிஞர்களின் கீழ் பயிற்சிபெற்று முதல் வகுப்பில் தேறினார். இவருடைய நுண்ணிய அறிவையும் ஆராய்ச்சித்திறனையும் அந்தக் காலத்திலேயே பல அறிஞர்கள் பாராட்டினார்கள். இதற்குப் பிறகு தாய்நாடு திரும்பி வந்து, பல இடையூறுகளையுங்கடந்து, ராஜதானிக் கல்லூரியில் உதவி போதகாசிரியராக உத்தியோக மேற்றார். இங்கேயிருந்து கொண்டு, மாணவர்களுக்கு விஞ்ஞான சாஸ்திரத்தில் விசேஷ உற்சாகம் உண்டு பண்ணக்கூடியவாறு போதனைசெய்து வந்ததோடுகூட தமது சொந்த பரிசோதனை சாலையிலும் அநேகவிதமான ஆராய்ச்சிகள் நடத்தி வந்தார். மின்சார சம்பந்தமாகவும் தாவர வர்க்கங்களில் உயிரியங்கும் நுட்ப சம்பந்தமாகவும் இவருடைய கவனம் விசேஷமாகச் சென்றது. இதனை விளக்குவதற்காக, இவர் தாமே சில நுண்ணிய கருவிகளைச் செய்தார். இவை யாவும் சுதேசி சாமான்களாலே செய்யப்பட்டவை. தமது ஆராய்ச்சியை அறிஞர்கள் முன்னிலையில் நிலை நிறுத்துவான் வேண்டி, 1896ம் வருஷம் ஒரு முறையும், 1900ம் வருஷம் ஒரு முறையுமாக மேனாடுகள் சென்று தமது புகழை நிலை நாட்டினார். இவர் மூலமாக இந்தியாவின் பெருமை எங்கும் பரவியது.

தமது ஆசிரியத் தொழிலை முடித்துக்கொண்டு, உபகாரச் சம்பளம் பெற்றபின்னர் தமது தனி முறையில், ஒரு ஆராய்ச்சி சாலையைத் ஸ்தாபித்தார். இங்ஙனம் ஒரு ஆராய்ச்சிக் கழகத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்பது இவருடைய நீண்டநாள் கனவாக இருந்தது. இதற்கு போஸ் ஆராய்ச்சிக்கழகம் என்று பெயர். இவர் கீழ் பல மாணாக்கர்கள் பயின்று, இப்பொழுது உயர்பதவிகளை அடைந்திருக்கிறார்கள். 1927-ம் வருஷம் நடைபெற்ற இந்திய விஞ்ஞான காங்கிரஸின் தலைவராக இவர் இருந்தார். இவருடைய ஆன்மா சாந்தியடைக.

பண்டிதர் கு. பக்கிரிசாமிப் பிள்ளை

பண்டிதர் கு. பக்கிரிசாமிப் பிள்ளையவர்கள் சுபானு ௵ ஆனி ௴ 31௳ வெள்ளிக் கிழமை (13-7-1883) தென்னாட்டிலே சிறந்து விளங்கும் சுப்பிரமணிய ஸ்தலமாகிய பழனியில் பிறந்தவர். இவர் தமிழில் வல்லவராக ஆனது ஒரு வியப்பு. ஆரம்பத்தில் ஆசிரியர்பால் முறையே பாடங் கேட்கவில்லை. ஏதேனும் ஒரு பழந் தமிழ்ப் புத்தகத்தை எடுத்துப் படிப்பார். உடனே விளங்கவில்லையானால் தாம் நன்கு உணரும் வரை அதைத் திருப்பித் திருப்பிப் பலகால் பயின்றால் எதையும் எளிதில் நன்றாக அறிந்து கொள்ள முடியும் என்பது அவர் துணிவு. அவ்விதமாகத் தம் முயற்சியால் தாமாகவே கற்றுத் தெளிந்த பண்டிதராவர். தம் பெயரை வெளியிடாமல் பல நாடகங்கட்கு வேண்டிய தமிழ் பாடல்களையும் ஆங்கிலப் பாடல்களையும் புதுப்புது மெட்டில் எழுதிப் புத்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறார்.

மாம்பழக் கவிராயரைப் பற்றிப் பலர் கேள்விப் பட்டிருக்கலாம். அவர் ஒரு அந்தகர். பல புது நூல்களையும் பிறரை ஒரு முறை படிக்கச் செய்து, மறு முறையில் அத்தனையையும் திருப்பி ஒப்புவிக்கும் திறமை வாய்ந்தவர். அவரிடம் நமது பண்டிதர் பயிற்சி பெற்றிருக்கிறார் என்பது குறிப்பிடத் தக்கது.

பழனி ரெஜிஸ்ட்ரார் ஆபீசிலும், திருச்சி முனிசிபல் ஆபீசிலும் தன் மதிப்புடன் 'கிளார்க்' உத்தியோகம் செய்தார். அந்தக் காலத்திலேயே இவருக்கு ஆன்ம பரிபக்குவம் ஏற்பட்டிருந்தது. பல நாள் தேடித் திரிந்து நீலகிரி குரு. குமாரசாமிப் பிள்ளையவர்களிடம் உபதேசம் பெற்றார்.

1927ல் இரங்கோன் வந்தார். 16-9-28ல் கம்பை செட்டியார் ஸ்கூலை முதல் உபாத்தியாயராகவும் தலைமை உபாத்தியாயாராகவும் இருந்து ஆரம்பித்து வைத்தார். கம்பை ஸ்கூலின் வளர்ச்சியில் எல்லா விதமான பொறுப்பும் ஏற்று மிக விரைவில் அந்தப் பள்ளிக் கூடத்தைப் பலரும் போற்றும் விதமாக முன்னேற்றி வைத்தவர்களுள் முதன்மை யானவர்.

தினமும் நிமிஷம் நிமிஷமாகக் கணக்கிட்டு ஞானோபதேசஞ் செய்து பயன் படுத்தி மகிழ்வித்தார். இரங்கோனிலுள்ள பல சங்கங்களுக்கு இவர் தலைவராக இருந்தார். காலந் தவறாமல் நடந்து கொள்வதில் இவர் ஆங்கிலேயரைக் கூடப் பின் வாங்கும்படி செய்தார் என்னலாம்.

இப் பெரியார் 20-11-37 இரவு 12-30 மணிக்கு இவ்வுலக வாழ்வை நீத்தார். இவரது ஆன்மா சாந்தியடைவதாக.

ராக்பெல்லர் நீண்ட காலம் வாழ்ந்ததன் ரகசியம்

—பி. கோபால கிருஷ்ணய்யா. M. A., M. Sc., Ph. D.

உலகத்துப் பெரிய பணக்காரனென மதிக்கப்பட்டு வந்த ஜான், டி. ராக் பெல்லர் 98 வயது வரை வாழ்ந்தான். 25-5-1937ல் இறந்து போனுன். இவன் எங்ஙனம் பணக்காரனுனுன் என்பதைப் பற்றி, ஸ்ரீ மான் கோபால கிருஷ்ணய்யா, "ஜோதி"யின் மூன்ருவது கதிரில் எழுதி யிருந்தார். இப் பொழுது, ராக்பெல்லர். நீண்ட நாட்கள் வாழ்ந்திருந்ததைப் பற்றியும், இன்னும் விசேஷமான சில விவரங்களைப் பற்றியும் இதில் எழுதி யிருக்கிருர்.

மிதமான பழக்கங்களே தனக்கு நீண்ட ஆயுளைத் தந்ததெவன்பது ராக் பெல்லரது அபிப்பிராயம். மதுபானம் செய்வதும், புகையிலை உபயோகிப்பதும் அவரிடம் கிடையாது. மிதமான உணவு கொள்வதும் அன்ருடத் தேகப்பயிற்சி செய்வதும் வழக்கம். 82வது வயதில் ஒரு 'கால்ப்' பந்தயம் விளையாடினுர். அப்பொழுது டாக்டர் பிக்கர் கூறியதாவது:—'ராக் பெல்லர் மருந்து சாப்பிட்டதே கிடையாது. ஒவ்வொரு நாள் காலையிலும் கால்ப் விளையாடுவார். நன்ருய் உறங்குவார். ஆடம்பர மில்லாத ஆகாரம் சாப்பிடுவார். சில ஆண்டுகள் அஜீரண பாதையால் கஷ்டப்பட்டு பிறகு அதை நிவர்த்தி செய்து கொண்டார்.'

தினசரி அலுவல்களிலும் ஓர் ஒழுங்கை அனுசரித்து வந்தார் ராக் பெல்லர். குறிப்பிட்ட ஒரு நேரத்தில் தான் கால்ப் விளையாடுவது; அது போல் மோட்டாரில் வெளியேபோவதும் குறிப்பிட்ட நேரத்திலே தான். பொழுதோடே உறங்கச் செல்வதும் பொழுதோடே விழிப்பதும் அவர் இயல்பு. படுக்கப் போகும்போதும் விழித்தெழும்போதும் சங்கீதம் கேட்பதில் நிரம்ப ஆசை. அதிலும் பண்டைக்காலப் பாட்டுகளாகவோ நீக்ரோ பாட்டுகளாகவோ இருந்தால் அதிக சந்தோஷம். இறுதிக்காலத்தில் பேரன்களுடன் விளையாடுவதில் பிரியம் கொண்டார். தன்னைப் போலும் பணம் சேமிப்பதற்கும் செலவு செய்வதற்கும் கற்றுக் கொடுத்தார். தன் பிறந்த நாள் கொண்டாட்டத்தின் போது சிறுவர்களையும் சேர்த்துக் கொண்டு விளையாடுவார். மெழுகு வர்த்தியைப் பொருத்தி வைத்துப் பிறகு அதை வாயால் ஊதி அணைப்பதில் குழந்தைகளோடு இவரும் சேர்ந்து விளையாடுவார்.

ராக்பெல்லர் பலவாண்டுகள் தலைக்குப் பொய் மயிர் வைத்திருந்தார். அது வாஷிங்டனில் உள்ள திறம் பெற்ற ஒருவரால் தயார்செய்து கொடுக்கப்பெற்றது. 'கால்ப்'க்குப் போகும்போது ஒன்றும் கோயிலுக்குப் போகும்போது இன்னென்றும் சாதாரணசமயங்களுக்கு மற்ருென்றும் ஆக மூன்று விதமான பொய் மயிர்களை உபயோகித்து வந்தார். வயதாக ஆக அன்னியர்களிடம் அதிகமான நேயப்பான்மை காண்பிக்கத் தொடங்கினுர். 'டைம்' (Dime) என்ற ஒரு டாலரின் பத்தில் ஒரு பங்கு மதிப்புள்ள ஒரு வெள்ளி நாணயம், இவற்றில் பளபளவென்றும் புதிதுமாய்ப் பார்த்து எடுத்து சட்டைப் பையில் போட்டுக்கொண்டு வெளியிலே புறப்படுவார். தெருவில் விளையாடிக்கொண்டிருக்கும் சிறுவர் சிறுமிகளுக்கும், படகுகளிலே பாடிக் கொண்டு செல்பவர்களுக்கும் இனமளிப்பார். ஆரம்பத்

தில் இவர் மிகவும் ஒதுக்கமாக இருந்தார். ஆனால் பிற்காலத்திலோ பத்திரிகைக் காரர்களையும் புகைப் படம் பிடிப்போரையும் பிரமிக்கும்படியான நிலையில் வைத்து விட்டார். இவர் அபிப்பிராயத்தைத்தான் கேட்க முடியுமா; இவர் படத்தையும் பிடிப்போமா என்றிருந்த ஏக்கமெல்லாம் பொய்யாயிற்று. அயல் நாட்டாரிடம் அன்புடன் சம்பாஷிக்கலானார்; அவர்களுக்கும் புதிய 'டைம்' கள் கொடுப்பார்.

ஆடம்பரம் படாடோபம் என்பது இவர் மனோ நிலைமைக்கு முற்றிலும் மாறுபட்டவை. கமிட்டிகளில் நம்பிக்கை கிடையாது. தர்ம ஸ்தாபனங்களுக்கு உதவிசெய்யுங்கால் தனக்குத் தானே சொல்லிக்கொண்டு திருப்தியடைவாராம். வீணே கூட்டங் கூடி மேடைமீதேறி பிரமாதமாய்ப் பிரஸ்தாபம் செய்வது இவருக்குப் பிடிக்கவே பிடிக்காது. 'ராக்பெல்லர் இன்ஸ்டிடியூட்' (Rock-feller Institute) ஏற்படுத்தின அனேகவருஷங்களுக்குப்பிறகு தான், அக் கட்டிடங்களைப் பார்வையிடச் சென்றார். சென்ற காலையும் ஆள் பேர் ஆடம்பரமில்லாமலும், வரவேற்பு நடபுடல் ஏற்படாமலும் கவனித்துக் கொண்டாராம்.

உற்ற துணைவர்கள் தவிர, இதர சமூக விஷயங்களில் ராக்பெல்லருக்காவது அவர் மனைவியாருக்காவது அவ்வளவு விருப்பம் கிடையாது. ராக்பெல்லர் மனைவியார், தன் வாழ்நாளின் பெரும்பாகத்தைக் குடும்பம், கோயில், ஞாயிற்றுக் கிழமைப் பள்ளிக்கூடம், தர்மம் இவற்றிலே கழித்து வந்தார். கடைசியாய் சில காலம் அந்த அம்மையாரால் கோயிலுக்குப் போய் வர முடியாது போயிற்று. ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையிலும் ராக் பெல்லர் கோயிலில் நடந்த விஷயங்களுக்குக் குறிப்பு ஒன்று கொண்டு வருவாராம். இவர் பொகான்டிகோ ஹில்ஸ் (Pocantico Hills) என்னுமிடத்தில் மண்ணுலகை நீத்தார் 1915ம் வருஷம்.

ராக்பெல்லருக்கு 5 குழந்தைகள். இவர்களில் மூவர் அகாலத்தில் மரணமடைந்தனர். ஒருவர் ராக் பெல்லர் (ஜூனியர்); மற்றொருவர் ஆல்டா (Alta) என்ற ஒரு பெண்.

கால்ப் (Golf) என்பது ஒரு வகைப் பந்துவிளையாட்டு. இதற்கு முக்கிய உபயோகமாயிருப்பன பல வகைத் தடிகள். இந்தத் தடிகளில் சிலவற்றின் பெயர் வருமாறு:--டிரைவர், பிராஸி, கிளீக், மிட் அயன், மாஷி, நிம்லிக், புட்டர் முதலியன. இத்தகைய தடிகளின் உதவியால் ஒரு சிறு பந்தை 9 அல்லது 18 குழிகளில் வரிசையாய் அடித்துத் தள்ளிக்கொண்டு போகவேண்டும். இதில் குறைந்த அடிகள் கொண்டு யார், குழிகள் எல்லாவற்றிலும் பந்தைத் தள்ளுவதில் சமர்த்தரோ அவரே கெட்டிக்காரர். குழிகளுக்கிடையே இயற்கையாகவோ செயற்கையாகவோ தடங்கல்களும் ஏற்படுத்தியிருக்கும். இவ்விளையாட்டினால் முக்கியமாக, நடைப் பயிற்சியும் அதன் பிறகு தேகப்பயிற்சியும் உண்டு. இந்த விளையாட்டில் ஈடுபட்டவர்கள் பொதுவாய், கூட ஒரு வேலைக்காரனையும் அழைத்துக் கொண்டு போவது வழக்கம். எதற்காக வென்றால் மேலே சொன்ன பல வகைத் தடிகளையும் சுமந்து வர. சமயத்திற் கேற்றபடி தடிகளை உபயோகிக்க வேண்டும்.

வாசத்திற்கென்று ராக்பெல்லருக்கு 5 வீடுகள் இருந்தன. இவற்றில் டாரிடவுன் (Tarrytown) சமீபத்தில் 'பொக்காண்டிகோ ஹில்ஸ்' என்ற பிரதேசத்தில் இருந்த இடம் இவருக்குப் பிரியமான வாசஸ்தலம். இது ஹட்ஸன் நதிக்கரையில் உள்ளது. சுமார் மூவாயிரம் ஏகர் விஸ்தீர்ணமும் ரமணீயமான சிங்கார வனங்களும் கொண்டது. இதில் குடியிருந்த வீட்டைக்கட்ட 2,000,000 டாலர் செலவு செய்தாராம். இந்நில புலன்களைப் பராமரிப்பதற்கு வருஷச் செலவு 50,000 000 டாலர்.

'கால்ப் ஹவுஸ்' (Golf House) என்னும் ஒரு விஸ்தாரமான ஜமீன் வைத்திருந்தார். அதைச் சுற்றி 640 ஏக்கர் நிலம் முழுவதும் தோட்டமும், தோப்பும், துறவுந்தான். இது இவரது கோடை வாசஸ்தலம். இதிலிருந்த வீடு 1918ல் தீக்கிரையானதாகவும் பிறகு கட்டப்பெறவில்லை யென்றும் கேள்வி.

தன் தகப்பனாரையும், சகோதரனை பிராங்கை (Frank) யும் பற்றி வெளிப்படையாய் இவர் ஒன்றும் தெரிவியாதிருந்தது ஒரு மர்மந்தான். பிராங்க் ராக்பெல்லர், ஸ்டாண்டர்ட் ஆயில் கம்பெனி தலைவராகி, முக்கியமாய் அதன் மூலம் பணக்காரரானார். தன் சகோதரர்களான ஜான், வில்லியம் இவர்களுடன் கூட்டுறவு கொண்டாடியதில்லை. 1915ம் வருஷத்தில் குடல் ஆபரேஷன் செய்யப்பெற்று ஆஸ்பத்திரியிலேயே இவர் இறந்தார். இறக்குந் தருவாயில் இவர் சொன்னதும் வியப்பாகவே இருக்கிறது. 'பிராங்க் ராக்பெல்லர்' தன் சகோதரனை ஜானுக்குச் செய்தி யனுப்பவில்லை; சொல்லியனுப்பவு மாட்டான். தன் உடம்பு அசௌக்கியத்தைப்பற்றி அவருக்குத் தெரிவிக்க மாட்டான்' என்ற செய்தி வியப்பிற் கிடமில்லாததாகுமா? ஜான், தன் தகப்பனாரை வயது காலத்தில் தகுந்தமாதிரி கவனிக்கவில்லை யென்று பிராங்க் ராக்பெல்லர், குறிப்பாகத் தெரிவிக்கிறார். தன்னுடைய 'பழைய ஞாபகங்கள்' என்ற ஒரு புத்தகத்தில் ஜான் ராக்பெல்லர் தன் தகப்பனாருக்கு நன்றியுரையும் பெருமையும் தருவது குறிப்பிடத்தக்கது. தனக்கு வாழ்க்கைக்கான பழக்கங்களும் தொழில் தத்துவங்களும் தன் தந்தை போதித்ததாகவும், தன் தொழிலுக்காகப் பணவுதவி செய்த காலத்தில் நூற்றுக்குப் பத்து வீதம் வட்டி போட்டதையும் கூறுகிறார். அதே சந்தர்ப்பத்தில் ஷை வட்டி விகிதம் சாதாரணமானதுதான் என்றும் குறிக்கிறார். தன்னுடைய தொழில் சாமர்த்தியத்தைப் பரிசோதனை செய்வான் வேண்டி எதிர்பாராத காலங்களில் கடன் தொகையைத் திருப்பிக் கேட்டதாகவும், இச்செய்கை தன் விருப்பத்திற்கு மாறாய் இருந்ததெனவும் ஒப்புக்கொள்ளுகிறார்.

இப்படித்தான் ஸார்!
கால்ப் விளையாடுவது.

வில்லியம் ராக்பெல்லர் (William Rockfeller) ஜான் ராக்பெல்லருடன் ஆயுள் முழுதும் சிநேகப் பான்மையிலேயே இருந்தார். இவர் 1922ம் வருஷம் இறந்தார். தன் சகோதரர் மனப்பான்மைக்கும் இவர் மனப்பான்மைக்கும் மிகவும் வித்தியாசமுண்டு. ஜான் ராக் பெல்லருக்கும் 'கிளப்'புக்கும் பொருத்தமே கிடையாது. அனேகமாய் 'கிளப்'புகளுக்கே போனது கிடையாது. வில்லியமோ அநேக 'கிளப்'புகளில் அங்கத்தினர்; அடிக்கடி போயும் வருவார். மத சம்பந்தமான காரியங்களில் வில்லியம் ஈடுபடமாட்டார். இவர் செய்த நன்கொடைகளில் பிரசித்தி பெற்றது 'யுத்த வேலை நிதி'க்குக் கொடுத்த 1,000,000 டாலர் தான்.

ஜான் டி. ராக்பெல்லர் உடம்பை நன்ருய்ப் போஷித்து வந்தார். அதன் காரணமாகவே அநேக ஆண்டுகள் ஜீவித்திருந்தார். 92 வயது கடந்த பிறகு, நண்பர்களிடம் 100 ஐயும் தாண்டுவேன் என்ருராம். 'திருப்தியுடனும் சமாதானத்துடனும் கழிக்கப்படும் ஒவ்வொரு நாளும் அதற்கு அடுத்த நாளையும் அமைதியாய் வாழச் செய்யும்' என்பது அவர் நம்பிக்கை.

ராக் பெல்லர் கடைசி காலத்தில் தனது வியாபார நிருவாகம் முதலிய அனைத்தையும் தன் மகனிடத்தில் ஒப்படைத்து விட்டு, பணம் என்ற கவலையில்லாமல், மிகத் திருப்தியுடன் வாழ்ந்தார். காலையில் உலாவச் செல்லும் போது, இரண்டு சட்டைப்பைகளிலும் சில்லரை நாணயங்களைப் போட்டு வைப்பான் ஒரு சேவகன் ஏழை ஜனங்களுக்குக் கொடுப்பதற்காக. இதுதான் இவர் கடைசி காலத்தில் கையாண்ட பணம். வயதான காலத்தில் இவர் கொஞ்சங்கூட கவலைப் படுவதே கிடையாது. ஒவ்வொரு நாளும் காலை ஆகாரத்தின் போது, வாழ்க்கையின் தத்துவத்தைப் பற்றி விவரிக்கும் பாடல்களைப் பாடச் சொல்வார். இவர், தமது 93-வது பிறந்த நாளின் போது, கீழ்க் கண்ட செய்தியை ஜனங்களுக்குத் தெரிவித்தார்:—

"வாழ்க்கையிலே சோர்வடையக் கூடிய நாட்களும் வரலாம். என்னுடைய 93 வருஷ வாழ்க்கையில் எத்தனையோ விதமான சோர்வுகள் வந்து கொண்டும் போய்க் கொண்டுமிருந்தன. ஆனல் சம்பத்து என்பது எப்பொழுதும் வந்து கொண்டிருந்தது. அது மறுபடியும் வரும்".

1934ம் வருஷம் பிப்ரவரி மாதத்திலிருந்துதான் இவர் கால்ப் பந்து விளையாடுவதை நிறுத்தி விட்டார். அதற்குப்பிறகு அடிக்கடி வெளியிலேயும் போகக் கூடாதென்று வைத்தியர்கள் சொன்னர்கள். ஆனல் தினந்தோறும் காலையில் இரண்டொரு மணி நேரம் சூரிய ஸ்நானம் செய்வார். கொஞ்ச தூரம் எங்காவது நடக்க வேண்டுமானல், கூடவே இரண்டொரு வேலையாட்கள் செல்வார்கள். தினப்படி பத்திரிகைச் செய்திகளைப் படித்துக் காட்டுமாறு சொல்வார். பைபிளிலிருந்து சில பாகங்களை வாசித்துக் காண்பிக்குமாறு சொல்வார். ஒரு சில நண்பர்களும், சில பேரப் பிள்ளைகளுந்தான் இவர் அருகில் சென்று பழகுமாறு அனுமதிக்கப்பட்டிருந்தார்கள்.

கடைசியில், ப்ளாரிடாவில் (Florida) தமது 98-வது வயதில் 25-5-1937ல் அமைதியாக இறந்து போனர் ராக்பெல்லர்.

மாஸ்கோ—ருஷ்யாவின் தலை நகரம்

— ஐ. மா.

ஜன சமூகத்தின் நன்மையையே தங்கள் முக்கிய லட்சியமாகக் கொண்ட ஓர் ஆட்சி வர்க்கத்தினர், எத்தகைய மாறுதல்களையும் மிகச் சுலபமாகவும் வெகு சீக்கிரத்திலும் செய்து விடலாம் என்பதற்கு மாஸ்கோ நகரம் சென்ற இருபது வருஷ காலத்திற்குள் அளிக்கும் புதிய தோற்றமே தகுந்த அத்தாட்சியாகும்.



மாஸ்கோ பார்க்: இதில் நாடக மண்டபங்கள், சினிமா ஹால்கள், ஹோட்டல்கள், வாசகசாலைகள் முதலிய எல்லா வசதிகளும் இருக்கின்றன.

மாஸ்கோ, ருஷியாவின் தற்போதைய தலை நகரம். இதன் ஜனத்தொகை 3,640,000. சோவியத் அரசாங்கத்தின் கீழ் இஃது அநேக தினுசாக மாறியிருக்கிறது. சுமார் 20 வருஷங்களுக்கு முன் இந்த நகரத்தைச் சென்று பார்த்தவர்கள், இப்பொழுது மறுபடியும் சென்று பார்ப்பார்களானால் ஒரு புதிய நகரத்தையே காண்பார்கள்.

ஜார் ஆட்சி காலத்தில், நெசவுத் தொழில் ஒன்றுதான் மாஸ்கோவின் பிரதான தொழிலாயிருந்தது. ஆனால் இப்பொழுது எல்லாவிதப் பொருள்களையும் உற்பத்தி செய்கிற தொழிற்சாலைகள் ஏராளமாகத் தோன்றியிருக்கின்றன. சோவியத் ருஷ்யாவின் மொத்தப்பொருள் உற்பத்தியின் கால்

பாகம், இந்த ஒரு நகரத்தில் மட்டும் உற்பத்தியாகிறது. 'மாஸ்கோவில் செய்யப்பட்டது' என்ற முத்திரை கொண்ட மோடார், சைகிள், கடியாரம், மின்சாரக் கருவிகள் முதலிய எல்லாம் ருஷ்யாவின் மூலை முடுக்குகளில் காணலாம். பொதுவாகச் சொல்லுமிடத்து கிராமங்களின் ரத்தத்தை உறிஞ்சும் நகரமாக இப்பொழுது மாஸ்கோ இல்லை; நாடு முழுவதிற்கும் சக்தி அளிக்கிற ஒரு மின்சார யந்திரம்போ லிருக்கிறது.

இது மட்டுமல்ல; இந்த நகரம் ஒரு கல்விக் களஞ்சியமாகவும் இப்பொழுது ஆகி விட்டது. ருஷ்ய விஞ்ஞானக்கழகம் இங்கேதான் அமைக்கப்பட்டிருக்கிறது. லெனின் புஸ்தக சாலை என்றதொரு ஸ்தாபனம் இருக்கிறது. இங்கு அறுபது லட்சம் புத்தகங்களுக்கு மேலிருக்கின்றன.

1934ம் வருஷத்தில் வெளியான ஒரு புள்ளி விவரப்படி, தினந்தோறும் இந்த ஒரு நகரத்தில் $7\frac{1}{2}$ லட்சம் புஸ்தகப் பிரதிகள் வெளியாகின்றன. மற்றும் சர்வகலாசாலைகள், காலேஜ்கள், தொழிற் பள்ளிக்கூடங்கள் ஆகிய இவை மட்டும் 162 இருக்கின்றன. இவற்றில் 130,000 மாணக்கர்கள் படிக்கிறார்கள். இவை தவிர, ஆரம்பப் பள்ளிக்கூடங்களும் மத்தியதரப் பள்ளிக்கூடங்களுமாக மொத்தம் 566 இருக்கின்றன. 1938-ம் வருஷத்திற்குள் இன்னும் 244 பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தத் திட்டம்போட் டிருக்கிறார்கள். மேலே கூறிய 566 பள்ளிக்கூடங்களில் 549,600 மாணாக்கர்கள் படிக்கிறார்கள். இவர்கள் அனைவருக்கும் பகல் உணவு அரசாங்கச் செலவில் கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு குழந்தையும் பத்து வருஷம், கட்டாயம் பள்ளிக்கூடத்தில் படிக்கவேண்டுமென்ற திட்டம் 1935-ம் வருஷத்திலிருந்து அமுலில் இருக்கிறது.



சோவியத் அரண்மனை 1350 அடி உயரமுள்ள இந்தக் கட்டிடத்தின் மீது 260அடி உயரமுள்ள லெனின் உருவச் சிலை அமைக்கப்படும்.
இந்தக் கட்டிடத்தின் அஸ்திவாரம் மட்டும் 24 ஏகரா விஸ்தீரணமுள்ளது.

ஜார் ஆட்சிக் காலத்தில், மாஸ்கோ நகரத்தில் மொத்தம் 14நாடக மண்டபங்களே இருந்தன. சோவியத் அரசாங்கத்தினர், புதிய முறையில் 46 மண்டபங்களைப் பல வசதிகளுடன் நிர்மாணித்திருக்கின்றனர். அறிவுக்கும் அமைதிக்கும் இடமாக புதிய 'பார்க்' (தோட்டம்) ஒன்றை நிர்மாணித்திருக் கின்றனர். இதன் விஸ்தீரணம் 750ஏகரா. எச். ஜி. வெல்ஸ் என்ற பிரபல ஆங்கில நூலாசிரியர், இந்தத் தோட்டத்தை 23-7-1934ல் பார்வையிட்டு 'முதலாளித்துவத்திற்காக

நான் இறந்து, மறுபடியும் சோவியத் ஸ்வர்க்கத்திலே பிறப்பேனுயின் இந் தத்தோட்டத்திலேயே என் கண் திறக்க வேண்டுமென்று விரும்புகி றேன்' என்று கூறினர்.

மாஸ்கோ நகரத்தின் எந்த மூலை முடுக்குகளுக்கு வேண்டுமானுலும் நீங் கள் போய்ப்பாருங்கள். உயர்ந்த மாளிகைகளும், சுகாதார வசதி யற்ற ஏழைகளின் குடிசைகளும் நிரவி யிருப்பதைக்காண முடியாது. எந்த முடுக்கைச் சென்று பார்த்தா லும், நீர், வெளிச்சம், ரோட் முத லிய எல்லா வசதிகளும் இருக்கும். சென்ற ஐந்து வருஷ காலத்திற்குள், மாஸ்கோவின் ஜனத்தொகை ஒன் றுக்கு மூன்றுக உயர்ந்திருக்கிறதென் ருல் அதைக்குறித்து ஆச்சரியப்படு வதற்கில்லையல்லவா? ஜனத்தொகைப் பெருக்கத்திற்குத் தகுந்தபடி, வீட்டு வசதிகள் அமைத்துக் கொடுக்க சோவியத் அரசாங்கத்தினர் பகீரதப் பிரயத்தனங்கள் செய்துவருகிறுர்கள். 1931ம் வருஷத்தில் 56,000 வீடுகளே இருந்தன. அந்த வருஷத்திலிருந்து 1935ம் வருஷத்திற்குள் 1850 புதிய வீடுகள், பல மாடிகளைக் கொண்ட தாய்க் கட்டப்பட்டிருக்கின்றன. இங்ஙனம் நகரத்தை மெதுமெதுவாக விசாலித்துக் கொண்டே போகிறுர் கள். இப்பொழுது மொத்தம் 2,500 தெருக்கள் இந்த நகரத்தில் இருக் கின்றன. ஜனப்போக்குவரத்துக்குச் சௌக்கியமாக இருக்கும் பொருட்டு, பூமியின் கீழ் ரெயில்கள் ஓடுவதற்கும் இப்பொழுது சோவியத் அரசாங்கத் தினர் ஏற்பாடு செய்து கொண்டு வரு கிறுர்கள்.

1935ம் வருஷத்தில், சோவியத் அரசாங்கத்தினர், மாஸ்கோ நகரத்திற் கென்று பத்து வருஷத் திட்டமொன்றைத் தயாரித்து, அந்தத் திட்டத்தின் மீது இப் பொழுது வேலை செய்துகொண்டு வருகிறுர்கள். 1945ம் வருஷத்தில் 50 லட்சம் ஜனங்கள், எல்லாச் சுகா தார வசதிகளுடனும் இந்த நகரத்தில் வசிக்கத்திட்டம் போடப்பட்டிருக்கி றது. இந்தப்பத்து வருஷத் திட்டத் தின் முக்கியமான அம்சங்களை இந்தக் கட்டுரையின் கீழே கொடுத்துள்ள புள்ளி விவரங்களினுல் தெரிந்து கொள்ளலாம்.

தவிர, இந்தப் பத்து வருஷத் திட் டப்படி, பல புதிய பெரிய கட்டிடங் களையும் நிர்மாணிக்க ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறுர்கள். இவற் றில், மிகப் பெரியது 'சோவியத்அரண் மனை' என்பது. இருபதினுயிரம் பேர் உட்காரக்கூடிய அளவில் பெரிய மண் டபம் இதில் அமைக்கப்படும். இந்தக் கட்டிடத்தின் உயரம் 1350 அடியாக இருக்கும். இந்தக் கட்டிடத்தின் மீது 260 அடி உயரமுள்ள லெனின் உருவச் சிலை இருக்கும். இந்தக் கட்டிடத்து அஸ்திவாரத்தின் விஸ்தீரணம் மட்டும் 24 ஏக்ரா என்றுல் இது எவ்வளவு பெரிதாக இருக்கும் என்பதை நேயர் களே ஊகித்துக் கொள்ளலாம்.

மாஸ்கோவிலுள்ள ஒவ்வொரு தெரு வுக்கும் ஒவ்வொரு சித்திரநிபுணர் நிய மிக்கப் பட்டிருக்கிறுர். இவர், அந்தத் தெருவில் கட்டப்படும் வீடுகள் எந்த மாதிரி யமைக்கப்பட்டால் நன்றுயிருக் கும், எந்த வர்ணத்தோடு இருக்க வேண்டும் என்பவைகளைப் பற்றி யெல்லாம் வீட்டுக்காரர்களுக்கு யோசனை சொல்வார். ஒவ்வொரு வீட் டுக்கும், பசுமையான மண் தரை கொஞ்சம் ஒதுக்கப்பட வேண்டு மென்ற கட்டாய விதியும் உண்டு.

பொதுவாகச் சொல்லுமிடத்து 1945-ம் வருஷத்தில், மாஸ்கோ நக ரம் அடியோடு மாறுதல் பெற்று

விளங்கும் என்று சொல்லலாம். ஓர் அபேதவாத அரசாங்கம் என்ன காரியங்களைச் சாதிக்க முடியுமென்பதற்கு இஃது ஓர் எடுத்துக் காட்டாயிருக்கு மல்லவா?

விவரம்	**1935**-ம் வருஷத்தில் இருந்தது	**1945**-ம் வருஷத்தில் இருக்கப்போவது
ஜனத் தொகை	3,600,000	5,000,000
விஸ்தீரணம் (ஹெக்டாரே என்ற அளவில்)	28,500	60,000
வீடுகளின் விஸ்தீரணம் (சதுர மீடர் அளவில்)	15,000,000	30,000,000
தண்ணீர் சப்ளை (பக்கெட்டு கணக்கில்)	56,000,000	180,000,000
பண்பட்ட ரோட்டுகள் (சதுர மீடர் அளவில்)	3,000,000	10,000,000
டிராம்வே நீளம் (கிலோமீடர் அளவில்)	450	800
ட்ராலி பஸ்கள்	50	1000
டாக்ஸிகள்	500	2500

உலகத்திலுள்ள பெரிய நகரங்கள்

பெயர்		ஜனத்தொகை
லண்டன்	....	8202818
நியூயார்க்	....	6930446
டோக்கியோ	....	5312000
பெர்லின்	....	4000000
மாஸ்கோ	....	3600000
ஷாங்காய்	....	3200000
பாரிஸ்	....	2871039
வியன்னா	....	1874680
கல்கத்தா	....	1486000
கெய்ரோ	....	1060000
ரோம்	....	1045088

அம்பி அறம் வளர்த்த முதலியார்

——எஸ். சோமசுந்தர தேசிகர்
இலக்கணவிளக்க ஆசிரியர் பரம்பரை

பிற்காலத்திலே, அதாவது 15, 16ம் நூற்றாண்டுகளிலே வட வேங்கட முதல் தென்குமரி வரையில் ஆண்ட விஜய நகர அரசர்களுள் மிக்க கீர்த்தியும் திருவுமுடையராய் அரசாண்டவர் கிருஷ்ண தேவராயர் ஆவர். கல்விமான். பெரிய இராஜ தந்திர நிபுணர். ஆயினும் அவர் தெலுங்கு மொழி யொன்றிலே தான் மிக்க பாண்டித்திய முடையவராக விருந்தார். தமிழ் நாட்டையாள வேண்டுமானால் தமிழ் மொழியையன்றோ நன்கு பயின்றிருக்க வேண்டும். அவ்வாறு அவர் தமிழை நன்கு கற்றிலரேனும் தமிழிலே மிக்க வன்மையுடைய பெரியோர் பலரை உசாத்துணையாகக் கொண்டிருந்தனர். போர்க்காரியங்களைக் கண்காணிக்க ஆபத் சகாயர் என்றொருவரை நியமித்திருந்தார். தென்னாட்டின் காரியங்களை நிர்வகிக்க வட மலையப்ப பிள்ளையன் என்றொருவரை நியமித் திருந்தார். தன்னுடனிருந்து காரியங்களை நிர்வாகஞ் செய்ய அறம் வளர்த்த முதலியார் என்றொரு பெரியாரைக் கூடவே வைத்திருந்தார். அப் பெரியாரைக் குறித்த சில செய்திகளை ஈண்டு வரைகின்றேன்.

அறம்வளர்த்த முதலியார், தொண்டை மண்டலத்திலுள்ள செம்பூர்க் கோட்டத்திலே பட்டண நாட்டிலேயுள்ள செம்பூரிலே ஒரு தொண்டை மண்டல வேளாள உயர் குடியிலே பிறந்தவர். செம்பூர் என்ற ஊர் இப்பொழுது செங்கற்பட்டு ஜில்லா மதுராந்தகம் தாலுக்காவிலே யிருக்கின்றது. தொண்டை மண்டல வேளாளர், முதலியார் என்ற பட்ட முடையவர்கள்.

முதலியார் என்பது, தலைவர் என்ற பொருளில் வந்திருத்தல் வேண்டுமென்று தோற்றுகிறது. சேனை முதலியார், முதலியாண்டான் என்பனவற்றையும் 'எங்கள் முதலிகள் அல்லலையோ நீ' என்பதனையும் நோக்குக. முதலியார் என்ற சொல் இன்னும் இலங்கைத் தீவில் அரசாங்கத்தாரால் வழங்கப்படும் ஒரு கவுரவ பட்டமாகும். ஆகவே நமது சரித்திர நாயகரும் ஒ ருயர் குடியிற் பிறந்தவ ரென்பது உறுதியான செய்தியாகும்.

இவர் இளமையிலேயே கல்வி கேள்விகளில் வல்லவரானார். இவருடைய வல்லமையை யறிந்த கிருஷ்ண தேவராயர், தமிழ் நாட்டுக் காரியங்களைக் கண்காணிப்பதற்காகத் தன்னுடனேயே இருக்குமாறு திட்டஞ் செய்திருந்தார். இராயருடன் அதிக காலம் முதலியார் இருந்தமையால் முதலியாரை அம்பி அறம் வளர்த்த முதலியார் என்று மக்கள் வழங்குவராயினர். அம்பி என்பது பல்லாரி ஜில்லாவிலுள்ள ஹம்பி என்ற சொல்லின் தற்பவம்.

முதலியார் இராயரோடு உடனிருந்து தமிழ் நாட்டுக் காரியங்களைப் பார்த்து வந்தாரென்று கூறினோம். கி. பி. 1513க்குச் சரியான சகம் 1435-ன் மேற்செல்லா நின்ற ஆங்கிரச வருஷத்திலே கிருஷ்ண தேவராயர், திருவண்ணாமலையாலய அண்ணாமலையீசர்க்கு ஆயிரக்கால் மண்டபமோ

ன்று கோயிலைச் சேர்ந்தாற் போலக் கட்ட விரும்பினூர். அவர் மண்டபம் கட்டவிரும்பிய இடத்தில்,தொண்டை மண்டல முதலி மாரது நாட்டு மடம் இருந்தது. அந்த மடத்தை யிடித்துக் கட்ட வேண்டியிருந்ததால் அந்த மடத்திலிருந்த அழியா விரதம் பூண்ட தம்பிரான் என்பவர் அதற்குச் சம்மதிக்க வில்லை. அப்பொழுது அறம் வளர்த்த முதலியார் சில ஏற்பாடுகளைச் செய்து இராயருடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்தாரென்று செப்பேடு ஒன்று கூறுகிறது.

முதலியார் இராயரிடம் அதிக செல்வாக்குப் பெறுவதைக் கண்ட ஒரு சிலர், பொருமை கொண்டு வேளாண் மகளிரைப் போல வேடம் பூண்டு இராயர் சமூகத்திலே நடித்ததாகவும், அதனைக் கண்டு பொருத முதலியார் தனது சேவகனைப் பார்க்க, அவன் முன் பின் யோசியாது பெண் வேடந் தரித்தவரோடு வாதாடி அவனைக் கொன்றதாகவும் அவன் செய்தது நியாயமான காரியமே யென்று இராயரிடம் முதலியார் கூறி அச்சேவகனைக் காப்பாற்றியதாகவும் ஒரு கதை வழங்குகிறது. அதனைக்,

தாளாண்மை யுள்ள புகழ்க் கிருஷ்ண
ராயன் சமூகத்திலே
வேளாண் மகளிரைப் போலே
விநோதித்து வேடங் கொண்டு
கோளார் வயிரியர் கூத்தாட
தங்கள் குடிமை யெண்ணி
வாளா லவனுயிர் மாய்ந்த தன்றே
தொண்டை மண்டலமே

என்ற தொண்டை மண்டல சதகம் 90-வது செய்யுள் வலியுறுத்தும்.

இவ்வாறு அறம் வளர்த்த முதலியாரின் பெருமை தமிழ் நாடு முழுவதும் பரவி வந்தது. அக்காலத்தில் பாண்டியர்கள் மிக்க வலிகுன்றி திருநெல்வேலிச் சீமையைப் பெற்று அரசாண்டு வந்தனர். அப்பாண்டியர்கள் கல்வி கேள்விகளில் வல்லவர்களாயிருந்தனர். முதலியார் இருக்கும் பொழுது அரசாண்டு வந்த பாண்டியன், முதலியார் மேல் கலம்பகம் என்ற பிரபந்த மொன்று பாடினன். அதனைக் கேட்ட அவனது அவைக் களப் புலவர் 'அறம் வளர்த்தமுதலியாரைப் பாண்டியன் பாடலாமோ' என பாண்டியன் கூறியதாவது:–

உங்கள் மனந்தெரியும் புலவீரொரு
சீர் மரபோன்
திங்கண் மரபினந் திங்களின் கூடச்
செம்பூறநமா
துங்கன் மரபினிற்கங்கையுஞ் சூடினன்
சோதியன்றே
எங்கண் மரபுண்டெனக்கவி பாடினம்
யாமவற்கே

(பாண்டியன் சந்திர வமிசமாகவே, சந்திரனைச் சடையிலே தரித்த சிவபிரான் கங்கையையும் அச்சடையிலே தரித்திருந்தவன், அக்கங்கை மரபினனும் செம்பூரில் தோன்றியவருமான அறம் வளர்த்தான் தன்னின மாதலின் அவனைப் பாடுதல் குற்றமாகாது.)

என்று கூறினர் என ஒரு செய்யுள் தமிழ் நாவலர் சரிதை யிற் காணப்படுகிறது.

இவ்வாறு பாடிய பாண்டியன் யாவனென ஆராய்வோம். இராயர் அரசாட்சி, கி. பி. 1509க்கும் 1530க்கும் உட்பட்டது. ஆதலினாலே முதலியாரும் இராயர் காலத்துக்கு முன் பின் இருந்ததாகத் தெரியாமையாலே அவர் காலத்தவராதல் கண் கூடு. ஆகவே அக்காலத்தி லிருந்த பாண்டியனே பாடி யிருத்தல் வேண்டும். அவனும் கல்வியில் வல்லவனாக இருத்தல் வேண்டும்.

அவ்வாறு அக்காலத்தில் ஆண்ட பாண்டியன் யாவனென ஆராய்வோம். அவிட்ட நாளிலே பிறந்த கோ ஜடில வர்மன் அழகன் பெருமாள் பராக்கிரம பாண்டியன், சகம் 1428க்குச்

சரியான கி. பி. 1506வரை அரசாண்டவன். இவன் வீர வேள் என்றும், பொன்னின் பெருமாள் என்றும் பட்டங்கள் தாங்கியவன். புராணத் திருமலை நாதரைக் கொண்டு சோக்கநாத ருலா என்ற நூல் பாடுவித்தவன். ஜடில வர்மன் ஸ்ரீ வல்லபதேவன் சகம் 1456க்குச் சரியான கி. பி. 1534ல் அரசனானன் என்று கல்வெட்டுக்களால் அறிகிறோம். இவனுக்கு முன் இவனுடைய தந்தை ஆகவராமனும் அவனுடைய மூத்தோன் அபிராம பராக்கிரமனும் ஆண்டனரென புதுக்கோட்டைச் செப்பேடுகள் கூறுகின்றன. ஜடிலவர்மன் ஸ்ரீ வல்லபதேவனுக்கு, இறந்தகால மெடுத்த பெருமாள் என்றொரு விருது இருந்தல்கொண்டு இவனுக்கு முன் அரசாட்சி, பிறர் வச மிருந்ததென ஏற்படும். அவ்வாறான காலத்திலேயே அறம் வளர்த்த முதலியாரைப் பாண்டியன் பாடி யிருக்க வேண்டும். இராயர் அரசாட்சி தென்னாட்டில் பலவீனப்பட்டபோது தான், ஸ்ரீவல்லபதேவன் தகப்பன் இழந்த நாட்டை மீண்டும் பெற்றிருக்க வேண்டுமென ஊகிக்கலாம். ஆகவே அறம்வளர்த்த முதலியார் மேல் கலம்பகம் பாடிய பாண்டியன் பராக்கிரம பாண்டியனை இருக்கலாமென்று ஒருவாறு ஊகிக்கலாம்.

அலாடின் விளக்கு

—ஜே. ஆர் லவல்

1. நான் சிறுவனா யிருந்தபொழுது பரம ஏழை. பிச்சை எடுத்தே வயிறு வளர்த்தேன்.

அதனால் எனக்கு நண்பர் எவர்? எனக்கு விளையாட்டுப் பொருள் ஏது?

என்னிட மிருந்ததெல்லாம் அலாடின் விளக்கு ஒன்றே.

குளிர்மிகுதி: தூங்க முடியாது. அப்பொழுது என் மூளையில் விளக்கேற்றுவேன்;

கண்கவர் கனக மாளிகைகள் கட்டிக் கொண்டே இருப்பேன்;

இரவும் கழியும், பனியும் மறையும்.

2. இரவு பகலாய் உழைத்தேன். ஏராளமான செல்வம் தேடி விட்டேன். ஆனால்—

என்னிடம் வெள்ளி விளக்குகள் உள. ஆனால் என் பழைய அலாடின் விளக்கை யார் தருவார்?

அதிர்ஷ்டமே!—நீ அளித்தவை எதுவானாலும் எடுத்துக் கொள். எதை இழக்கவும் நான் வருந்த மாட்டேன்.

என் கனக மாளிகைகள்தான் இல்லையே. மற்றவை எனக்கு எதற்கு?

(போ. தி.)

பர்மிய மன்னர்களின் கீழ் அரசாங்க முறை

—கு. கோ. கிருஷ்ணன்
B. Sc., (Hons)

பர்மிய அரசர்கள், தங்கள் அரசாட்சிக்கு முக்கியமாய் இரண்டு நிர்வாக சபைகளிடத்திலும் சில முக்கிய அரசியல் உத்தியோகஸ்தர்களிடத்திலும் யோசனை கேட்டு வந்தனர். இவைகளில் முதலாவதான சபையின் பெயர் 'லுட்டவ்'. இச்சபையில் நான்கு அல்லது ஐந்து அங்கத்தினர்களிருந்தனர். இவர்களை 'உஞ்சீஸ்' என்றழைப்பார்கள். இச்சபை, அரசனின் தலைமையில் அரண்மனையினொரு பாகத்தில் கூடும். அரசனில்லாக் காலத்தில் 'அய்ன்-ஷி-மின்' என்ற அவன் பிரதிநிதியின் தலைமையில் கூடும். ஒவ்வொரு 'உஞ்சீஸும்' ஒரு உதவிகர்த்தன் அல்லது 'உண்டாக்' என்பவனோடு சபையில் அமருவான். அரசனுடைய கட்டளைகள், இச்சபையின் மூலமாகவே அறிவிக்கப்படும். ஒவ்வொரு 'உஞ்சிஸும்' நியாயஸ்தராவர். கடைசி அப்பீல் 'லுட்டவ்' சபைக்கே வர வேண்டும்.

இரண்டாவது சபைக்கு 'பைடேய்க்' என்று பெயர். இச்சபையில் நான்கு மந்திரிகள் அல்லது 'அட்வின் வுன்ஸ்' அங்கம் வகிப்பார்கள். இச்சபை 'லுட்டவ்' சபைக்குக் கீழ்த்தரமானாலும், இவர்கள் அரசன் பக்கத்தில் சதாவிருப்பதால் அதிகாரம் அதிகமாகச் செலுத்தி வந்தனர். ஆகவே அவர்கள் யோசனையின்படியே விஷயங்கள் 'லுட்டவ்' சபைக்கு அனுப்பப் பட்டு வந்தன. 'லுட்டவ்' சபையினரைப் போலவே 'அட்வின் வுன்ஸ்'களும் தனியாகவும், கூட்டாகவும் நியாயஸ்தர்களாயிருந்து வந்தனர். இவர்கள், கூட்டத்தின் நடவடிக்கைகள், அரசன் கட்டளைகள், மனுக்கள் முதலியவைகளைப் பற்றி அறிவிக்க அநேக காரியதரிசிகளையும் உடைத்தாயிருந்தனர்.

சுலபமாக ஆள்வதற்கு ஒவ்வொரு முக்கிய பட்டணத்தின் நாமத்தைக் கொண்ட மாகாணங்களாக தேசம் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு மாகாணமும் 'உன்' என்பவனால் ஆளப்பட்டு வந்தது. அவனே அம்மாகாணத்தில் சகலத்திற்கும் அதிகாரியாயிருந்தான். அவன் 'லுட்டவ்' சபையின் கட்டளைப்படி நடக்கச்சித்தமாயிருப்பான். அவனுக்குக் கீழ் வரி வசூலிப்பவன் அல்லது 'அக்குன்வுன்' என்பவனிருப்பான். கடற்கரையோரமான மாகாணங்களில் 'யேவுன்' என்ற கடல் அதிகாரியும், 'அக்காக்வுன்' என்ற ஏற்றுமதி இறக்குமதி வரி விதிப்பவர்களுமிருப்பார்கள். சிறிய ஜில்லாக்களை 'மியோதூஜீஸ்' என்பவர்களும், கிராமங்களை 'யுவாதூஜீஸ்' என்பவர்களும் கண்காணித்துவந்தார்கள். கீழ்த்தர உத்தியோகஸ்தர்கள் கொடுக்கல் வாங்கல் தகராறுகளை மாத்திரம் விசாரித்து நியாயம் கூற முடியும். மற்ற அடி, கொலை முதலிய குற்றங்களை 'உன்' என்பவனே விசாரிக்க முடியம்.

ஒவ்வொரு நகரத்திலும் 'டயாதூஜி' என்ற சிவில் நியாயாதிபதியின் கீழ் ஒரு கொடுக்கல் வாங்கல் நியாயஸ்தலமும், ஒவ்வொரு மாகாணத் தலை நகரிலும் 'டயாமாதூஜி' என்ற சிவில் முக்கிய நியாயாதிபதியின் கீழ்

ஒரு சிவில் நியாயஸ்தலமு மிருந்தன. ஒவ்வொரு மாகாண நியாயஸ்தலத்தி லும் ஒரு 'சிட்கே' என்ற போலீஸ் நியாயாதிபதியிருந்து ஜனங்களின் சச்சரவில்லா வாழ்க்கையைக் கவ னித்து வருவான். ஊராவதி நதியில் அதிகமாகக் கொள்ளைக் கூட்டத்தா ரால் சாமான்கள் பறிமுதல் செய்யப் பட்டு வந்ததால் மரண தண்டனை விதிக்கும் உரிமையுடன் 'யேவுன்' என்பவனை ஆற்றுக்கதிபதியாய் ஏற் படுத்தியிருந்தனர்.

இம்முக்கிய உத்தியோகஸ்தர்களு டன் காடு, நிலவரி முதலிய வகை களுக்கு அநேக கீழ்த்தர உத்தி யோகஸ்தர்களுமிருந்தனர். ஓர் அரச னுக்குச் சாதாரணமாக நான்கு முக் கிய இராணிகளும் அநேக மனைவி களுமிருப்பார்கள். ஒவ்வொருஇராணி யும்,அநேக மந்திரிகளையும், வேலைக் காரிகளையும் வைத்திருப் துண்டு.

மிண்டன் மின் அரசனுக்கு முன், உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பளம் கொடுக்கப் படுவதில்லை. அவர்கள் தாங்களே வரி கொடுப்போர்களிட மிருந்து வேண்டியதை வசூலித்துக் கொள்ள வேண்டும். முக்கியமாக அபராதங்கள் விதிப்பதில் ஒரு பாகத்தை அரசனுக்கு அனுப்பிவிட்டு, மிகுதியை உத்தியோகஸ்தர்கள் ஒதுக் கிக் கொள்ளுவார்கள். ஆகவே ஒவ் வொரு உத்தியோகஸ்தனும் ஜனங் களைச் சுரண்டுவதற்குப் போதிய சாதனங்களிருந்தன. மேலும் களவு, கொள்ளை முதலிய கூட்டத்தினர் உத் தியோகஸ்தர்களுக்குப் பங்கு கொடுத் துத் தங்கள் காரியங்களைப் பயமில் லாது செய்து கொள்ள ஏதுவாயிருந் தது. புத்தமத சந்நியாசிகள் மாத் திரம் எவ்வித வரிக்கும் உட்பட்டவர் களல்லர்.

பர்மிய அரசன் தகுந்த இராணு வம் தயாரித்து வைப்பதில்லை. ஆனால் வேண்டும்போது ஒவ்வொரு மாகா ணத்திலிருந்தும் திரட்டிக் கொள்வது வழக்கம். ஒவ்வொரு கிராமமும் சிறு பகுதிகளாகப்பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதியும் ஒன்று அல்லது இரண்டு பேரை யுத்தத்திற்கு அனுப்ப வேண் டும். அப்படி அனுப்பப் படுபவர் களின் நன்னடத்தைக்கு அவர்களின் மனைவி சுற்றத்தார்களே பொறுப் பாளர்கள். கோழைத்தனம், கீழ்ப்படி யாத் தனம் உடையவர்கள், தம் உயி ரையும் தமதுகுடும்பத்தினரின் உயிரை யும் இழக்க நேரிடும். இராணுவத்தில் சேவிக்க இஷ்டமில்லாதவர்கள் யுத்த நிதிக்கு வேண்டிய பொருளைச் சேர்க்க வேண்டும். ஒவ்வொரு போர் வீரனும் யுத்தம் நடக்கும் காலத்திற்குத் தகுந்த வாறு அரிசியும், பணமும் பெறுவார்கள். இதை, அவன் அனுப் பிய கிராமத்தினரே கொடுக்க வேண் டும். துப்பாக்கி முதலிய ஆயுதங்களை அரசன் அரண்மனையிலிருந்து கொடுப் பார்கள். துப்பாக்கிகள் வெகு கொஞ் சமாயிருக்கும். ஈட்டி, கத்தி முதலி யவைகள் ஏராளமாகத் தாங்கிச் செல் லுவார்கள் போர் வீரர்கள்.

புரோம் முதலிய விடங்களில் சுமார் 1500 பேர்களுக்குக் குறையா மல் சதா இராணுவம் வைத்திருப்பார் கள். இவர்களை அவ்வப் பட்டணங் கள் சொந்தச் செலவில் வைத்திருக்க வேண்டும. தலை நகரில் ஸ்திரமான பட்டாளம் தேவைப் பட்டால் சில கிராமங்கள் செலவில் அதை வைத்தி ருப்பார்கள். அக்கிராமங்கள், மற் றெந்தப் பொது வேலைக்கும், வரிக் கும் தலையிட வேண்டியதேயில்லை. சில ஊர்கள் யுத்தப் படகுகளும், பட கோட்டிகளும் வேண்டும் போது கொடுத் துதவக் கடமைப் பட்டிருந் தன.

அசோகன் சாஸனங்கள்

—"மௌத்கல்யன்"

பதினான்கு பாறைச் சாஸனங்கள்

1

பிராணி தயை

தேவப்ரியரான ப்ரியதர்சி மகாராஜருடைய ஆக்ஞைப் படி இந்தத் தரும சாஸனம் எழுதப் பட்டது.

இங்கே (பாடலி புத்ரத்தில்) எந்தப் பிராணியையும் பலியிடக் கூடாது. கேளிக்கைகளும் நடைபெறக்கூடாது. சில இடங்களில் இந்தக் கேளிக்கைகள் நடைபெறுவது தேவப்பிரியரான பிரியதர்சி மகாராஜருக்கு நல்லதென்று பட்டாலும் (பொதுவாக) இந்தக் கேளிக்கைகளில் அதிக தோஷம் இருப்பதாக சக்ரவர்த்தி கருதுகிறார்.

முன்னம், சக்ரவர்த்தியினுடைய பாக சாலையில் கறி செய்வதற்காக நூறாயிரக் கணக்கான உயிருள்ள பிராணிகள் வதை செய்யப் பட்டன. இப்பொழுது, இந்தக் கரும சாஸனம் வரையப் படும் பொழுது, கறிக்காக மூன்று உயிருள்ள பிராணிகளே வதை செய்யப் படுகின்றன. அதாவது இரண்டு மயில்களும் ஒரு மானுந்தான். இந்த மான் கறியும் எப்பொழுதோ ஒரு முறைதான் சமைக்கப் படுகிறது. இனி இந்த மூன்று உயிருள்ள பிராணிகளும் வதை செய்யப் பட வேண்டியதில்லை.

2

மனிதர்களுக்கும் பிராணிகளுக்கும் சௌகரியங்கள்

தேவப்ரியரான ப்ரியதர்சி மகாராஜருடைய ராஜ்ஜியத்தின் எந்தப் பாகத்திலும், அயலார்களாகிய சோழர்கள், பாண்டியர்கள், சத்திய புத்திரர்கள், கேரளபுத்திரர்கள் முதலியோருடைய ராஜ்ஜியத்திலும், இலங்கை, யவன அரசனாகிய அண்டியோகஸ் நாட்டிலும் அந்த நாட்டின் எல்லையிலுள்ள அரசர்களின் ராஜ்ஜியத்திலும் எல்லா இடங்களிலும் இரண்டு விதமான சிகித்ஸா ஏற்பாடுகளைச் சக்ரவர்த்தி செய்திருக்கிறார். மனிதர்களுக் கென்று சிகித்ஸா ஏற்பாடுகள்; மிருகங்களுக்கென்று சிகித்ஸா ஏற்பாடுகள். மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் பயன்படக்கூடிய மூலிகைகள் எங்கெங்கே குறைவாயிருக்கின்றனவோ, அங்கெல்லாம் அவை இறக்குமதி செய்யப் பட்டு பயிர் செய்யப் பட வேண்டும். இங்ஙனமே வேர்களும் பழங்களும் எங்கெங்கு குறைவாயுள்ளனவோ அங்கெல்லாம் இறக்குமதி செய்யப் பட்டுப் பயிர் செய்யப் பட வேண்டும்.

மனிதனுக்கும் மிருகத்துக்கும் சௌகரியந் தேடித் தர வேண்டுமென்ற நோக்கத்துடன் பாதைகளில் (ஆங்காங்கு) கிணறுகள் தோண்டப் பட்டிருக்கின்றன. மரங்கள் நடப்பட்டிருக்கின்றன.

3

தர்ம யாத்திரை

தேவப்ரியரான ப்ரியதர்சி மகாராஜர் பின் வருமாறு சொல்கிறார்:—

நான் ராஜ்ஜியாபிஷேகம் செய்து கொண்டு பன்னிரண்டு வருஷமானதும், பின் வரும் கட்டளையை விடுத்தேன்:—

எனது ராஜ்ஜியமெங்கணும், யுதாக்களும் (கீழ்த்தர உத்தியோகஸ்தர்கள்) ராஜுகர்களும் (கமிஷனர்) ப்ராதேசிகர்களும் (ஜில்லா உத்தியோகஸ்தர்கள்)

ஐந்து வருஷத்திற் கொருமுறை, தங்கள் உத்தியோக அலுவலாகச் செல்ல வேண்டும். அதாவது (ஜனங்களுக்கு என்ன சொல்ல வேண்டு மென்றால்) தந்தை தாய் சொற்படி கேட்டல் ஒரு சிறந்த காரியம். நண்பர்கள், பழக்கமுள்ளவர்கள், பந்துக்கள், பிராமணர்கள், துறவிகள் முதலியவர்களிடம் வினயமாக நடந்து கொள்ளல் சிறந்த காரியம்; உயிருள்ள பிராணிகளை வதை செய்யாமலிருத்தல் நல்ல காரியம்; செலவைச் சுருக்கிக் கொஞ்சமாகச் சேர்த்து வைத்தல் நல்ல காரியம்.

பரிஷத் கூட்டத்தினர் (பிட்சுக்கள், பிட்க்ஷுணிகள் அடங்கிய சபையினர்) பொதுவான தருமோபதேசத்திற்கும் சிறப்பான தர்மோபதேசத்திற்கும் உத்தியோகஸ்தர்களை நியமிக்கட்டும்.

4

தர்மாநுஷ்டானம்

அநேக வருஷமாக—நூற்றுக் கணக்கான வருஷங்களாகக்கூட—உயிர்ப் பிராணிகளைப் பலி கொடுப்பதும், ஜீவ ஹிம்சை செய்வதும், உறவினர்களிடத்திலும், பிராமணர்களிடத்திலும, துறவிகளிடத்திலும் ஒழுங்கீனமாக நடந்து கொள்வதும் அதிகமாகி விட்டன.

ஆனால் இப்பொழுது, சக்ரவர்த்தியின் தர்மாநுஷ்டானத்தின் காரணமாக யுத்த பேரிகைக்குப் பதில் தர்ம பேரிகையின் முழக்கம் எங்கும் எதிரொலி கொடுக்கிறது. ரதம், கஜம், தீப வரிசைகள் முதலியன நிறைந்த ஊர்வலங்கள்—தெய்விகக் காட்சிகள்—கூடவே தொடர்ந்து வருகின்றன.

சென்ற நூற்றுக் கணக்கான வருஷங்களாக நடந்திராத முறையில், இப்பொழுது, சக்ரவர்த்தியின் தர்மோபதேசங் காரணமாக உயிருள்ள பிராணிகளைப் பலியிடுவது, ஜீவ ஹிம்சை செய்வது, உறவினர்கள், பிராமணர்கள், துறவிகள், தந்தை, தாய், பெரியோர் முதலியோரிடத்தில் ஒழுங்கீனமாக நடந்து கொண்டு வருவது குறைந்து கொண்டுவந்திருக்கிறது.

இது மாதிரியாகவும் இன்னும் பல வழிகளிலும் தர்மத்தின் அநுஷ்டானம் அதிகரித்துக் கொண்டு வருகிறது. இந்தத் தர்ம ஆசரணம் இன்னும் அதிகரிக்கும்படி சக்ரவர்த்தி வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொள்வார்.

சக்ரவர்த்தியினுடைய பிள்ளைகள், பேரப் பிள்ளைகள், அவர்களுடைய பிள்ளைகள் முதலியோர், ஊழி காலம் வரையில் இந்தத் தர்மா சரணத்தின் அபிவிருத்திக்காகப் பாடுபடுவார்கள். தர்மத்திற்கும் ஒழுக்கத்திற்கும் அவர்கள் கட்டுப் பட்டு, பிறர்க்கு தர்மோபதேசஞ் செய்வர். ஏனென்றால் இது தான் சத்காரியம். தர்மோபதேசஞ் செய்வதுகூட நல்ல காரியந்தான். ஒழுக்கமில்லாதவன் தர்மத்தை அநுஷ்டிக்க முடியாது. இந்தத் தர்மாபிவிருத்தியைக் குறைக்காமலிருப்பதும், இன்னும் அதிகமாக்குவதும் இரண்டும் நல்ல காரியங்கள்தான்.

இந்தக் காரணத்திற்காகவே இஃது எழுதப் பட்டது. இந்த விஷயத்தில் மாந்தர், தர்மாபிவிருத்தியைக் குறைக்காமல் அதிகமாக்கப் பாடு பட வேண்டுமென்பதற்காகவே இஃது வரையப் பட்டது.

சக்ரவர்த்தி, ராஜ்ஜியாபிஷேகஞ் செய்து கொண்ட பன்னிரண்டு வருஷங்களுக்குப் பிறகு அவருடைய உத்திரவின் பேரில் இஃது எழுதப் பட்டது.

5

தர்மப் பிரசாரகர்கள்

தேவப்ரிய ப்ரியதர்சி மகாராஜர் பின் வருமாறு தெரிவிக்கிறார்:—

நல்ல காரியஞ் செய்வது கடினமே. நல்ல காரியத்தைச் செய்கிறவன் கடினமான காரியத்தையே செய்கிறான். இப்பொழுது என்னால் பல நல்ல காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

என்னுடைய பிள்ளைகள், பேரன்மார், அவர்களுடைய சந்ததியார் இதே மார்க்கத்தைப் பின்பற்றி ஊழி காலம்வரையில் நடப்பார்களானால் அவர்கள் நல்ல காரியத்தையே செய்தவர்களாகிறார்கள். ஆனால் இந்த விஷயத்தில், தம் கடமையில் ஓர் இம்மியாவது செய்யாமல் விட்டு விடுவாராகில் தவறு செய்தவரே யாவார். ஏனென்றால் பாவஞ் செய்வது சுலபம்.

நடந்துபோன காலங்களில் (தர்மத்தைப் பிரசாரஞ் செய்வதற்காக நியமிக்கப் பெற்ற) தாம மஹா மாத்ரர்கள் என்ற உத்தியோகஸ்தர்கள் இல்லாமலிருந்தார்கள். இப்பொழுது, நான் ராஜ்ஜியாபிஷேகம் செய்து கொண்ட பதின்மூன்று வருஷங்களுக்குப் பிறகு நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

ஜன சமூகத்தின் எல்லாப் பிரிவாரிடையிலேயும் தர்ம ஸ்தாபனத்திற்காகவும், அதனை அபிவிருத்தி செய்வதற்காகவும், தர்மப் பிரசார நிமித்தமாக நியமனம் பெற்றுள்ள எல்லாக் கீழ்த்தர உத்தியோகஸ்தர்களுடையவும் யவனர்கள், காம்போஜர்கள், காந்தாரர்கள், என் ராஜ்ஜிய எல்லையிலிருக்கும் மற்றச் சமூகத்தார் முதலியவர்களுடையவும் நன்மையையும் சந்தோஷத்தையும் நாடும் பொருட்டும் (இந்த உத்தியோகஸ்தர்கள்) நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

வேலைக்காரர், எஜமானர், பிராமணர்கள், பணக்காரர், தேவைப்பட்டோர், வயதானவர் முதலியவர்களிடையே கீழ்த்தர உத்தியோகஸ்தர்களாகிய தர்மாதிகாரிகள் செய்யும் பிரசாரத்தில் ஏற்படுந் தடைகளை நீக்க இவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

தவறாகச் சிறை வைக்கப்பட்டாலும், அல்லது கொடுமையாக நடத்தப்பட்டாலும் அவைகளைத் தடுப்பதற்கும், அவர்களுக்கு ஏற்பட்டுள்ள தடைகளை நீக்கி விடுதலை செய்வித்தற்கும், பெரிய குடும்பத்தை உடைத்தாயிருக்கும் எவரேனும்ஏதோ துரதிருஷ்டத்தினால் பாதிக்கப் பட்டாலும், அல்லது வயோதிகத்தை அடைந்து விட்டாலும் அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுக்க இந்த உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

பாடலிபுத்ர (நகர)மாகிய இங்கும் மற்ற மாகாணத் தலைநகர்களிலும், என்னுடைய சகோதர சகோதரிகள், மற்ற உறவினர் முதலியோருடைய ஸ்திரீ சிப்பந்திகளை மேற் பார்வை செய்வதற்கும் இவர்கள் எங்கும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

தர்மத்தைப் பிரசாரஞ் செய்வதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் கீழ்த்தர உத்தியோகஸ்தர்களிடையே, தர்ம சம்பந்தப்பட்ட எல்லாரிடத்திலேயும், தர்மத்தைக் கவனிப்பதற்கும், தான தருமங்களைப் பற்றிய நிருவாகத்தை நடத்துவதற்கும், எங்கும் இந்த உத்தியோகஸ்தர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இந்த நோக்கத்திற்காக, இந்தத் தரும சாஸனம் எழுதப்பட்டது. இது நீடுநிலைத்து நிற்கவேண்டுமென்றும், எனது பிரஜைகள் இதன்படி நடக்கவேண்டுமென்றும் இஃது எழுதப்பட்டது.

6

காரிய நிருவாகத்தில் ஒழுங்கு

தேவப்ரியரான பிரியதர்சி மகாராஜர் பின் வருமாறு தெரிவிக்கிறார்:—

சென்ற அநேக காலமாக காரிய நிருவாகம் ஒழுங்காக நடை பெருமலும், எல்லா நேரங்களிலும் அறிக்கைகள் வரப் பெருமலும் இருந்தன. இப்பொழுது என்னால் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எல்லா நேரங்களிலும் எல்லா இடங்களிலும், நான் சாப்பிட்டுக் கொண்டிருந்தாலும் சரி, ஸ்திரீகளின் அந்தப் புரத்திலிருந்தாலுஞ் சரி, என் படுக்கை யறையிலோ, (போய்க் கொண்டிருக்கும்) வண்டியிலோ, அரண்மனைத் தோட்டத்திலோ எங்கிருந்தாலும் உத்தியோக ஸ்திதர்கள், ஜனங்களுடைய காரியங்களைப்பற்றி எங்களுக்குத்தெரிவிக்க வேண்டும். ஜனங்களுடைய காரியங்களைக் கவனிக்க நான் எல்லா இடங்களிலும் தயாராயிருக்கிறேன்.

இந்த தானத்தைச் செய்யுங்கள், இந்த உத்திரவை நிறைவேற்றுங்கள் என்று அகஸ்மாத்தாக நான் வாய் மொழியினால் சொல்லி விட்டாலும், அவசரமான ஒரு காரியத்தைச் செய்யுமாறு மேலுத்தியோகஸ்தர்களுக்குப் பொறுப்புப் படைத் திருந்தாலும், இந்தமாதிரியான காரியங்களில், தர்ம பரிஷத்தைச் சேர்ந்தவர்களிடையே ஏதேனும் தகராறு ஏற்பட்டாலும், அல்லது மோசம் நடைபெற்றாலும் அதைப் பற்றிய தகவல் எனக்கு எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் தெரிவிக்கப்பட வேண்டும். ஏனென்றால், எனது முயற்சிகளிலேயும், காரியங்களைத் துரிதமாகச் செய்வதிலேயும் நான் திருப்தி யடைவதே கிடையாது. எல்லாருடைய நன்மைக்காகவும் நான் தொண்டு செய்ய வேண்டும். இதற்கு மூல வேராயிருப்பது முயற்சியிலேயும், காரியங்களைத் துரிதமாக நடத்துவதிலேயும் இருக்கிறது. பிராணிவர்க்க மனைத்திற்கும் எனது கடமையைச் செய்ய வேண்டுமென்ற லட்சியத்தையே எனது முயற்சிகளெல்லாம் கொண்டிருக்கின்றன. இம்மையில் என்னால் சிலருக்குச் சந்தோஷம் உண்டானாலும், மறுமையில் அவர்கள் மோட்சத்தை யடையலாம்.

நீண்ட காலம் நிலைத்திருக்கவேண்டுமென்பதற்காகவும், என்னுடைய பிள்ளைகளும், பேரன்மார்களும், எல்லாருடைய நன்மையையும் கோரி முயற்சி செய்ய வேண்டுமென்பதற்காகவும் இந்த தர்ம சாஸனத்தை எழுதுவித்தேன்.

7

தர்மம் சித்தி பெருமை

தேவப்ரியரான பிரியதர்சி மகாராஜர், எல்லா இடங்களிலுமுள்ள ஜன சமூகத்தைச் சேர்ந்த எல்லா வகுப்பினரும், இந்திரிய நிக்ரஹத்திற்கும் மனத்தூய்மைக்கும் கட்டுப் பட்டவராயிருக்க வேண்டுமென்று விரும்புகிறார்.

மனிதன், தனது இஷ்டங்களிலும் விருப்பு வெறுப்புகளிலும் வேறுபட்டவனாயிருக்கிறான்.

சில பிரிவார், இந்தத் தர்மாக்ஞையின் எல்லா அம்சங்களையும் நிறைவேற்றுவர். சிலர் ஒரு சிலவற்றையே நிறைவேற்றுவர். தாராளமாகத் தானஞ்செய்ய ஒருவனால் முடியாவிட்டாலும் இந்திரிய நிக்ரஹம், மனத்தூய்மை, நன்றியறிதல், விடாமுயற்சி முதலியன அவனுக்கு இன்றியமையாதனவாகும்.

ஞானக்களஞ்சியம்

உழைப்பிலே தான் ஓய்வு; போராட்டத்திலே தான் வெற்றி.

—தாமஸ் அ கெம்பிஸ்

ஃ ஃ ஃ

அன்பு கொள்கிற இடத்திலே விசாரணை செய்யாதே.

—சீனப் பழமொழி

ஃ ஃ ஃ

இடையன் வேலையைச் செய்யாத எவரும் தீர்க்கதரிசிகளாகிவிட வில்லை.

—நபிகள் நாயகம்

ஃ ஃ ஃ

இறப்பதென்னமோ சுலபந்தான். வாழ்வது தான் கஷ்டம்.

—விக்டர் ஹ்யூகோ

ஃ ஃ ஃ

சிந்தனையின் முதிர்ச்சி தான் ஞானம்.

—டெமாஸ்தனீஸ்

ஃ ஃ ஃ

மலையின் சிகரத்தை யடைய வேண்டுமானால் அடிவாரத்திலிருந்து தான் ஏறவேண்டும்.

—ஸைரஸ்

ஃ ஃ ஃ

அதிகாரத்தை உபயோகிக்கிற போது தான் ஒரு மனிதனுடைய குணந் தெரியும்.

—பிட்டாகஸ்

ஃ ஃ ஃ

சிலர், தங்கள் முடி மேல் கிரீடம் தரித்துக் கொள்வதேயில்லை. ஆனால் அரசர்களாக மட்டும் இருக்கிறார்கள்.

—எம். பேட்டன்

ஃ ஃ ஃ

நீ செய்கிற தானம் எவ்வளவு பெரிதாக இருந்தாலும், அதனுடன் அன்பு இணைக்கப்படா விட்டால் அது சிறுமையாகவே படுகிறது.

—ஷேக்ஸ்பியர்

ஃ ஃ ஃ

உனக்கு நேரிடும் ஒவ்வொரு கஷ்டத்தையும் கடவுளால் அனுப்பப் பெற்ற ஒரு தேவ தூதன் என்று நினைத்துக் கொள்.

—அவ்ப்ரே டி வெரே

ஃ ஃ ஃ

நேற்றுப் புத்திசாலியாயில்லாதவன் இன்று புத்திசாலியா யிருக்கப் போகிறான் என்று நான் எப்படி எதிர்பார்க்க முடியும்?

—அப்ரஹாம் லிங்கன்

ஃ ஃ ஃ

மனித சமூகத்தின் அடிப்படையான தேவைகளைக் கொண்டே நாம் இப்பொழுது ஒரு புதிய மதத்தைச் சிருஷ்டிக்க வேண்டும்.

—ஸர் ராதா கிருஷ்ணன்

ஃ ஃ ஃ

பூமாதேவியோடு நீ சம்பாஷிக்கத் தொடங்கினால், அஃது உனக்கு எத்தனையோ பாடங்களைக் கற்றுக் கொடுக்குமே.

—ஜாப்

உண்மையான ஞானி யார்? 'ஐயோ, காலம் பறந்து போய்க் கொண்டிருக்கிறதே' என்று உணர்கிறவன்தான்.

—டாண்டே

ஃ ஃ ஃ

திறந்த வெளியிலே படுக்கை; நிர்மலமான ஆகாயமே நமது விதானம். அப்படி யிருக்க இதைவிட வேறு பாக்கியம் என்ன உளது?

—ஸேனேகா

ஃ ஃ ஃ

தன் மதிப்பு, சுய ஞானம், தன்னடக்கம் ஆகிய இந்த மூன்றுந்தான் மனிதனை தெய்விக பீடத்தில் அமர்த்துகின்றன.

—டேனிஸன்

ஃ ஃ ஃ

சத்தியம் என்கிற சாசுவதமான பூமியின் மீது நிற்பதைவிட வேறென்ன மகிழ்ச்சி உலகத்திலே இருக்கிறது?

—பேகன்

ஃ ஃ ஃ

பணக்காரர்களும் ஏழைகளும் ஒன்றாகவே சந்திக்கிறார்கள். எப்படி? இருவரும் ஆண்டவனால் சிருஷ்டிக்கப் பட்டவர்கள் என்ற முறையில்.

—சாலோமன்

ஃ ஃ ஃ

பூமியின் இருள் சூழ்ந்த சுரங்கங்களிலேதான் வைரங்கள் இருக்கின்றன. அப்படியே, மனிதனுடைய எண்ணத்தின் ஆழத்திலேதான் உண்மைகள் இருக்கின்றன.

—ஓர் அறிஞன்

ஃ ஃ ஃ

பெரிய மனிதன் என்பவன் யார்? ஒரு ஜன சமுத்திரத்திடையே புன் சிரிப்போடு தன் தனிமையைக் காப்பாற்றிக் கொள்கிறானே அவன்தான்.

—எமர்ஸன்

நமது வாழ்க்கையிலிருந்து நண்பர்களைப் பிரித்து விடுவது உலகத்திலிருந்து சூரியனை மறைத்து விடுவது போலாகும். கடவுளின் சிறந்த நன்கொடைகளில் நண்பர்களும் ஒருவரல்லவா?

—ஸிஸிரோ

ஃ ஃ ஃ

தீமையை நாடிச் செல்லும் ஒரு பெரிய கூட்டத்திற்குத் தலைவனாகிச் செல்வதைக் காட்டிலும், உண்மைக்காக ஒருவனாகவே, கற்பாறைபோல் நிற்பது சிறப்புள்ளதல்லவா?

—தாமஸ் ப்ரேளன்

ஃ ஃ ஃ

ஒரு மனிதன் அசந்துஷ்டியுடையவனாயிருந்தால் அஃது அவனுடைய குற்றமே. ஏனென்றால் கடவுள் எல்லாரையுமே சந்தோஷமாக இருக்கும்படிதான் பிறப்பித்தார்.

—எபிக்டேடஸ்

ஃ ஃ ஃ

பொன்னின் தன்மையை நெருப்பினால் அறிய வேண்டும். பெண்ணின் தன்மையைப் பொன்னால் அறிய வேண்டும். ஆண்களின் தன்மையை, பெண்களின் சகிப்புத் தன்மையால் அறிய வேண்டும்.

—ஓர் அறிஞர்

ஃ ஃ ஃ

நமது பெற்றோர்களிடத்தில் நாம் எவ்வளவு நன்றி செலுத்துகிறோமோ அவ்வளவு நன்றியை நமது குழந்தைகளிடத்திலும் நாம் எதிர் பார்க்கலாம். குழந்தைகளின் முகத்தை அழகு படுத்துவதைக் காட்டிலும் அவர்களுடைய மனத்தை அழகு படுத்துவதுதான் நல்லது. ஒருவனுடைய நாக்குநீளத்தைக் கொண்டு அவனுடைய அறிவை யாரும் அளப்பதில்லை. மற்றவர்களை எதற்காகக் குறை கூறுகிறாயோ அதை நீ செய்யாதே.

—தாலேஸ்

ஜார்ஜ் யூல்

George Yule

—ஒரு காங்கிரஸ் வாதி

நான்காவது காங்கிரஸ் அலஹாபாத்திலே 1888ம் வருஷம் டிசம்பர் மாதம் 26ந் தேதி கூடியது. அப்பொழுது, காங்கிரஸுக்கு அரசாங்கத்தாருடைய எதிர்ப்பு மிக அதிகம். வைஸிராயாக இருந்த லார்ட் டப்ரின், காங்கிரஸ் ஒரு ராஜத் துரோகக் கூட்டம் என்கிற மாதிரி பேசினார். அலஹாபாத்திலே இந்த மகத்தான தேசீய ஸ்தாபனம் கூடாதபடி எத்தனையோ சூழ்ச்சிகள் செய்யப்பட்டன. காங்கிரஸ் கூடுவதற்கென்று முதலில் ஓர் இடம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. பின்னர் அதிகாரிகள், இந்த இடத்தில்கூட உத்திரவு கொடுக்க முடியாதென்று சொல்லிவிட்டார்கள். எனவே, வேறொரு இடத்தில் கூட ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் இதுவும், சுகாதார வசதியற்ற இடம் என்று மறுக்கப்பட்டது. பிறகு சில வீடுகளைப்பிடித்தார்கள். ஆனால் இவை கண்டோன்மெண்ட் எல்லைக்குள் இருக்கின்றன வென்று சொல்லி ராணுவ அதிகாரிகள் மறுத்து விட்டார்கள். கடைசியில், காங்கிரஸ் கூடுவதற்கு ஏழு வாரங்களுக்கு முன் 'லௌதர் காஸல்' (Lowther Castle) என்ற ஒரு தனி பங்களாவை வாடகைக்குப் பிடித்து, அதன் காம்பவுண்டுக்குள் காங்கிரஸை நடத்தினர். சுமார் 5000 பேர் அமர்வதற்கு லாயக்கான ஒரு பெரிய கூடாரம் நிர்மாணஞ் செய்யப் பட்டது. இந்தக் கூடாரத்தை உதவியவர் அப்பொழுதிருந்த தர்பங்கா மகாராஜா.

இங்ஙனம் காங்கிரஸ் நடைபெறுவதற்கு எல்லாச் சௌகரியங்களும் ஏற்பட்டுப் போகவே, அதிகாரிகள் காங்கிரஸுக்கு அரசாங்கத் தொடர்புள்ள பலரும் வரக்கூடாதபடி தடை செய்தனர். பலரிடமிருந்து நன்னடத்தை ஜாமீன் வாங்கப் பட்டது. இவ்வளவு எதிர்ப்புகளிருந்தும், இந்தக் காங்கிரஸுக்கு விஜயஞ் செய்த பிரதிநிதிகள் மொத்தம் 1248 பேர். சென்னை மாகாணத்திலிருந்து மட்டும் 95 பிரதிநிதிகள் சென்றனர்.

இந்தக் காங்கிரஸுக்குத் தலைமை வகித்தவர் யார்? ஜார்ஜ் யூல் என்னும் ஆங்கிலேயர். முதன் முதலாக, காங்கிரஸுக்குத் தலைமை வகித்த ஓர் ஆங்கிலேயர் இவர்தான். இவர் ஒரு வியாபாரி. கல்கத்தாவில் ஒரு பிரசித்த கம்பெனியின் தலைவரா யிருந்தார். இவர் இந்தியாவுக்கு வந்து வியாபாரம் தொடங்கிய காலத்தி லிருந்தே,

இந்திய தேசிய விஷயங்களில் அதிக கவனஞ் செலுத்தி வந்தார். இங்கிலாந்திலும் இந்தியாவிலு முள்ள அரசாங்க அதிகாரிகளிடத்தில், இந்தியாவின் ஆட்சி முறை, இந்தியர்களுக்குத் திருப்தி யளிக்கவில்லை யென்பதை பகிரங்கமாக எடுத்துக் கூறினர். அரசாங்கத்தார், காங்கிரஸ் ஸ்தாபனத்தை எதிர்த்து நிற்கின்றனர் என்று தெரிந்தும், அதற்குத் தலைமை வகித்துத் திறம்பட நடத்த இவர் இசைந்தது இவருடைய ஸ்தரியத்தையே காண்பிக்கிறது.

இவர் 1889ம் வருஷம் இங்கிலாந்தில் காங்கிரஸின் கிளை ஸ்தாபனமொன்றை நிறுவி, அதன் மூலமாக இந்தியாவின் கோரிக்கைகளைப் பிரிட்டிஷ் ஜனங்களுக்குத் தெளிவாக எடுத்துக் கூறி வந்தார்.

1892ம் வருஷம்இவர் காலமான போது, உண்மையான பிரிட்டிஷ் நண்பர் பிரிந்ததற்கு இந்தியத் தேசிய உலகம் பெரிதும் வருந்தியது.

இவ்வளவு பணமா?

இங்கிலாந்தில் பல மன்னர்களுக்கு முடி சூட்டு விழா நடைபெற்றிருக்கிறது. இந்த விழாவுக்கென்று ஏராளமான பொருள் செலவழிக்கப்பட்டிருக்கின்றது. எந்தெந்த அரசருக்கு எவ்வளவு எவ்வளவு பணம் செலவழிந்தது என்பதன் சம்பந்தமான சில புள்ளி விவரங்கள் ருசிகரமானவை.

அரசர் பெயர்		எந்த வருஷம்		செலவு ரூ.
ஜார்ஜ் IV	....	1821	....	3,570,000
வில்லியம் IV	....	1831	....	630,000
விக்டோரியா	....	1838	....	1,035,000
எட்வர்ட் VII	....	1902	....	2,895,000
ஜார்ஜ் V	....	1911	....	2,775,000
ஜார்ஜ் VI	....	1937	....	7,860,000

அயர்லாந்தில் மூன்று நாட்கள்

—நமது அந்நிய நாட்டு நிருபர்

அயர்லாந்து! சுதந்தர அயர்லாந்து! இந் நாட்டைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் பன்னெடு நாட்களாக என்னுள்ளத்தில் குடிகொண்டிருந்தது. 1937ம் ௵ அக்டோபர் ௴ குளிரில் காலைமூன்றுமணிக்கு டப்ளின் துறை முகத்தைச் சேர்வேனென்று நான் கருதவில்லை. முன் பின்தெரியாத ஊரில் காலை மூன்று மணிக்கு இறங்குவதுநல்ல அநுபவமல்லவா! ஆனால் சுங்க (Customs) அதிகாரிகள் எத்தகைய தொந்தரவையும் கொடுத்தார்களில்லை. ஐந்து நிமிஷத்தில் சோதனை முடிந்தது. சாமான்களைப் பரிசோதித்துக் காலத்தைப் போக்குவதை விட பிரயாணிகளின் வார்த்தைகளை நம்புவது நல்லது என்று கருதுகின்றார்கள் ஐரிஷ் சுங்க அதிகாரிகள். பாவம், அவர்களும் மனிதர்கள் தானே! வீடு வாசல், மனைவி மக்கள் அவர்களுக்கும் உண்டல்லவா?

கப்பல் அகாலத்தில் வந்தால் 'டாக்ஸி' டிரைவர்களுக்குத் தான் கொண்டாட்டம். 'டாக்ஸி' டிரைவர்கள், அவர்கள் எந் நாட்டினராயிருந்த போதிலும் சரி, 'ஒரே ஜன்மந்தான்'. இம் மாதிரியான சந்தர்ப்பங்களில் 'நியாயம்' 'மனிதத் தன்மை' முதலியவைகட்கும் இவர்கட்கும் வெகு தூரம். பிரயாணம் செய்யும் குற்றத்தை மேற் கொண்டவர்கள் இக் 'கொள்ளைக்' கூட்டத்தினரிடம் தண்டனை யடைவது நிச்சயம்!

புதிதாக ஒரு நகருக்குச் சென்றதும் அதனைச் சுற்றிப் பார்க்க வேண்டுமென்ற ஆர்வமுண்டாவது இயற்கை. நகரக் காட்சிகளைக் கண்டு களிக்க பகலிலும் இரவிலும் நடந்து செல்வது தான் சிறந்த முறை. இந்த முறையை லண்டன், நியூயார்க் போன்ற நகரங்களில் கையாளுவது மிகவும் சிரமமான காரியம். ஆனால் அயர்லாந்தின் தலை நகரான டப்ளின் சுமார் ஐந்து லட்சம் ஜனங்களைக் கொண்ட அழகிய சிறு நகரம். அயர்லாந்தின் மொத்த ஜனத்தொகை சுமார் 30 லட்சம். இதில் வட அயர்லாந்தைச் சேர்ந்த சிறு பகுதி பிரிட்டிஷ் நிர்வாகத்திலிருக்கிறது. மற்றப் பகுதிகள் ஐரிஷ் ப்ரீ ஸ்டேட்ஸ் (Irish Free States) என்றழைக்கப் படுகின்றன. இதன் தலை நகர் தான் சரித்திரப் பெருமை வாய்ந்த டப்ளின் (Dublin) நகரம்.

ஐரிஷ் மக்கள் இந்தியர்களைப் பற்றி எத்தகையநல்லபிப்பிராயம்கொண்டுள்ளார்களோ, அதைப் போன்றே இந்தியர்களாகிய நாமும் ஐரிஷ் மக்களைப் பற்றி நல்லபிப்பிராயம் கொண்டுள்ளோம் என்பதில் ஐயமில்லை. அவர்களுக்கும் நமக்கும் பொதுவான விஷயங்கள் பல உண்டல்லவா? அவர்கள் சுதந்தரப் போரில் வெற்றிபெற்றுவிட்டார்கள்; நாமும் விரைவில் வெற்றி பெறப் போகிறோம். எதிர் காலத்தில் இவ்விரு சுதந்தர நாடுகளுக்கும் நெருங்கிய தொடர்பிருக்குமானால் ஆச்சரியப் படுவதற்கில்லை.

டப்ளின் நகருக்கு நடுவே செல்லும் ஆறு, போக்கு வரத்து வசதிக்கு மிகவும் சௌகரியமானது. ஆற்றின் குறுக்கேயுள்ள பாலங்கள் ஒரே மாதிரியாக அமைக்கப் பெற்றுள்ளன. இரு கரைகளிலுமுள்ள வீடுகளின் தோற்றம் ஆற்றுத் தண்ணீரில் தலை கீழாகத் தோன்றுவது



ஐரிஷ் பார்லிமெண்ட்

மிகவும் அழகிய காட்சி. நகரின் பிரதம வீதியில் பல சித்திர வேலைப் பாடமைந்த சிலைகளும், ஜய ஸ்தம்பங்களும் அமைக்கப் பெற்றுள்ளன. தற்பொழுது அயர்லாந்து பாங்க் உள்ள கட்டிடம் பழமையும் வனப்பும் வாய்ந்த ஒன்று. இது முன்னர் பார்லி மெண்டுக் கட்டிடமாக இருந்தது. டப்ளின் சர்வ கலாசாலை, டிரினிடி காலேஜ் முதலியவைகள் ஊருக்கு நடுவே யுள்ளன. இங்கு இப்பொழுது சுமார் பத்து இந்திய மாணவர்கள் பயிற்சி பெறுகின்றார்கள்: பெரும்பாலோர் மருத்துவத்துறையில்.

நகரைச் சேர்ந்த, நகருக்கு அருகேயுள்ள சிறு கிராமங்களில் அழகும் அமைதியும் இருக்கிறது. பெரும்பாலான மக்கள் இங்கிருந்து நகருக்குச் செல்கின்றனர் வேலை பார்க்க. மாலை நேரத்தில் வீடு திரும்புகின்றனர். மிகவும் நாகரிக வசதி நிறைந்த மோட்டார் 'பஸ்'கள் இங்கு ஏராளம். ஆனால் கட்டணம் சிறிது அதிகம். பெரும்பாலோர் டிராம் வண்டிகளையே உபயோகிக்கின்றனர். ஆனால் டிராம் வண்டி செல்லாத இடங்களுக்கு இந்த 'பஸ்'களைத் தவிர வேறு வழியில்லை.

பீனிக்ஸ் பார்க் (Phoenix Park) என்பது ஐரோப்பாவிலேயே மிகவும் பெரிய 'பார்க்'. இது டப்ளின் நகருக்கு அணித்தேயுள்ளது. ஐரிஷ் மக்களின் நேர்மையை விளக்குவதே போன்று இந்தப் 'பார்க்'கின் மத்திய ரோடு எவ்வித வளைவுகளுமின்றி பல மைல் தூரம் நேராக அமைந்திருக்கிறது. தனிமையின் இனிமையை விரும்பும் பலர் செடிகள் மறைவிலே நாற்காலிகளில் படுத்துக் கொண்டு பத்திரிகைகள் படிப்பார்கள். புன்முறுவல் தவழும் ஐரிஷ் குழந்தைகள் விளையாடுவதற்குச் சில பகுதிகள் ஒதுக்கப் பட்டிருக்கின்றன. மருண்ட பார்வையுடைய மான்கள் பல அங்கு மிங்கும் ஓடிக் கொண்டிருக்கும். இந்தப் பார்க்கின் ஒரு கோடியில் மிருகக் காட்சி சாலை. யானைகளைக் கண்டால் சாதாரண ஐரிஷ்காரர்கள் எவ்வளவு ஆச்சரியப் படுகின்றனர்! அவர்களுக்கு யானை ஒரு விநோதப் பிராணி!

கூட்டமும் இரைச்சலும் சேர்ந்த நகருக்கு மத்தியில் இப்பொழுது செல்வோம். முதலாவது பத்திரிகை விற்கும் பையன்களிடமிருந்து தப்புவது கடினம். தொந்தரவு கொடுக்க மாட்டார்கள். ஆனால் ஒவ்வொரு பையனும் உங்களுக்குத் தன்னுடைய பத்திரிகையை விற்க முயற்சி செய்வான். டப்ளின் நகரில் மட்டும் சுமார் பத்து தினசரிப் பத்திரிகைகள் வெளியாகின்றன. இவைகளின் விலை ஒரு பென்னி. சில பத்திரிகைகள் மட்டும் இரண்டு பென்ஸ். இவைகளிற் சில பத்திரிகைகள் மிகச் செல்வாக்குள்ளவை. 'டெய்லி வொர்க்கர்' (Daily Worker) போன்ற பிரிட்டிஷ் தினப் பத்திரிகைகளும் இங்கு விற்கப்படுகின்றன. ஆனால் ஐரிஷ் அரசாங்கம் பிரிட்டிஷ் பத்திரிகைகட்கு அதிக சுங்க வரி விதிக்கின்றது. ஐரிஷ் பத்திரிகைகள் சிறந்த முறையில் அமைக்கப்பெற்றிருக்கின்றன. விஷயங்களை விரைவில் வெளியிடுவதில் இவைகள் அதிகக் கவலை செலுத்துகின்றன. ஐரிஷ் பத்திரிகைக்கு, அதன் முக்கிய வருமானங்களில் ஒரு பகுதி, பத்திரிகையில் வெளியாகும் படங்களின் பிரதிகளை விற்பனைசெய்வதால் கிடைக்கிறது.

சில நல்ல ஹோட்டல்கள் டப்ளின் நகரில் உண்டு. ஆனால் பெரும்பாலான ஹோட்டல்கள் நடுத்தர முள்ளவைகள். உணவுச் சாலைகள் (Restuarants) பல. ஒவ்வொரு சினிமா தியேட்டரும் தனது சொந்த உணவுச்சாலைகளை ஏற்படுத்தி யிருக்கின்றது. தற்பொழுது அயர்லாந்தில் உணவுப் பொருள்களின் விலை மிக அதிகம். பகற் சாப்பாடு இரண்டு ஷில்லிங். வேலைக்காரருக்கு (Tips 'டிப்') மேல் வருமானம் மூன்று பென்ஸ். அதாவது ஏறக்குறைய ஒன்றே முக்கால் ரூபாய். இது ஒரு நடுத்தரமான உணவுச் சாலையில்! பொதுவாக இந்த உணவுச் சாலையில் சுகாதார வசதி போதாது. ஐரிஷ் வேலைக்காரப் பெண்கள் சுறு சுறுப் புள்ளவர்கள். எப்பொழுதும் நகை முகத்துடன் தோன்றுவர். இல்லை யென்று கூறுவதையும் இனிமையாகக் கூறுவர் இவர்கள்.

ஐரிஷ் மக்கள் அதிக நகைச் சுவையுடையவர்கள். துன்பமடைய நேர்ந்தாலும் அதிலும்நகைச்சுவைகாண்பார்கள். வண்ணான்-வண்ணாத்தி தமாஷல்ல! அறிவுக்கும் விருந்தளிக்கும் நகைச் சுவை அது. இத்தகைய நாடகமொன்றைப் பார்ப்பதற்காக ஆபே (Abbey) தியேட்டருக்குச் சென்றேன். இந்தத் தியேட்டர் உலகப் பிரசித்தி பெற்றது. மிகச் சிறந்த நடிகர்களை அயர்லாந்தில் உற்பத்தி செய்தது இந்தத் தியேட்டர்தான். இதனுடைய சிறிய கட்டடத்தைக் கண்டதும் வியப்புற்றேன். இரவு 8-15க்கு நாடகம் ஆரம்பம் என்று விளம்பரப் படுத்தப் பட்டிருந்தது. இரவு 7-40 வரை கதவு திறக்கப் பெறவில்லை. எத்தகைய வெளிச்சமுமில்லை. 7-45 மணிக்குக் கதவுதிறந்தார்கள். இரண்டே வேலைக்காரர்கள் தான். குறிப்பிட்டபடி 8-15க்கு நாடகம் தொடங்கப் பெற்றது. தியேட்டரில், சோடா, சாக்லெட், மணிலாக் கொட்டை முதலியவைகளை விற்பனை செய்வோர் இல்லாதது கண்டு பெரிதும் சந்தோஷமடைந்தேன். ஆசனங்கள் மிகவும் சிறிதாகவும் வசதியில்லாததாகவும் இருந்தன. நாடகத்தை ரஸிப்பதில் கவனம் சென்றமையால், ஆசனங்களைக் குறித்து நான் கவலை கொள்ள வில்லை. நாடகத்தின் பெயர் 'பாயிட்ஸ் ஷாப்' (Boyd's Shop) என்பது; அதாவது ஒரு சிறு வியாபார நிலையத்தில், சிலர் எவ்வாறு வீண்

பேச்சுப் பேசுகின்றனர்கள் என்பதை யும், அனுபவமில்லாத ஒரு இளை ஞன், புத்தகப் படிப்பு ஒன் றின் துணை கொண்டு ஆரம்பித்த வியாபார நிலையத்தால் எவ்வாறு வீழ்ச்சியுற்று னென்பதையும் இன் னும் சில உலக நிகழ்ச்சிகளையும் நன்கு விளக்கிற்று. நான்கு அங்கங்களைக் கொண்ட இச் சிறு நாடகத்தில் ஐரிஷ் மக்களுக்கு இயற்கையான நகைச் சுவை ததும்பி யிருந்தது என்று கூற வேண்டுவதில்லை. ஐரிஷ் மக்க ளுக்குச் சினிமாப் பைத்தியம் இருந்த போதிலும் நாடகக் கலையில் பெரி தும் ரஸிக்கின்றனர்கள். ஐரிஷ் நாட கக் கலையைக் குறித்து ஒவ்வொரு ஐரிஷ் காரனும் பெருமையடைகின் றான். இந்தப் பழமையான தியேட் டருக்கு அரசாங்கத்தார் வருடந் தோறும் பொருளுதவி செய்கின் றனர்.

அழகிய, வசதியான சினிமாத் தியேட்டர்கள் பல இப்போது டப் ளினில் உள்ளன. இந்நகரில் முதன் முதலாகக் கட்டப் பெற்ற சினிமாத் தியேட்டருக்குச் சென்றேன். ஒரு ஜன்னல் கூட இல்லாத தியேட்டர் இது. இந்த லட்சணத்தில் ஜனங் கள் சிகரெட்டு, சுருட்டு முதலியன உபயோகிக்கவும் அநுமதிக்கப்படுகின் றனர். புதிய தியேட்டர்களில் ஒரு படமும், செய்தியும், மேடைக் காட்சி யும் (Stage Show)வும் காண்பிக்கப் படுகின்றன. பிற்பகல் இரண்டு மணி முதல் இரவு 11 மணிவரை படங்காண் பிக்கின்றனர். பெரும்பாலும் அமெ ரிக்கப் படங்கள்தான். சில பிரிட்டிஷ் படங்களும் காண்பிக்கப் படுகின்றன. 'ஐரிஷ் மூவிடோன் நியூ' என்ற செய்திப் படமும் காண்பிக்கப்படு கிறது. இது அயர்லாந்தில் தயாரிக் கப்படுவதல்ல; ஐரிஷ்காரர்களால் தயாரிக்கப்படுவதுமல்ல. அமெரிக்க மூவிடோன் கம்பெனியின் தொடர்பு பெற்றுள்ள பிரிட்டிஷ் மூவிடோன் கம்பெனிப் படங்களின் மறு பெயரே ஐரிஷ் மூவிடோன் என்பது. பெய ரைப்பற்றிப் பிரிட்டிஷ் வியாபாரி களுக்குக் கவலையில்லை. அவர்கள் வேண்டுவது என்ன? பவுன்தான்.

அயர்லாந்து சுதேச கைத்தொழில் களை விருத்தி செய்ய முயற்சிக்கிறது. ஐரிஷ் சாமான்களையே வாங்குங்கள் என்ற சுலோகம் எங்கும் கேட்கப்படு கிறது. சில வியாபார ஸ்தலங்கள் ஐரிஷ் சாமான்களை மட்டுமே விற்பனை செய்கின்றன. சுதேசச் சாமான்களின் விலை அதிகமா யிருந்த போதும் அதனையே உபயோ கிக்க விரும்புகின்றனர் பல ஐரிஷ்கா ரர்கள்.

கல்வித் துறையில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்துகிறது. நாட் டுப்பற்றை வளர்க்கும் வகையில் கல்வி முறை அமைக்கப்பட் டிருக்கிறது. கல்வி நிலையக் கட்டிடங்கள் மிக நாக ரிக முறையில், சுகாதார வசதிப்படி கட்டப்பெற் றிருக்கின்றன. கட்டா யக் கல்வி முறை அமுலி லிருக்கிறது. ஐரிஷ் மக்கள் மிகவும் சுதந்தர உணர்ச்சி யுடையவர்கள். அவர்கட் குள் ஆயிரம் பிளவுகளிருக்கலாம். ஆனால் அவர்களின் லட்சியம் ஒன்றே; அதாவது அந்நியரிடமிருந்து நாடு விடு தலை பெற வேண்டும். சில நூற்றாண்டு களில் இவ் விடுதலைப் போர் அவ்வப் போது நிகழ்ந்தது. ஆனால் 1916ல் அயர்லாந்து அதிக கஷ்ட நஷ்டங்களை யடைய நேர்ந்தது. இளங் கொழுந்து களான ஐரிஷ் வாலிபர்கள் பிரிட்டிஷா ரின் துப்பாக்கிக் குண்டுகட்கு இரை யாயினர். பிரிட்டிஷாரால் யார் கைதி களாக்கப் பெற்றுக் கொடுமையாக நடத்தப் பட்டார்களோ, அவர்களே

இப்பொழுது அயர்லாந்தை ஆளுகின்றார்கள்.

அயர்லாந்தின் தலைவர் டிவாலராவைப் பற்றி இந்தியர்கள் நன்கறிவர். இவர் இப்பொழுது மூன்றாவது முறையாகத் தலைவர் பதவி வகிக்கிறார். இவருடைய வாழ்க்கை வெகு ரஸமானது. பல சம்பவங்கள் நிறைந்தது. அயர்லாந்தின் நன்மை யொன்றே இவருடைய கனவு; இவருடைய லட்சியம். இதற்காகத் தியாகம் செய்தவர் இவர். அதிகாரத்தில் இருந்த போதிலும் இவர் சாதாரண மனிதராகவே நடந்து கொள்கின்றார். காட்சிக்கு மிக எளிமையானவர். கத்தோலிக்கப் பாதிரிகளின் செல்வாக்கு நிறைந்த அயர்லாந்திலே, பிளவுகளும் சச்சரவுகளும் நிறைந்த அயர்லாந்திலே இவர் பெரும்பாலோர் நம்பிக்கையைப் பெற்று ஆட்சி செலுத்துகின்றார். இந்தியா விடத்திலும் காந்தியடிகளிடத்திலும் இவருக்கு மாறாத அன்புண்டு. காலஞ் சென்ற ஸ்ரீமான் வி. ஜே. படேலும், ஸ்ரீமான் சுபாஷ் சந்திர போஸும் இவருடைய விருந்தினர்களாகத் தங்கியிருந்தனர்.

டி வாலரா

அயர்லாந்தை குடியரசு (Republic) நாடாகச் செய்ய வேண்டுமென்பது இவருடைய கொள்கை. சுதந்திர நாடாக (Free State) இருப்பதே போதுமானது என்பது எதிர்க்கட்சியார் கொள்கை. ஐரிஷ் பார்லிமென்டுக்கு (Dail) என்று பெயர். இதன் மொத்த அங்கத்தினர்கள் 128. டிவாலராவின் கட்சியைச் சேர்ந்தவர் 69. எதிர்க் கட்சியினர் 56. தொழிற் கட்சியினர் 13. எதிர்க் கட்சியும் தொழிற் கட்சியும் சேர்ந்தால் 69 ஆகிறது. எனவே தொழிலாளர் கட்சிதான் சூத்திரக் கயிற்றைப் பிடித்துக் கொண்டிருக்கிறதென்று சொல்ல வேண்டும். தொழிற் கட்சி எதிர்க் கட்சியுடன் சேர்ந்து கொண்டால் அரசாங்கக் கட்சி, சட்டம் செய்வதற்குத் தலைவருடைய விசேஷ ஓட்டை எதிர்பார்க்க வேண்டியதிருக்கிறது. சென்ற தேர்தலில் டிவாலராவுக்கு பெரும் செல்வாக்கு ஏற்படவில்லை என்றாலும் அயர்லாந்தில் அதிக செல்வாக்குள்ளவர் டிவாலராதான் என்பதில் ஐயமில்லை. இவரின் தியாகமும், நேர்மையும், சுதந்தர உணர்ச்சியும் அயர்லாந்தைச் சிறந்த நாடாகச் செய்யுமென்று பல ஐரிஷ் மக்கள் எதிர் பார்க்கின்றனர்.

ஐரிஷ் பாஷை, பள்ளிக்கூடங்களில் கட்டாய பாடமாக்கப்பட்டிருக்கிறது. பெரியவர்கட்கு ஐரிஷ் பாஷை தெரியாது. ஆனால் புதிய தலைமுறை ஐரிஷ் பாஷை பேசுகிறது. பொதுவாக நாடகம், பத்திரிகை, சம்பாஷணை எல்லாம் ஆங்கிலத்தில் தான். ரோடுகள், கட்டிடங்கள் முதலியவைகளில் பெயர்கள் ஐரிஷ், ஆங்கிலம் இரு பாஷையிலும் எழுதப் பெற்றுள்ளன.

புராதன ரோம தேசத்துக் கல்வி முறை

—வி. கே. ஜெயலட்சுமி அம்மாள்
B. A., B. ED.,

மேனாட்டு நாகரிக வளர்ச்சிக்குத் துணை செய்தது கிரீஸ் தேசத்திற் கப்புறம் ரோமாபுரியே யாகும். கிரேக்கர்களுக்கும் ரோமர்களுக்கும் குண வேறுபாடுகள் நிரம்ப உண்டு. சுறு சுறுப்பும் கற்பனாசக்தியுமிருந்த கிரேக்கர்களுக்கு எதிராக, ரோமர்கள் கொஞ்சமும் கற்பனாசக்தி யற்றவர்களாய் எதையும் அனுஷ்டானத்தில் நடத்தும் சுபாவ முடையவர்களாய் இருந்தனர். உலகத்திற்கு ரோமர்கள் அளித்த நன்கொடைகள் அரசியல் அறிவு, சட்ட ஞானம் ஆகியவையே. கிரேக்கர்கள் தாழ்மை யடைந்திருந்த துறைகளில் ரோமர்கள் சிறப்புற்றும், அவர்கள் உயர்வடைந்திருந்த வழிகளில் இவர்கள் தாழ்மையுற்றும், அதன் பயனாக இவ்விரு நாட்டினரும் ஒருவருக் கொருவர் சமன்வயப்படுத்திக் கொள்கிறமுறையில் உலக நாகரிக வளர்ச்சிக்குத்துணை செய்தனர் என்று சொல்லலாம்.

ரோமர்கள் அரசியல் துறையில் அதிசயிக்கத்தக்க முன்னேற்ற மடைந்து பண்டை உலகத்தையே தன் துரைத்தனத்தின் கீழடக்கி, ஒற்றுமை, நாணயம், அதிகாரத்துக்குக் கீழ்ப்படிதல் முதலிய சிறந்த நற்குணங்களைப் பரவச்செய்து தங்கள் குடிகளுக்கும் கிளைநாடுகளுக்கும் ஒரு பொதுப்பாஷை, உடுப்பு, பழக்க வழக்கம், மதம், இதிகாசம், அரசாங்கம், சட்டம் இவைகளை ஏற்படுத்தினர். இவர்களின் பொதுப்பாஷை லத்தீன். இதில் எழுதப்பட்ட சட்ட திட்டங்களே, இக்காலத்தில் பல நாட்டினரால் அநுஷ்டிக்கப்பெறும் நீதி சாஸ்திரத்திற்குஅடிப்படையாகவிளங்குகின்றன. அதுவுமின்றி, அயல் ஜாதியார்களிட மிருந்து சிறப்பான நாகரிக முறைகளை ஏற்றுக்கொள்ள ரோமர்கள் தயங்கவில்லை. இவர்கள் கிரீஸ் தேசத்தை வசப்படுத்திக் கொண்ட போதிலும், கிரேக்கர்களின் நாகரிகம், அறிவு, கலைஞானம், சிற்பம் முதலிய சிறந்த அம்சங்களுக்குத் தாங்கள் அடிமைகளாயினர்.

புராதன ரோமர்கள், பள்ளிக்கூடங்களைப்பார்த் தறியார். வீட்டில் தகப்பன்மாரிட மிருந்தும், வெளியே போர்க்களங்களிலிருந்தும் அறிந்து கொள்ளும் ஞானமே ரோம சிறுவர்களின் கல்வியாக இருந்தது. ரோமர்களின் குடும்பம், மதம், குடியுரிமை யெல்லாம் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டிருந்தன. குடும்பத்தில் தகப்பனே குரு. அவன் தன் மனைவி மக்களின் உயிரின் மீதுகூட அதிகாரம்

ஐரிஷ் நாணயமும் பிரிட்டிஷ் நாணயமும் ஒரே மதிப்புள்ளவைதான். ஆனால் இரண்டுக்கும் வித்தியாசமுண்டு. இரண்டு விதமான நாணயங்களையும்இங்கு உபயோகிக்கின்றார்கள். அயர்லாந்து எதிர்காலத்தில் குடியரசாக ஆகுமா என்பது சிறிது காலத்தில் தெரிந்துவிடும். டப்ளின் நகரில் ‘வெறும்’ மூன்று நாட்கள் தங்கி விட்டு அயர்லாந்தைப் பற்றி நான் என்ன எழுதக்கூடும்? வாழ்க சுதந்தர அயர்லாந்து!

படைத்தவன். ஆயினும், தாயும் மக்கள் வளர்ச்சியில் ஈடுபட்டு குடும்பத்தில் உயரிய பதவியை வகித்தாள். தகப்பனே மகனின் ஆசான். அடக்கம், மன உறுதி, விவேகம், தெய்வ பக்தி, தைரியம், அமைதி, கடமையைச்செய்தல் இவைகளே புராதன ரோமர்களின் முக்கிய தர்ம நெறிகளாகக் கருதப்பட்டன. சிறுவர்களுக்கு அளிக்கப்பட்ட பயிற்சி இவைகளையே அடிப்படையாகக் கொண்டிருந்தன.

மகனுக்கு எழுத, படிக்க, கணக்குப் போடக்கற்பிப்பது தகப்பனின்வேலை. இத்துடன், தகப்பன் வீரர்களுடைய சரிதைகளைப் படித்துக்காண்பிப்பான். வீர உணர்ச்சி நிரம்பிய பாடல்களைச் சொல்லிக் கொடுப்பான். பையன், பெரியவனுக ஆக தகப்பனுடன் வெளி இடங்களுக்கும் பொது ஸ்தலங்களுக்கும் சென்று ஆங்காங்கு நடைபெறும் சம்பாஷணைகளி லீடுபட்டு வந்தான். சாதாரணமாக உயர் குலத்திலுதித்த பிள்ளைகளுக்கு அதிக பயிற்சி கிடைத்தது. தேகப்பயிற்சிக்குக் கிரேக்கர்கள் கொடுத்த முக்கியத்துவத்தை ரோமர்கள் கொடுக்கவில்லை. தேக பலம், போருக்கன்றி மற்றவிதத்தில் அநாவசிய மென்றெண்ணினர்.

கி. மு. 303ம் வருஷத்தில் சில 'ப்ரைவேட்' உபாத்தியாயர்கள், ஆங்காங்கு ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் திறக்கலாயினர். வீட்டுக் கல்வியுடன் ஆரம்பப் பள்ளிக் கல்வியும் அளித்தல் நலமென எண்ணத் தொடங்கினர் சில ரோமர். ஆனல் முதலில் இந்த ஆரம்பப் பள்ளிக் கல்வி, செல்வர்களுக் கன்றி மற்றவர்களுக்குக் கைகூடாத பொருளாக இருந்தது. கி. மு. 205ம் வருஷம் வரையில், படிப்பதும், எழுதுவதும், நல்ல உச்சரிப்புடன் பிரசிங்கிப்பதும், ஒழுக்கமுடையவர்களாக இருப்பதுமே வீட்டுக்கல்வி, ஆரம்பப்பள்ளிக்கூடக்கல்வி இவற்றின் விஷயங்களாக இருந்தன.

கி. மு. 150 வது வருஷத்திற்கு முன்னரேயே, மத்தியதரைக் கடல் ரோம ராஜ்யத்தின் ஏரியாகி விட்டது. அதுவும் தவிர்த்து, சுற்றியுள்ள நாடுகளாகிய கிரீஸ், சின்ன ஆசியா, எகிப்து, சிரியா முதலிய ராஜ்யங்களும் ரோம ராஜ்யத்தின் வசமாயின. வெற்றி பெருகப் பெருக, ரோமர்களின் அறிவும் விருத்தி யடைந்தது. தவிர, அயல் நாட்டின் நாகரிக முறைகளை ரோமர்கள் கூசாது ஏற்றுக் கொள்ள லாயினர். கல்வித் துறையிலும் அவர்களின் நோக்கம் விசாலமடையத் தொடங்கியது. அதன் பயனுகப் பள்ளிக்கூடங்கள் எங்கும் தோன்ற ஆரம்பித்தன. சண்டையில் தோல்வியடைந்து அடிமைகளாக்கப் பட்ட கிரேக்க அறிஞர்களை, செல்வந்தர்களாகிய ரோமர்கள், தங்கள் குழந்தைகளுக்கு ஆசிரியர்களாக நியமித்தனர். சுமார் கி. மு. 233ம் வருஷத்தில், ரோம அடிமையாக கிரீஸ் தேசத்திலிருந்துகொண்டு வரப்பட்ட லிவியஸ் ஆண்ட்ரோனியஸ் (Livius Andronieus) என்பவர், ஒடெஸ்ஸே (Odessey) என்னும் மகா காவியத்தை கிரேக்க பாஷையிலிருந்து லத்தீன் பாஷையில் மொழி பெயர்த்தார். முதன் முதலாக இவர் நூலே ரோம பள்ளிக்கூடங்களில் பாட புத்தகமாக உபயோகப் படுத்தப்பட்டது. பின்னர், பல அறிஞர்கள், கிரேக்க நூல்களை மொழி பெயர்த்தனர். லத்தீன் பாஷையில் பல புதிய இலக்கியங்கள் வெளிவர ஆரம்பித்தன. இப்படி யிருக்கிற காலத்தில், சில ரோமர்கள், தங்கள் நாட்டின்

கல்வி முறையை தேசீய மயமாக்க வேண்டுமென்ற முயற்சியில் தலைப்பட்டனர். கிரேக்க பாஷையின் அளவற்ற செல்வாக்கு, ரோமக் கலைகளில் புகுந்திருப்பதை இவர்கள் விரும்பவில்லை. இங்ஙனம் ரோம தேசீயக் கல்விக்கும் கிரேக்கக் கல்விக்கும் முரண் ஏற்பட்ட மாறுதல் காலத்தில் தோன்றின பள்ளிக்கூடங்கள் வருமாறு:—

1. லூடுஸ் (Ludus) என்கிற ஆரம்பப் பள்ளிக்கூடம். இது லூடி மாஜிஸ்டர் (Ludi Magister or Ludus Literarum) என்னும் உபாத்தியாயர் தலைமையில் நடத்தப்பட்டது. இதில் எழுத, படிக்க, கணக்குப் போட சொல்லிக் கொடுக்கப் பட்டது. இருபாலாருக்கும் பொது. ஆனால் ஆண் பிள்ளைகள் தான் அதிகம் சென்றனர். இப்பள்ளிக்கு 6 அல்லது 7 வயதிலிருந்து 12 வயது வரை மாணாக்கர்கள் போகலாம். இங்குக் கணக்குப் பாடத்திலேயே அதிக கவனஞ் செலுத்தப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் இஷ்டப்பட்ட இடத்தில் நடைபெற்றன. தாழ்வாரம், கொட்டகை, வீட்டின் முன்பாகம், அல்லது பண்டக சாலையில் திரை போட்டு மறைக்கப் பட்டவிடம் இவைகளே பள்ளிக்கூட அறைகள். உபாத்தியாயருக்கு ஒரு நாற்காலி, மாணாக்கர்கள் உட்கார சில பலகைகள், ஒரு பிரப்பங்கட்டு, ஆகிய இவைகளே பள்ளிக்கூடத்தின் கருவிகள். மேல் அங்கிகள் (Cloaks) வைப்பதற்கும், 'பெடகாக்' (Pedagogues) என்று சொல்லப் பட்ட அடிமைகள் மாணாக்கர்களுக்காகக் காத்துக்கொண்டிருப்பதற்கும் ஒரு வெளி அறை இருந்தது. ஒவ்வொரு மாணாக்கனும், எழுத, படிக்க வேண்டிய கருவிகளை ஒரு பெட்டியில் தூக்கிச் சென்றான். பள்ளிக்கூடங்கள் அதிகாலையில் ஆரம்பிக்கப்படும். குளிர்காலங்களில் மாணாக்கர்கள் கையில் விளக்குடன் பள்ளிக்குச் சென்றனர். பள்ளிக் கூடத்தில் சவுக்கடி பிரயோகம் அதிகம்.

2. லத்தீன் கிராமப் பள்ளிக்கூடங்கள். (Latin Grammar Schools) இவை மேல் படிப்புப் பள்ளிக்கூடங்கள். இவை, கிரமாடிகஸ் (Grammaticus) என்னும் உபாத்தியாயர் தலைமையில் நடைபெற்றன. 12 வயதிலிருந்து 16 வயது வரையில் மாணாக்கர்கள் இப் பள்ளிக்குச் சென்றனர். கி. மு. முதல் நூற்றாண்டிலிருந்து இந்த மேல் படிப்புப் பள்ளிக்கூடங்கள் ரோம ராஜ்ய ஆளுகைக்குட்பட்ட முக்கிய நாடுகளிலெல்லாம் ஏற்படத் தொடங்கின. இப் பள்ளிக்குத் தவறுமல் போவது அவரவர்களின் இஷ்டமேயன்றிக்கட்டாயமல்ல; பணமுடையவர்களுக்கன்றி மற்றவர்களுக்கில்லை இந்த மேல் படிப்பு. உபாத்தியாயர்களெல்லாரும் கிரேக்கர்கள்; அல்லது கிரேக்க ஆசான்களிடம் பயின்ற லத்தீன் ஆசிரியர்கள். ஒவ்வொரு உபாத்தியாயரும் தன்னிஷ்டப்படி கல்வி போதித்து வந்தார். ஆனால் முடிவில் ஒரே வித படிப்பாகத்தான் அமைந்திருந்தது. இந்த மேல் படிப்புப் பள்ளிக்கூடங்களில், இலக்கணமும் இலக்கியமுமே முக்கிய பாடங்கள். லத்தீன் பாஷையிலும் கிரேக்க பாஷையிலும் பாண்டித்தியமடைவதே இந்தப் பள்ளிக் கூடங்களின் நோக்கம். காலஞ் செல்லச் செல்ல, ரோமயுவர்களைப் பொதுஜன வாழ்க்கையில் ஈடுபடுத்துவதற்கும், சாதுரியமாகப் பிரசங்கிப்பதற்கும், கல்வியின் உயரிய நோக்கங்களைத் தெரிந்து கொள்வதற்குமே இந்த

மேல் படிப்பை ஒரு சிலர் நாடினர். இந்தப் படிப்பே மேனாட்டுச் சரித்திரத்தில், இடைக்கால (Middle Ages) மென்று சொல்லப்பட்ட நாட்களின் கல்விக்கு அஸ்திவாரமாயமைந்தது.

3. அலங்காரச் சொற்பொழிவுப் பள்ளிக் கூடங்கள். (Schools of Rhetoric) இந்தப் பள்ளிக்கூடங்கள், மாணுக்கனை வாக்கு சாதுரிய முள்ளவனுகவும் பிரசங்கஞ் செய்யுஞ் சக்தியுள்ளவனுகவும் தயாராக்கின. இந்தப் பயிற்சியே உயர்தரச் சட்டத் தொழிலுக்கும், பொதுஜன சேவைக்கும் அஸ்திவாரமாகக் கருதப்பட்டது. இந்தப் பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கு 'ரெடார்ஸ் (Rhetors) என்று பெயர். இவர்கள் பல பாஷைகள் கற்ற அறிஞர்களாகவும் இலக்கியத்தில் பாண்டித்திய மடைந்தவர்களாகவும் இருந்தனர். ரோம ராஜ்யம் சீர் குலைந்த காலத்தில் இந்தப் பள்ளிக்கூடங்களால் ஜனங்களுக்கு ஒரு பிரயோஜனமும் ஏற்படவில்லை. அதற்குப் பதிலாக இப்பள்ளிகளில் படித்தவர்கள், தாங்கள்தான் தர்க்க நிபுணர்களென்று வீண்பறை சாற்றலாயினர். கல்வியின் உயரிய நோக்கமும் மங்கலடையத் தொடங்கிற்று.

4. கலாசாலைக் கல்வி. (University Learning) இன்னும் அதிகம் படிக்க வேண்டுமென்று ஆவல் கொண்ட ரோம மாணுக்கர்கள், கிரேக்க தேசத்திலிருக்கும் உயர்தரக் கலாசாலைகளுக்குச் சென்றனர். ஆதென்ஸ் (Athens) ரோட்ஸ் (Rhodes) என்னும் இரு நகரங்களுக்கே அதிகப்பிரியப்பட்டு செல்லலாயினர். பின்னர் அலெக்ஸாந்திரியா (Alexandria) எனும் நகரத்திற்குச் சென்றனர். கி. பி. 67-69ம் வருஷத்தில் ஆண்ட வெஸ்பாஸியான் (Vespasian) என்னும் அரசனால் நிர்மாணிக்கப்பட்ட அமைதிக் கோயில் (Temple of Peace) என்னும் இடத்தில் திறக்கப்பட்ட ஒரு புத்தகசாலையிலிருந்தே ரோமாபுரியின் முதல் கலாசாலை உற்பத்தியாயிற்று. அதில், சட்டம், வைத்தியம், சித்திரம், கணிதம், கைத்தொழில், இலக்கணம், சொல்லணி இவைகளுக் கெல்லாம் கிரேக்க பாஷையிலும் லத்தீன் பாஷையிலும் பிரதம ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். இந்தக் கலாசாலைப் படிப்பில் ஆராய்ச்சிக்காவது, கற்பனு சக்திக்காவது இடந்தரப்படவில்லை.

இத்தகைய கல்வி முறைகளைத்தான் ரோமர்கள் தங்களுக் கொத்த முறையில் அமைத்துக் கொண்டனர். இவர்கள் கல்வி முறையின் மூலாதாரம் கிரேக்கக் கல்வியே. கிரேக்க மதம், தத்துவ ஞானம், இலக்கியம் முதலியவற்றை அப்படியே தங்களதாக ஏற்றுக் கொண்டனர். இன்னொருவரால் உபயோகிக்கப்பெற்ற கல்விமுறையை ரோமர்கள் மாதிரி எத்தேசத்தவரும் அப்படியே ஏற்றுக் கொண்டதில்லை. இருந்தாலும் இவர்களுடைய கல்வி முறையில் சில ரோம அமிசங்கள் சேர்க்கப்பட்டு, சில கிரேக்கத்தன்மைகள் தவிர்க்கப்பட்டன. ஆனல் இவர்களுடைய கல்வி முறையானது, கிரேக்கக் கல்வியை விட அதிக வெளியாசாரமாக (formalized) ஆகி விட்டது. இந்தப் பள்ளிக்கூட ஞானத்தினால்தான், ரோமர்களின் மேன்மை, பெரிய கட்டிடங்கள் கட்டுவதிலும், ரஸ்தாக்களை அமைப்பதிலும், சதுப்பு நிலங்களை வேளாண்மைக்கு உபயோகமாக மாற்றுவதிலும் வெளியாகியது என்று சொல்வதற்கில்லை. அதுவுமன்றி, ரோமர்களுக்கு, கிரேக்கர்களைப் போல், குடியுரிமைக்குக் கல்வி அவசியமில்லை. அதனுல்தான் ரோம ராஜ்யம், அதன் அந்திய காலத்தைத்

தவிர்த்து மீதி சமயத்தில் கல்வி வளர்ச்சிக்காக எவ்வித ஒத்தாசையும் புரிய முன் வரவில்லை.

இருந்தாலும், ரோம ராஜ்யத்தின் பள்ளிக்கூடங்களிலிருந்து சிறந்த ராஜ தந்திரிகள் தோன்றித் தங்கள் ராஜ்யத்தின் புகழை நிலை நிறுத்தியிருக்கின்றனர். இவர்களின் ஏகாதிபத்தியமே, பின்னர் வந்த தேசங்களுக்கு வழி காட்டியாக இருந்தது. கிரீஸ் தேசத்தைப் போல், ரோம ராஜ்யத்தில் அறிஞர்கள், ஞானிகள், சிற்ப சாஸ்திரிகள் யாரும் அதிகமாகத் தோன்றவில்லை. இவர்கள் அடைந்த முன்னேற்றம் ராஜ்யபரிபாலனத்திலேயே. அதன் பயனாக அக்காலத்தில் சுற்றுப் பக்கங்களிலுள்ள காட்டுமிராண்டி ஜனங்களை ஒருவித ஒழுங்கு, அமைதி, சட்ட திட்டங்களுக்குக் கீழ்ப்படிதல் ஆகிய இவற்றிற்குக் கொண்டு வந்து நாகரிக மடையச் செய்தனர். இன்னும் இவர்கள் உலகத்திற்கு அளித்த நன்கொடையில், இவர்களுடைய எழுத்தும் பாஷை அமைப்புமாகும். இவை இன்றும் உலகத்திலுள்ள எல்லா நாகரிக பாஷைகளிலும் கலந்திருக்கின்றன.

மொத்தத்தில் உலக நாகரிக வளர்ச்சிக்கு ரோமர்களும், கிரேக்கர்களைப் போலவே முக்கியகர்த்தர்களில் ஒருவராக இருந்தனர் என்று துணிவாகக் கூறலாம்.

கடன் — ஒரு சனியன்

அமேரிக்காவின் வடபகுதியிலுள்ள கோலராடோ ஸ்டேட்டிலும், தென்பகுதியிள்ள மோண்டானு ஸ்டேட்டிலும் உள்ள சில 'கீழ்த்தரமான' உணவுச்சாலைகளில் பின்வரும் வாக்கியங்களுள்ள சில பலகைகள் தொங்கவிடப்பட்டிருக்கின்றன :—

ஒட்டகம் ஒன்றும் அருந்தாமலே ஒரு வாரம்வரை நடந்து செல்லும். ஆனால் யார் ஒட்டகமாயிருக்க விரும்புகிறீர்கள்?

உங்கள் திருமுகம் நன்றாகத் தான் இருக்கிறது. ஆனால் அதை நாங்கள் ரொக்கச் சிட்டையில் (Cash Register) பதிவு செய்ய முடியாது.

கடனில் உங்களுக்கு நம்பிக்கை உண்டா? அப்படியானால் எங்களுக்கு ஐந்து டாலர் கடன் கொடுங்கள்.

நீங்கள் மிகவும் யோக்கியர் என்பது எங்களுக்கு நன்கு தெரியும், ஆனால் நாங்கள் கடனுக்கு விற்பனை செய்ய முடியாத அவ்வளவு ஏழ்மை நிலையிலிருக்கிறோம்.

உலகம் சீக்கிரத்தில் அழியப் போகிறது. நரகத்தில் உங்களை விரட்ட நாங்கள் விரும்பவில்லை.

நன்னடத்தையை யாருக்கும் நீங்கிழைப்பதில்லை.

கடனா! சனியன்! இல்லை! நாங்களும் ஏழைகள் தான்,

கனகாவின் கடிதங்கள்

—"சரசா"

கடிதம் IV

கீழவேளூர்

என் பிரியமுள்ள அம்மாவுக்கு நமஸ்காரம்.

தீபாவளிக்கு நீ அனுப்பின சீரெல்லாம் வந்து சேர்ந்தது. தபாலிலே இரண்டு பார்சலாக அனுப்பினுர் அப்பா. உன் மாப்பிள்ளை தான், இரண்டையும் பிரித்து அவர் அம்மாவுக்குக் காட்டினுர். கொஞ்சமாவது தலை நிமிர்ந்து பார்க்க வேண்டுமே அவள். 'இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்க எனக்கெங்கேயடா நேரமிருக்கு' என்று சொல்லி கழுத்தை ஒரு திருப்பு திருப்பிக் கொண்டு போய் விட்டாள். கழுத்து எங்கே சுளுக்கிக் கொள்ளப் போகிறதோ என்று கூட எனக்குப் பயமாயிருந்தது.

தீபாவளி இங்கே ஒரு தினுசாக வந்து போய் விட்டது. பட்டாஸை அதிகமாகச் சுடவேயில்லை. 'காசைக் கரியாக்குவாளோ' என்கிருள் என் மாமியார். அதற்குச் சரியாகத் தாளம் போடுகிருர் என் மாமனுர். சாஸ்திரத்திற்கு, ஒரு கட்டுத் தான் வாங்கிக் கொண்டு வந்தார்கள். அதிலும் பாதிக் கட்டை என் மாமனுரே வெடித்து விட்டார். இருக்கட்டும். அடுத்த தீபாவளிக்கு அங்கே வந்து என் மனம் தீர நிறைய பட்டாஸு சுடப் போகிறேன்.

புதுப் புடவையைக் கட்டிக் கொண்டு விழுந்து விழுந்து எல்லோருக்கும் நமஸ்காரம் பண்ணினேன். வீட்டிலே இருக்கப் பட்டவர்களுக்கு மட்டும் இந்த மரியாதை செய்தால் போதாதா? வீதியிலே போறவாள் வருகிறவாள் எல்லாரையும் என்மாமியார் ரொம்ப காரியமாகக் கூப்பிட்டு 'இப்படி வாங்கோ, என் நாட்டுப் பெண் நமஸ்காரம் பண்ருள்' என்று அழைத்து 'பண்ணடி நமஸ்காரம்' என்று கர்ச்சிக்கிருள். தலை விதியேயென்று விழுந்து விழுந்து எழுந்தேன். இதென்ன கர்நாடக வழக்கமோ தெரியவில்லை. பேசாமல், புருஷாளைப் போலே பொம்மனுட்டிகளும் ஒருத்தருக்கொருத்தர் கையைக் குலுக்கிக் கொண்டால் எவ்வளவு நன்ருயிருக்கும்? மனுஷ்யாளுக்கு மனுஷ்யாள் வித்தியாசம் எதற்கு? ஒருவருக்கொருவர் அடிமையாயென்ன? இதுகளெல்லாம் கூடாதென பண்டித ஜவஹர்லால் நேரு சொல்கிருர். அவர் சொல்கிற இந்த விஷயங்களை யெல்லாம் விட்டுவிடறது; அவர் கதரைக் கட்டிக்கொள் என்ருல், கோணியைக் கட்டிக் கொண்டு திரிகிறேன் என்று ஓடுகிறது. என்ன பைத்தியக்காரத் தனமோ தெரியவில்லை.

உன் மாப்பிள்ளைக்கு அனுப்பின சரிகை துப்பட்டா ரொம்ப நன்ருயிருக்கிறது. ஆனுல் அவருக்கு இப்பொழுது இவையெல்லாம் தேவையில்லையாம். நல்ல மாதிரி நாலைந்து ஸெட் 'ஸூட்'தைத்து அனுப்பினுல் சந்தோஷமாயிருக்கும் என்று என்னை எழுதச் சொன்னுர். ஏனென்ருல் வேலைக்காக எங்கேயாவது வேஷ்டி கட்டிக் கொண்டு போய் நின்ருல் அவ்வளவு எடுப்பாக இல்லையாம். சரியாகப் பேசக்கூட மாட்டேனென்கிருர்களாம். 'ஹாட்' டும் 'பூட்'டுமாய் கொஞ்சம் மிடுக்காகப்

போனால் தான் 'இப்பொழுது காலி யில்லை' என்றாவது, 'அப்ளிகேஷனைக் கொடுத்து விட்டுப் போ' என்றாவது சொல்கிறார்களாம். ஆகையால், அப்பா விடத்தில் நல்ல சமயம் பார்த்துச் சொல்லி நாலைந்து ஸெட் 'ட்ரெஸ்'கள் தைத்தே அனுப்பி விடவும். வெறுந் துணியை மட்டும் இங்கே அனுப்பி விட வேண்டாம். ஏனென்றால் இங்கே சரியான தையற்காரனும் இல்லை. கூலியும் இங்கே கொடுக்க வேண்டியிருக்கும். தவிர, என் மாமியார் மாமனார்களுக்கு இந்தக் 'கோலங்க'ளெல்லாம் பிடிக்கிறதில்லை. தைத்தே வந்து விட்டால், ஒன்றுஞ் சொல்லமாட்டார்கள். நன்றாக 'ட்ரெஸ்' பண்ணிக் கொண்டு போனால் தான் வேலை கிடைக்கும் என்று உன் மாப்பிள்ளை சொல்லிக் கொண்டிருக்கிறார். ஆகையால் சீக்கிரம் அனுப்பவும்.

புது மாதிரியான டோலக் ஒன்று இங்கே வந்திருக்கிறது. அதைப் போட்டுக் கொள்ள வேண்டுமென்று ஆசையாயிருக்கிறது. ஆனால் 'அதென்ன பெங்காலிகாரர் மாதிரி?' என்கிறாள் என் மாமியார். எந்தெந்த வயதிலே என்னென்ன போட்டுக் கொள்ளலாமோ அதையெல்லாம் போட்டுக் கொண்டால்தான் நன்றாயிருக்கு. என்னைப் போய் புல்லாக்கு போட்டுக்கொள் என்றால், நான் முகஞ் சிணுங்காமல் எப்படி இருக்க முடியும்? நீ அங்கேயிருந்து நல்ல டோலக் வாங்கியனுப்ப முடியுமா? அல்லது நகை கேட்லாக்குகளில் இரண்டு மூன்று மாதிரிகளை வாங்கியனுப்பினால், அவைகளைப் பார்த்து நான் ஆர்டர் கொடுக்கிறேன். அதே மாதிரி நம்மள் கிருஷ்ணப் பாச்சாரியிடம் கொடுத்தால் செய்து கொடுக்கிறான். அதைப் போட்டுக் கொள்ளாமற்போனால், என்னமோ ஒரு குறை மாதிரி இருக்கு. அந்தக் கனவுதான் அடிக்கடி வருகிறது.

நானும் உன் மாப்பிள்ளையும் சேர்ந்து போட்டோ பிடித்துக் கொள்ள வேண்டுமென்று ஆசையாயிருக்கிறது. என் மாமியார் வாய்க்குப் பயந்துதான் சும்மா யிருக்கவேண்டி யிருக்கு. அப்பா கூட நான் வரும்போது 'நீங்கள் இரண்டுபேரும் போட்டோ பிடித்து அனுப்புங்கள்' என்று சொன்னார். நாங்கள் இரண்டுபேரும் தனியாய் பேசினாலே என் மாமியாருக்குக் கண்ணிலே ரத்தம் தெறிக்கிறது. 'வேலை யில்லாத பவிஷுக்கு, ஆம்படையானோடு குலாவல் என்ன வேண்டி யிருக்கு?' என்று கடு கடுத்துப் பேசுகிறாள். யாராவது வேலையை வைத்துக் கொண்டு வா, வா என்கிறார்களா? மஹா பட்டவர்களெல்லாரும் திண்டாடித் தெருவிலே நிற்கிறார்களாம். என் மாமியாருக்கு உலக நிலை என்ன தெரியும்? என் மாமனார் தன் ஆபீசிலேயே, 12 ரூபாய் சம்பளத்தில் ஒரு கிளர்க்கு உத்தியோகம் பண்ணி வைக்கிறேன் என்று சொல்கிறார். உன் மாப்பிள்ளைக்கு அது இஷ்டமில்லை. நூறு ரூபாய்க்குக் குறைந்த சம்பளத்தில் எந்த வேலையகப்பட்டாலும் போவதில்லையென்று வைத்துக்கொண்டிருக்கிறார். எத்தனையோபேர் 50க்கும் 60க்கும் வா என்று கூப்பிடுகிறார்கள். போகமாட்டேனென்று ஒரே உறுதியாக இருக்கிறார். இஃதென்ன அசட்டுப் பிடிவாதம் என்கிறாள் என் மாமியார். கலெக்டராத்து மாப்பிள்ளையென்ற பெயர் வைத்துக் கொண்டு 50க்கும் 60க்கும் போய் நின்றால் எவ்வளவு வெட்கக்கேடாயிருக்குமென்பது அவளுக்குத் தெரிவதில்லை. உன்னுடைய

கனகா.

எழுபத்தாறு வயதுக் குழந்தை!

—வி. ஏ. சுந்தரம்

ஸ்ரீமான் சுந்தரம் காசி ஹிந்து சர்வ கலாசாலை நிருவாகத்தில் பொறுப்பான பதவியை வகிக்கிறவர். பூஜ்ய மாளவியாவின் காரியதரிசிகளுள் ஒருவர். இவர், தமிழ் மொழியிடத்தும், தமிழ் நாட்டிடத்தும் தனியாக் காதல் கொண்ட தேச பக்தர். முன்னர், இரங்கூனில் வெளிப்போந்த 'தேசோபகாரி' பத்திரிகையின் ஆசிரியராக இருந்தவர்,



பண்டித மாளவியா

பண்டித மதன் மோகன மாளவியா பாரதத்தாயின் எழுபத்தாறு வயதுக் குழந்தை. ஏன் குழந்தையென வழங்க வேண்டுமெனில் குழந்தையி னிடந்தான், எவ்விததுர்க் குணமுமின்றி தூய பளிங்கு போன்ற மனம்உண்டு. தாய், தன் அருமைக்குழந்தையைச் சென்ற நாள் செல்ல இன்னும் நூறாண்டு தன் மடியேந்தி மகிழாளோ! வசந்த காலம் ஒவ்வொன்றும் முன்னிலும் அதிக சோபை தருவது போல் பண்டிதரின் வாழ்நாளும் தேசத்திற்கு அதிக அழகைத் தருகிறது. பண்டித மதன்மோகன்மாளவியா, தீர்த்த நாயகமான திருவேணி தீரத்தின் க்ஷேத்திரமான பிரயாகையில் கி. பி. 1861ம் ஆண்டில் ஜனனமானார். பண்டிதருக்கு இளம் பிராயத்தி லிருந்தே சமஸ்கிருதத்திலும், ஸ்ரீமத் பாகவதத்திலும் மிகுந்த பிரேமையும் அன்பும் உண்டு. இதற்குக்காரணம் இவரது தந்தையாரான பண்டித பிரிஜ்நாத்ஜி என்பவர் வடமொழியில் பாண்டித்யமும், ஒழுக்கத்தில் சிறந்தோங்கி யிருந்ததுமே யாகும். பண்டிதர் தன் அன்னையின் குணமான பரோபகாரத் தன்மையையும் இரக்கத்தையும் சுவீகரித்துள்ளார். இவர் குழந்தைப் பருவத்தில் சிறுபாடசாலையில் வாசித்தார். இதில் பயிற்சிபெற்று ஆங்கிலப் பள்ளிக்குச்சென்று வாசித்து (Muir Central College) சேர்ந்தார். இவர் மாணவராக இருக்கும் போதே அலகாபாத் ஹிந்து சமாஜத்தை ஸ்தாபித்தார். கலாசாலையில் பண்டித ஆதித்யராம் பட்டாச்சார்யர் இவருக்கு பிரதம குரு ஆவர். இக்குருவானவர், தன் சிஷன் மாபெரும் வித்யாஸ்தாபனமான ஸ்ரீ காசி விசுவ வித்யாலயத்தை ஸ்தாபித்ததையும், 1918ம் ஆண்டில் அந்த ஸ்தாபனத்தின் பிரதம தலைவர் (Rector)

ஸ்தானத்தைப் பெற்றதையும் கண்டின்புறும் வரை உயிர் வாழ்ந்தாரெனில் ஒரு குருவுக்கு வேறு பாக்கியமும் வேண்டுமோ?



பண்டித மாளவியாவின் வீடு. சர்வகலாசாலை கம்பவுண்டுக்குள் இருக்கிறது.

பண்டித மதன் மோஹன் 1884ம் ஆண்டில் கல்கத்தா சர்வ கலாசாலையில் பட்டம் பெற்ருர். பின் எழு வருஷம் கழிந்த பின் சட்டப் பரீட்சையில் தேறி எல். எல். பி. (L. L. B.) பட்டமும் பெற்று, ஒரு உபாத்தியாயராகத் தன் வாழ் நாளைத் தொடங்கினுர். இவருக்குப் பத்திரிகையிலும், உண்மையை உலகத்தவருக்குச் சொல்வதிலும மிகுந்த அவா உண்டு. இந்த அவாவின் தூண்டுகோலுக் கிணங்கி பத்திரிகைத் தொழிலில் பிரவேசித்து, 'ஹிந்துஸ்தான்' என்ற பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்து நடத்தி வந்தார். கடந்த 50 வருஷ காலத்திற்குள் பண்டிதர் அனேகம் பத்திரிகைகளை ஜெனிப்பித் திருக்கிருர். 'அப்யுதயா'- 'லீடர்'—ஹிந்துஸ்தான் டைம்ஸ்'— 'சனுதன தர்ம பத்ரிகா' இவைகளெல்லாம் நம் மாளவியாவின் சிருஷ்டியே. இவர் தொடும் எந்த வேலைகளையும் செய்து முடிக்கும் ஆற்றலும் விடா முயற்சியும் உள்ளவர். நினைப்பதை உடனே செய்து விட வேண்டு மென்னும் கொள்கையைக் கடைப் பிடித்தவர்.

1893ம் ஆண்டில் அலகாபாத் கோர்ட்டில் வக்கீல் தொழில் நடத்த ஆரம்பித்தார். சில வருஷங்களுக்குள்ளே இவரது திறமையை எல்லோரும் ஒப்புக் கொள்ளும்படி தொழிலில் வெற்றி பெற்ருர். தன் வக்கீல் தொழிலைத் தியாகம் செய்து தேச சேவையில் ஈடுபடும் போது பண்டிதருக்கு ரூ 8000 வரை மாத வருமானமிருந்து வந்தது. இவருக்கு தேசம், மதம், பாஷை, இவற்றின் மீதுண்டான அன்பினுல் இப் பெரும் திரவியத்தை வெறுத்தார். தன்



காசி சர்வ கலாசாலை (Arts College)

ஜன்ம ஸ்தானமான அலகாபாத் நகர பரிபாலன சபையில் அநேக பொறுப்பான ஸ்தானங்களை வகித்துள்ளார். தேசத்திற்குச் சேவை செய்வதே கொள்கையாகக் கொண்டு 1905ம் வருஷத்தில் ஐக்கிய மாகாண சட்டசபையில் அங்கத்தினரானார். 1911ம் ஆண்டில் இந்திய சட்டசபையில் ஸ்தானம் வகித்து 1930 வருஷம் வரை அங்கத்தினராக இருந்து தேசத்திற்கு அநேக இயன்ற நன்மைகளை இயற்றினார்.

பண்டிதருக்குக் காங்கிரஸில் பற்றுதலுண்டென்பதை நாம் சொல்லவும் வேண்டுமோ? காங்கிரஸின் ஆரம்பத்திலிருந்தே தேச பக்தியுடன் அதில் பிரவேசித்து இயன்ற பணியை ஆற்றி மூன்று முறை அகில இந்திய காங்கிரசின் தலைவராக ஸ்தானம் வகித்தார். அதாவது ஒரு முறை லாகூரிலும், இரண்டு முறை டெல்லியிலும். எவ்விதம் மூன்று முறை அக்கிராசனம் வகித்துள்ளாரோ, அவ்விதமே ஒத்துழையாமை இயக்கத்தில் பிரவேசித்து மூன்று முறை சிறைவாசமும் அனுபவித்தார். காந்திஜீயுடன் 1931ஸு.த்தில் முதல் முறையாக ஐரோப்பாவுக்குப் போய் வட்டமேஜை மகா நாட்டில் கலந்து கொண்டார். இவர் கப்பல் பிரயாணத்தில் வெறுப்புற்றவரான போதிலும், தேச நன்மையைக் கருதி இங்கிலாந்து செல்ல நேர்ந்தது.

ஸ்ரீ காசி விசுவ வித்யாலய ஸ்தாபனம் (Benares Hindu University) ஒன்றே மாளவ்யாஜீயின் புகழை என்றும் விளக்கும் தீபமாக இருக்கிறது. இந்த ஸ்தாபனத்திற்கு இவர் முயற்சியே முக்கிய காரணம். 18 வருஷமாக இந்த ஸ்தாபனத்தின் உப அத்தியட்சகர் (Vice-Chancellor) பதவியை வகித்து வருகிறார். இந்த விசுவ வித்யாலயத்தையும் தபோ பலத்தினாலேயே பண்டிதர் ஸ்தாபிக்க முடிந்ததென்றே சொல்லவேண்டும்.



சர்வ கலாசாலையைச் சேர்ந்த புத்தக நிலையம்,

கோடிக்கணக்கான பெருந்தொகைகளை முயற்சியினால் வசூலித்து, இப் பாரத நாட்டிற்கே பெரும் புகழைத் தேடியிருக்கிறார். இந்த ஸ்தாபனத்தில்பயிற்சி பெற்றுச்செல்லுகிறவர்கள் எல்லோருமே பெரும்பாலும் தேச பக்தர்களாகவே இருப்பதற்கு வேண்டிய சாதனங்கள் இந்தச் சர்வ கலா

பாசிஸம்—பொதுவுடமை—ஜனநாயகம்

—ரதிலால் தேசாய்

M. A., (OXON)

இவர் ஒரு பெரிய கல்விமான். முன்னர் காசி ஹிந்து சர்வ கலாசாலையில் ஓர் ஆசிரியராக இருந்தார். உலக அரசியல் பிரச்னைகளைத் தெளிவாக ஆராய்ச்சி செய்திருக்கிறார். இவருக்கு பிரெஞ்சு பாஷையிலும் நிரம்பிய ஞானம் உண்டு. பொது நலத் தொண்டில் பெரிதும் ஈடு பட்டவர்.

உலகத்தில் இப்பொழுது இரண்டு விதமான 'இஸம்'கள் (Isms) அதிகமாகப் பிரஸ்தாபிக்கப்பட்டு வருகின்றன. அதாவது 'கம்யூனிஸம்' என்கிற பொதுவுடமை ஒன்று; மற்றொன்று 'பாசிஸம்'. இந்தக் கொள்கைகளின் அடிப்படையான தத்துவங்கள் ஒரு புறமிருக்கட்டும். இவையிரண்டும் தற்போழ்து அரசாங்க ஸ்தாபனங்களாக வேலை செய்து உலகத்தின் கவனத்தைக் கவர்ந்து நிற்கின்றன. இரண்டினிடத்தும் ஒற்றுமையான சில அம்சங்கள் காணப்படுகின்றன. இரண்டும், ஒரு சர்வாதிகாரியின் மூலமாகவே அரசாங்க நிருவாகத்தை ஏற்றுக்கொண்டன. இரண்டும் தங்கள் கொள்கைகளுக்கு மாறுபட்ட கொள்கைகளை யுடையவர்களுக்கு அரசாங்க நிர்வாகத்தில் எவ்விதப் பங்கும் கொடாதபடி அவர்களை தயைதாட்சண்யமின்றிப் புறக்கணித்து விடுகின்றன. தங்கள் தேசத்தின் ராஜீய முறையை அமைக்கிற பொறுப்பில் தங்கள் கட்சியினருக்குத்தான் முக்கியத்துவம் இருக்க வேண்டுமென்பதில் இரண்டும் ஒரே உறுதியா யிருக்கின்றன. ஒவ்வொரு பிரஜையும் அரசாங்கத்தோடு ஒத்துழைக்க வேண்டுமென்று இரண்டும் எதிர்பார்க்கின்றன. ஓட்டுக் கொடுக்கிற நபர் என்று எந்தப் பிரஜையும் தன்னைக் கருதிக் கொள்ளக் கூடாதென்று இரண்டும் வலியுறுத்துகின்றன. எந்தவிதமான ஸ்தாபனமும், அல்லது எந்தவிதமான ஜனசமூக வாழ்க்கையும், தேசிய வாழ்க்கைக்குத் துணை செய்வதாகவும்

சாலையில் பல இருக்கின்றன. பண்டிதருக்கு ஆயுர்வேதத்திலும் அதன் சிகிச்சையிலும் மிகுந்த நம்பிக்கை உண்டு.

இவர் ஆங்கில மருந்துகள் உட்கொள்வதில்லை யென்றேசொல்லலாம். இந்திய வைத்தியமுறை கற்பிப்பதற்காக சர்வ கலாசாலையில் ஆயுர்வேத ஸ்தாபனம் ஒன்றும் ஏற்படுத்தி யிருக்கிறார். அகில இந்திய ஆயுர்வேத மகாநாட்டில் 1926ம் வருஷத்தில் தலைமை வகித்ததற்குக் காரணம் அதன் மேலுள்ள அன்பே யாகும். பண்டிதருக்கு இது 76வது வயது. இன்னும் தினம் 12 முதல் 14மணி நேரம்வரை வேலை செய்கிறார். இவர் வேலைசெய்வதைத் தனது பலன் எதிர்பாராத கடமையாகவும் சந்தோஷமாகவும் கருதுகிறார். இவரைக் கர்மயோகி எனச் சொல்வதும் நியாயமாகும். இவர் தன் சுயநலத்தை எதிர்பாராது விஷயங்களை நடத்திவரும் தயவு நிரம்பிய அறிவாளி. மாளவ்யாஜி தேசத்திலுள்ள எல்லாக் கட்சியினராலும் கொண்டாடப்படுகிறார்.

அதற்குக் கீழ்ப்படிந்ததாகவும் இருக்க வேண்டுமென்று இரண்டு கொள்கைகளும் கோருகின்றன.

ஆனால் பாசிஸமும், பொதுவுடைமையும் தங்கள் லட்சியத்திலும் அடிப்படையான எண்ணங்களிலும் பெரிய வேற்றுமைகளைக் கொண்டிருக்கின்றன. பொதுவுடைமை, முதலாளி-தொழிலாளி பிணக்கு எப்பொழுதும் இருப்பதாகவே கருதுகிறது. பாசிஸமோ, தன் வாழ்க்கைக்கு அஸ்திவாரமாயமைந்திருப்பது தேசிய எண்ணம் என்று நம்புகிறது. தேசத்தின் பூரண வாழ்க்கையை பிரதிபலிக்கக் கூடியதும், தாராளமாக எடுத்துச் சொல்லக்கூடியதுமான ஓர் அரசியல் ஸ்தாபனத்தின் மூலம், அரசாங்கமானது தன் காரியத்தை நடத்த வேண்டும்என்று பாசிஸம்கருதுகிறது. ராஜாங்கத்திற்குச் செய்ய வேண்டிய கடமைகள் பிரஜைக்கு உண்டு. ஆனால் அரசாங்கம் பிரஜைக்குச்செய்யவேண்டியதொன்றுமில்லை. இது பாசிஸத்தின் தத்துவம். ஜன சமூகமானது, தன்னைவிடச் சிறந்தார் எவரையும் அங்கீகரிப்பதில்லை. அப்படிக்கருதுவதுமில்லை. ஜன சமூகமானது, எப்பொழுதும் விகாசமடைந்து கொண்டும் விரிவாகிக் கொண்டும் செல்ல வேண்டும். அதனுடைய மகத்வபூர்ண ஆசைக்கு விரோதமாக எந்த ஜனங்களும் நிற்கக்கூடாது.

ஜன சமூகமே, உலகக் கொள்கையாக வேண்டுமென்று தன் ஆசையை விரித்துக்கொண்டு போகிற காலத்தில், ராணுவ பலத்தின் மேன்மைகள் புகழத்தானேபடும்! இதனால் முஸோலினியின் ஆணைப்படி இத்தாலியர்கள், தங்கள் வாளாயுதத்தின் மீது கை வைப்பார்களானால் அது வெறும் 'கப்ஸா' அல்ல.

உள் நாட்டு விவகாரங்களிலோ, தேசத்தில் இயங்கக்கூடிய ஒவ்வொரு சக்தியும், தேசிய எண்ணத்தின் முன் தலை வணங்க வேண்டும். சர்வ தேச எண்ணம் என்பது லவலேசமும் இருக்கக்கூடாது. இதனால் தான், இத்தலியில், சர்வ தேச நோக்கோடுகூடிய எல்லாத் தொழிலாளர் சங்கங்களும், பாசிஸ்ட் யூனியன்களாக மாற்றப்பட்டன. முதலாளிகளை நேரான முறையில் சந்திக்கக்கூடிய மாதிரி, இந்த பாசிஸ்ட் யூனியன்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. இந்தப் பாசிஸ்ட் யூனியன்களும், இவை சம்பந்தப்பட்ட முதலாளிகள் சங்கம், பாசிஸ்ட் கார்ப்பொரேஷன்கள், கூட்டுறவுச் சங்கங்கள் முதலியவைகளே, வாக்காளர் தொகுதிகளாக இத்தலியில் அமைந்திருக்கின்றன.

பாசிஸத்தின் கீழ், இத்தலி பிரமிக்கத்தக்க முன்னேற்றத்தை அடைந்திருக்கிற தென்பது நிச்சயம். அபிசீனியப் போராட்டம் அதற்குப் பெரிய வெற்றி. ஸ்பெயின் குழப்பத்தில், இத்தலி தலை யிட்டதை இங்கிலாந்தும் பிரான்ஸும் சும்மா பார்த்துக்கொண்டுதா னிருக்கின்றன. தவிர இப்பொழுது ரோமாபுரிக்கும் பெர்லினுக்கும் ஏற்பட்டிருக்கிற தொடர்பானது பாசிஸத்திற்கு ஒரு வெற்றியேயாகும்.

அப்படியானால் இத்தலியில் பாசிஸம் நிலைத்து விட்டதா? இதற்குப் பதில் சொல்வது மிகக் கடினம். ஏனென்றால், பாசிஸத்திற்கு ஒத்துத் தாளம் போடாதவர்களுடைய அபிப்பிராயங்களெல்லாம் அடியோடு நசுக்கப்படுகின்றன. ஆனால் ஒரு விஷயம் தெளிவுபடுகிறது. பாசிஸமும், பொதுவுடைமையும், பார்லிமெண்டரி ஜனநாயகத்தை வெற்றிகரமாக எதிர்த்து நிற்

கின்றன. வெளி நாடுகளில் குடியேற்றம், அந்நிய நாட்டு வியாபாரம், பரஸ்பரம் ஒரு நாட்டுக்கும் மற்றொரு நாட்டுக்கும் ஏற்பட்டுள்ள சம்பந்தம் முதலாளித்துவம், ஒழுங்குபடுத்தப் பெறுத கைத்தொழில் விவசாய பாத்தியதை, நகரத் தொழிலாளர்களின் அபிவிருத்தி முதலிய பிரச்னைகளெல்லாம் உலகத்திலேயே ஒரு புரட்சியை உண்டுபண்ணி யிருக்கின்றன. தவிர, அரசாங்கம், சட்டம் முதலியவைகளைப் பற்றியும் ஜனங்கள் விசாரணை செய்யத் தொடங்கி யிருக்கிறார்கள். பார்லிமெண்டுகளைத் தவிர்த்து, பொது ஜன வாழ்க்கையைப் பிரதி பலிக்கிற பல்வேறு ஸ்தாபனங்கள் இப்பொழுது எங்கணும் தோன்றி யிருக்கின்றன. ஜன சமூக அபிவிருத்தியை, தனிப்பட்ட நபர்களுடைய போட்டா போட்டி முயற்சிக்கு விட்டு விடுகிற பார்லிமெண்டரி ஆட்சி முறையானது, புதிய சக்திகளை உற்பத்தி செய்கிற துறைகளில் ஜனசமூகத்தைச் செலுத்திக் கொண்டுபோக முடியாது. தன்னைக் காத்துக்கொள்ளவோ அல்லது பிறரைத்தாக்கவோ, ஒழுங்கான திட்டங்களைத் தயாரிக்கும் சக்தி பார்லிமெண்டரி முறைக்குக் கிடையாது. யுத்தவெறி நிறைந்துள்ள ஜனங்களைக் கொண்ட இந்த உலகத்தில், இந்த பார்லி மெண்டரி முறை பரிசோதனைக்கு நிற்க முடியாது. செல்வம் ஓரிடத்திலேயே குவிதல், பெரிய முதல் வைத்த வியாபாரம், வெளி நாடுகளுக்கு வேண்டிய சாமான்களை சப்ளை செய்தல் முதலியவை சம்பந்தமாக ஒழுங்கான சட்ட திட்டங்களை வகுக்கவும் பார்லி மெண்டரி முறையினால் முடியாது. ஐரோப்பிய மகா யுத்தத்திற்குப் பிறகு பூகோள படமே மாற்றி யமைக்கப்பட்டதன் காரணமாக, இந்தப் பார்லி மெண்டரி முறையின் சீரழிவு துரிதப்படுத்தப் பெற்றது. புதிதாகச் சுதந்திர நாடுகளாக உருக் கொண்ட போலந்து, யூகோஸ்லோவியா முதலியவை, பார்லிமெண்டரி ஜன நாயக முறையில் அநுபவ மில்லாதவைகளே. ஜெர்மனியில், ஹிட்லரின் தலைமையில் நாஜி ஆட்சி முறை ஸ்தாபிதம் செய்யப்பட்டது. ஐரோப்பிய யுத்தத்தின் முடிவில் பங்கிடப் பெற்ற வகைகளில் இத்தலிக்கு அதிக ஆசாபங்கம் ஏற்பட்டது. ருஷ்யாவோ, பொதுவுடைமையை ஒரு புதிய அரசாங்க முறையாக ஸ்தாபிக்கிற வகையில் தைரியமாகப் பரீட்சை செய்யத் துவங்கியது. இப்பொழுதுள்ள அரசாங்கங்களின் முன்னர் தோன்றியுள்ள பிரச்னை என்ன? ஓட்டுரிமையை விசாலிப்பது, இரண்டு வித சட்ட சபைகளை ஸ்தாபிப்பது, குடியரசு முறையைத் தழுவுவது முதலிய சில்லரை விளக்கங்களைப் பற்றியல்ல. ஜன சமூகத்தின் அஸ்திவாரத்தையே எப்படி மாற்றியமைப்பது, அதன் பொருளாதார, அரசியல் அமைப்பை எப்படி நிர்மாணிப்பது போன்ற ஆழ்ந்த விஷயங்களைக் குறித்து எந்தவிதமான முடிவுக்கு வருவது என்பதைப் பற்றியே யாகும். சமூக அமைப்பையே மாற்றியமைக்கிற பிரச்னை ஏற்பட்டு விடுகிற போது, பார்லி மெண்டரி முறைகளில் நம்பிக்கை கொண்டுள்ள அரசாங்கங்கள் தொடர்ந்தாற் போன்ற ஒரு கொள்கையை அநுஷ்டிக்க முடியாது. ஓர் அரசாங்கம் செய்த காரியத்தை மற்றோர் அரசாங்கம் வந்து மாற்றி விடுகிற மாதிரியில்லாத ஓர் அரசாங்கமே இருக்க வேண்டும். இந்தத் தத்துவத்தைக் கொண்டு பார்த்தால், பார்லி மெண்டரி முறைக்கு, ஒடுங்கும் காலம் ஏற்பட்டு விட்டதென்றே சொல்ல வேண்டும்.

கடவுளைப்பற்றி—

—எஸ். கே. நாராயண ஐயர்
B. A., B. L.,

இவர் ஒரு தமிழறிஞர். சிறப்பாகக் கம்பராமாயணத்தில் நிரம்பிய ஆராய்ச்சி யுடையவர். தமது ஆற்றலை, அடக்கமென்னும் பெட்டியில் அடக்கி வைத்திருக்கிறவர். இதனைக் கவர்ந்து, வாசகர்களுக்கு விநியோகிப்பது நமது கடமை யென்று கருதியே, இவரை இப்பொழுது வெளியிலிழுத்திருக்கிறோம்.

தெய்வபக்தி, தொன்று தொட்டு வந்துள்ளதோர் பழக்கம். ஆஸ்திக நாஸ்திக வாதமும் உடனுற்பத்தியாகி வந்துள்ளதெனினும் மனித சமூகத்தில் எப்போதும் கடவுளிடத்தில் ஒரு நம்பிக்கை இருந்து வந்திருக்கிறது. ஒரு சில நூற்றாண்டுகளாக, அதுவும் இந்த இருபதாம் நூற்றாண்டில் மலிந்து விளங்கும் பூத பௌதிக சாஸ்திர ஞானமும் ஆராய்ச்சியும் நாஸ்திக வாதத்திற்குச் சிறிது பலம் தந்ததெனினும் ஆஸ்திகக் கொள்கை அடிகுலைக்கப்பெறாமல் சிறப்புடனேயே யுளது.

பொதுவாக, சிறுவர்களாய்ப் பள்ளியில் பயிலும் காலத்தில் கற்பிக்கப் பெறும் நூல்களும் அறிவு விளக்கங்களும் கடவுளொருவ ருண்டெனும் கொள்கையை யடிப்படையாகக் கொண்டுள்ளன. இயற்கை விநோதங்களும், அவ்வப்போது முறையே தோன்றி மறையும் மாறுதல்களும் மனிதன் சக்திக்கெட்டாது இன்னமும் ஆராய்ச்சிக்குக் காரணமாயும் வியாக்கியானத்திற் குரித்தாயுமுள்ள எண்ணிறந்தவைகள் இப்பொருள்களுக் கெல்லாம் புறம்பாயுள்ள பழம் பொருளொன்றுண்டென்பதை அறிவூட்டும். கோழி முந்தியதா, முட்டை முந்தியதா வென்னும் விவாதத்தில் முட்டையி னின்றும் கோழி பிறப்பதால் அதனை முந்தியதென்று சொல்ல மாட்டாமல், முட்டையுண்டாவதும் கோழியிடத் திருந்தேயாதலால் அதனையும் முந்தியதென்று சொல்லமாட்டாமலும் மயக்கமுறும்போது சங்கடத்தினின்றும் தப்புவதற்கு கோழியோ முட்டையோ இரண்டிலொன்று முதலில் தோன்றியிருத்தல் வேண்டுமென்றும், அத்தகைய வொன்றை யுண்டாக்கிய சக்தியே தெய்வமென்றும் விளக்குவது யாவருமறிந்ததே. எது எவ்வாறாயினும் இகத்தில் தோன்றும் பல பொருள்களின் நிலை குணம் மற்றும் இதர ஆக்கங்களை பிரித்துரைக்கவும், காரண காரியங்களைவிளக்கி வைக்கவும் சாமர்த்தியமின்றித் தடைப்பட்டிருக்கும்போது தப்பும் வழியாகத் துணை செய்வது கடவுள் என்னும் கொள்கையே. பிந்திய பத்திகளில் கடவுள் நிலைமையையும், கொண்டாடும் முறையையும் நேர்மையையும் உசாவுவோமெனினும் தற்போது பொது மக்களிடத்தே தோன்றும் தெய்வ பக்தி பழக்க வழக்கங்களாலுண்டாய கொள்கையே யாதலால் அவ்விதம் கூறப்பட்டுள்ளது.

தற்போது கிடைத்துள்ள சாஸ்திர ஞானமும், பயிற்சியும், வியாபகமும் இயற்கைப் பொருள்களோடியைந்து அவற்றின் குணாகுணங்களை யறிந்து மனிதன் நோக்கத்திற்கும் முன்னேற்றத்திற்கும் ஏற்றவகையில் உபயோ

கித்துக் கொள்ள உதவியாயிருக்கிறது. வால்மீகி ராமாயணத்தில் புஷ்பக விமான மென்றொன் றிருந்ததாயும் அதனில் இராகவனும் வைதேகியும் விபீஷணாதிகள் புடைசூழ அயோத்திக்குப் பறந்து வந்தனரென்று பதினேழாம் நூற்றாண்டில் சொன்னால் அது கட்டுக்கதை யென்றே நிராகரிப்பர். ஆனால் தற்சமயம் அத்தகைய செய்தி இப்போதுள்ள ஆகாய விமானங்கள், ஆகாயக் கப்பல்கள் முதலிய ககன மிசைச் செல்லும் வாகனங்களின் தன்மையை யொத்திருக்க வேண்டு மென்று அனுமானிக்கப்பெறும். பண்டைக் காலத்தில் பாகுபடுத்தியோ விவரித்தோ சொல்லக் கூடாத ஒரு விஷயத்தை தேவ ரகசியம் என்றும் தெய்வ சக்தி என்றும் பிரகிருதி என்றும் பலவாறாகப் பேசிச் செல்வர். இப்போதைய சாஸ்திர ஞானம் இயற்கைப் பொருள்களைப் பரிசோதிப்பதிலும் அவற்றின் தன்மை முதலியவைகளைக்கண்டு அதற்கனுசிதம்போல் நடந்து பலன் பெறுவதிலும் மிகுதியும் உபயோகிக்கப் பெறுகிறது.

கடவுள் நிலையின் அவசியத்தை ஒரு சிறிது கவனிப்போம். இக்கொள்கை எல்லா மக்களிடத்தும் இருந்து வந்திருக்கிறது. ஹிந்துக்களும், முகமதியர்களும், கிறிஸ்தவர்களும் மற்றவர்களும் இக்கொள்கையைக் கொண்டாடி வருகின்றனர். நம் நாட்டுச் சரித்திரத்தையும் புராணங்களையும் சிறிது தழுவி யோசிப்போமானால் முகம்மதிய மதமும், கிறிஸ்தவ மதமும், ஹிந்து மதத்திற்குப் பிந்தியதென்பது வெள்ளிடைமலைபோல் விளங்கும். மேனாட்டு நாகரிகத்தின் முதவிடமென்று சொல்லப்பெறும் எகிப்து தேசமே இந்திய தேசத்தின் நாகரிகத்தை எடுத்துச் சென்றதென்பது சரித்திரக்கூற்று. பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இந்தியாவானது நாகரிகத்தில் மேன்மை யுற்றிருந்ததென்று விளங்குகின்றது. இப்போது பர்மாவிலும், சியாம், சீனா, ஜப்பான் முதலிய நாடுகளிலும் பரவியுள்ள பௌத்த மதமும் இந்தியாவிற் பிறந்ததே. இம் மதத்தைப் போன்றே கொள்கைகள் மிகுதியு முடைய ஜயின மதமும் இந்தியாவில் உற்பத்தியானதே. சிறிது நிதானித்து யோசிப்போமானால் இப்போதுள்ள பல்வேறு மதங்களும் சமயங்களும் மூலக்கொள்கைகளில் மிகுதியும் வேறுபாடின்றி சிற்சில விஷயங்களிலே தான் மாறுபட்டிருக்கின்றன வென்பது விளங்கும். அவ்வித முண்டாகியிருக்கும் வேற்றுமைகளும் அந்த மதத்தைத் தழுவும் மக்களின் நோக்கத்திற்கும் அறிவு விலாசத்திற்கும் ஏற்றவாறுண்டாயின வென்பதும் விளங்கும்.

'உலகம் யாவையும் தாமுளவாக் கலும் நிலை பெறுத்தலும் நீக்கலு நீங்கலா அலகிலா விளையாட்டுடையார்' எவரும் போற்றிடும் கடவுளெனப்படுவர். இதனையே 'அவனன்றி யோரணுவு மசையா' தென்று சுருங்கச்சொல்லி விளங்கவைத்தனர். கிறிஸ்தவர்கள் கொண்டாடும் விவிலிய நூலென்னும் சுவிசேஷத்தில் கிறிஸ்துவின் சரித்திரம் கூறப்பெற்றுள்ளது. அவர் சரித்திரம் மத்தேயு, லூக்கர், மார்க்கு, ஜான் என்னும் நால்வரால் கூறப்பெற்றுள்ளது. அவர்கள், ஒருவர் சரித்திரத்தையே கூறினரெனினும் அவர்கள் நோக்கத்திற் கேற்பப் போல் சரித்திரத்தில் விஷயங்களைக் குறிப்பிட்டனர். உதாரணமாக லூக்கர், தான் வைத்திய சாஸ்திரம் அறிந்ததற்கேற்ப மற்றச் சரித்திரங்களில் கூறியுள்ள வற்றினும் அதிகமாக கிறிஸ்துவால் வியாதிகள் சொஸ்தம் செய்யப் பெற்றதைப்பற்றிக் கூறி

யுள்ளார். ஜான் என்பவர், சரித்திர மாட்டுமேயல்லாது அதன் வாயிலாக ஞானமும் புகட்ட முனைவந்துள்ளார். ஜான் எழுதியுள்ள சரித்திரத்தில் ஒன்பதாவது அத்தியாயத்தில் பிறவிக் குருடனொருவன் கிறிஸ்துவால் கண் திருஷ்டி தரப்பெறுகிறான். அவ்வதிசயத்தைக் கண்ட சிலர் அவன் பிறவிக்குருடாய் நேர்ந்தமைக்குக் காரணமென்ன வென்றும், அவனா அல்லது அவன் பெற்றோர்களா பாவஞ் செய்தன ரென்று இயேசுவைக் கேட்டனர் என்றும் சொல்லப்பெற்றுள்ளது. அதற்கு இயேசு அத்தகைய பாவம் ஒன்றும் செய்யப்படவில்லை யென்றும் கடவுள் பெருமையைக் காட்டுவதற்கே அவன் அவ்விதம் பிறந்தானென்றும் பதிலிறுத்தார். இதனால் பொதுமக்களிடத்தே பாபபுண்ணியமென்னும் இருவகைக் கொள்கைகளிருந்தனவென்றும் அவர்கள் செய்கைகளுக்கேற்ப நன்மை தீமைகள் விளைகின்றன வென்றும் அவ்விதம் பெறுவது கடவுளுக்கும் நியாயமென்றும் நம்பிக்கை யிருந்ததும் விளங்கும்.

படைத்தல், காத்தல், அழித்தலென்னும் முத்தொழிலையும் செய்யும் தெய்வமொன்றே என்பது உண்மையாயினும் பொதுமக்களிடத்தே 'தந் தெய்வ மென்தெய்வமென் றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்குகள்' எண்ணிறந்தன நடந்து வருகின்றன. ஒவ்வொருவரும் தத்தமக்குத் தனித்தனி தெய்வமொன்றுண்டென்பதோடு நில்லாமல் என் தெய்வம் பெரிது, சிலாக்கியமானது, பராக்கிரம முடையது, பிறதெய்வம் தாழ்ந்தது, சிறியது, சக்தியற்றதென்னும் விவாதங்களை யுண்டாக்கி தெய்வ தூஷணைக்கும் மாச்சரியத்திற்கும் மன வேறுபாட்டிற்கும் வழி தேடி வருகின்றனர். இதை யறிந்தே ஔவையும் 'தெய்வம் ஒருவனே யென்று உணரவல்லீரேல் அறுவினைகள் ஐந்துமறும்' என்றனர்போலும். இத்தகைய அறிவின்மையையே பெரியோர் அஞ்ஞானம் என்றழைக்கின்றனர். தெரியாதவைகளைத் தெரிந்தவைகளைக்கொண்டுதான் அறியமுயல்வது மக்களியல்பு. அதனாலேயே கடவுளை எவ்வித உருவிலும் நினைக்கவு மியலாமையால் உருவிலி யென்றும், இறப்பும் பிறப்புமில்லாமையால் இறப்பிலி பிறப்பிலி யென்றும், என்றும் அழியாமையால் அழிவிலி யென்றும், எக்குணத்தவருமன்றாதலால் நிற்குணத்தவ ரென்றும், ஆண் பெண் நபும்சகமென்னும் எப்பாலுமில்லாமையால் ஆணுமலன் பெண்ணுமலன் அலியுமலனென்றும், எவ்விதத்தானும் உருப்படுத்தியோ மற்றெவ்விதமோ கூற முடியாமையால் மனோ வாக்குக் காயங்களுக்கு எட்டாதவனென்றும் சொல்லிப் போயினர். ஆனால் கடவுள் சர்வவியாபி என்பதும், எல்லாம் அவன் செயலே யென்பதும் மக்கள் மனத்தே பொதிந்து கிடக்கின்றது. கம்பர், தம் இராமாயணத்தில் கடவுள் வியாபகத்தை வெகு விமரிசையாய்த் தெரிவிக்கின்றனர். 'உம்பர்க்கு முனக்கு மொத்திவ்வுலகெங்கும் பரந்துளானைக் கம்பத்தின் வழியே காணக் காட்டுதி' யென்று கனகன் கேட்க, பிரகலாதன் 'சாணினுமுளனோர் தன்மை யணுவினைச் சதகூறிட்ட கோணினுமுளன் மாமேருக் குன்றினு முளன் நீ சொன்ன சொல்லினு முளன் முன்னின்ற தூணினு முளனித்தன்மைகாணுதி விரைவினென்றான்'. அதற்கிணைந்து இரணியன் தூணினை யெற்றவு மதனினின்றும் தோன்றியது செங்கட்சீயம். இதேகருத்தினைத் தாயுமானாரும் 'பண்ணேனுனக்கான பூசையொருவடிவிலே பார்க்கின்ற மலரூடு நீயே

யிருந்தி அப்பனிமல ரெடுக்க மனமும் பாவித்து இறைஞ்சலாங்கே, நண்ணோன் அலாமலிருகைதான் குவிக்க வெளிலோ நாணும் என்உளம் நிற்றி நீ' என்று கூறி விளக்குகின்றனர். பின்னர் விவிலிய நூலிலும் கடவுள் நிலையைச் சொல்லவந்தபோது கடவுளுலகம் நமக்குள்ளேயே யிருக்கின்றதென்று விவரித்துள்ளார்.

ஞானார்த்தங்களை விளக்குவதற்கு புராண இதிஹாஸங்கள் மிகுதியும் துணை செய்துவந்துள்ளன. விளக்குவதற்கருமையான விஷயங்களை மக்கள் மனத்தே ஊன்றி யிருப்பதற்கென்றே சரித்திர ரூபமாகவும் கதைகளாகவும் மற்றும் பலவிதமாய் விளக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக பகவான் சர்வவியாபி என்பதை விளக்குவதற்கு பாகவதத்தில் ஒரு சிறு கதையுண்டு. புராணங்களில் மனது என்பதைக் குறிக்க எப்போதும் நாரதரைக் குறிப்பது வழக்கம். மனத்தினிடையே தோன்றும் எண்ணங்களாலேயே ஆராய்ச்சிக்குச் சாதகம் நேர்வதாலும், மனத்தில் எண்ணங்கள் எப்போதும் தோன்றிக் கொண்டேயிருப்பதாலும் புதுமைகள் விளைவதாலும் நாரதரைக் கலகப்பிரியர் என்பர். கலகம் என்பது இரண்டெண்ணங்களை ஒன்று சேர்த்து ஒற்றுமை வேற்றுமை ஏற்படுத்துவது. இத்தகைய நாரதர் ஒரு சமயம் கிருஷ்ணராகிய பரமாத்மன் வசிக்கும் துவாரகைக்குச் சென்றார். கிருஷ்ண பரமாத்மாவுக்கு அஷ்டலக்ஷ்மிகள் நீங்கலாக எண்ணிறந்த கோபிகளோடும் லீலையுண்டென்பது யாவருமறிந்ததே. இந்த கோபி லீலைகளும், அஷ்டலக்ஷ்மி நேசமும் சரித்திரக் கூற்றுடையனவே. அவற்றைப் பின்னல் அமயம் நோக்கி ஆராய்வோம். துவாரகை சென்ற நாரதர் கிருஷ்ண பகவானை தரிசிக்கவும் ருக்மணியை வணங்கவும் உத்தேசித்து அவர்கள் வாழும் அந்தப்புரம் சென்றார். கிருஷ்ண ருக்மணிகள் வேடிக்கையாகப் பொழுது போக்கிக் கொண்டிருந்தவர் நாரதர் வருகையால் அகமுக மலர்ந்து அவரை வரவேற்று அன்புடன் ஆசரித்து குசலம் கேட்டு உசாவிக்குலாவி பின்னர் விடை தந்தனுப்பினர். வீதி வழியே சென்ற நாரதர் சத்திய பாமையின் அந்தப் புரத்தை யணுகியதும் கிருஷ்ண வாத்சல்யத்தால் பொறுமை கொண்டு மற்றவர் கிருஷ்ண கேளிகளில் திளைக்கப் பொறுத சத்தியபாமையிடம் ருக்மணியோடு கிருஷ்ணரிருந்த நேர்மையைச் சொல்லி, சத்திய பாமையின் உள்ளத்தே சிறிது அசூயை யுண்டாக்க எண்ணம் கொண்டு சத்திய பாமையின் அந்தப் புரத்தில் நுழைந்தார். அங்கேயும் கிருஷ்ண பரமாத்மா லீலாலோலராய் சத்திய பாமாவோடும் சந்தோஷமாயிருக்கக் கண்டார். கிருஷ்ண சத்திய பாமாக்கள் நாரதரை வரவேற்று அங்கும் வேண்டிய உபசாரம் செய்தனுப்பினர். எண்ணிய கருமம் செய்யக் கூடாமையால் மனமுடைந்து வெளி வந்த நாரதர் கோபிகளிடமேனும் கலக மூட்ட நினைத்தார். அந்நோக்கத்தோடு கோபிகள் இல்லங்களிருக்குமிட மடைந்து முதல் கோபி வீட்டில் நுழைந்தார். அங்கேயும் கிருஷ்ணன் அக் கோபியோடு உல்லாசமாயிருந்தவர் இவரை வரவேற்றுபசரித்தார். சடுதியில் விடை பெற்று இடையிலுள்ள மற்றோர் வீட்டிலேனும் தன் காரியத்தை முடித்துக் கொள்வதென்று நாரதர் மற்றோர் கோபியின் வீட்டில் நுழைந்தார். அங்கும் கிருஷ்ணன் அக்கோபியோடும் தரிசனம் தந்துபசரித்தார். நாரதரும் தன்னால் கூடிய துரிதத்தில்

ஒவ்வோர் கோபியின் வீட்டிலும் நுழைந்து பார்த்தும் கிருஷ்ணனிருக்கக் கண்டு மன முடைந்து வீதி வழியே செல்லும்போது கிருஷ்ண பகவான் எங்கிருந்தோ துவாரகைக்குத் திரும்பி வருவார்போல் நாரதரைச் சந்தித்து முகமன் கூறி அணித்தாயுள்ள வீட்டிற் கழைத்தேகி உபசரணையும் செய்தனுப்பினுர். இச்சரித்திரத்தின் உண்மைக் கூற்றெவ்விதமிருப்பினும் பகவான் சர்வவியாபி என்பதை நன்கு விளக்குகிறது. சரித்திரத்தில் இனிமை தோன்றவும் உண்மை கசியவும் கிருஷ்ணன் தன் பாரியரோடும் கோபியரோடும் லீலைகள் செய்யும் போது பல்வேறு வேலைகள் செய்திருந்ததாகவும் கூறுவதுமுண்டு. சித்திரம் எழுதுபவன் மனக்கோட்டைக்கும் கையின் திறமைக்கும் ஏற்றவாறு நுண்ணிய புலமைகள் பொதிந்து விளங்கும்.

இது போன்ற மற்ருெரு கதை சிவபெருமானைக் குறித்தது. முறையே படைத்தல், காத்தல், செய்கைகளுக்குரியவராகிய பிரமனும் மாலும் தம்முள் பெரியவரெவரெனவறிய விரும்பினர். தம்முள் விவாதத்தைத் தீர்த்துக் கொள்ளவியலாராய் சிவபெருமான் பக்கலடைந்தனர். அன்னரிடம் தங்கள் வழக்கைத் தெரிவித்தனர். சிவபெருமானும் இருவரையுமழைத்து அவர்கள் விவாதத்தைத் தீர்ப்பதாகவும் அவர்களில் எவரொருவர் சிவபெருமான் முடியையோ அடியையோ முன்னுல் கண்டு திரும்பி வருகிருரோ அவரே பெரியவரென்றும் தீர்ப்புச் சொன்னுர். உடனே பிரமன் முடியைக் காண மேலுயர்ந்தும் பகவான் அடியைக்காண கீழ்குடைந்தும் சென்றனர். எவ்வளவு தேடியும் அடி கிடைக்காமையால் பகவான் உடனே தாணுவிடம் வந்து ஈசன் அளவிற் கெட்டாவியலைப் புகழ்ந்து தன் அறிவின்மையை யிகழ்ந்து சென்றனர். பிரமனே வெனின் எவ்வளவு சென்றும் முடியைக் காண முடியாமையால் முடியிலிருந்தும் இழிந்து வருவதாகச் சொன்ன தாழைமலரொன்றைச் சான்ருக வைத்து சிவபெருமான் திருமுடியைத் தான் கண்டு அங்கிருந்து தாழை மலரைக் கொண்டு வந்ததாகவும் சொன்னுர். தாழை மலரும் சான்று புகன்றது. எனினும் ஈசன் உடனே அனற்கொழுந்பாக, அறியாமையால் பொய் புகன்ற பிரமனும் பின்னர் சிவபெருமானை க்ஷமிக்கும்படி வேண்ட பெருமானும் பிரமனை க்ஷமித்து செய்த குற்றத்திற்காக அவருக்குக் கோயிலில்லாமலும், தாழை மலர் தன் பூசைக்கருக மற்றதாகவும் சபித்துச் சென்ருரென்பர். முன் கூறியது போல் கதையின் உண்மை நேர்மை எவ்வகைத்தாயினும் கடவுள் அளத்தற்கரிய ஆற்றலும் ஆகிருதியுமுடையவரென்பதை இது நன்கு விளக்கும். மக்கள் கடவுளை பல ரூபங்களிலும் பல நாமங்களிலும் வழிபட நேர்ந்ததமை எங்ஙனமென்று பின்னர் ஆராய்வோம்.

சோவியத் ருஷ்யாவிலே குக்சோரேக் என்ருெரு கிராமம் இருக்கிறது. இதில் பணத்துக்காகக் கவி பாடும் கவிஞர்கள் மட்டுந்தான் இருக்கிருர்கள்.

ஒரு ரெயில்வே எஞ்சினை உருப்படியாக்குவதென்ருல் அதற்கு 7500 சில்லரை உருப்படிகளை ஒன்று சேர்க்க வேண்டி யிருக்கிறது.

என் தாய் நாடு

—நாராயண வாமன் திலகர்

மொழி பெயர்த்தவர்: பொ. திரிகூட சுந்தரம் பிள்ளை, M. A., B. L.,

1. என் தாய் நாடே! உன் அன்பின் பொருட்டு தவிட்டை உண்பேன்; கந்தையை உடுத்துவேன்; இசை, இன்பம் எல்லாம் எறிந்து விடுவேன்.

2. என் ஆன்மா என்றேனும் ஒரு நாள் இந்த அழியும் இல்லத்தை விட்டு ஏக வேண்டியதே. ஆனால் உன்னை விட்டு என்னைப் பிரிக்க யமனுக்கு ஆற்றல் உண்டோ? அவனுக்கு இல்லை என்று நீ அறிவாய்.

3. உன்னிடம் பிறப்பது—எவ்வளவு அரிய பாக்கியம்! அதை யார் என்னிடமிருந்து அபகரித்து விட இயலும்? இவ்வளவு துணிவுள்ள திருடன் உளனோ? ஜாலத்தால் இயலுமா? மாயத்தால் இயலுமா? ஒன்றாலும் முடியாது.

4. என் தாய்நாடே! உன் பொருட்டு என் உடலை ஈவேன்; என் உயிரை அளிப்பேன். மெய் மறந்து நிற்கும் என் அன்பைக் கண்டு சிலர் நகைப்பர்; சிலர் வருந்துவர்; ஆனால் நான் அவர்களை லட்சியம் செய்யப் போவதில்லை. நான் உன் மகன். அப்படியே நடப்பேன். கடவுள் அருள் புரிவாராக.

5. எங்கள் செல்வம், எங்கள் புகழ், எங்கள் அறிவு—இவைகளை நீ விரும்புகிறாயில்லை. எங்களையே நீ உன் உயிர்க்குயிராய் மதித்திருக்கிறாய்.

6. என் அன்பு மிகுந்த அன்னையே! —எவ்வளவு அற்பமாயினும் என் ஆண்மையை நீ ஏற்றுக் கொள்வாய். இப்படி என்னை உனக்குச் சமர்ப்பிப்பதில் நான், என் நண்பர்—உன் நண்பர்—உலக நண்பராகிய எம்பெருமான் இயேசுவையே பின் பற்றுகிறேன்.

7. அவரைப்போலவே, என் தாய் நாடே! உனக்கும் உலகுக்கும் ஊழியம் செய்யும் பொருட்டு ஆண்டவன் எனக்கு உதவி அருள்வாராக.

8. உன் ஊழியத்தில் நான் இன்னல் அடைவதை—உன் சேவையில் நான் உயிர் துறப்பதை நீ காண்பாய். அப்படி நிகழ்வதில் நான் உனக்கு ஊழூழி காலம் ஊழியம் செய்வேன்.

---

* இவர் ஒரு மராத்திய கிறிஸ்தவ கவி. பல தேசீய கீதங்களை ஆங்கிலத்தில் பாடி இருக்கிறார்.

இப்படியும் நடக்குமா?

பிரிட்டனின் மொத்தச் செல்வம் 40,000,000,000 பவுன் என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது.

ஃ ஃ ஃ

500 டன் பத்திரிகைத் தாள் தயாரிப்பதற்கு 300 லட்சம் காலன் தண்ணீர் செலவழிக்க வேண்டியிருக்கிறது.

ஃ ஃ ஃ

கமலா நேரு ஆஸ்பத்திரி நிதிக்கு இதுவரை 111,219 ரூபாய் சேர்ந்திருக்கிறது.

ஃ ஃ ஃ

புனாவில் மஹாராஷ்டிர கலாசாலையொன்று ஸ்தாபிப்பதற்கு ஒரு பார்சி கனவான் பத்து லட்சம் ரூபாய் நன்கொடையாகக் கொடுத்திருக்கிறார்.

ஃ ஃ ஃ

வைக்கோலிலிருந்து கம்பளியும் காகிதமும் செய்ய ஜெர்மன் அரசாங்கத்தார் திட்டம் போட்டிருக்கின்றனர்.

ஃ ஃ ஃ

அமெரிக்க ஐக்கிய மாகாணத்தில் மட்டும் வருஷந்தோறும் 1 கோடி டன் காகிதம் செலவழிகிறது. உலகத்திலே வேறெந்த நாடும் இவ்வளவு செலவழிப்பதில்லை.

ஃ ஃ ஃ

திருவாங்கூர் அரசாங்கத்தாரே திருவனந்தபுரத்திலிருந்து கன்னியாகுமரிக்கு பஸ்கள் விட ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறார்கள். சுமார் அறுபது பஸ்கள் இந்த முறையில் ஓடும்.

ஃ ஃ ஃ

அஸ்ஸாம் மாகாணத்திலுள்ள டிப்ருகார் என்ற ஊரிலுள்ள ஸ்ரீமான் சக்ரவர்த்தி என்பவர், இந்திய தேசிய காங்கிரஸுக்காக சுமார் ஒன்றரை ஏகரா விஸ்தீரணமுள்ள பூமியை நன்கொடையாகக் கொடுத்திருக்கிறார்.

ஃ ஃ ஃ

சீனாவில், தான் தொடுத்துள்ள யுத்தத்திற்குத் துணையாக ஜப்பான் 500 ஆகாய விமானங்களை இறக்குமதி செய்திருக்கிறது. இவையாவும் ஐரோப்பிய வல்லரசுகளால் சப்ளை செய்யப் பட்டவை.

ஃ ஃ ஃ

எகிப்து தேசத்திலுள்ள கிராம ஜனங்களுக்குக் கல்வி புகட்டும் பொருட்டு, அந்த நாட்டு அரசாங்கத்தார் இரண்டாயிரம் ரேடியோ கருவிகளை ஆங்காங்கு அமைத்திருக்கின்றனர்.

ஃ ஃ ஃ

1937ம் வருஷம் ஜூன் மாதத்தோடு முடிகிற ஆறு மாதத்தில் கானடா மாகாணத்தில் 1,966,858 அவுன்ஸ் தங்கம் தோண்டி எடுக்கப்பட்டது. இதின் மதிப்பு சுமார் 68,820,361 டாலர்.

ஃ ஃ ஃ

ஜெர்மனியிலே ஒரு நாய் இருக்கிறது. இதற்கு ஜெர்மன் பாஷை நன்றாகத் தெரிகிறது. எத்தனை விதமான பாஷைப் பத்திரிகைகளை வைத்துக் கொண்டு பார்த்தாலும், அதில் ஜெர்மன் பாஷைப் பத்திரிகையை மட்டும் இது பொறுக்கி யெடுத்துக்கொண்டு விடுகிறது.

ஃ ஃ ஃ

மனிதனுக்கு வயது ஏற ஏற தள்ளாமை வந்துவிடுகிறதல்லவா? இதைத் தடுப்பது எப்படி? சில ரசாயன மருந்துகளை உட்புகுத்தி முதுமை வராமல் தடுக்க அமெரிக்காவிலுள்ள

சில அறிஞர்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஃ ஃ ஃ

நவம்பர்மாத முதல் வாரத்தில் சென்னை மாகாணத்தில் பலத்த மழை. தூத்துக்குடியில் சுமார் இரண்டாயிரம் குடும்பங்கள் வீடின்றித் தவிக்கின்றன. சுமார் அரை லட்சம் ரூபாய்க்கு நஷ்டமேற்பட்டதாக ஊகிக்கப்படுகிறது.

ஃ ஃ ஃ

நவம்பர் மாதம் மூன்றாவது வாரத்தில் பர்மா கவர்னர், தமது பரிவாரங்களுடன் வட பர்மாவிலுள்ள நாம்டு சுரங்கப் பிரதேசங்களுக்குச் சென்றிருந்தார். அப்பொழுது அவருக்குப் பத்து பாஷைகளில் உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது.

ஃ ஃ ஃ

ஹாலிவுட்டிலுள்ள சினிமா நக்ஷத்திரங்களுக்கு ஒரு சமயம் ஜலதோஷம் அதிகமாகப் பிடித்துக்கொண்டிருந்ததாம். இதற்காக, படமெடுக்கிற சமயங்களில்—காதல் சீன்களின் போது—நடிகர்கள் ஒருவரை யொருவர் முத்தமிட்டுக் கொள்ளக் கூடாதென்று உத்திரவு பிறப்பிக்கப்பட்டது.

ஃ ஃ ஃ

1937ம் வருஷம் நவம்பர் மாதம் 9ந் தேதி முதல் திருவாங்கூர் சமஸ்தானத்திலுள்ள ஹைகோர்ட்டும், 15ந் தேதி முதல் மற்ற ஜில்லா கோர்ட்டுகள், முனிசிப் கோர்ட்டுகள் முதலியனவும் காலை 7-30 மணியிலிருந்து பகல் 12-30 மணிவரை வேலை செய்ய வேண்டுமென்று உத்திரவு பிறந்திருக்கிறது.

ஃ ஃ ஃ

லண்டனிலுள்ள மிருக காட்சிசாலையில் யானைகள் தங்குவதற்கென்று தனியான ஒரு விடுதி கட்டப்போகிறார்கள். இதற்கு நமது சுதேச ராஜாக்களில் ஒருவரான பவநகர் மகாராஜா ஒன்றரை லட்சம் ரூபாய் நன்கொடை யளித்திருக்கிறார்!

ஃ ஃ ஃ

லார்ட் நப்பீல்ட் என்ற ஒரு பிரிட்டிஷ் செல்வர், தருமஞ் செய்வதில் சளைப்பதாகக் காணோம். அங்க ஹீனர்களின் சிகிச்சை சாலைக்காக இவர் 1935ம் வருஷம் 86,500 பவுன் கொடுத்தார். இப்பொழுது மறுபடியும் 150,000 பவுன் கொடுத்திருக்கிறார். சென்ற பத்து வருஷங்களில் இவர் மொத்தம் 11,500,000 பவுன் தருமஞ் செய்திருக்கிறார்.

ஃ ஃ ஃ

ரையான் என்ற பெயருடைய இரண்டு சகோதரர்கள் இங்கிலாந்திலுள்ள லிவர்பூல் நகரத்தைச் சேர்ந்தவர்கள். பால்யத்திலேயே இருவரும் ஜீவனோபாயத்தை முன்னிட்டு வெவ்வேறு இடங்களுக்குச் சென்றுவிட்டார்கள். பின்னர் 50 வருஷங்கள் கழித்து, சென்ற வருஷந்தான் இருவரும் சந்தித்தார்கள். எங்கே? அமெரிக்காவிலுள்ள ஒரு ரெயில்வே ஸ்டேஷனில் யதேச்சையாக.

ஃ ஃ ஃ

அமெரிக்காவிலுள்ள ஒரு கோடீசுவரர், தமது சொந்த உபயோகத்திற்கென்று ஒரு ஆகாயவிமானம் தயாரிக்க ஆர்டர் கொடுத்திருக்கிறார். இதற்கு என்ன விலையாகும் தெரியுமா? சுமார் ஒன்பது லட்சம் ரூபாய்! இதில் பதின்மூன்றுபேர் தாராளமாக உட்கார்ந்து பிரயாணஞ் செய்யலாம். இதில் ரேடியோ, தண்ணீர்—வெந்நீர் ஸ்நானங்களுக்குச் சௌகரியம், நான்கு படுக்கை யறைகள் முதலிய விசேஷ சௌகரியங்க ளெல்லாம் இருக்கும்.



விஷ விருக்ஷம்

மூல நூலாசிரியர்: பங்கிம் சந்த்ர சட்டோபாத்யாயர்; மொழி பெயர்த்தவர்: ஸ்ரீமான் த. நா. குமாரஸ்வாமி அவர்கள் பி. ஏ.; வெளியிட்டோர்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை. விலை: ஒன்றரை ரூபாய்; டபிள் கிரவுன் அளவு 1x16; 310 பக்கங்கள்.

ஸ்ரீ துவிஜேந்திரலால் ராயின் நாடகங்கள் எப்படி வங்க இலக்கியத்திற்கு ஒரு காம்பீர்யத்தை அளித்திருக்கின்றனவோ, அப்படியே ஸ்ரீ பங்கிம் சந்திரருடைய வசன நூல்கள் மேற்படி வங்க பாஷைக்கு ஒரு சோபையைக் கொடுத்திருக்கின்றன. உலகத்தில் அன்றாடம் நடைபெறும் சம்பவங்களைச் சித்திரித்துக் காட்டி அதன் மூலமாக மானிட ஜாதியினுடைய மானஸிக திருஷ்டியை உயர்த்த வேண்டுமென்பதே கதை எழுதுவோரின் நோக்கமாயிருக்க வேண்டும். மனிதனுடைய கீழான எண்ணங்களையும் ஆசைகளையும் தூண்டிக் கொடுத்து அவற்றிலேயே அவனை மிதக்க விட்டுவிட்டு வேடிக்கை பார்க்கிற கதைப் புத்தகங்களினால் தேசத்திற்கோ பாஷைக்கோ எவ்வித நன்மையும் உண்டாகாது.

ஸ்ரீ பங்கிம் சந்திரர் ஓர் ஆதர்சகவி; கற்பனைக் களஞ்சியம்; உலக விவகாரங்களை ஆழ்ந்து நோக்கி அவற்றை அப்படியே சொல்லோவியமாக வரையும் சித்திரக்காரர்; நகைச்சுவையிலே உயரிய கருத்துக்களைத் திணித்துக்காட்டக்கூடிய ஜாலபுருஷன்; காதல் என்னும் கூரிய கத்தியின் மீது மிக லாகவமாக நடந்து செல்கிற பயில்வான். இத்தனை தோற்றங்களாகவும் இவர் **விஷ விருக்ஷம்** என்ற இந்த நூலில் நமக்குக் காட்சியளிக்கிறார்.

ஸூர்யமுகியின் அறையில் மாட்டப்பட்டிருக்கும் படங்களை இவர் வருணித்துக் காட்டுகிறபோது (44வது அத்தியாயம்) ரவிவர்மாவின் பக்கத்தில் ஒரு கௌரவமான ஸ்தானத்தை இவருக்குக் கொடுத்து விடுகிறோம். ஒரு செல்வருடைய வீட்டை—அல்லது ஜமீன்தாருடைய மாளிகையை நாம் எவ்வித முன் அநுமதிச் சீட்டுமின்றிப் பார்த்துவிட்டு வரவேண்டுமானால் இந்நூலின் 7வது அத்தியாயத்தைப் படித்தால் போதும்.

தாம்பத்ய வாழ்க்கையில் கணவனுக்கும் மனைவிக்கும் சகஜமாக ஏற்படுகிற ஊடலை, ஸ்ரீச சந்திரனுக்கும் கமலமணிக்கும் நடக்கிற ஸம்பாஷணை மூலமாக (பக்கம் 75) அநுபவிக்கிறோம்.

பங்கிம் சந்திரருடைய நகைச்சுவையைச் சிறிது பாருங்கள்.

ரஹ்மத் இதற்குமுன் படகு ஓட்டினதே கிடையாது; அவனுடைய பாட்டனின்

சித்தி ஒரு படகோட்டியின் பெண்ணும்.- பக். 8.

* * *

அழகோ வென்றால் தேய்ந்த முகம், விரிந்த நாசி; வீரமோ பள்ளிக்கூடத்துச் சிறுவர்களிடத்தில்தான்; காதலோ, குந்தநந்தினியிடம் அவனுக்கு எவ்வளவு இருந்த தென்பது நமக்குத் தெரியாது. ஆனால் ஒரு பெண் குரங்கின் மீது அவனுக்கு அளவிறந்த ஆசை இருந்தது என்னவோ வாஸ்தவம்!- (பக். 40,)

சில சந்தர்ப்பங்களை பங்கிம் சந்திரர் வருணிக்கிறபோது நாம் அப்படியே அதில் லயித்துப்போய் விடுகிறோம்.

அப்போது அவள் கண்களில் ஒளியே இல்லை; அவை ஈயம்போல் விளங்கின.- (பக். 107.)

* * *

கல் மனமும் இளகும்படி ஸூர்யமுகி அழும் காட்சி, ஸாக்ஷாத் பாக்கிய தேவதை அதர்மத்திற்குப் பயந்து மரணசாகரத்தின் கரையில் உயிர்துறக்கப் புலம்புவதுபோல் இருந்தது.- (பக். 177.)

ஸூர்யமுகி, நகேந்திரனுடைய மாளிகையை விட்டு வெளியேறுவதற்கு முன் எழுதிவைத்து விட்டுப் போன லிகிதம், (28 வது அத்தியாயம்) களங்கமற்ற காதலின் தன்மையை நன்றாக விளக்குகிறது. அந்தக் காதல் என்பது என்ன?

ஸூர்யமுகியின்மேல் உனக்குள்ள பற்றுதல் கடலைப்போல் ஆழமானது. அவளிடம் நீ பெற்ற காதல் வானத்தைப்போல் விசாலமானது.- (பக். 198.)

இவை போன்ற பல சிறந்த அமிசங்கள்நிறைந்தஇந்தநூலை,இத்தனைவருஷ காலமாகத் தமிழர்கள் சுவைக்க முடியாமலிருந்ததே யென்பதுதான் நமது விசனம். அந்த விசனத்தை மாற்றி, தமிழிலக்கியக் களஞ்சியத்தில் இந்தப் புது மணியைச் சேர்ப்பித்த ஸ்ரீமான் த. நா. குமாரஸ்வாமி யவர்கட்கும், மெஸர்ஸ் அல்லயன்ஸ் கம்பெனியாருக்கும் தமிழ்நாடு பெரிதும் கடமைப்பட்டிருக்கிறது. ஸ்ரீமான் குமாரஸ்வாமியின் மொழி பெயர்ப்பு, கேவலம் உயிரற்ற மொழி பெயர்ப்பா யிராமல், மூல கிரந்தம்போலவே இருக்கிறது. மூலத்திலுள்ள நயத்தை அப்படியே கொணர்ந்திருக்கிறார். பங்கிம் சந்திரர், தமிழ் மொழியிலேயே இதனை எழுதியிருக்கக் கூடுமோ என்று எண்ணும்படியாக இஃது அமைந்திருக்கிறதென்று சொன்னால் அதுவே நமது அபிப்பிராயத்தைத் தெளிவு படக் கூறினதாகு மல்லவா?

மெஸர்ஸ் அல்லயன்ஸ் கம்பெனியாருடைய பதிப்புகள் எப்பொழுதுமே உயர்ந்த ரகமுள்ளவை. அவற்றில், இந்தப் பதிப்பு முதல் தரமாயிருக்கிறது. தமிழில் எழுத்துப் பிழைகள் இல்லாமல் ஒரு நூலை வெளியிட எவ்வளவு சிரமப் படவேண்டியிருக்கிறதென்பது, அச்சுத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கே தெரியும். எனவே, அல்லயன்ஸ் கம்பெனியாருடைய சிரமத்தை நாம் நன்கு உணர்கிறோம். (170 வது பக்கத்திலுள்ள ஒரே அச்சுப் பிழையை நாம் மறந்து விடவேண்டும்.)

இந்நூலில் காணப்படும் சித்திரங்களைப் பற்றி ஒரு வார்த்தை. நூலில் கூறப்பட்டுள்ள விஷயத்தை வாங்கிக் கொண்டு அதனை அப்படியே உருவகப்படுத்திக் காட்டினால்தான் சித்திரக் காரருடைய சித்திரம் சோபிக்கிறது. நூலின் 72ம் பக்கத்திலிருந்து ஸ்ரீச சந்திரபாபுவின் ஆபீஸ அறையில் நடக்கிற சம்பவங்கள் வருணிக்கப்படுகின்றன. ஆனால் அதை விவரிக்கிற (3-வது) படம் படுக்கை யறையாக இருக்கின்றதே தவிர, ஆபீஸ் அறையாக இல்லை. 154ம் பக்கத்தில் ஹீராவின் அறையில் 'பஞ்சணைமீதுசலவைசெய்த துப்பட்டியை விரித்து' அதன் மீது

தேவேந்திரன் அமர்ந்திருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் அதை யொட்டிய (5ம்) படத்தில், நாற் கட்டி லில்தான் தேவேந்திரன் உட்கார்ந்து காட்சியளிக்கிறான்.

இந்த இரண்டோர் அமிசங்களைத் தவிர, எல்லா வகையிலும் இது சிறந்த நூல். இதனைத் தமிழர்கள் மிக ஆதரவுடன் வாங்கிப் படிக்க வேண்டு மென்பதை நாம் சொல்ல வேண் டுமோ ?

எம். என். ராய்

எழுதியவர்: ஸ்ரீமான் ம. கி. திருவேங் கடம்; பிரசுராலயம்: 54, சைபுல் முல்க் தெரு, கோமளீஸ்வரன் பேட்டை, சென்னை. விலை: இரண்டணா; டபிள்கிர வுன் அளவு 1x16; 32 பக்கங்கள்.

இந்தச்சிறிய புஸ்தகத்திற்கு நாய கராயிருக்கும் எம். என். ராய் ஒரு பெரிய வீரர். அவருடைய பூரண வாழ்க்கையையும் தெரிந்துகொள்ளப் போதிய வசதிகள் கிடைக்காத நிலை யில், இந்தச் சிறிய புஸ்தகத்தைக் கொண்டு நாம் திருப்தியடைய வேண் டியதுதான். பத்திரிகைகளில் அவ்வப் பொழுது வந்த விஷயங்களை ஒழுங்கா கத் தொகுத்துக் கொடுத்திருக்கிறார் ஸ்ரீமான் திருவேங்கடம் இந்தநூலில். நூலின் நடையைப் பார்த்தால் இஃது இவருடைய முதல் பிரயத்தனம் என்று தோன்றுகிறது. ஆனாலும் பாதகமில்லை. 1903ம் வருஷம் வங்க தேச கவர்னராகக் கர்சான் பிரபு இல்லை;(பக்கம் 11)அவர் இந்தியாவின் கவர்னர் ஜெனரலாகத்தான்இருந்தார். இந்தியாவின் தலை நகரம் அப்பொ ழுது, கவர்னர்—ஜெனரல் வசித்துவந்த கல்கத்தாவாக இருந்தது.

பர்மாவில் சோழர் ஜெயஸ்தம்பம்

எழுதி வெளியிட்டவர்: ஸ்ரீமான் சி. நாகையா; கிடைக்குமிடம்: வேதம் கம் பெனி, 89, மோகல் வீதி, ரங்கூன். விலை; இரண்டு அணா; டபிள் கிரவுன் அளவு 1x16. 31 பக்கங்கள்.

ஒரு விஷயத்தைப் பற்றி நிர்ணய மான ஒரு முடிவுக்கு வருவதற்கு முன்னர், அது சம்பந்தப்பட்ட உபய கட்சிகளையும் ஆராய்ச்சி செய்வது தான் அறிஞர்களின் முறைமையுங் கடமையுமாகும். அப்படி ஆராய்ச்சி செய்வதற்கு ஒரு துணையாக இருக் கட்டும் என்ற நோக்கத்தோடுதான் ஸ்ரீமான் நாகையா, இந்தச் சிறிய நூலை இப்பொழுது வெளியிட்டிருக் கிறார் என்று நாம் கருதுகிறோம். ஏனென்றால், பெகுவிலுள்ள சோழர் ஜெயஸ்தம்பத்தைப் பற்றித் தமிழர்க ளிடையே ஒரு பரபரப்பு ஏற்பட் டிருக்கிற இந்தச் சந்தர்ப்பத்தில், கடாரம் பெகுவல்ல என்று ரூபிக்கக் கூடிய ஆதாரங்களைத் தொகுத்துக் கொடுக்கிறாரே என்று இந்த நூலைப் பார்க்கிற சிலர் நினைத்தல் கூடும். அது தவறு. பெகுதான் கடாரம் என்று ஸ்தாபிப்பதற்கு இன்னும் அதிகமான ஆதாரங்கள் தேடுவோருக்கு இந்த நூல் ஊக்கமளிக்கவேண்டும். ஸ்ரீமான் நாகையாவின் நோக்கமும் அது தானென்பது 'பர்மியர்கள் எடுத்துக் காட்டும் ஆதாரங்களைப் பரிசீலனை செய்யவும், சரித்திர ஆராய்ச்சித் துறையில் முனைந்து வேலை செய்யவும் இப்புத்தகம் துணை புரியுமென எண்ணு கிறேன்' என்ற இவரது முகவுரை வாக்கியத்தினால் தெரிகிறதல்லவா?

இதில் ராஜேந்திரசோழன்கொண்ட அயல் நாடுகளைக் காண்பிக்கிற பட மும், ஜெயஸ்தம்பங்கள் இருந்த பட மும், சாஸனப்பட மொன்றும் இருக் கின்றன. நூல் தொகுத்திருக்கிற மாதிரி நன்றாயிருக்கிறது.

புலவர்கள் பட்டபாடு

—முத்துசாமி கார்த்திகேயன்

ஆலிவர் கோல்ட்ஸ்மித் (Oliver Goldsmith) என்பவன் ஓர் ஆங்கிலக் கவி. இவன் காலம் 1728-74. வாழ்க்கையிலே பல கஷ்ட நிஷ்டூரங்களை அநுபவித்தான். இவன் எழுதி வைத்துப் போயிருக்கிற சில நூல்கள் இறவாப் புகழுடையன. உலக அநுபவத்தைச் சித்திரித்துக் கூறுவதில் இவன் மகா நிபுணன். இவனுடைய கட்டுரை யொன்றே இது.

உலகத்திலுள்ள எந்த நாட்டிலே பிறந்தாலுஞ் சரிதான், கவிகளுடைய குணமெல்லாம் ஒன்றாகத் தானிருக்கின்றன. நிகழ்காலத்தை அநுபவிப்பதிலே அதிக ஆசை. எதிர்காலத்தைப்பற்றிக் கவலையேயில்லை. அறிவுள்ளவர்கள் போலவே அவர்களுடைய சம்பாஷணை இருக்கிறது. ஆனால் அவர்கள் செய்யுங் காரியங்களோ மூடர்கள் செய்யுங் காரியங்களைப் போலவே யிருக்கின்றன. ஒரு பூகம்பம்வந்தால் அதைக்கண்டு சிறிதுகூட அசையாமல் நிற்கக்கூடிய மனோதிடம் அவர்களிடத்தில் இருக்கிறது. ஆனால் ஒரு கோப்பை கீழே விழுந்து உடைந்துவிட்டால் துடி துடித்துவிடுகிறார்கள். இந்த மாதிரி முரண்பட்ட குணங்களைக் கவிகளிடத்திலே காணலாம். எந்த முகமாக இவர்களுடைய குணங்களை அலசிப் பார்த்தாலும், அவை பணஞ் சேகரிப்பதற்கு விரோதமாகவே இருக்கின்றன.

மேனாட்டுக் கவிகள், எப்படி அவர்கள் திறமையில் உயர்ந்திருந்தார்களோ அப்படியே தரித்திரத்திலும் ஆழ்ந்திருந்தார்கள். அப்படி யிருந்தும், ஏழைகளுடைய கஷ்ட நிவாரணத்திற்காக ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற ஆஸ்பத்திரிகளில், ஒன்றாவது—ஒரே ஒரு ஆஸ்பத்திரியைத் தவிர—மனம் உடைந்து போயிருக்கிற நூலாசிரியர்களுக்கென்று கட்டப் பட்டதாகத் தெரியவில்லை. இந்த ஒரு ஆஸ்பத்திரியை, போப் அர்பன் VIII என்பவர் கட்டினார். 'வறுமையிலிருந்தோ கவித்துவத்தி லிருந்தோ தீர்க்க முடியாத நோயாளிகள் தங்குமிடம்' என்று இதற்குப் பெயரிட்டார் அவர். முற்காலத்திலோ அல்லது தற்காலத்திலோ இருந்த அல்லது இருக்கிற மேனாட்டுக் கவிகளின் சரிதையைப்பற்றி உண்மையாகச் சொல்லப்போனால், மனிதர்களுடைய கேவல நிலையைப்பற்றி ஆதாரங்கள் சேகரிக்கிற முயற்சியில் நான் ஈடுபட்டிருக்கிறேன் என்று நீங்கள் நினைப்பீர்கள்.

முற்காலத்துப் பிரபல கவிகளில் ஹோமர் முக்கியமானவன். ஆனால் பிச்சைக்காரர்களிலேயும் அவன் முக்கியமானவனா யிருந்தான். அவன் குருடன். தனது கவிகளை வீதிகளிலே பாடிக் கொண்டு சென்றான். அவனுடைய வாயிலே எப்பொழுதும் ரொட்டிக்குப்பதில் கவிகளே நிரம்பி யிருந்தன. வேடிக்கைக்கவிகள் பாடுவதில் கெட்டிக்காரனான ப்ளாவுடுஸ் (Plautus) என்பவனுடைய நிலைமை கொஞ்சம் சுமார். இவன் இரண்டு தொழில்களை நடத்தி வந்தான். பொழுது போக்குக்காகக் கவிபாடினான். வயிற்றுப் பிழைப்புக்காக ஒரு யந்திர சாலையில் வேலை செய்தான். டெரென்ஸ் (Terence) என்ற கவி ஓர் அடிமை. பொய்தியஸ்(Boethius) என்ற கவிஞன் சிறையிலே இறந்து போனான்.

இத்தாலியக் கவிஞர்களிலே பவுலோ போர்க்கீஸ் (Paulo Borghese) என்பவன் ஒருவன். இவன் டாஸ்ஸோ (Tasso) என்ற கவிஞனைப் போலவே பிரசித்தமானவன். இந்தப் போர்க்கீஸுக்குப் பதினொன்று விதமான தொழில்கள் தெரியும். ஆனால் எதிலுமே இவனுக்கு வேலைகப்படாமல் கடைசியில் மரணமடைந்தான். டாஸ்ஸோ இருக்கிறனே அவன் மகா சாத்மீக புருஷன். ஆனால் பிரதி மாத ஜீவனத்திற்கும், யாராவது ஒரு நண்பனிடம் ஒரு சிறு தொகை கடன் வாங்க வேண்டியிருந்தது. இவன் அழகான ஒரு தனிப்பாடலை இயற்றியிருக்கிறன். தன்னுடைய பூனையைப் பார்த்து இவன் இதைப் பாடினன். 'ஒரு மெழுகு வர்த்தியை வாங்கி அதை ஏற்றி அதன் வெளிச்சத்தில் எழுத முடியாத அவ்வளவு பரமதரித்திரனுயிருக்கிறேன். பூனையே! உன் கண் வெளிச்சத்தையாவது கொடு. அதில் எழுதுகிறேன்' என்று அதில் இரந்து கூறுகிறன்.

ஆனால் இவர்களெல்லாரையும் விட, பெண்டிவோக்ளியோ (Bentivoglio) என்ற கவிதான் நமது அநுதாபமனைத்தையும் கவர்ந்துவிடுகிறன். இவன் இயற்றின நாடகங்கள், இத்தாலிய பாஷை உள்ளளவும் இருக்கும். இவன் தன்னுடைய ஐசுவரியத்தை யெல்லாம் தானத்திற்கும் தருமத்திற்குமே செலவழித்தான். ஆனால் இவனுடைய தள்ளாத காலத்தில் தரித்திரம் வந்துவிட்டது. எந்த ஆஸ்பத்திரியை இவன் ஸ்தாபிதம் செய்தானே அந்த ஆஸ்பத்திரியிலேயே இவனுக்குக் கடைசி காலத்தில் இடங்கொடுக்க மறுத்துவிட்டார்கள்!

ஸ்பெயின் தேசத்திலே, ஸெர்வான்டிஸ் (Cervantes) என்ற மகாகவி, பசி நோயினலேயே இறந்து போனன. காமோயென்ஸ் (Camoens) என்பவன் கடைசி நாட்களை ஆஸ்பத்திரியிலேயே கழித்தான்.

பிரான்ஸ் தேசத்தின் பக்கம் திரும்பிப் பார்ப்போம். பொது ஜனங்களுடைய நன்றி மறக்கிற சுபாவத்திற்கு இங்கே அதிகமான உதாரணங்களைக் காணலாம். வவ்கேலாஸ் (Vaugelas) என்கிற புலவன் கௌரவமான எழுத்தாளர்களில் ஒருவன். நாணயமான புருஷன். ஆனல் 'ஆந்தை' என்று இவன் அழைக்கப் பட்டான். ஏனென்றால், கடன்காரர்களுடைய உபத்திரவத்திற்குப் பயந்து பகலெல்லாம் வீட்டிலே ஒளிந்து கொண்டிருப்பான். இராக் காலங்களில்தான் வெளியே புறப்படுவான். இவன் எழுதி வைத்துப் போன கடைசி உயில் மகா பரிதாபகரமானது. தன்னுடைய சொத்துக்களை யெல்லாம் கடன்காரர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்குமாறு சொல்லி விட்டுப் பின் வருமாறு கூறுகிறன்:—

'இன்னும் சில கடன்காரர்களுக்கு அவர்களுடைய பாக்கித் தொகைகள் கொடுபடாமலிருக்கலாம். நான் இறந்துபோன பிறகு, என்னுடைய தேகத்தை நல்ல விலைக்கு ரண வைத்தியர்களுக்கு விற்று, அந்தப் பணத்தைக் கொண்டு, ஜன சமூகத்திற்கு நான் செலுத்த வேண்டிய கடன் தொகைகளைத் தீர்த்து விடவும். ஏனென்றால், நான் உயிரோடிருக்கும்போது ஜன சமூகத்திற்குப் பிரயோஜன முள்ளவனுக இல்லாமற் போனலும், இறந்து போன பிறகாவது உபயோக முள்ளவனுக இருக்கட்டும்.'

காஸண்டர் (Cassandar) என்பவன் அவன் காலத்தில் ஒரு மகா கவியாக இருந்தவன். அவனுடைய திறமையனைத்திற்கும் ஈடாக அவனுக்குச் சாதாரண ஜீவனேபாயங்கூடக்

கிடைக்கவில்லை. கடைசியில், மனித சமூகத்தின் மீதே அவனுக்கு வெறுப்பு ஏற்பட்டு விட்டது. தனது துன்பத்திற்கெல்லாம் காரணம் கடவுளே என்று தூஷிக்க ஆரம்பித்து விட்டான். தனது மரண காலத்தில், பாதிரி வந்து கடவுளுடைய நியாயத்தில் நம்பிக்கை வைத்து அவரிடத்திலிருந்து கருணை வேண்டுமாறு கூறினன். அதற்குக் கவிஞன், 'இந்த உலகத்தில் கடவுள் எனக்கு நியாயம் வழங்கவில்லையென்றால், அடுத்த உலகத்தில் அவரிடமிருந்து அந்த நியாயத்தை நான் எப்படி எதிர்பார்க்க முடியும்?' என்றான். 'கடவுளின் நியாயத்திற்குக் காலஹரணம் ஏற்பட்டிருப்பதற்காக, அந்த நியாயத்தின் உண்மையைச் சந்தேகிக்க முடியாதல்லவா? ஆதலின் உன் தகப்பனும், உனது சிருஷ்டிகர்த்தனும், உனது தோழனுமான கடவுளின் மீது அன்பு கொள்' என்றான் பாதிரி. 'முடியாது; என்னை உயிரோடு எப்படி வைத்திருந்தான் என்பது உனக்குத் தெரியும். (தனது வைக்கோல் படுக்கையைக் காட்டி) இதோ என்னை எந்தமாதிரி சாகவிட்டிருக்கிறு னென்று பார்த்தாயா?' என்றான் கடுமையாகக் கவி.

நமது நாட்டிலே (இங்கிலாந்திலே) தோன்றின ஸ்பென்ஸர் (Spenser) ஓட்வே (Otway) பட்லர் (Butler) டிரைடன் (Dryden) போன்ற கவிகள் பட்ட சிரமங்களைப் பார்க்கிறபோது, மற்றத் தேசங்களிலே கவிஞர்கள் பட்ட கஷ்டங்களெல்லாம் மிகச் சாதாரணமாகவே தோன்றுகின்றன. இவர்களிற் சிலர், ஆபத்தான வறுமையில் வாழ்ந்திருந்தார்கள். இன்னுஞ் சிலர் பசிக்கொடுமை தாங்கமாட்டாமலே இறந்து விட்டார்கள்.

இப்பொழுது இங்கிலாந்திலேயுள்ள கவிகள், தங்களுடைய ஜீவனத்திற்காகப் பெரிய மனிதர்களை நம்பியிருப்பதில்லை. பொது ஜனங்கள்தான் இவர்களுடைய போஷகர்கள். மொத்தமகப் பார்க்கிறபோது, பொது ஜனங்கள் நல்ல எஜமானர்கள்தான். ஒரு நூலாசிரியன் எழுதிய நாடகத்தின் மீது பல வந்தமாகப் புகழைக் கொண்டு புகுத்தலாம். ஆனால் உண்மையான அழகு அதில் இல்லாமற் போனல் அது நாளாவட்டத்தில் அழிந்து விடும். எது சிறந்தது என்பதைக் கண்டு பிடிப்பதற்கு உறை கல் போலிருக்கிற காலம், மோசடியை சீக்கிரத்தில் கண்டு பிடித்து விடும். ஒரு நூலாசிரியனுடைய நூல்களை, பொது ஜனங்கள் பத்து வருஷ காலம் படித்த பிறகுதான், அந்த ஆசிரியன் தான் வெற்றியடைந்ததாகக் கருதிக் கொள்ளலாம்.

தற்காலத்தில், கற்றறிந்த நூலாசிரியன் ஒருவன், தனது நூல்களின் மதிப்பை நன்றாக உணர்ந்து கொள்ள முடியும். இந்த ஆசிரியன் எழுதும் நூல்களை வாங்குகிற ஜன சமூகத்தைச் சேர்ந்த ஒவ்வொருவனும், நூலாசிரியனைச் சன்மானிக்கிறவனாகிறான். நூலாசிரியர்கள் ஒரு சிறு அறையிலேயே வசிக்கிறவர்கள் என்ற பழிச்சொல் இனிச் சொல்லப் பட வேண்டிய அவசிய மில்லை. உண்மையான புலவனொருவன், மனம் வைத்தால் இப்பொழுது பணக்காரனுகலாம். புலமையில்லாதவர்கள் ஒதுக்குப் புறமாக இருப்பது சரிதானே. இகலோகத்திலே அதிகமான பணம் படைத்தவர்கள்என்று தற்காலக் கவிஞர்கள் பெருமை சொல்லிக்கொள்ளாமற் போனலும், தாங்கள் சுதந்திர புருஷர்கள் என்று தைரியமாகச் சொல்லிக் கொள்ளலாம்.

சைக்கிள் யாத்திரை

—சி. டி. வி. ராஜன்

இவர் ஒரு தமிழ் இளைஞர். சிதம்பர வாசி. நல்ல ஊக்கமுள்ளவர். அநுபவம்பெற சைகிளில் உலக யாத்திரை தொடங்கியிருக்கிறார். தமது ஆறாயிரம் மைல் பிரயாண அநுபவத்தைச் சுருக்கமாக இங்கே கூறுகிறார்.

நான் சைக்கிளிலேயே உலகத்தைச் சுற்றிப் பார்க்க வேண்டுமென்னும் நோக்கத்துடன் சிதம்பரத்திலிருந்து இங்கு (ரங்கூனுக்கு) வந்திருக்கிறேன். நான் ஏன் இவ்விதம் செய்கிறேனென்னும் கேள்வி எழலாம். காரணம், உலகிலுள்ள சரித்திர ஸ்தலங்கள், புண்ணிய க்ஷேத்திரங்கள், இயற்கை இடங்கள் முதலியவைகளைப் பார்க்கத்தான். அத்துடன் நம்மிந்தியர்கள் மற்றவர்களுக்கு எவ்விதத்திலும் தாழ்ந்தவர்களல்ல; நம்மாலும் தீர வீரச் செயல்கள் புரிய முடியும் என்பதைப் பிறரறியும்படி செய்ய வேண்டும் என்பது தான்.

நான் இது வரையில் சுமார் 6000 மைல், திருவாங்கூர், கொச்சி, மைசூர், ஹைதராபாத், மத்ய மாகாணம், வங்காளம் முதலிய இடங்களைப் பார்த்திருக்கிறேன். இவைகளில் முக்கியமான சில இடங்களைப் பற்றிச்சுருக்கமாகச் சொல்லுகிறேன்.

சுசீந்திரம்—நாகர் கோவிலுக்கு வடக்கில்கன்னியாகுமரிக்குப்போகும் மார்க்கத்திலுள்ள ஒரு புராதன ஸ்தலம். இங்குள்ள விசேஷமென்னவென்றால் மற்ற இடங்களில் நடப்பதைப் போல் இங்கு அர்த்த ஜாம பூஜை கிடையாது. அஃது இந்திரனால் செய்யப்படுகிறதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் இது விஷயம் அர்ச்சகர்களுக்குத் தான் தெரியும். அவர்கள் தலை போனாலும் கூட இது விஷயம் சொல்லமாட்டார்கள். இது பற்றியே ‘அகங் கண்டது புறஞ் சொல்லேல்’ என்னும் பழமொழி இங்கு வழங்குகின்றது.

கன்னியாகுமரி—கன்னியாகுமரி பிரசித்தமான ஸ்தலம். இந்தியாவின் கோடி முனை. காசிக்குப் போனவர்கள் இங்கு ஸ்நானம் செய்ய வேண்டுமென்று நமது புராணங்கள் கூறும். இங்கு வங்காளக் குடாக் கடல், அரபிக் கடல், இந்து மஹா சமுத்திரம் ஆகிய மூன்றும் ஒன்றாகச் சேருகின்றன. திரிமூர்த்திகளையும் குழந்தைகளாக்கித் திறைச் செய்த கற்பிற் சிறந்த நாரீமணி சதி அனசூயா வசித்திருந்த இடம் இதுதான்.

திருவனந்தபுரம்—திருவாங்கூர் ராஜ்யத்தின் தலை நகரம். இஃது அழகிய பட்டணம். சித்திர கலாசாலை, கௌடையர் அரண்மனை, ஹஜூர் ஆபீஸ், பத்ம நாப ஸ்வாமி கோவில் முதலியன இங்கு பார்க்கத்தகுந்தன. ஆனால் பத்ம நாப ஸ்வாமி கோவிலில் சில ஜாதியாரைத்தான் அனுமதிப்ப துண்டு. ஆனால் சமீபமாக திருவாங்கூர் ராஜ்யத்தில் ஒரு புதிய சகாப்தம் ஆரம்பமாயிருக்கிறது. அதாவது அரசர், பண்டைக்காலப்பெருமை வாய்ந்ததும், மூன்று சமயாசாரியார்களும் சேவித்ததுமான கோவிலை ஹரிஜனங்களுக்குத் திறந்து விட்டிருக்கிறார்.

வைக்கம்—வைக்கம் சத்யாக்ரஹம் என்று கேள்விப் பட்டிருப்பீர்கள். இதற்கு வியாக்ரபுரேசுவரம் என்றும் பெயர். இங்கு வியாக்ரபாதர் என்னும் முனிவர் வசித்ததாகவும், அவர்

மூன்று லிங்கங்கள் வைத்திருந்ததாகவும், வட திசையை நோக்கிக் கொண்டு, வலது கையிலிருந்ததை எத்துமானூரிலும், இடது கையிலிருந்ததை வைக்கத்திலும், மற்றென்றை வாயிலும் வைத்திருந்ததாகப் புராணம் கூறுகிறது.

மைசூர் ராஜ்யம் சுமார் 29, 326 சதுர மைல் விஸ்தீரணமுள்ளது. ஜனத்தொகை சுமார் 6½ கோடி. மைசூரை தெற்கில் காவிரியும், வடக்கில் துங்கபத்திரையும், கிழக்கில் பாலாறும், பெண்ணையும் ஜல சௌக்யமுள்ளதாகச் செய்கிறது.

மே. த. ஸ்ரீ கிருஷ்ண ராஜ உடையார் பகதூர். G. C. S. I. G. B. E. மைசூரின் அரசர். இவர் 1902ல் பட்டமேற்றுர். மன்னருக்கு சந்ததியில்லாததால், யுவராஜாவின் குமாரரான ஜய சாமராஜ உடையாரைத் தனக்குப் பின் பட்டத்துக்கு வரும்படி ஏற்பாடு செய்துள்ளார். மைசூர் 8 ஜில்லாக்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது. அரசருக்கு உதவி செய்ய திவானிருக்கிறர். நிருவாக சபையும் இரண்டு ஜனப்பிரதி நிதி சபைகளும் உண்டு.

மைசூர்—இது அழகிய பட்டணம். இதனை தோட்ட நகரம் (Garden City) என்று சொல்வதுண்டு. தஸரா சமயத்தில் இந்த ஊரைப் பார்த்தால் கண்களுக்கு ஒரு பெரு விருந்தாகும். கச்சேரி, சாமுண்டேஸ்வரி கோவில் (மஹாராஜாவின் குலதெய்வம்) ஜகன்மோஹன் அரண்மனை, மஹாராஜா கல்லூரி, மிருகசாலை முதலியவை பார்க்கத்தகுந்தன.

ஸ்ரீ ரங்கப் பட்டணம்—மைசூர் சரித்திரத்தில் இவ்வூர் முக்கியமானது. ரயில்வே ஸ்டேஷனுக்கு வடபுறம் சேனை வைத்திருந்த இடம், வைத்யசாலை, திப்பு சுல்தான் சமாதி, ஆங்கிலேய சிப்பாய்களை சிறை வைத்திருந்த நிலவறை, பீரங்கிகள் வைக்குமிடம், ஞாபகஸ்தம்பம், மேற்கே டீ—ஹாவ்ரொண்டு வளைவு (இஃது இப்பொழுது இடிந்து விட்டது) ஸ்ரீ ரங்கநாதஸ்வாமி கோவில், ஹைதர் திப்பு இவர்களின் சமாதிக் கட்டிடம் முதலியவை பார்க்கத் தகுந்தவை.

சிரவண பெலகோலா—ஜைன மதம் உன்னதஸ்திதியிலிருந்த போது இது பிரதான பட்டணம். இதற்கு துவார ஸமுத்திரம் என்னும் பெயருமுண்டு. இங்கு ஒரே கல்லில் செதுக்கப் பட்ட 60 அடி உயரமுள்ள கோமதீசுவர விக்ரஹம் விநோதமானது. இங்குதான் கீர்த்தி வாய்ந்த ஜைன இளவரசனான பத்ரபாகு, தன்னுடைய கடைசி காலத்தில் வந்திருந்து, ஜைன விதிகளின் பிரகாரம் உண்ணு விரதமிருந்து உயிர் துறந்ததாகச் சொல்லப் பட்டுள்ளது.

ஸ்ரீமான் ராஜன்

பேலூர்—இது கொஞ்ச காலம், ஹொய்சள அரசரின் ராஜதானியாகவும், பின் கடைசி விஜய நகர அரச

ரின் பட்டணமாகவும் இருந்தது. அரசர் ஜைனராக இருந்ததாகவும், பின் ராமானுஜர் இவரை ஹிந்து வாக்கினதாகவும், தான் ஹிந்து சமயத்தை தழுவினதற்கும், தென்னிந்திய பாலண்டிய அரசரை ஜயித்ததற்கும் குறியாகவும் ஒரு சிறந்த வேலைப்பாடுள்ள கோவிலைக் கட்டினார். சுவாமி பெயர் சென்ன கேசவர். இங்கு வருஷத்துக்கு மூன்று தினம் ஆதி கர்நாடகர்களை ஆலயத்துள் செல்ல அநுமதிக்கின்றனர்.

ஜோக் நீர் வீழ்ச்சி—(Jog Falls). இது ஷிமோகா நகரத்திலிருந்து சுமார் 90-மைல் தூரத்திலுள்ளது. உலகத்திலுள்ள பெரிய நீர் வீழ்ச்சிகளில் இதுவும் ஒன்று. 900 அடி உயரத்திலிருந்து நீர் வீழ்கிறது. மைசூர் கவர்ன்மெண்டார் பம்பாய் கவர்ன்மெண்டாருடன் சேர்ந்து, இந்த நீர் வீழ்ச்சியிலிருந்து மின்சாரம் உண்டாக்கயோசித்துக்கொண்டிருக்கின்றனர்.

சித்தல் துர்க்கம்—இங்குப் பாண்டவர்கள், சாளுக்கியர்கள், ஹொய்சளர்கள், விஜயநகர அரசர்கள், நாயக்க மன்னர்கள், திப்பு முதலியவர்களுடைய காலத்து வெவ்வேறு சரித்திரச் சின்னங்களிருக்கின்றன. சித்தல் துர்க்கத்திலிருந்து ஒரு மைல் தூரத்தில் மைசூர் சாசன ஆராய்ச்சி இலாகாவால் தோண்டப்பட்ட சில பழைய கோட்டைகளும், சின்னங்களும் தென்படுகின்றன. இவ்விடந்தான் இராஜ குடும்பத்தில் பிறந்து, அநாதையாகத்திரிந்து அனேக கஷ்டங்களனுபவித்து பின் கீர்த்திவாய்ந்த அரசனாய்த் திகழ்ந்த சந்திர ஹாசனின் பிரதான பட்டணமென்று நம் பத்தருந்த ஆதாரமுள்ளது.

விஜயநகரம்—இதன் வெவ்வேறுபாகங்கள் எங்கும் பரவி சுமார் 9-மைல் வரை வியாபிக்கின்றது. இப்பட்டினத்தில் தான் ராமாயணத்தில் சொல்லியுள்ள, கிஷ்கிந்தை, ஹேமகூடம், மாதங்கபர்வதம், சுக்ரீவ குகை என்ற இடங்களிருக்கின்றன. ஒருவர் இங்கு எத்தனை நாள் சுற்றினும் திருப்தியடைய முடியாது. முக்யமாக, ராணி குளிக்குமிடம், அரண்மனை, யானை கட்டுமிடம், நரசிம்ம, கணேச விக்ரஹம், விட்டோபாகோவில், பம்பாபதி கோவில் முதலியவை இங்கு கவனிக்கத்தக்கவை.

ஹைதராபாத் சுதேச இராஜ்யங்களில் பிரதானமானது. 82,698 சதுர மைல் விஸ்தீரணம். மேன்மை தங்கிய நிஜாம்தான் அரசர். 16 ஜில்லாக்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது. ஜில்லாவின் அதிகாரிக்கு தாலுக்தார் என்று பெயர்.

ஹைதராபாத் நகரம்—இந்தியாவில் நான்காவது பெரிய பட்டணம். ஐந்தாவது கோல் கொண்டா அரசரான குதுப்ஷா என்பவர் இந்நகரத்தை ஸ்தாபித்தார். இதன் பழைய பெயர் பாக் நகர். நான்கு சிகரமுடைய சார்மினார்இங்குமிகவும் அழகியது. மற்றும் முக்கியமாகப் பார்க்கத் தகுந்த பால்கனமா அரண்மனை, சௌமஹால் அரண்மனை, ரெஸிடென்ட் பங்களா, மெக்கா மஸ்ஜீத், டவுன் ஹால், உஸ்மானிய ஆஸ்பத்திரி முதலியவை. மேற்கே நான்கு மைலில் கோல் கொண்டா கோட்டை சரித்திரப் பிரியர்களுக்கு நன்கு தெரியும்.

நைஜாம் சாகர்—உலகிலுள்ள பெரிய தண்ணீர்த் தேக்கங்களில் இதுவொன்று. இதனால் எத்தனையோ ஆயிரம் ஏகர்கள் சாகுபடி செய்யப்படுகிறது.

அஜந்தா-எல்லோரா குகைகள்—இந்தியாவில் இதைப்பற்றிக் கேள்விப் படாதவர் வெகு சிலரே. இச்சித்திரங்கள் எவ்வளவு வருஷங்களாக இருக்கின்றனவென்று சொல்லமுடியவில்லை.

இந்தியாவின் வியாபாரம்
—ஒரு வருஷத்தில்

இந்தியா அரசாங்கத்து வர்த்தக இலாகாவினால் வெளியிடப் பெற்றுள்ள 1936-37ம் வருஷ அறிக்கையிலிருந்து திரட்டப் பட்டது.

1936ம் வருஷம் ஏப்ரல் மாதந் தொடங்கி 1937ம் வருஷம் மார்ச் மாதம் முடிகிற ஒரு வருஷகாலத்தில், இந்தியாவிலிருந்து 196 கோடி ரூபாய் பெறுமான பொருள்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றன. அதாவது சென்ற வருஷத்தைவிட (1935—36) 36 கோடி ரூபாய் அதிகம்.

1936—37ம் வருஷத்தில் 125 கோடி ரூபாய் பெறுமான பொருள்கள் வெளிநாடுகளிலிருந்து இந்தியாவுக்கு இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன. அதாவது 1935—36ம் வருஷத்தைவிட 9 கோடி ரூபாய் குறைவு.

ஏற்றுமதியில் 36 கோடி ரூபாய் அதிகம் என்று சொன்னோமல்லவா? என்னென்ன பொருள்கள் அதிகமாக வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கின்றன என்பதைக் கவனிப்போம். பருத்திமட்டும் 10¾ கோடி ரூபாய்க்கு அதிகமாக ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. 8¼ கோடி ரூபாய்க்கு அதிகமான எண்ணெய் வித்துக்களும், 5½ கோடி ரூபாய்க்கு அதிகமான சணலும் ஏற்றுமதியா யிருக்கின்றன. இந்த மூன்று பொருள்கள் மட்டும் சேர்ந்து 24½ கோடி ரூபாய்க்கு மேலாகி விடுகிறதல்லவா? தவிர, 3 கோடி ரூபாய்க்கு தானிய வகைகள் அதிகமாக ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றன. தோல்மட்டும் 1¾ கோடி ரூபாய்க்கு அதிகமாக ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது.

இறக்குமதியில் சுமார் 9 கோடி ரூபாய் குறைவு ஏற்பட்டிருக்கிறதல்லவா? பருத்தி நூலும் அது சம்பந்தப்பட்ட மற்றப்பொருள் வகையிலும் சுமார் 3½ கோடி ரூபாய்க்குக் குறைந்திருக்கிறது. இரும்புச் சாமான்களின் இறக்குமதி வகையில் 1¼ கோடி ரூபாய் குறைந்திருக்கிறது. மோடார் வண்டிகள் இறக்குமதி வகையில் 33½ லட்சம் ரூபாய் குறைந்திருக்கிறது.

தங்கத்தைப் பற்றிக் கொஞ்சம் கவனிப்போம். 1928-29ம் வருஷத்தில் 21 கோடி ரூபாய் பெறுமான தங்கம் இந்தியாவுக்குள் இறக்குமதியா யிருக்கிறது. ஆனால் அதற்குப் பிந்திய வருஷங்களில் இந்த நிலை தலைகீழாக மாறி விட்டது. 1932-33ம் வருஷத்தில் 66-கோடி ரூபாய் பெறுமான தங்கம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆனால் இதற்குப் பின்னர், இந்தத் தங்க ஏற்றுமதி குறைந்து கொண்டு வந்திருக்கிறதென்றே சொல்ல வேண்டும். 1936 37ம் வருஷத்தில் 28-கோடி ரூபாய் பெறுமான தங்கமே ஏற்றுமதி செய்யப் பட்டிருக்கிறது. முந்தின வருஷங்களில் வெள்ளி இறக்குமதி குறைவாகவே இருந்தது. ஆனால் 1936-37ம் வருஷத்தில் 14-கோடி ரூபாய் பெறுமான வெள்ளி இறக்குமதி செய்யப் பட்டிருக்கிறது.

விவசாயப் பொருள்களின் விலைவாசிகள் 1936-37ம் வருஷத்தில் சென்ற வருஷத்தை விட கொஞ்சம்

தூக்கியே இருந்தன வென்று சொல்ல வேண்டும்.

இதற்கு முந்தின வருஷங்களைவிட 1936-37ம் வருஷத்தில் இந்தியாவில் சர்க்கரை உற்பத்தியும், துணிவகைகளின் உற்பத்தியும் அதிகப்பட்டிருக்கின்றன. இதேமாதிரி, சிமிட்டி, எஃகு, காகிதம் முதலியனவும் அதிகமான உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன.

இங்ஙனம் தொழிற்சாலையி லுற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் விலை ஏறுமுகமாக இல்லை. முந்திய வருஷங்களைப் போலவே குறைந்த அளவிலேயே நிற்கின்றன. தொழிற்சாலைகளில் நயமான சரக்குகள் உற்பத்தி செய்யப்படுவதும், உள்நாட்டுப் போட்டியும், இந்த விலைக் குறைவுக்குக் காரணம் என்று சொல்லலாம்.

இந்தியாவில் உற்பத்தியான உலோகப் பொருள்கள்

பர்மா உள்பட இந்தியாவில் 1936ம் வருஷம் மொத்தம் என்னென்ன உலோகப்பொருள்கள் எவ்வளவு எவ்வளவு உற்பத்தியா யிருக்கின்றன என்பதைப்பற்றிய புள்ளி விவரங்கள் வருமாறு:—

நிலக்கரி-பெட்ரோல்

பூமியிலிருந்து தோண்டி எடுக்கப்பட்ட பொருள்களில் முக்கியமானவை இரண்டு. அவையே நிலக்கரியும் பெட்ரோலும். நிலக்கரி 22,500,000 டன்னும், பெட்ரோல் 335,000,000 காலனும் உற்பத்தியா யிருக்கின்றன. நிலக்கரியின் உற்பத்தி மதிப்பு சுமார் 6½ கோடி ரூபாய். நிலக்கரிச்சுரங்கங்களில் வேலை செய்வோர் மொத்தம் 182,000 பேர். சுரங்கங்களில் வேலை செய்து கொண்டிருக்கிறபோது உயிரிழந்தவர்கள் 435 பேர்.

பெட்ரோல் மொத்த உற்பத்தியில் சுமார் 65,000,000 காலன் அஸ்ஸாம் மாகாணத்திலிருந்து கிடைத்தது.

தங்கம்--வெள்ளி

பிரஸ்தாப வருஷத்தில் 333,385½ அவுன்ஸ் தங்கம் உற்பத்தியா யிருக்கிறது. இதன் மதிப்பு சுமார் 306,00,000 ரூபாய். கோலார் தங்கச் சுரங்கங்களில் வேலை செய்வோர் சுமார் 23,000 பேர். இவர்களில் 14,600 பேர் பூமிக்குக்கீழிருந்தே வேலை செய்கிறவர்கள். கோலார் தங்கச் சுரங்கங்களிலேயே 25,000 அவுன்ஸ் வெள்ளி தோண்டி எடுக்கப்பட்டிருக்கிறது. இதன் மதிப்பு சுமார் 34 ஆயிரம் ரூபாய்.

இரும்பு

சுமார் 10 லட்சம் ரூபாய் பெறுமான 25 லட்சம் டன் இரும்பு பூமியிலிருந்து கிடைத்திருக்கிறது. இரும்புச் சுரங்கங்கள் பெரும்பாலும் சிங்க்பும், பீஹார், க்யோன்ஜ்ஹார், மயூர்பஞ்ச் முதலிய பிரதேசங்களில் இருக்கின்றன.

காரீயம் சுமார் 1,540,000 டன் கிடைத்திருக்கிறது. இந்த வருஷம், காரீயம் வெளிநாடுகளுக்கு அதிகமாக ஏற்றுமதி செய்யப் பட்டிருக்கிறது.

ஈயம் செம்பு முதலியன

சுமார் 172 லட்சம் ரூபாய் பெறுமான 73,000 டன் ஈயம் கிடைத்திருக்கிறது. இவற்றில் பெரும்பாகம் பர்மாவிலுள்ள ஷான் பிரதேசத்திலிருந்து தான் கிடைத்திருக்கின்றது.

பீஹார் மாகாணத்தில் 7200டன் செம்பு கிடைத்தது.

இவை தவிர, மாங்கனீஸ், மைகா, தகரம் முதலியனவும் ஆங்காங்கு கிடைத்தன.



அறிவுத்துறை

வாயுமண்டலத்தின் உயரமென்ன?

"விஞ்ஞான போதகர்"

வாயு மண்டலத்தின் உயரத்தை 'உ' என்ற எழுத்தால் குறிப்பிடுவோம். பிரான்சு தேசத்துச் சிறிய ஒரு முக்கோண அளவின் காற்றின் கனம் 0,0012. ஆனால் அதே அளவைக் கொண்ட ரசம் 13.6 ஆகிறது.

உ உயரமுள்ள வாயுவின் கனம் $=2\times 0.0012$ கிராம். அதைத்தாங்கும் $2\frac{1}{2}$ அடி ரசக் கம்பத்தின் கனம் $=76\times 13.6$ கிராம்.

இதனால் $உ\times .0012=76\times 13.6$

$$\therefore\ உ = \frac{76\times 13.6}{.0012} = 861{,}200 \text{ c. m.}$$

$$= 5\tfrac{3}{8} \text{ மைல்}$$

கணக்கின்படி, வாயுவின் கனம் சராசரி .0012 கனமாக வைத்துப் பார்த்தால் வாயு மண்டலம் சுமார் $5\frac{1}{2}$ மைல் உயரம் வரை பரவியிருப்பதாக அறிகிறோம்.

ஆனால் இமய முடி எவரெஸ்ட் சிகரம் வரையிலும் மாந்தர் போய் வந்திருக்கிறார்கள். இது சுமார் $5\frac{1}{2}$ மைல் உயரத்திலிருந்தும் அங்கு மூச்சுவிட காற்றிருக்கத்தான் செய்கிறது. ஆனால்

அங்குக் காற்றுவெகு சொல்பமாயிருப்பதால் பூமியில் பிராண வாயு கிடைக்க ஒரு தரம் மூச்சு வாங்க ஏற்பட்டால் அங்கே நான்கு முறை மூச்சு வாங்க வேண்டுமாம். மேலும் வாயுமண்டலத்தின் அமுக்கும்பலம் பூமியிலுள்ளபலத்திற்கு நான்கில் ஒரு பாகந்தானுள்ளதாம். அதாவது அங்கு ரசக் கம்பம் கொண்டு சென்றால் அது சுமார் $7\frac{1}{2}$ அங்குல உயரமாக நிற்கிறதாம்!

வாயு மண்டலத்தை எதிர்த்துப் பலர் பலவிதமாய் 'படை யெடுத்து'ச் சென்றிருக்கின்றனர். படத்தில்காட்டி



யிருக்கும் மலை இமயம். அதற்கடுத்திருப்பது ஜலத்திலிறங்கும் ஆகாய விமானம். இது 1924-ல் $7\frac{1}{3}$ மைல் உயரம் பறந்து போயிருக்கிறது. அதற்கு மேலே தோன்றுவது ஆகாய விமானம். இது 1932ல் $8\frac{1}{4}$ மைல் உயரம் பறந்து சென்றிருக்கிறது. அதற்கு மேலிருப்பது ஓர் புகைக் கூடு. 1931ல் பெல்ஜியத்திலிருந்து பிக்கார்ட் (Piccard) என்பவர் இப் புகைக் கூட்டில் $10\frac{1}{2}$ மைல் உயரமும் அதற்கடுத்துத் தோன்றும் புகைக் கூட்டில் 1933-ல் ருஷ்யா தேசத்திலிருந்து புரோகோபீப் என்பவர் $11\frac{1}{2}$ மைல் உயரமும் சென்று வந்திருக்கின்றனர். ஆகவே இது வரை மனிதர் சுமார் 12 மைல் உயரம் வரை வாயு மண்டலத்தில் பிரயாணம் செய்து வந்திருக்கின்றனர். ஆனால் மனிதரல்லாமல் வெறும் புகைக் கூடுகள் மாத்திரம் தானாகவே சுமார் 23 மைல் உயரஞ் சென்று பின் வெடித்துப் போயிருக்கின்றன. இவ்விதமான புகைக் கூடுகளில் பல சாஸ்திரக் கருவிகளை வைத்து வாயு மண்டலத்தின் சீதோஷ்ணம், அழுத்தும் பலம், வாயுவின் வேகம் முதலியவற்றைக் காட்டுவான் வேண்டி எவ்வளவு தூரம் போக வேண்டுமோ அவ்வளவுக்குத் தகுந்த ஜல வாயுவை ஏற்றி அனுப்பி விடுவார்கள். கூடுகள் மேலே போய்க் கொண்டிருக்கும்போது அதிலுள்ள கருவிகள் தானாகவே மேற் கூறிய சீதோஷ்ணம் முதலியவற்றைக் குறிப்பிட்டுக் கொள்ளும். பின்பு கூடு வெகு தூரஞ் சென்று விம்மி வெடித்தவுடன் குடை ஒன்று விரிந்து கருவிகளை எங்காவது பூமியிற்கொண்டு சேர்க்கும். அக்கருவிகளைக் கண்டு அருகிலுள்ள தபாலாபீஸுக்குக் கொண்டு சேர்ப்பவர்களுக்குத் தகுந்த சன்மானம் என்று கருவியின் மீது எழுதியிருக்கும். தபால் மூலம் கடைசியில் அனுப்பியவரிடம் வந்தடையும். இவ்விதமான சிறிய புகைக் கூடுகள் முதன் முதலாக 1809-ல் ஆரம்பிக்கப்பட்டுப் பின்பு

1874—ல் அதிகமாக உபயோகிக்கப்பட்டன.

புகைக் கூடுகள் உபயோகமாகுமுன் வாயுமண்டலத்தின் சீதோஷ்ணம், காற்றின் வேகம் முதலியவைகளைத் தெரிந்துகொள்ள, சாதாரண காற்றாடிகளில் சிறிய கருவிகளை வைத்து உயரப் பறக்கவிட்டு வந்தனர். சில சமயம் இரவும் பகலும் பறக்கவிட்டனர். ஆனால் காற்றில்லாக் காலங்களில் காற்றாடிகள் பறக்க முடியாது. தற் சமயம் சுமார் 20 அங்குலம் குறுக்களவும், 12 கிராம் கனமுமுள்ள ரப்பா கூட்டில் ஜலவாயுவை அடைத்து மேலே விட்டு விடுகின்றனர். அது காற்றின் வேகத்தால் போய்க்கொண்டிருக்கும்போது தூரதிருஷ்டிக் கண்ணாடிபோன்ற 'தியோடோலைட்' என்னும் கருவியால் அதனைப் பின்பற்றிப் பார்த்து அஃது பூமி மட்டத்திற்குமேல் குறிப்பிட்ட நேரங்களில் உயரத்தில் போவதை அளந்து அதன் வேகத்தையும், திசையையும் கண்டு பிடிக்கின்றனர். அக்கருவியும், புகைக் கூடையும் படத்தில் பார்க்கலாம். ஆகாயத்தில் பறக்கும் கப்பல் தங்கும் இடங்களில் தினந்தோறும் காற்றின் வேகத்தைப் பலதடவை தெரிந்து ஆகாய விமானிகளுக்கு அறிவிக்கப்படுகிறது.

மற்றொன்று. வின் வீழ்கொள்ளிகள், வானத்தில் திடீரென்று எரிந்து பூமியை நோக்கி ஓடிவருவதைப் பார்க்கிறோம். அது நெருப்புப் பிடிப்பதற்குக் காற்றிருக்கவேண்டியதவசியம். அப்பொழுதுதான் அது வேகமாய் ஓடி வரும்போது காற்றோடு உராய்ந்து நெருப்புப் பிடித்துக் கொள்ள முடியும். இவ்வாறு திடீரென்று எரிந்து வெளிச்சம் உண்டாகும் உயரத்தை சுமார் 100-மைல் என்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. நெருப்புப் பிடிக்குமுன் வின் வீழ் கொள்ளி வெகுதூரம் காற்றோடு உராய்ந்து கொண்டே வந்திருக்க வேண்டும். ஆகவே வாயுமண்டலம் சுமார் 100 மைலுக்குச் சிறிது அதிகமான தூரம்வரையிலாவது பரவி நிற்க வேண்டும் என்பது புலனாகிறது.

ஆனால் முன் நாம் கணக்குப் பார்த்தபோது சுமார் 5½ மைல் உயரமென்று கண்டோம். இப்பொழுது குறைந்தது 100 மைல் உயரமென்றும் அறிகிறோம். காரணமென்ன? நாம் கணக்குப் போடும் போது காற்று அது பரவியுள்ள வரை ஒரே கனம் 0.0012 என்று வைத்துப் பார்த்தோம். ஆனால் அது அநுபவத்தில் அவ்வாறல்ல. மேலே போகப்

போக வாயு மண்டலம். இலேசாகிக் கொண்டே போகிறது என்பதை நேரில் கண்டு வந்திருக்கின்றனர். ஆகவே ஒரே அளவுள்ள காற்றின் கனம் மேலே செல்லச் செல்ல குறைந்து கொண்டே போகிறது. இதனாலே தான் உயரத்தில் மேற் கண்ட தாரதம்மியம். 'மெர்க்குரி பரோமீட்டர்' என்ற ரசக் கம்பத்தை உயரக் கொண்டு சென்றால் 1000 அடி உயரத்திற்கு ஒரு அங்குல ரசம் உயரத்தில் குறைந்து காட்டுகிறது. 10½ மைல் உயரம் சென்ற பிக்கார்ட் புகைக் கூட்டில் வைத்துச் சென்ற ரசக் கம்பம் 31 அங்குலம் உயரம் நின்றதாம்.

ரசக் கம்பத்தின் உயரத்தைக் கொண்டு வாயு மண்டலத்தின் உயரத்தைத் தெரிய முடிகிறது. ரசக் கம்பம் மிகவும் கனமானது. இதனை மேலே கொண்டு செல்லுவதில் பல கஷ்டங்கள் உள. பிக்கார்ட் என்பவர் கொண்டு சென்ற ரசக் கம்பம் திடீரென்று உடைந்து அதிலிருந்த ரசம் கூட்டில் விழுந்து அதனைத் துளைத்து அபாயத்தை உண்டு பண்ண விருந்ததாம். இதற்குப் பதிலாக திராவக மில்லாத மற்றொரு கருவியை உபயோகிக்கின்றனர். அது சிறிய 'பாக்கெட்' கெடியாரம் போன்றது.



அதின் உள்ளும் புறமும் படத்தில் காணலாம். உள்ளே வளைந்து வளைந்துள்ள மெல்லிய உலோகப் பெட்டிக்குள் காற்றே கிடையாது. அதன் மீது வாயு மண்டலத்தின் பலம் தாக்கியதும் அப்பெட்டி எளிதில் அமுக்கப் பட்டு அதன் மீது நுட்பமாய் அமைக்கப் பட்டிருக்கும் முள்ளைத் திருப்புகிறது. முள் கோடு வரைந்துள்ள வெள்ளைத் தகட்டின் மீது நகர்ந்து உயரத்தைக் குறிப்பிடுகிறது. இத் தகட்டில் ரசக் கம்பம் உணர்த்தும் உயரத்தை ஒப்பிட்டு வரைந்துள்ளது. இக்கருவி ரசக் கம்பத்தைப் போல சரியான உயரத்தைக் காட்ட முடியா விட்டாலும் சற்றேறக் குறையவுள்ள உயரத்தைக் காட்டக் கூடியது. ஆகாய விமானி, மலையுச்சி செல்வோர் அனேகமாய் இக்கருவியைக் கொண்டு போகின்றனர்.

கால சுபாவத்தை (Weather) முன்னறிவ தெப்படி ?

வாயு மண்டலம் அமுக்கும் அளவைக் கொண்டும் அதன் அதிகரிப்பையும், குறைவையுங் கொண்டு பின்னால் ஏற்படப் போகும் கால சுபாவத்தை ஒருவாறு தெரிந்து கொள்ள முடிகிறது. வாயு மண்டலத்தின் அமுக்கும் பலம் கொஞ்சங் கொஞ்சமாக அதிகரித்துக் கொண்டே போனால் கால சுபாவம் அமைதியாயும், அருமையாயு மிருக்கும். ஆனால் வாயு மண்டலத்தின் பலம் குறைந்து கொண்டு போனால் கால சுபாவம் அடிக்கடி மாறும். காற்றுக் காலமாகி, புயல் முதலியவைகளும் உண்டாகும். மழையு மேற்படும். ஒரு இடத்தில் ஒன்று அல்லது இரண்டு நாளைக்குப் பின் கால சுபாவம் எப்படியிருக்கலாம் என்று தெரிந்து கொள்ள அவ்விடத்தைச்

சுற்றியுள்ள சுமார் 200 அல்லது 300 ஊர்களில் ரசக் கம்பத்தினுல் வாயு மண்டலத்தின் அமுக்கும் பலம் கணிக்கப் படுகிறது. காலை 7 மணி, பகல் 1 மணி, மாலை 6 மணி இவ்வேளைகளில் ஒரே சமயத்தில் எல்லா இடத்திலும் ரசக் கம்பத்தின் உயரத்தைக் கண்டு ஆகாயத் தந்தி மூலம் தலைமை இடத்திற்கு அனுப்பப் படுகிறது. அங்கே ஒரு பெரிய பூகோளப் படத்தில் ஒரே அமுக்கும் பலத்தையுடைய (வாயு மண்டலத்தின்) இடங்கள் எல்லாம் ஒரு கோட்டால் இணைக்கப் படுகின்றன. அப்படி இணைத்த பிறகு அக்கோடு வளைந்து வளைந்து இருக்கும். கடைசியில் ஓரிடம் வட்டமான கோடுகளால் சூழப்பட்டிருக்கும். இந்த இடத்தில் வாயு மண்டலத்தின் அமுக்கும் பலம் குறைந்ததாயுமிருக்கலாம். அதிகமாயுமிருக்கலாம். குறைவாயிருந்தால் அது 'அமுங்கிய' (Depression) பாகம் அதாவது புயலுண்டாகும் பாகம் என்று குறிப்பிடப் படுகிறது. மேலும் பூகோளத்தில் வரையப் படும் கோட்டின் போக்கைக் கண்டு புயலின் மார்க்கத்தையும் காண முடிகிறது.

கால சுபாவத்தை முன்னதாகத் தெரிந்து கொள்ள ரசக்கம்பம் மிகவும் உபயோகமா யிருப்பதுபோலவே இன்னும் பல தினசரி இயற்கை அறிகுறிகளுக்கும் உபயோகப் படுகின்றன.

காற்று நல்ல தன்மையா யிருந்து, பகல் நேரம் மிகவும் வரட்சியா யிருந்தால் இரவில் பூமியிலிருந்து உஷ்ணம் வெளியேறி, குளிர் ஏற்படும். அன்றிரவும் காலையிலும் பனித் துளிகள் சில சமயம் பனிக் கட்டிகள்போல உறைந்து செடி கொடிகள் மீது காணும். பலநாள் இரவில் பனியே யில்லாமல் திடீரென்று ஒரு தினம் பனி ஏராளமாக ஏற்பட்டால் கால சுபாவம் மாறுவதின் அறிகுறியாகும். இவ்விதமாக தினசரி சீதோஷ்ணம், காற்றின் வரட்சி, குளிர்ச்சி இவைகளைக் கண்டு கால சுபாவத்தை நிர்ணயிக்க முடிகிறது.

சூரியன் உதய காலத்திலும், அஸ்தமிக்குங் காலத்திலும் உண்டாகும் நிறங்களைக் கொண்டு வாயுமண்டலத்திலுள்ள நீர்த்துளிகளின் அளவைக் கண்டு பின்வரும் கால சுபாவத்தை உரைக்க முடிகிறது.



சில சமயம் மேகங்களைக் கண்டு கால சுபாவத்தைத் தெரிந்து கொள்ளுகின்றனர். மேகங்களில் 11 விதங்களுண்டு. அவைகளில் அங்குமிங்கும் குவிந்து சில சமயம் வெள்ளை நிறமாய் இருகு

போன்று நீண்டு காணும் மேகம் அசையாது தங்கி யிருக்குமானால் கால சுபாவம் வெகு அருமையாயிருக்கும். ஆனால் அம் மேகங்கள் வெகு வேகமாகப் பாய்ந்து சென்றால் புயல் வருவது நிச்சயம். அவ்வித மேகத்தைப் படத்தில் காணலாம்.

சூரியன் அல்லது சந்திரனைச் சுற்றி வெள்ளை வட்டமிருந்தால் பொதுவாக அது கெட்டகால சுபாவத்திற்கு அறிகுறியாகும். ஆனால் அக்காலங்களில் ரசக் கம்பம் உயர்ந்து காட்டினால் அதாவது வாயுமண்டலத்தின் அமுக்கும் பலம் அதிகமாயிருந்தால் கால சுபாவம் நன்மையா யேற்படலாம்.

சில சமயம் சில பறவைகளும, பூச்சிகளும் நடந்து கொள்ளும் விதங்களைக் கொண்டு கால சுபாவத்தை ஒருவாறு முன்னறியக் கூடும். கால் கை பிடிப்புப் போன்ற வியாதிகள் (Rheumatism) கெட்ட கால சுபாவத்தைக் குறிக்கக் கூடியவை.

வாயுமண்டலத்தின் வாயுக்கள் யாவை?

பிரான்சு தேசத்து லவாய்சியர் போன்ற ரசாயன சாஸ்திர நிபுணர்கள் வாயு மண்டலத்தில் சேர்ந்துள்ள வாயுக்களின் பங்கை ஆராய்ந்திருக்கிறார்கள். அவர்களின் விவரப்படி வாயு மண்டலத்தில்,

100-க்கு 78-பங்கு 'நைட்ரோஜன்' (Nitrogen) என்றதோர் உப்பு வாயுவும்

100-க்கு 21-பங்கு பிராண வாயுவும்

100-க்கு 1-பங்கு 'ஆர்கான்' (Argon) என்றதோர் வாய்வும்

முக்கியமா யிருக்கின்றனவாம். அவைகளோடு ஜல வாயு (Hydrogen), 'நியான்' (Neon), ஹீலியம் (Helium), கிரிப்டான் (Krypton), ஜீனன் (Xenon), கரியமல வாயு, நவசாரம் முதலிய வாயுக்களும் சிறிதளவு கலந்திருக்கின்றனவாம்.

வாயு மண்டலத்தின் உயர்தரத்திற்குத்தகுந்த சீதோஷ்ணத்தையும், அமுக்கும் பலத்தையும் இரண்டு கோடுகளால் படத்தில் காட்டப்பட்டிருக்கின்றன.



இப்படத்தில் கீழே நேர் மட்டக் கோடு உஷ்ணத்தை 20 டிகிரி முதல் குறைவுபட்டு—80 வரை காட்டுகிறது. இடது பக்கமாயுள்ள நேர் உயரக் கோடு வாயு மண்டலத்தின் மைல் உயரத்தைக் குறிப்பிடுகிறது. 20 டிகிரியிலிருந்து புறப்பட்டு வளைந்து போகும் கொடு சீதோஷ்ணத்தையும், அதற்குக் கீழேயுள்ள கோடு அமுக்கும் பலத்தையும் உணர்த்துகின்றன. இவ்விரண்டும் உயரப்போகப் போக சீதோஷ்ணமும், அமுக்கும் பலமும் குறைந்து கொண்டே போவதைக் காட்டுகின்றன. ஆனால் சீதோஷ்ணம் மாத்திரம்—60 டிக்கிரிவரை குறைந்ததற்கப்பால் மெதுவாக அதிகரித்துப் போவதைக் காணலாம். இவ்வதிகரிப்பை சுமார் 25 மைல் வரைதான் சந்தேகமின்றி அறிந்திருக்கிறார்கள். அதற்கப்பால் அதன் நிலையை இது

நமது அரசியல் டைரி

நமது தேசிய வாழ்வில் முத்திரை யிடக்கூடிய சம்பவங்கள் பல அடிக்கடி நடை பெறுகின்றன. இந்தச் சம்பவங்கள், மகா நாடுகளில் நிறைவேற்றப் படுகிற தீர்மானங்களாகவும் இருக்கலாம். அல்லது வேறு ரூபமாகவும் அமையலாம். இவற்றை ஒன்று சேர்த்து வைத்துக் கொள்வதற்கும், பிற்காலத்தில் புரட்டிப் பார்த்து உபயோகப் படுத்திக் கொள்வதற்கும் சௌகரியமில்லாமல், 'எத்தனை விஷயங்களைத்தான் ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருப்பது?'' என்று சலிப்புடன் தங்களுக்குத் தாங்களே பேசிக்கொள்கிற அன்பர்கள் பலர். உதாரணமாக, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூடி சில தீர்மானங்களை நிறைவேற்றுகிறது என்று வைத்துக் கொள்வோம். இரண்டு மூன்று வருஷங்கள் கழித்து, இன்ன தேதியில் இன்ன கூட்டத்தில் இன்ன தீர்மானம் நிறைவேற்றப் பட்டதென்று புரட்டிப் பார்ப்பதற்கு, தமிழ்ப் பத்திரிகை உலகத்தில் போதிய வசதிகள் கிடையாது. இதனை முன்னிட்டு, பிரதி மாதமும் நடை பெறுகின்ற முக்கியமான மகா நாடுகளில் நிறைவேற்றப் படுகிற தீர்மானங்கள், மனதிலே பதித்துக் கொள்ள வேண்டிய மற்ற விஷயங்கள் முதலியவற்றை இந்தப் பகுதியில் திரட்டித் தருவோம்.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி நிறைவேற்றிய தீர்மானங்கள்.

அக்டோபர் மாதம் 29, 30, 31ந் தேதிகளில், கல்கத்தாவில் ஸ்ரீ சரத் சந்திர போஸின் மாளிகையில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் கூடியது. பண்டித ஜவஹர்லால் நேரு தலைமை வகித்தார். அப்பொழுது நிறை வேறின தீர்மானங்கள் வருமாறு:—

1. இந்தியாவின் தவப் புதல்வரான கவிஞர் ரவீந்திர நாத் டாகூர், சமீபத்தில் நோயினின்று குணமடைந்ததற்காக அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தேசத்தை ப்பாராட்டுகிறது. இந்தியாவுக்கும் மனித சமூகத்திற்கும் இன்னும் பல வருஷ காலம் தொண்டு செய்வதற்கு அவர் இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்திருக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறது.

2. 1937ம் வருஷம் மார்ச் மாதம் 18ந் தேதி டெல்லியில் கூடிய அகில

வரை அறிய முடியாததால் சிறு சிறு கோடுகளால் சந்தேகத்துடன் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மேலே போகப் போக வாயு குறைந்து கொண்டே போகிறதென்று கண்டோம். அப்படியானல் வெகு தூரத்திலுள்ள சந்திர மண்டலம் முதலிய இதர மண்டலங்களில் நாமறிந்த வாயு இல்லையென்று தானே அறிய வேண்டும். அப்படியானல் அவ்விடங்களில் உயிர்களிருந்தால் நாமறிந்த உயிர்கள் போல் வசிக்க முடியுமா? இது ஒரு பெரிய கேள்வி.

இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில், எந்தெந்த மாகாண சட்ட சபைகளில் காங்கிரஸ் கட்சியினர் பெரும்பான்மையோராக இருக்கின்றனரோ அந்தந்த மாகாணங்களில் மந்திரிகள் சட்ட வரம்புக்குட் பட்டுச் செய்யும் அரசாங்க நிருவாக காரியங்களில் கவர்னர் தமது விசேஷ அதிகாரங்களை உபயோகிக்க மாட்டாரென்றும், அல்லது தலையிட மாட்டாரென்றும் காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் பகிரங்கமாகச் சொல்ல முடியுமானால் உத்தியோகங்களை ஏற்றுக் கொள்ளலாம் என்று தீர்மானிக்கப்பட்டது. இதன் பிறகு, பிரிட்டிஷ் அரசாங்கத்தாரால் பல அறிக்கைகளும் உறுதி மொழிகளும் சொல்லப்பட்டன. இந்தப் பேச்சுக்களையெல்லாம் பரிசீலனை செய்து பார்த்தும், மார்ச் மாதம் 18ந் தேதி அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தீர்மானத்திற்குப் பிறகு ஏற்பட்ட நிலைமையை உத்தேசித்தும், கவர்னர்கள் தங்கள் விசேஷ அதிகாரங்களை உபயோகிப்பது அவ்வளவு சுலபமாகி விடாதென்று காரிய கமிட்டியார் அபிப்பிராயப் பட்டனர். காங்கிரஸ்காரருடையவும், சிறப்பாகச் சட்ட சபைகளிலுள்ள காங்கிரஸ் கட்சியினருடையவும் அபிப்பிராயங்களை ஆலோசித்துப் பார்த்த பிறகு, காங்கிரஸ் கட்சியினர், எந்தெந்த மாகாணங்களில் மந்திரி சபைகளை அமைக்குமாறு கூறப்படுகிறார்களோ அங்கு அமைக்கலாமென்ற முடிவுக்கு வார்தாவில் ஜூலை மாதம் கூடிய காரியக் கமிட்டி வந்தது. சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்குமானால் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியினுடைய அங்கீகாரத்தை இந்த விஷயத்திலும் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதே காரியக் கமிட்டியின் ஆவல். அதனால் அந்தச் சந்தர்ப்பத்தில், இது விஷயமாக ஒரு முடிவுக்கு வருவதில் தாமத மேற்பட்டால் அது தேச நன்மைக்கு விரோதமாகுமென்று காரியக்கமிட்டி கருதியதால், இதைப்பற்றி உடனே ஒரு முடிவு செய்து விட வேண்டுமென்று தீர்மானித்தது. ஆதலின், காரியக் கமிட்டியின இந்த முடிவை அங்கீகரிப்பதாக இந்தக் கூட்டம் தீர்மானிக்கிறது.

3. சமஷ்டி அரசியலை ஸ்தாபிக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்யப் படுமென்று பிரிட்டிஷ் அரசாங்கத்தார் சார்பாக அறிக்கைகள் வெளியிடப் பெறுவதால் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டமானது, மேற்படி சமஷ்டி திட்டத்தை எதிர்ப்பதுடன் பலமாகக் கண்டிக்கிறது. தேச மகா ஜனங்களுடைய கட்டுப்பாடான அபிப்பிராயத்திற்கு விரோதமாக, இந்த சமஷ்டி திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்படுமானால், அது இந்திய மகா ஜனங்களை எதிர்த்து நிற்பதேயாகும். மாகாண காங்கிரஸ் கமிட்டிகளும் மற்ற ஸ்தல காங்கிரஸ் கமிட்டிகளும், தேச மகா ஜனங்களும், மந்திரிகளும், இந்தச் சமஷ்டி அரசியல் ஸ்தாபிக்கப் படாதபடி தடுக்க வேண்டுமென்று இந்தக் கூட்டம் கூறுகிறது. இந்த சமஷ்டித்திட்டமானது, இந்தியாவுக்கு அதிக பாதகத்தை விளைவிக்கக் கூடியதாகவும், இந்தியாவின் மீது ஏகாதிபத்திய ஆதிக்கம் கொண்டுள்ள பிடிப்பானது இன்னும் கெட்டிப்படுமென்றும் கருதுகிறது. இந்த அபிப்பிராயத்தைச் சட்ட சபைகள் தெரிவித்து இந்தத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வர வேண்டாமென்று பிரிட்டிஷ் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்வதாக மாகாண அரசாங்கங்கள், தீர்மானங்கள் கொண்டு வர வேண்டு

மென்று இந்தக் கூட்டம் தீர்மானிக்கிறது

4. ஜான்ஜிபாரில், இந்தியர்களுடைய உரிமைகளைப் பாதிக்கக் கூடியவாறு அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள உத்திரவுகளை எதிர்த்துப் போராடும் இந்தியர்களை, இந்தக் கூட்டம் பாராட்டுகிறது. ஜான்ஜிபாரிலுள்ள இந்தியர்களின் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, இந்தியாவில் ஜான்ஜிபாரிலிருந்து இறக்குமதியாகும் கிராம்பு வகைகளுக்குத் தடை போட வேண்டுவது அவசியம். ஜான்ஜிபார் அரசாங்கம் தங்களுடைய உத்திரவுகளை ரத்து செய்யாதவரை, ஜான்ஜிபார் கிராம்புகளை உபயோகிக்க வேண்டாமென்று இந்திய ஜனங்களை இந்தக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது. இந்தியா சட்டசபையில் இது சம்பந்தமாக காங்கிரஸ் கட்சியினர் கொண்டுவந்த தீர்மான விஷயத்தில் இந்தியா அரசாங்கத்தார் நடந்து கொண்ட மாதிரியைக் குறித்து இக் கூட்டம் பெரிதும் வருந்துகிறது.

5. டெல்லி காங்கிரஸ் மாகாணத்திலிருந்து மீரத், முஸபர்நகர் ஜில்லாக்களைப் பிரித்து ஐக்கிய மாகாண காங்கிரஸ் மாகாணத்தில் சேர்க்க வேண்டுமென்று இந்தக் கூட்டம் தீர்மானிக்கிறது.

6. வீரேந்திரநாத் சட்டோபாத்யாயா, டாக்டர் அபனிமுகர்ஜீ, மஹேந்திர பிரதாப், பாண்டுரங்க சதாசிவ கனகோஜி, சர்தார் அஜீத் சிங், மௌல்வி உபயதுல்லா, மௌல்வி அப்துல்லாகான், டாக்டர் தாரகாநாத்தாஸ், காஜி அப்துல்வாலிகான், ஆகியோர் உட்பட்ட எல்லா அரசியல் தேசப் பிரஷ்டர்கள் மீது விதிக்கப்பட்டிருக்கும் எல்லாத் தடைகளையும் இந்தியா அரசாங்கம் நீக்க வேண்டுமென்று இந்தக் கூட்டம் கோருகிறது. தேசப்பிரஷ்டர்கள் இந்தியாவுக்குத் திரும்பி வருகிறபோது, அவர்கள் விஷயத்தில் எவ்விதமான அடக்குமுறைகளும் பிரயோகிப்பதில்லையென்று அரசாங்கம் அவர்களுக்கு உறுதி மொழி கொடுக்க வேண்டுமென்று இந்தக் கூட்டம் கோருகிறது.

7. சிட்டகாங்கைச் சேர்ந்த சுமார் இருபதினாயிரம் ஹிந்து இளைஞர்கள் அடையாளச் சீட்டுகள் கூடவே எடுத்துக்கொண்டு போக வேண்டுமென்றும் 14 வயதுக்குமேல் 25 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் டார்ஜீலிங்குக்குள் பிரவேசிக்கக் கூடாதென்று தடையுத்திரவு பிறப்பித்திருப்பதையும் இன்னும் இந்த மாதிரியான அடக்கு முறைகளையுங் கண்டு இந்தக் கூட்டம் பலமாக ஆட்சேபிக்கிறது.

8. விசாரணையில்லாமல் பாதுகாப்பிலே வைக்கப்பட்டிருக்கிற கைதிகளை உடனே விடுதலை செய்யவேண்டுமென்று இந்தக் கூட்டம் கோருகிறது.

9. அந்தமான் கைதிகள் காந்தியடிகளுக்குக் கொடுத்த தந்தியை முன்னிட்டு அவர்களை உடனே விடுதலை செய்ய வேண்டுமென்று இந்தக் கூட்டம் கோருகிறது.

10. பாலஸ்தீனப் பிரிவினையை அராபியர்கள் அங்கீகரிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் பாலஸ்தீனத்தில் அநுஷ்டிக்கிற அடக்கு முறைகளை இந்தக் கமிட்டி பலமாகக் கண்டிக்கிறது. அராபியர்களின் தேசீய சுதந்திரப் போராட்டத்தில் இந்தியர்களின் ஒற்றுமையான அநுதாபம் இருக்கிறது.

11. சைனா மீது ஜப்பான் தொடுத்துள்ள ஏகாதிபத்திய ஆக்ரமிப்புப் போராட்டத்தை இந்த அகில இந்திய காங்கிரஸ் கூட்டம் மிகக் கடுமையாக நோக்குகிறது. வேண்டு

மென்றே செய்யப் படுகிற கொடுமைகளும், சாதாரண ஜனங்கள் மீது வெடி குண்டுகள் எறிவதும் இந்தப் போராட்டத்திலே நடை பெறுகின்றன. தங்கள் தேசத்தின் ஒற்றுமையையும் சுதந்திரத்தையும் காப்பாற்றுவதற்காக பலமான எதிர்ப்புகளுக்கிடையே சீன ஜனங்கள் தைரியமாகவும் வீரமாகவும் போராடுவதை இந்தக் கூட்டம் பாராட்டுவதுடன் தேசிய ஆபத்தை உத்தேசித்து உள்நாட்டு ஒற்றுமை ஏற்படுத்திக் கொண்டதற்காகவும் அவர்களைப் போற்றுகிறது. சீனஜனங்களின் தேசியதுயரத்தில், அ. இ. கா. கமிட்டி தன் அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. அவர்களுடைய சுதந்திரத்தை நிலைநாட்டிக் கொள்வதற்காக அவர்கள் செய்யும் பிரயத்தனங்களில் தன் ஒற்றுமை உணர்ச்சியை இந்தக் கமிட்டி காண்பித்துக் கொள்கிறது. சீனர்களிடத்தில் தங்களுக்கு இருக்கும் அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதற்காக ஜப்பானிய சாமான்களை வாங்க வேண்டாமென்று இந்தக் கமிட்டி இந்திய மகா ஜனங்களைக் கேட்டுக் கொள்கிறது.

12. காங்கிரஸ் கட்சியினர் பெரும்பாலோராகவுள்ள சட்டசபைகளில், தங்கள் அரசாங்கத்தார் இனி எவ்வித பட்டங்கள் முதலியன வழங்க வேண்டாமென்று தீர்மானம் நிறைவேற்றும்படியும், இனித் தாங்கள் எந்தப்பட்டங்களுக்கும் சிபார்சு செய்யப் போவதில்லையென்றும் காங்கிரஸ் மந்திரிகள் சக்ரவர்த்திக்குத் தெரிவித்துவிட வேண்டுமென்றும் இந்தக் கூட்டம் தெரிவிக்கிறது.

13. பாஷை வாரியாக மாகாணங்களைப் பிரிக்க வேண்டுமென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

14. மைசூர் சமஸ்தான அரசாங்கத்தினர் அநுஷ்டிக்கும் அடக்கு முறைகளை இந்தக் கூட்டம் பலமாகக் கண்டிக்கிறது.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் டிசம்பர் மாதக் கடைசியிலோ அல்லது ஜனவரி மாத முதலிலோ கூட்டப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

வார்தா கல்வி மகாநாடு

நமது தேசத்துக் கல்வி முறையை அடியோடு மாற்றியமைக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் வார்தாவில் 22, 23-10-37 தேதிகளில் கல்வி மகாநாடு ஒன்று கூடியது. இதற்கு மகாத்மா காந்தி தலைமை வகித்தார். கல்வித்துறையில் ஈடுபட்டு உழைத்து வருகிற கல்விமான்களும் மாகாணக் கல்வி இலாகா மந்திரிகள் பலரும் மகாநாட்டுக்கு வந்து வாதங்களில் கலந்து கொண்டார்கள். காந்தியடிகள் தயாரித்திருந்த கீழ்க்கண்ட கல்வித்திட்டத்தின் மீது வாதம் நடைபெற்றது:—

"1. தற்போதைய கல்வி முறையானது, தேசத்தின் தேவைகளை எந்த வகையிலும் பூர்த்தி செய்யவில்லை. உயர்தரப்படிப்பு ஆங்கில மொழி மூலமாகக் கற்பிக்கப்படுவதால், மேல் படிப்புப் படித்த ஒரு சிலருக்கும், படியாத பலருக்கும் மத்தியில் நிரந்தரமான ஒரு பிளவு ஏற்பட்டிருக்கிறது. பாமர ஜனங்கள், அறிவைப்பெறுவதற்கு, இந்த ஆங்கிலக் கல்வி முறை தடையாயிருக்கிறது. இந்த ஆங்கில மொழிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து விட்டதன் பயனாக, படித்த வகுப்பார் மீது ஒரு சுமை உட்கார்ந்து கொண்டுவிட்டது. இவர்களுடைய மானஸீக திருஷ்டியே ஆயுள் பூராவும் குன்றிப்போய் விட்டது. தங்கள் சொந்த நாட்டி

லேயே அவர்கள் அந்நியர்களாயிருக்கிறார்கள். கைத்தொழிற் கல்வி போதிக்கப் படாமை காரணமாக, படித்த வகுப்பினரால் எந்தப் பொருளையும் உற்பத்தி செய்யக்கூடிய வகை ஏற்படமுடியாமற் போய்விட்டது. அவர்களுடைய தேக பலத்துக்குத் தீங்கு ஏற்பட்டுவிட்டது. ஆரம்பக் கல்விக்கென்று செலவழிக்கப்படும் பணமானது வீண் செலவேயாகும். ஏனென்றால் போதிக்கப்படுகிற சொற்பமும் உடனே மறந்துவிடப் படுகிறது. தவிர, இந்தப்படிப்பினால் கிராமத்திற்கோ நகரத்திற்கோ எவ்வித பயனும் ஏற்படுவதில்லை. இப்பொழுதுள்ள கல்வி முறையினால் லாபமடைகிறவர்கள், வரி செலுத்துகிறவர்களல்லர். அவர்களுடைய குழந்தைகளுக்கு மிகச் சொற்பமான பயனே கிடைக்கிறது.

2. ஆரம்பப் படிப்பு, ஏழு வருஷப் படிப்பாகச் செய்யப்பட வேண்டும். இப்பொழுதுள்ள மெட்ரிகுலேஷன் வகுப்புப் படிப்புக்குள், பிள்ளைகள் என்ன அறிவைப் பெறுகிறார்களோ அந்த அறிவை இந்த ஏழு வருஷப் படிப்பில் மாணாக்கர்கள் பெற வேண்டும். ஆனால் இங்கிலீஷ் பாடமில்லாமல்; ஒரு கைத்தொழில் பாடம் கூட.

3. பிள்ளைகளினுடையவும் பெண்களினுடையவும் பூரண வளர்ச்சிக்கு அநுகுணமாக, அவர்களுக்களிக்கப்படும் பயிற்சியானது, லாபகரத்தக்க ஒரு தொழிலைக் கற்பிப்பதன் மூலமாக இருக்கவேண்டும். அதாவது கற்பிக்கப்படுகிற தொழிற் கல்வியானது, இரண்டுவித நோக்கங்களைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்க வேண்டும். அதாவது, மாணாக்கன் தான் கற்றுக்கொள்கிற தொழிற்கல்வி மூலமாக, உற்பத்தியாகிற பொருள்களின் விற்பனையால் கிடைக்கிற தொகையைக் கொண்டு தனது பள்ளிக்கூடச் சம்பளத்தைக் கட்டிக் கொள்ள வேண்டும். அதே சமயத்தில் இந்தத் தொழிலின் மூலம் அவன் மனோவளர்ச்சியும் தேக வளர்ச்சியும் பெறவேண்டும்.

மாணாக்கர்கள் சேமிக்கும் இந்தப் பொருளைக் கொண்டு நிலம், கட்டிடம், பள்ளிக்கூட சாதனங்கள் முதலியனவற்றை உரிமைப் படுத்த வேண்டுமென்பது நோக்கமல்ல.

பஞ்சு, பட்டு, கம்பளம் இவை சம்பந்தமான தொழில்கள், பூவேலை, தையல் வேலை, காகித உற்பத்தி, புஸ்தக பைண்டு வேலை, மர வேலை, பொம்மைகள் செய்தல், வெல்ல உற்பத்தி முதலியவைகளெல்லாம், அதிக மூலதனமின்றிச் சுலபமாகக் கையாளப் படலாம்.

இந்த ஆரம்பக் கல்வித் திட்டமானது, மாணாக்கர்களை, அவர்களுடைய பிழைப்புக்கு வழி தேடிக் கொள்ளத் தகுதி செய்து விடும். இவர்கள் எந்தத் தொழிலைக் கற்றுக் கொண்டார்களோ அதில் இவர்களுக்கு வேலை கொடுப்பதாகவோ அல்லது, அரசாங்கத்தார் நிர்ணயிக்கிற விலைப்படி இவர்கள் உற்பத்தி செய்கிற பொருள்களை வாங்குவதாக உறுதி செய்வதன் மூலமாகவோ, எல்லா மாணாக்கர்களுக்கும் ஜீவனோபாயத்திற்கு வழி ஏற்பட்டு விடும்.

4. தேசத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கிற வகையில் உயர்தரக் கல்வியை தனிப்பட்டவர்களுடைய முயற்சிக்கு விட்டு விட வேண்டும்.

அரசாங்கச் சர்வ கலாசாலைகள், வெறும் பரீட்சா ஸ்தாபனங்களாக மட்டும் இருக்க வேண்டும். பரீட்சைகளுக்கு விதிக்கப் படுகிற கட்டணங்

கலைக் கொண்டு, இந்த ஸ்தாபனங்கள் நடை பெற வேண்டும்.

கல்வி சம்பந்தமான எல்லா அமிசங்களையும் சர்வ கலாசாலைகள் மேற்பார்வை செய்யும். பாட திட்டங்களைத் தயாரித்து அவற்றை அங்கீகரிக்கச் செய்யும். சர்வ கலாசாலையின் முன்னுத்தாவின்றி எந்தத் தனிப் பள்ளிக் கூடமும் தொடங்கப் பெறக்கூடாது. சர்வ கலாசாலைச் சாஸனங்கள், திறமைசாலிகள் அடங்கிய எந்த ஒரு கூட்டத்தினருக்கும் தாராளமாகக் கொடுக்கப் பட வேண்டும். பொதுவாக என்ன நோக்க மென்றால், சர்வ கலாசாலைகளினால் அரசாங்கத்திற்கு எவ்வித அதிகச் செலவும் ஏற்படக் கூடாது. ஒரு மத்திய கல்வி இலாகாவுக்கு ஏற்படக் கூடிய செலவே அதற்கு ஏற்பட வேண்டும்.''

இந்தத் திட்டத்தை அடிப் படையாகக் கொண்டு மகா நாட்டுக்கு வந்திருந்தவர்கள் ஒரு கமிட்டியாகக் கூடி வாதஞ் செய்தனர். கடைசியில் பின் வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன :—

1. தேச முழுமைக்கும் கட்டாய ஆரம்பக் கல்வி ஏழு வருஷத் திட்டமாகப் போதிக்கப் படவேண்டுமென்று இந்த மகாநாடு அபிப்பிராயப் படுகிறது.

2. தாய்மொழி மூலமாகப் பாடங்கள் கற்பிக்கப் படவேண்டும்.

3. கைத்தொழில் மூலமாகப் பிள்ளைகளுக்குக் கல்வி போதிக்கப் படவேண்டுமென்ற மகாத்மா காந்தியின் திட்டத்தை இந்த மகாநாடு ஆதரிக்கிறது.

4. இந்தக் கல்வி முறையினால் கிடைக்கும் ஊதியம், நாளா வட்டத்தில், ஆசிரியர்களுடைய சம்பளத்திற்குச் சரிக்கட்டி விடுமென்று இந்த மகாநாடு நம்புகிறது.

இந்தத் தீர்மானங்களின் படி ஒரு கல்வித் திட்டத்தைத் தயாரிக்க கீழ்க் கண்ட அங்கத்தினர்களைக் கொண்டே ஒரு கமிட்டி நியமிக்கப் பட்டது:—

(1) டாகிர் ஜாகிர் ஹுசேன் (தலைவர்) (2) அரியநாயகம் (காரியதரிசி) (3) க்வாஜா குலாம் சையத்தீன் (4) விநோபா பாவே (5) காகா சாஹேப் கலேல்கார் (6) கிஷோர் லால் மஷ்ரு வாலா, (7) ஜே. சி. குமரப்பா (7) ஸ்ரீ கிருஷ்ணதாஸ் ஜாஜு (8) கே. டி. ஷா. (9) ஸ்ரீமதி ஆஷா தேவி.

இவர்கள் மற்ற அங்கத்தினர்களையும் சேர்த்துக் கொள்ளலாம்.

அடுத்த காங்கிரஸ்

குஜராத் மாகாணத்திலுள்ள ஹரிபுரா என்ற கிராமத்தில் கூடும்.
காங்கிரஸ்—1938-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 19, 20, 21 தேதிகளில்.
அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டமும் விஷயாலோசனைக் கமிட்டி கூட்டமும்—1938-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 16, 17, 18 தேதிகளில்.

1937—ம் வருஷத்து நோபல் பரிசுகள்

விஞ்ஞானம் — (1) ஜி. பி. தாம்ஸன்—லண்டன்.
(2) சி. ஜே. டேவிஸன்—நியுயார்க்.

ரசாயனம் — (1) டப்ளியு. என். ஹாவ்வொர்த்—பர்மிங்ஹாம்.
(2) பால் காரெர்—ஜுரிச்.

இலக்கியம் — ஆர். எம். டுகோர்ட்—பிரான்சு.

உலக சமாதானம்—லார்ட் செஸில்—இங்கிலாந்து.

அன்றாட உலகம்



1937

அக்டோபர்

22 வார்தாவில் மகாத்மா காந்தியின் தலைமையில் கல்வி மகா நாடு கூடியது. தமது ஆரம்பக் கல்வித் திட்டத்தை விவரித்து மகாத்மா காந்தி சுமார் 80 நிமிஷம் பேசினார்.

ஜெர்மனியின் பிரிட்டிஷ் ஸ்தானிகராயிருந்தவரும், ஹிட்லரின் நெருங்கிய அரசியல் நண்பருமான வான் ரிப்பன்ட்ராப் என்பவரும், முஸோலினியும் ரோமாபுரியில் கலந்து பேசினார்கள்.

சென்னை மாகாணத்திலுள்ள வேலூரி லிருக்கும் சிறைச் சாலையில் கைதிகளின் உபயோகத்திற்கென்று ரேடியோ அமைக்கப் பட்டிருக்கிறது. இந்தியாவில் ஒரு சிறைச் சாலையில் அமைக்கப்பட்ட முதல் ரேடியோ இதுதான்.

23 1932-34ம் வருஷங்களில் நடைபெற்ற ஒத்துழையா இயக்கத்தின் போது பறிமுதல் செய்யப்பட்ட பொருள்களெல்லாம் அதன் சொந்தக்காரர்களுக்கே திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்று பம்பாய் அரசாங்கத்தார் உத்திரவு பிறப்பித்திருக்கின்றனர்.

ஸ்பெயின் யுத்தத்திலே கலந்து கொண்டுள்ள இத்தாலியர்கள் மொத்தம் நாற்பதினாயிரம் பேரென்று ரோமாபுரியின் உத்தியோக அறிக்கை யொன்று கூறுகிறது.

ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டின் தடை உத்திரவை மீறியதற்காக பெங்களூரில் ஸ்ரீ கே. எப். நாரிமன் கைது செய்யப் பட்டார்.

25 சென்னை நகர சபை உதவி மேயரான ஸ்ரீ பக்தவத்ஸலம், தமது நகர சபை அங்கத்தினர் பதவியை ராஜீநாமா செய்து விட்டார்.

பெங்களூரிலே பொது ஜனங்கள் மீது போலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். சுமார் அறுபது பேருக்குக் காயம்.

ஸ்பெயின் குடியரசு அரசாங்கத்தின் தலைநகரம் இது காறும் வாலென்ஷியாவாக இருந்த தல்லவா? இனி பார்ஸிலோனாவுக்கு மாற்றப்பட்டது,

26 விஜயநகர ராஜாவான ராஜா கஜபதி ராஜா அவர்கள், சென்னையில் இறந்து விட்டார்.

நேற்று பெங்களூரில் கைது செய்யப் பட்ட ஸ்ரீ நாரிமன், உடனே சமஸ்தான எல்லையினின்று வெளியேற்றப் பட்டு இன்று சென்னை வந்தார்,

கல்கத்தாவில் ஸ்ரீ சரத் சந்திர போஸின் மாளிகையில் காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டம் பண்டித ஜவஹர்லால் நேரு தலைமையில் கூடியது.

மகாத்மா காந்தியும் கவி டாகூரும், பல பிரச்னைகளைக் குறித்து கலந்து பேசினார்கள்.

அக்டோபர் மாதம் 23ந் தேதி வரை, சீன-ஜப்பானிய யுத்தத்தில் சுமார் இரண்டரை லட்சம் சீனர்கள் இறந்திருக்கக் கூடு மென்று ஒரு ஜப்பானிய ராணுவ அதிகாரி அபிப்பிராயப்படுகிறார்,

சிறந்த தமிழ்ப் புலவரான ஸ்ரீமான் ச. த. சற்குணர் அவர்களுடைய 60வது

பிறந்த தினக் கொண்டாட்டம் சென்னையில் கொண்டாடப் பெற்றது.

27 அந்தமான் அரசியல் கைதிகள் சம்பந்தமாக மகாத்மா காந்தியும் வங்காள மந்திரிகளும் கலந்து பேசினார்கள்.

28 அத்லாந்திக் சமுத்திரத்தை ஆகாய விமானத்தின் மூலம் கடக்க வேண்டுமென்று லண்டனிலுள்ள க்ராய்டன் ஆகாயவிமான நிலையத்திலிருந்து புறப்பட்ட ஸ்ரீமான் ஜி. பி. நாயர் என்பவர், ஆகாய விமானத்தில் புறப்பட்டு பாரிஸ் நகருக்கு அருகாமையிலேயே விமான மொடிந்து இறந்துவிட்டார்.

29 அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டம் கல்கத்தாவில் பண்டித ஜவஹர்லால் நேருவின் தலைமையில் கூடியது.

30 அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டம் இன்றும் கூடி பல விஷயங்களைப் பற்றி ஆலோசித்தது.

சீன-ஜப்பானிய யுத்தத்தில் அவதியுறும் சீனர்களுக்கு உதவி செய்யும் பொருட்டு பிரபல நாட்டியக்காரரான உதய சங்கர் லண்டனில் ஒரு நாட்டியக் கச்சேரி நடத்தினார்.

31 அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் மூன்றுவது நாள் கூட்டம் இன்று நடைபெற்றது. இதுவே கடைசி நாள் கூட்டம்.

ஜெர்மனி, இத்தலி, ஜப்பான் ஆகிய மூன்று நாடுகளும், சீன யுத்த சம்பந்தமாக ஒரேவித அபிப்பிராயங் கொண்டிருக்கின்றன வென்று ஜப்பான் பத்திரிகைகளில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

சுமார் நாற்பதினாயிரம் தொழிலாளர்கள் கல்கத்தாவில் ஒரு கூட்டமாகக் கூடினார்கள். பண்டித ஜவஹர்லால் நேரு, முதலிய தேசீயத தலைவர்கள் அப்பொழுது பேசினார்கள்.

நவம்பர்

1 திருவாங்கூரில் ஒரு சர்வ கலாசாலை ஸ்தாபிக்கப் படுவதாக இன்று திருவாங்கூர் அரசர் ஒரு சாஸனம் வெளியிட்டார்.

2 திருவாங்கூர் மகாராஜாவின் 26வது பிறந்த தினக் கொண்டாட்டம் இன்று திருவனந்த புரத்திலும், திருவாங்கூர் வாசிகள் இருக்கிற மற்ற இடங்களிலும் கொண்டாடப்பட்டது.

திரு. கே. எப் நாரிமன், பம்பாய் மாகாண காங்கிரஸ் கமிட்டி தலைவர் பதவியினின்று ராஜீநாமா செய்துவிட்டார்.

மகாத்மா காந்தி, இன்று கல்கத்தாவிலிருந்து புறப்பட்டு வார்தாவுக்குச் செல்வதாக இருந்தது. ஆனால் அவருடைய தேக அசௌக்கியங் காரணமாக, பிரயாணம் ரத்து செய்யப்பட்டது.

3 சீன-ஜப்பான் சண்டையைப் பற்றி ஆலோசிக்க ப்ரஸ்ஸெல்ஸில் ஒன்பது வல்லரசுகள் மகாநாடு கூடியது. பெல்ஜிய தேசதது அந்நிய நாட்டு மந்திரி தலைமை வகித்தார். இந்த மகா நாட்டுக்கு ஜப்பான் வரவில்லை.

ஸ்பெயின் சண்டையில் லெரீடா என்ற ஊரில் கலகக்காரப் படையினர் ஆகாய விமான குண்டுகள் எறிந்ததன் பயனாக ஐம்பது குழந்தைகள் இறந்து போயின.

கெனியா பிரதேசத்தில் சுமார் ஆறுயிரம் அபிசீனியர்கள் தஞ்சம் புகுந்திருக்கிறார்கள் என்று காமன்ஸ் சபையில் குடியேற்ற நாட்டு மந்திரி கூறினார்.

ஸ்பெயினில் கலகக்காரர் வசத்திலுள்ள பிரதேசங்களில் பிரிட்டிஷ் ஏஜண்டுகளை நியமிக்கப் போவதாகவும், இதனால் தளபதி பிராங்கோவின் ஆதிக்கத்தை ஏற்றுக் கொண்டதாகா தென்றும் காமன்ஸ் சபையில் பிரதம மந்திரி சேம்பர்லேன் கூறினார்.

4 ப்ரஸ்ஸெல்ஸ் மகா நாடு, சீனவில் தொடுத்திருக்கும் சண்டையை எந்த நிபந்தனைகளைக் கொண்டு நிறுத்த முடியும் என்று ஜப்பானைக் கேட்பதற்கு ஓர் அறிக்கை தயாரிப்பதற்கு ஒரு சிறிய உப கமிட்டியை நியமித்திருக்கிறது.

விண்ட்ஸர் தம்பதிகள் அமெரிக்காவுக்கு வரக்கூடாதென்று அமெரிக்காவிலுள்ள தொழிலாளர் சங்கங்கள் தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பியிருக்கின்றன. இதனால் விண்ட்ஸர் தம்பதிகள் தங்கள் அமெரிக்கா பிரயாணத்தை ரத்து செய்துவிட்டார்கள்.

லார்ட் பால்ட்வினுக்கு, அவருடைய பொதுஜன சேவையைப் பாராட்டி ஒரு தங்கக் கிண்ணம் பரிசளிக்கப்பட்டது.

6 தென்னாட்டில் பிரபல தேசியவாதியாகவும் கூட்டுறவு இயக்கத்தில் அதிக சம்பந்தமுடையவராகவும் இருந்த திரு. ஆதி நாராயண செட்டியார் சேலத்தில் காலமானார். இறக்கும் போது இவருக்கு வயது 53.

சென்னை மாகாண மந்திரி சபையின் மீது தனக்கு நம்பிக்கை இருப்பதாக தமிழ் நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டி ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது,

7 பிஜ்னோர் இடைத் தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகராக நின்ற ஹபீஸ் முகம்மது இப்ராஹிமுக்கு 7127 வாக்குகளும், முஸ்லீம் லீக் அபேட்சகராக நின்ற அப்துல் சமாத் எனபவருக்கு 2102 வாக்குகளும் கிடைத்தன.

8 பெங்களூர் ராஜத்துரோக வழக்கில் சம்பந்தப் பட்ட திரு, கே. டி, பாஷ்யமும் என். சி. திம்மா ரெட்டியும் பதினெட்டு மாதச் சிறை வாசத் தண்டனையும் ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப் பட்டார்கள்.

ப்ரஸ்ஸெல்ஸ் மகா நாட்டில் ஸர் ராமசாமி முதலியார் இந்தியாவின் பிரதிநிதியாக ஆஜராயிருந்தார்.

9 இன்று மகாத்மா காந்தியும் வங்காள கவர்னரான ஸர் ஜான் ஆண்டர்ஸனும் இரண்டு மணி நேரம் கலந்து பேசினார்கள்.

10 சென்னை நகர சபையின் மேயராக திரு ஜே. சிவ ஷண்முகம் பிள்ளை தெரிந்தெடுக்கப் பட்டார். இவர் முதன் முதலாகத்தெரிந்தெடுக்கப்பட்ட ஹரிஜன மேயர்.

திரு ராம்ஸே மாக்டொனால்ட் இறந்து போனார்.

11 சைனாவிலுள்ள மஞ்சள் நதி திடீரென்று வெள்ளப் பெருக்கெடுத்து பல அணைகளை உடைத்து விட்டது. சுமார் பத்து லட்சம் ஜனங்கள் இதனால் வீடு வாசலிழந்து பரிதவிக்கிறார்கள்.

சீனா-ஜப்பான் யுத்தத்தில், ஷாங்காய் நகரம், ஜப்பானியர்கள் வசமாயது.

ஜில்லாக்கள் தோறும் நிறுவப்பட்டிருந்த ஜில்லா பொருளாதாரக் கவுன்சில்களை ரத்து செய்து விடுவதாக சென்னை அரசாங்கத்தார் ஓர் உத்திரவு பிறப்பித்தனர்.

12 அபேத வாதக் கட்சியைச் சேர்ந்த திரு. எஸ். எஸ். பாட்லிவாலா நெல்லூர் ஜில்லா நீதிபதியால் ஆறு மாத வெறுங் காவல் தண்டனை விதிக்கப் பட்டார்.

ப்ரஸ்ஸெல்ஸில் கூடும் ஒன்பது வல்லரசுகள் மகா நாட்டுக்கு ஜப்பான் வர முடியாதென்று சொல்லி விட்டது.

சுமார் 500 ஆரம்பப் பள்ளிக்கூடங்களை புதிதாகத் திறந்து வைக்கப் போவதாக பம்பாய் அரசாங்கத்தார் தெரிவித்திருக்கின்றனர்.

13 கராச்சி மாணக்கர்கள் மகாநாட்டில் திரு. சத்தியமூர்த்தி தலைமை வகித்துப் பேசினார்.

ஷோலாப்பூரில் 144-வது பிரிவுப்படி கூட்டங்கள் முதலியன கூட்டக்கூடாதென பம்பாய் அரசாங்கத்தார் தடையுத்திரவு பிறப்பித் திருக்கின்றனர்.

சென்னை நகரசபைப் பள்ளிக்கூடங்களில் காந்தியடிகளின் படத்தை மாட்டக்கூடாதென்றிருந்த தடை உத்திரவை சென்னை அரசாங்கத்தார் ரத்து செய்து விட்டனர்.

சிறை வாசத்தை அநுபவித்துக் கொண்டிருக்கிற செஞ்சட்டைப் படையைச் சேர்ந்தவ ரனைவரையும் விடுதலை செய்து விடுவதாக வடமேற்கு எல்லைப்புற மாகாண அரசாங்கத்தார் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர்.

ஜப்பானைக் கண்டித்து ஒரு அறிக்கை வெளியிடுவதாக ப்ரஸ்ஸெல்ஸ் மகா நாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

அக்டோபர் மாதம் முடிகிற ஒரு மாதத்தில் சேலம் ஜில்லாவில் மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் 97 குற்றங்கள் கண்டு பிடிக்கப் பட்டன.

14 ஜெருசலத்தில் யூதர்களுக்கும் அராபியர்களுககும் பலத்த கலகம் ஏற்பட்டது. ஆறு பேர் இறந்தனர். 25 பேருக்குக் காயம்.

பஞ்சாப் மாகாணத்தில் பெரிய பூகம்ப அதிர்ச்சி ஏற்பட்டது. இதனால் பல இடங்களில் சேதம்.

15 சென்னைச் சட்ட சபையிலுள்ள காங்கிரஸ்கட்சியினர், சட்டத்தையும்அமைதியையும் நிலை நாட்ட பிரதம மந்திரி கனம் ராஜகோபாலாச்சாரியார் அநுஷ்டித்து வரும் முறைகளில் தங்களுக்குத் திருப்தி யிருப்பதாக ஒரு நம்பிக்கைத் தீர்மானம் நிறைவேற்றினர். 137 பேர் சாதகமாகவும் 4 பேர் விரோதமாகவும் ஓட் கொடுத்தனர்.

ஆமதாபாத் நெசவுத தொழிற்சாலைகளிலுள்ள தொழிலாளர்கள் வேலை நிறுத்தஞ் செய்திருக்கின்றனர்.

சென்னை மவுண்ட் ரோட்டிலிருந்த நீல்சிலை அப்புறப் படுத்தப்பட வேண்டுமென்று சென்னை அரசாங்கத்தார் உத்திரவு பிறப்பித் திருக்கின்றனர்.

சென்னையிலும் சுற்றுப்புற முள்ள பிரதேசங்களிலும் பலத்த மழை.

16 சீன அரசாங்கத்தார் தங்களுடைய தலைநகரத்தை நாங்கிங்கி லிருந்து சூங்கியாங் என்ற ஊருக்கு மாற்றிவிடத் தீர்மானித்தனர்.

பெல்ஜிய அரசரான லியோபோல்ட் இன்று லண்டனுக்கு விஜயஞ் செய்தார். சக்ரவர்த்தி தம்பதிகள் அவரை வரவேற்று உபசரித்தார்கள்.

ஸ்பெயின் கலகக்காரப் பிரதேசத்தில் ஸர் ராபர்ட் ஹாட்ஜ்ஸன் என்பவர் பிரிட்டிஷ் அரசாங்கப் பிரதிநிதியாக நியமிக்கப் பட்டார்.

17 23 தினங்கள் கல்கத்தாவில் தங்கிவிட்டு மகாத்மா காந்தி இன்று வார்தாவுக்குப் புறப்பட்டார்.

16 அபிசீனியா, இத்தாலிய ஏகாதிபத்தியத்தைச் சேர்ந்ததென்கிற சம்பிரதாயத்தை யூகோஸ்லேவியா தேசம் அங்கீகரித்தது.

17 கலகக்காரர் வசத்திலிருக்கும் ஸ்பெயின் பிரதேசத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் ஏஜண்டுகளை நியமனம் செய்தது குறித்து தாங்கள் மிகவும் வருந்துவதாக குடியரசு அரசாங்கத்தார் தெரிவித் திருக்கின்றனர்.

ருஷ்யாவில், தங்கள் அரசாங்கததின் சார்பாக நியமனம் செய்யப் பட்டிருந்த ஸ்தானீகர்களை ஜர்மன் அரசாங்கத்தார் வாபீஸ் வாங்கிக் கொண்டு விட்டனர்.

18 காப்பில் வைக்கப்பட்டிருந்த சுமார் 1100 பேரை விடுதலை செய்திருப்பதாக வங்காள அரசாங்கத்தார் ஓர் அறிக்கை வெளியிட்டனர்.

ஸ்பெயினில் தளபதி பிராங்கோவின் ஆதிபத்தியத்தை ஜப்பான் அங்கீகரித்துக் கொண்டிருக்கிறது.

பாசிஸ்ட் கட்சிக்கு விரோதமாகப் பிரசாரஞ் செய்தவர்களென்று 23 பேர் ரோமாபுரியில் சிறைவாசத் தண்டனை விதிக்கப் பட்டார்கள்.

மகாத்மா காந்தி கல்கத்தாவிலிருந்து வார்தா வந்து சேர்ந்தார்.

19 பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சார்பாக லார்ட் ஹாலிபாக்ஸும், ஹிட்லரும் இன்று, பின்னவருடைய வீட்டில் கலந்து பேசினார்கள்.

20 இத்தாலிய அரசாங்கம், ருஷ்யாவிலுள்ள தனது ஸ்தானீகர் காரியாலயங்களை யெல்லாம் மூடி விட்டது.

சர்வ தேச சர்க்கரை ஒப்பந்தத்தில் இந்தியா அரசாங்கம் கை யெழுத்திட்டு விட்டது.

ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ் 18-11-37ல் கல்கத்தாவினின்று ஆகாய விமானத்தில் புறப்பட்டு இன்று ரோமாபுரிக்கு வந்து உடனே வியன்னாவுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

இரங்கூனில் பிரபல தமிழ்ப் பண்டிதரும் வேதாந்த போதகாசிரியருமாயிருந்த பண்டிதர் கு. பக்கிரிசாமிப் பிள்ளை யவர்கள் இரவு 12-30 மணிக்கு காலமானார்.

21 ஐரோப்பிய யுத்தத்திற்கு முன், தனக்குச் சொந்தமாயிருந்த குடியேற்ற நாடுகள் யாவும் இன்னும் ஆறு வருஷத்திற்குள் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டுமென்று ஹிட்லர் இன்று ஒரு கூட்டத்தில் பேசினார்.

22 லண்டனில் சில முஸ்லீம்கள் கூடி பாலஸ்தீனப் பிரிவினையைக் கண்டித்துப் பேசினார்கள்.

விசுவ விசித்திரம்

காதல் என்பது மனிதர்களுக்கு மட்டுந்தான் உண்டா? இல்லவே இல்லை. அது விசுவ ரூபமுள்ளதல்லவா? ஜீவராசிகள் அனைத்துமே, இந்தக்காதல் வாழ்க்கையை நடத்துகின்றன என்பதற்கு, இங்கே காட்டியுள்ள படங்கள் சரியான சாட்சிகள்.



பட்சிகளின் குலாவல்!

இதில்
ஆண் எதுவென்றும்
பெண் எதுவென்றும்
நன்றாகத் தேரிந்து
கோள்ளலாமே!



நீர் யானைகள் முத்தங்கொடுத்துக் கொண்டிருக்கின்றன!



புலி தம்பதிகள் என்ன பிரமானந்தத்தில் ஆழ்ந்திருக்கின்றன!

ஒட்டைச் சிவிங்கிகளின்
ஆலிங்கனம்!



யானைகள் துதிக்கையால் ஒன்றோடொன்று உராய்ந்து தழுவித் தங்கள் காதலை வெளிப்படுத்திக் கொள்கின்றன !

ஆபரேஷனுக்கு

முன்னே பின்னே

இந்த அம்மாளுக்கு மூக்கு கொஞ்சம் கோணலாக இருந்ததாம். அதற்காக ஆபரேஷன் செய்து கொண்டார். மூக்கு எவ்வளவு ஒழுங்காகி விட்டது பார்த்தீர்களா? இந்த மாதிரியான புது முறை ஆபரேஷன்கள் அமெரிக்காவில் இப்பொழுது நடைபெறுகின்றன. உடம்பிலே எந்த பாகத்தில் கோணல் இருந்தாலும் அதைச்சரிப்படுத்தி விடுகிறார்கள். நமது புராணங்களில் கூறப்பட்டுள்ள அஷ்டாவக்ர முனிவர் இப்பொழுது இல்லாமற் போய்விட்டாரே!

ஜப்பானிலே சிறுவர்களுக்கு ஆகாய விமானங்கள் ஓட்ட, பயிற்சி அளிப்பதற்கு அநேக பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன. ஒரு பள்ளிக்கூடத்தில் ஏழு வயது பையனொருவன், தனது பயிற்சி விமானத்தின் மீது எவ்வளவு மிடுக்காக உட்கார்ந்து கொண்டிருக்கிறான் பார்த்தீர்களா?



[illegible] பசுவைப் பார்த்து ‘கருணை நிறைந்த கவி’ என்கிறார் காந்தியடிகள். இந்தப் படத்தில் அஃது எவ்வளவு பொருத்தமா யிருக்கிறது! இங்கிலாந்திலே யுள்ள எஸ்ஸெக்ஸ் மாகாணத்தில், தாயில்லாத ஒன்பது ஆட்டுக் குட்டிகளுக்கு, ஒரு பசு பால் கொடுத்து வளர்த்து வருகிறது!

அமெரிக்காவில் ஆல்டன் என்ற ஓர் ஊரில் விநோதமான குடும்பமொன்று இருக்கிறது. இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த எல்லாருமே மிக உயரமுள்ளவர்கள். படத்தில், எல்லாருக்கும் உயரமாக இருக்கிறானே அவனைப் பார்த்தீர்களா? அவனுக்கு வயது 18 தான் ஆகிறது. உயரம் என்ன தெரியுமா? $8\frac{1}{2}$ அடி! 435 பவுண்ட் நிறையுள்ளவன்! இவனுக்கு ராபர்ட் வாட்லோ என்று பெயர். இவ்வளவு உயரமாயிருப்பதனால் ஏதேனும் சுகம் உண்டு என்று நினைக்கிறீர்களா? அது மட்டுந் தான் இல்லை. எல்லாரையும் போல் மோட்டாரில் ஏறிப்போக முடியாது, ரெயில் வண்டிகளில் ஏறினால், மேல் சட்டம் தலையிலே இடிக்கிறது! இவனுக்குச் சட்டை முதலியவை தைப்பதற்கு தையற்காரர்கள் மிகச் சிரமப்படுகிறார்கள். ராபர்ட்டினுடைய உள்ளங்கை ஒரு அடி நீளம். மூக்கு இரண்டு அங்குல அகலம். இந்தப் பெரியஉருவத்திற்குத் தகுந்தாற்போல் அதிக ஆகாரமும் இவன் சாப்பிடவேண்டியிருக்கிறது. படத்திலேயுள்ள மற்றவர்கள் இவனுடைய சகோதர சகோதரிகளும் பெற்றோருமாவர்.

மாணவர்கள் பிரதிக்ஞை

——வி. தேவாச்சாரியன்

எக் காரியத்தை மேற்கொண்டாலும், எத் தொழிலில் ஈடுபட்டாலும், அதனைச் செய்து முடிக்கும் வரையில் ஓர் உறுதி வேண்டும். அதற்கென ஓர் பிரதிக்ஞை செய்து கொள்ளல் வேண்டும். பிரதிக்ஞையின் சக்தி சாமான்யமானதல்ல. இறந்தவர்கள் நற்கதியடையுமாறு கங்கையைக்கொணர பகீரதனுடைய பிரதிக்ஞையைப் பாருங்கள். குடும்பத்தில் கலகமில்லா திருக்க பீஷ்மர் கொண்ட சபதம் எத்தகைய வலுவினை யுடையது என்பதை உணருங்கள். வஞ்சனையால் நாட்டைக் கவர்ந்து, தரும பத்தினியான திரௌபதையைத் துகிலுரிந்த காலத்தில், பொறுமையையே விரதமாக உடைய தருமர், சகோதரர்களைப் பார்த்து, 'முன்னம் பொறுத்தீர், இன்னும் பொறும்' என நவின்ற பொருள் பொதிந்த பொன் மொழியின் பயனை பல காலும் துருவித் துருவி ஆராயுங்கள். விரதம், பிரதிக்ஞை, சபதம் என்பன ஒரு பொருட் பன்மொழிகள்.

சுமார் ஐந்து நூற்றாண்டுகளுக்கு மேலாகவே பற்பல நாட்டார்களால் ஆளப்பட்டு அவதியின் வாய்ப்பட்டிருக்கும் நாம், நமது துயரந்தீர, நம் நாடு மேன்மை யடைய, நமது புன்மை யாவும் கழிய மேற்கொள்ள வேண்டிய பிரதிக்ஞை சாமான்யமானதல்ல. நாகரீகம், கைத்தொழில், வியாபாரம் முதலிய துறைகளில் மேம்பாடடைந்திருந்த நாம்,உலகினர் முன் இப்பொழுது கேவலமாக எண்ணத் தகுந்த ஓர் ஜாதியார்களாக எண்ணப்படுவதுடன் நில்லாது, ஒவ்வொரு க்ஷணமும், பிற நாட்டார் நம்மை அடிமை கொள்ளவும், நிரந்தமாக நம் நாட்டை ஆளவும் தகுந்தவர்களாக தத்தம் மனதில் ஓர் ஆசை கொள்ளும் நிலைமையில் நம்மைக் கொண்டுவந்து விட்டோம். நம் நாட்டை அடக்கி ஆளவேண்டுமென்று எண்ணாத நாடுகள், மேல்நாடுகளில் ஒன்றுகூட இல்லை யென்று சொல்லுவது மிகையாகாது. ஆதலின் ஒரே மூச்சில் புத்துணர்ச்சிபெற்று, பூதலத்தோரெல்லாரும் வியக்கும் வண்ணம் எல்லாத் துறைகளிலும் தீவிரமாக மேம்பாடடைய, இனி இந்தியரென்றால் 'இவர் தம் நட்பின்றி இனி வாழமுடியாது', என ஒவ்வொரு நாடும் கருதும் வண்ணம் பலமடைய, கீழ் தேசங்களனைத்திற்கும் ஒப்பற்ற தனிச் செங்கோலோச்சும் நாடாக, இன்று முதல் பின்வரும் பிரதிக்ஞையைச் செய்து கொள்ளுவோமாக:—

1. இந்தியா எனது தாய்நாடு; நான் ஒரு இந்தியன்; இந் நாட்டில் வசிக்கும் அனைவரும் எனது சகோதரர்கள்; இந்தியரின் துன்பம் என் துன்பம்; இன்பம் எனது இன்பம்.

2. என் தாய் நாடு மேம்பாடடைய எடுத்துக் கொள்ளும் எல்லாவித முயற்சிகளிலும் நான் கலந்து கொள்வேன்.

3. என் நாடு முன்னேற்றமடையும் வரையில், என் நாட்டார் வறுமைப் பிணி, அறிவின்மை ஆகிய துயரங்களினின்று விடுபடும் வரையில், நான் என் கவனத்தை வேறு துறைகளில் செலுத்தேன்.

4. என் சபதம் ஈடேறுவதற்கு என் உயிர்வேண்டி யிருப்பினும் நல்குவேன்.

அன்பனே! இச் சபதத்தை மேற்கொள்ள வேண்டியவர்கள் யாவர்? ஒரு தனிப்பட்ட நபரல்ல; தனிப்பட்ட சமூகமல்ல; ஒரு கட்சி மட்டிலுமல்ல; ஆனால் இமயமுதல் கன்னியாகுமரி வரையிலும், இந்திய நாகரீகம் பரவி யிருக்கும் எல்லாவிடங்களிலும், இந்தியர்கள் குடியேறியிருக்கும் ஒவ்வொரு நாடுகளிலுமுள்ள ஒவ்வொரு இந்தியராலும் மேற்கொள்ளவேண்டிய சபதம் இது. துரதிருஷ்ட வசமாக, அறியாமை காரணமாக நமது பாரத சமுதாயம் சிதறுண்டு கிடக்கிறது. சிதறுண்டு கிடக்கும் இப் பாரத சமுதாயத்தை ஒற்றுமைப் படுத்த முன்னணிக்கு வர வேண்டுபவர்கள் யாவர்? விசால ஹிருதய முடையவர்களும், தாராளக் கல்வி முறையைப் பயின்றவர்களும், எந்நலத்திற்கும் மேலாக தேச நலமே பெரிதென எண்ணும் யுவர்களுடைய கூட்டமே என்று சொல்லத் தேவையில்லை. மறைமுகமாக எதையும் பேச வேண்டிய தில்லை. சமயம், சாத்திரம், பழக்கவழக்கம் என்ற கோட்டைகளின்மீது நாம் கவனத்தைச் செலுத்திக் கொண் டிருக்கவேண்டிய தில்லை.

மனித வருக்கத்திற்குப் பூஷணமாக அமையப் பெற்றிருக்கும் அறிவு ஒன்றினுக்கே முதன்மை கொடுப்போம். அதன் தீர்ப்பின்படியே நடப்போம். மணிகளினூடே நூல் செல்லுவதுபோல, சமஸ்த ஜீவராசிகளினூடே சஞ்சரித்துக் கொண்டிருப்பவர் கடவுள். ஆகலின் மனிதரில் பிளவு தேவையில்லை. உயர்வு தாழ்வுகளெல்லாம் சுய நலத்தால் சிருஷ்டிக்கப் பட்டவைகளன்றி வேறல்ல. தாழ்ந்திருப்பவனை எல்லா வகையிலும் முன்னேற்ற மடையும்படி செய்ய வேண்டுவது, உதவ வேண்டுவது உயர்ந்தவர்களுடைய கடமை. இக் கடமையை உணர்ந்து பணி ஆற்றாத வரையில் உயர்ந்தவர்களெனப் படுவோர் உயர்ந்தவர்களுமல்லர்; தாழ்ந்தவர்கள் தாழ்ந்தவர்களுமல்லர்.

நண்பனே! உயர்ந்த கொள்கையைப் பற்றி வானமளாவப் பேசலாம்; மலையத்தனை நூல்களெழுதிவிடலாம்; ஆனால் காரியத்தில் செய்து காட்டுதல் மிகவும் சிரமமானது. நாம்-இளைஞர்களாகிய நாம்—பல நூற்றாண்டுகளாகத் தாழ்மையுற்றிருக்கிற சந்ததியார்களின் வழித் தோன்றல்களாகிய நாம்—இவ் வரிய காரியத்தை மேற்கொள்ளுவோம். இன்னலை அன்புடன் ஏற்போம். தேவையிருப்பின் நமது இலட்சியத்திற்காக உயிரையும் விடுவோம். பாரத சமுதாயம் பிரிக்கப் படாதது, வேற்றுமை அறியாதது என்று உலகமறியச் செய்வோம். மஹம்மதியர்கள் யாவர்? கிறிஸ்துவர்கள் யாவர்? அனைவரும் இந்தியாவில் பிறந்து, இந்தியாவில் வளர்ந்தவர்கள் தானே. ஜெயித்தவர்களது மதம் ஜெயிக்கப் பட்டவர்கள்மீது திணிக்கப் பட்டது. இதைத் தவிர வேறு ஒரு வியாக்கியானமும் இதற்குத் தேவை இல்லையே! விவாஹம், போஜனம், கலப்பு இவைகள் தனிப்பட்ட நபர்களின் மனோ நிலையைப் பொருத்தவைகள். எங்கு அழகுடைய, கல்வியறிவுடைய ஓர் யுவதி இருக்கிறாளோ, அங்கு அழகுடைய, அறிவுடைய ஓர் யுவனது மனம் செல்லுகிறது; மணம் நிகழ்கிறது. வாழ்வு ஆரம்பமாகிறது. இதைத் தவிர ஜாதிக் கலப்பினுக்கு சமாதானம் வேறு வேண்டுவதில்லையே! ஆனால் இவைகள் நிகழ பூர்வாங்கமாக, சில சட்ட சம்பந்தமான ஏற்பாடுகள் செய்ய வேண்டியிருக்கின்றன. அவைகள் எவை? விவ

வல்லரசுகளின் கப்பற் படை பலம்

உலகத்தின் வல்லரசுகளாக இப்பொழுது கருதப்படுகிறவை, அமெரிக்கா, கிரேட்பிரிட்டன், ஜப்பான், பிரான்ஸ், இத்தலி, ஜெர்மனி, ருஷ்யா ஆகியநாடுகளேயாகும். இவைகளில் முதலில் கூறப்பெற்றுள்ள ஆறு நாடுகளும் தங்கள் கப்பல் படையைப் பெருக்கிக் கொண்டு வருவதும், கடைசி நாடான ருஷ்யா ஆகாயப்படை பலத்தைத் விருத்தி செய்து கொண்டு வருவதும் அனைவரும் அறிந்த விஷயமே. வார்சேல் உடன் படிக்கை, ஆயுதப் பரிகரண மகா நாடு, கெல்லாக் உடன் படிக்கை முதலியவைகளை காற்றிலே பறக்க விட்டு விட்டு ஒவ்வொரு தேசமும் தங்கள் தங்கள் ஆயுத பலத்தைப் பெருக்கிக் கொண்டு வருகின்றன. இதில் வேடிக்கையென்ன வென்றால், ஒவ்வொரு நாடும் மற்றொரு நாட்டைக் குறை கூறிக் கொண்டே ஆயுதப் போட்டியில் ஈடுபட்டிருக்கின்றன.

தவிர, எந்தத் தேசத்து ஆயுத பலத்தையும் நாம் நிர்ணயித்துச் சொல்ல முடியாது. ஏனென்றால், ஒரு நாட்டைப் பற்றி மற்றொரு நாட்டார் கூறும் தகவல்கள், அந்த நாட்டாருடைய தகவல்களுக்கு முற்றிலும் விரோதமாயிருக்கிறது. உதாரணமாக, ஜெர்மனியானது, பிரான்சு தான் ஆயுத பலத்தைப் பெருக்கிக் கொண்டு தன்னைத் தாக்கச் சித்தப்படுத்திக் கொண்டிருப்பதாகக் கூறுகிறது, ஆனால், பிரான்ஸோ, இதே பழியை ஜெர்மனியின் மீது சுமத்துகிறது. இந்த நிலையில் எதையும் நிச்சயமாக நாம் நம்பி விடுவதற்கில்லை.

தவிர, இப்பொழுது நாகரிகத்தின் பெயரால், விஞ்ஞானத்துறையின் முன்னேற்றம் என்ற பெருமிதத்தால், ஒரு பெரிய ஜன சமூகத்தையே சில கணங்களில் பஸ்மீகரப்படுத்தி விடக் கூடிய கருவிகள் கண்டு பிடிக்கப்பட்டு வருகின்றன. இந்த மரண சாதனங்களை எங்கெந்த தேசத்தார் எவ்வளவு எவ்வளவு வைத்திருக்கின்றனர் என்பதையும் நாம் திடமாகச் சொல்ல முடியாது. அபிசீனிய யுத்தத்தின் போது, இத்தலி விஷப்புகையை உபயோகித்தது. வெற்றியும் பெற்றதாகச் சொல்லிக் கொள்ளப்படுகிறது. இதனால் இருநாடுகளின் தரைப்படை, கப்பல் படை, ஆகாயப்படை இவைகளின் பலம் என்ன வாயிற்று? இந்தப் படைகளின் எண்ணிக்கையைக்கொண்டு, ஒரு தேசத்தின்

காரத்தில் இனி ஒருவரைக் கூப்பிடும் பொழுது, இன்ன மதம், அதில் இன்ன உட்பிரிவு, இன்ன ஜாதி, இன்ன பட்டம் இத்தகைய உட்பிரிவுகளுடன் உள்ள குறிப்புக்கள் ஒழிய வேண்டும். இந்தியன் ; ஹிந்து, கிறிஸ்தவன் அல்லது மஹம்மதியன், இயற் பெயர் என்று மட்டில் குறிப்பிடல் போதுமானது. ஹிந்து, கிறிஸ்தவன், மஹம்மதியன், என்ற வேற்றுமைகளும் நாளடைவில் ஒழிந்து, இந்தியன் என்ற ஓர் குறிப்பே நிலை நிற்கும் காலம் விரைவில் நிகழ்ந்து விடின் அது மிகவும் போற்றத் தக்கதே. அது வரையில் இம்மாறுதலாவது அவசியம் நிகழ்ந்தே தீர வேண்டும். சகோதர மாணவர்களே! இதன் முக்யத் தன்மையை பலகாலும் சிந்திப்பீர்களாக!

போராடும் சக்தியை அல்லது பிறரை அழிக்கிற சக்தியை நிர்ணயித்துக்கூற முடியாத நிலையில் இப்பொழுது நாம் இருக்கிறோம்.

தவிர, நவீன யுத்தங்களில் மற்றொரு தந்திரமும் கையாளப்படுவதை இங்கு வாசகர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம். உத்தியோக முறையில் யுத்தந் தொடுக்கவில்லை யென்று சொல்லிக் கொண்டே, ஒரு நாடு தன்னைப் பூரணமாகத் தயார் படுத்திக் கொண்டு மற்றொரு நாட்டை திடீரென்று தாக்கி அதனைக் கொலைகளமாக்கி விடுகிறது. ஏதோ ஒரு சிறிய சம்பவத்தை வியாஜமாக வைத்துக்கொண்டு, இந்தக் கொலைத் தொழில் ஆரம்பிக்கப் படுகிறது. உத்தியோக முறையில் யுத்தந் தொடுக்காமலேதான், அபிசீனியாவை, இத்தலி கபளீகரித்துக் கொண்டது. சீனாவிலே ஜப்பான் இப்பொழுது நிகழ்த்துகிற திருவிளையாடலும் இந்த மாதிரிதான்.

முதலில் கூறிய ஆறு வல்லரசுகளின் கப்பற் படை பலம் எவ்வளவு என்பதை மட்டும் கீழே ஒரு படத்தின் மூலம் காட்டியிருக்கிறோம். இது ஒரு கட்சியினர் கூறும் கணக்கு. இதில் முதலில் குறிப்பிடப் பட்டிருப்பது கப்பல்கள் எண்ணிக்கை; அதற்குப் பக்கத்தில் குறிப்பிடப் பட்டிருப்பது இத்தனை டன் நிறையுடையவை என்பது.

	பெரிய கப்பல்கள்	ஆகாய விமானங்கள் தாங்கிச் செல்லும் கப்பல்கள்	க்ருயிஸர் ஏ	க்ருயிஸர் பி	நாசகாரிகள்	நீர் மூழ்கிகள்
அமெரிக்கா (ஐ. மா.)	15 - 464,300	7 - 146,500	19 - 179,150	19 - 160,000	244 - 306,875	104 - 99,015
கிரேட் பிரிட்டன்	17 - 340,730	8 - 171,450	19 - 183,596	34 - 320,040	216 - 260,829	69 - 73,000
ஜப்பான்	9 - 272,000	6 - 80,470	14 - 123,520	26 - 144,325	122 - 151,279	70 - 86,049
பிரான்ஸ்	13 - 306,925	(37,864 1 - 22,144	10 - 108,925	15 - 65,228	91 - 142,520	83 - 83,811
இத்தலி	6 - 156,332	60,000	10 - 94,291	19 - 93,722	11- - 110,944	84 - 60,720
ஜெர்மனி	6 - 121,120	2	2 - 20,000	7 - 42,900	35 - 40,438	36 - 15,500

நமது நிருபர்களுடன்—

இந்தப் பகுதியில், ஆசிரியருடன் வாசகர்கள் தாராளமாகச் சந்திக்கலாம். சிலருக்குக் குறைகள் நிறைய இருக்கும். அவற்றை வாய் விட்டுச் சொன்னால்தான் அவர்களுக்கு ஆறுதல் ஏற்படும். இதுபோல், வேறு சிலர், ஏதேனும் ஆச்சரியமான ஒரு விஷயத்தைப் பார்த்தோ, கேட்டோ விடுவார்கள். அதை வெளியே சொல்லாமற்போனால் அவர்களுக்கு வயிறு வெடித்துப்போகும். இந்தச் சங்கடங்களெல்லாம் ஏன்? நண்பர்கள் மனந்திறந்து பேசுவதற்குத்தான், இந்தப் பகுதி திறக்கப்பட்டிருக்கிறது.

வக்கீலா? வைத்தியரா?

ஐயா,

எங்களூர் பாடசாலையொன்றில், வைத்தியத் தொழில் நல்லதா, அல்லது வக்கீல் தொழில் நல்லதா வென்பதைப்பற்றிப் பெரிய வாதம் ஒன்று நடந்தது. இரண்டு கட்சியிலும் பலர் பேசினார்கள். தலைவர் எழுந்து, இரண்டு தொழிலிலும் சாதக பாதகங்கள் உண்டென்று 'வெண்டைக்காய்' பண்ணி விட்டுப்போய் விட்டார். இதனால் என்னைப் போன்றவர்களுக்கு, எந்தத் தொழில் நல்லதென்ற ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை. தங்களுடைய அபிப்பிராயமென்ன?

—*டி. கே. பஞ்சாக்ஷரம்*

இரண்டு பேரும்—அதாவது வக்கீல்களும் வைத்தியர்களும் சமூகத்தைச் சுரண்டுகிறவர்கள் என்றுதான் நாம் அபிப்பிராயப் படுகிறோம். ஆனால் இதில் முதற் பரிசு வக்கீல்களுக்குத்தான். வக்கீல் தொழிலில் பணம் சம்பாதித்த அரசியல் தலைவர்கள், தங்கள் தொழிலின் மேன்மையைப் பற்றி எவ்வளவு உயர்வாகப் பேசிக்கொண்டு வந்த போதிலும், நமக்கு அந்தத் தொழிலைப் பற்றி ஒரு கௌரவமான எண்ணம் உண்டாகவேயில்லை. வைத்தியர்கள், பணஞ் சம்பாதிக்க வேண்டுமென்பதை பிரதான லக்ஷியமாகக் கொள்ளாமல் ஜனங்களுடைய துயரைப் போக்க வேண்டுமென்பதை முதல் லட்சியமாகக் கொண்டார்களானால் அவர்களிடத்தில் கொஞ்சம் மரியாதை செலுத்த நாம் எப்பொழுதும் தயார். ஆனால் ஸ்ரீமான் பஞ்சாக்ஷரம், அவர்கள், இந்த இரண்டு தொழிலாளர்களிடத்திலும் அடிக்கடி போகாமல், தமது செல்வத்தையும் தேக சுகத்தையும் காப்பாற்றிக் கொள்வது நல்லது.

—*ஆசிரியர்.*

இந்தியா சட்டசபை

ஆசிரியரவர்களே,

டில்லியிலிருக்கும் மத்திய சட்டசபையில் மொத்தம் எத்தனை அங்கத்தினர்கள்? அதில் காங்கிரஸ் அங்கத்தினர்கள் எத்தனைபேர்? சட்டசபைத் தலைவர் யார்? கனம் கிரிக் துரைக்கு மாதம் எத்தனை ரூபாய் சம்பளம் கொடுக்கப்படுகிறது?

—*ஜலோன் தமிழன்.*

இந்தியா சட்ட சபையில் இப்பொழுது மொத்தம் **145** அங்கத்தினர்கள். இவர்களில் சுமார் **45** பேர்தான் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள். சட்டசபைத் தலைவர் ஸர் அப்துர் ரஹீம். கனம் கிரிக் துரைக்கு வருஷம் எண்பதினாயிரம் ரூபாய் சம்பளம்.

—*ஆசிரியர்.*

பிரிட்டிஷ் மந்திரிச் சபை

ஐயா,

இப்பொழுது பிரிட்டிஷ் மந்திரிச் சபையின் தலைவராகவும் பிரதமமந்திரி யாகவும் நெவில்லி சேம்பர்லேன் இருக்கிறாரல்லவா? இவரின் துணை யாகவுள்ள மற்ற மந்திரிகளின் பெய ரென்ன? தற்போதைய பிரிட்டிஷ் மந்திரிச்சபையில் யாரார் இருக்கின் றனர் என்பதைச் சுருக்கமாகத் தெரி ந்துகொள்ள விரும்புகின்றேன்.

—*வி. கே. சுந்தரம்*

ஸ்ரீ பால்ட்வின் **28-5-37**ல் பிர தம மந்திரிப் பதவியை ராஜீ நாமா செய்தார். இதற்குப் பிறகு அமைந்த மந்திரிச் சபை வருமாறு:—

நெவில்லி சேம்பர்லேன்—
பிரதம மந்திரி

சர் ஜான் சைமன்—
போக்கிஷ மந்திரி

சர் சாமியல் ஹோர்—
உள் நாட்டு மந்திரி

அந்தோனி ஈடன்—
அந்நிய நாட்டு மந்திரி

மால்கோம் மாக்டோனல்ட்—
டோமினியன் மந்திரி

வில்லியம் ஆர்ம்ஸ்பி கோர்—
குடியேற்ற நாட்டு மந்திரி

லார்ட் ஜெட்லண்ட்—
இந்தியா மந்திரி

ஆலிவர் ஸ்டான்ஸி—
வியாபார மந்திரி

டப் கூப்பர்—
கடற்கரை மந்திரி

ஹோரே பெலீஷா—
யுத்த மந்திரி

லார்ட் ஸ்விண்டன்—
ஆகாயப் படை மந்திரி

ஸர் தாமஸ் இன்ஸ்கிப்—
பாது காப்பு மந்திரி

லார்ட் ஹாலிபாக்ஸ்—
லார்ட் பிரசிடேண்ட்

லார்ட் ஹேய்ல்ஷாம்—
லார்ட் சான்ஸலர்

லார்ட் டி லாவார்—
லார்ட் பிரிவி சீல்

வால்டர் எலியட்—
ஸ்காத்லாந்த் மந்திரி

சர் கிங்ஸ்லி வுட்—
சுகாதார மந்திரி

லார்ட் ஸ்டான் ஹோப்—
கல்வி மந்திரி

டப்ளியூ. எஸ். மாரிசன்—
விவசாய மந்திரி

ஈ. பிரௌன்—
தொழில் மந்திரி

டாக்டர் இ. பர்கின்—
போக்கு வரவு மந்திரி

லார்ட் ஸ்டான்லி—
உதவி இந்தியா மந்திரி

—*ஆசிரியர்,*

கோலம் போடுவதேன்?

ஐயா,

வீட்டிலே தினந்தோறும் கோலம் போட வேண்டுமென்று பெரியவர் கள் வைத்திருக்கிறார்களே, அது எதற்கு?

—*த. வீராசாமி*

அரிசி மாவினால் கோலம் போட வேண்டுமேன்றுதான் நமது பெரி யோர்கள் ஏற்படுத்தி யிருந்தார்கள். ஆனால் இப்போழுது காரைமாவினால் போடுகிறார்கள்! இந்தக் கோலம் போடுகிற வழக்கத்தை ஏற்படுத்தின

தற்கு இரண்டு நோக்கங்கள் உண்டென்று பெரியோர்கள் சொல்வார்கள். ஒன்று, ஈ, எறும்பு முதலிய ஜீவராசிகளுக்கு, இந்த அரிசி மாவு ஆகார மாகட்டும் என்ற நோக்கம். மற்றொன்று, உயர்தரக் கலைகளாகிய சங்கீதம், சித்திரம் முதலியவைகளில் இயற்கையாகவே ஈடுபடுகிற சுபாவ முடைய ஸ்திரீகள், வகைவகையான கோலங்கள் போட்டு சித்திரப் பழக்கம் பெறட்டும் என்பது நோக்கம். ஆனால் நகரங்களில் வசிக்கிற தாய்மார்கள் இந்த நோக்கங்களை எவ்வளவு தூரம் உணர்ந்திருக்கிறார்களோ தெரியாது.

—*ஆசிரியர்.*

காந்தியடிகள் உடல் நலம்

ஐயா,

மகாத்மா காந்திக்கு, சில தினங்களாக ரத்தக் கொதிப்பு ஏற்பட்டு அதிக களைப்பு ஏற்படுகிறதாகப் பேப்பர்களில் பார்த்து வருகிறேன். இது எனக்கு ரொம்ப கவலையைக் கொடுத்திருக்கிறது. அவருடைய ஜீவிய தசை எவ்வளவுகாலம் என்பதைத் தெரிந்து கொள்ள நான் அதிக ஆஸ்தையுடையவனாக இருக்கிறேன். அவருடைய ஜன்ம நக்ஷத்திரம், லக்கினம் முதலிய விவரங்கள் தெரிந்தால், ஆயுள் பாவத்தைக் கணித்துப் பார்க்கலாமென்று விரும்புகிறேன். ஜோதிஷத்தில் எனக்குக் கொஞ்சம் பழக்கம் உண்டு. ஆகவே, அவருடைய கிரகராசிகளைக் கொஞ்சம் எனக்காகத் தேடி உதவி செய்ய முடியுமா?

—*ஒரு ஜோதிஷ அபிமானி*

இவர் ஜோதிடம் கூறுவதையே தொழிலாகக் கொண்டிருக்க வில்லையென்று கருதுகிறோம். தவிர, மகாத்மாவின் ஜாதகத்தைக் கணித்து இவர் 'மகாத்மா சோதிடரா'கிவிடமாட்டாரென்றும் நம்புகிறோம். ஏனென்றால் தேசத்தில் செல்வாக்குப் பெற்றுள்ள எதையும் வியாபார அநுகூலத்திற்காக உபயோகப்படுத்திக் கொள்கிற காலமாக இருக்கிறதல்லவா இது! காந்தியடிகளின் ஜாதகத்தை, பண்டிதை அசலாம்பிகையம்மையாருடையகாந்தி புராணத்திலிருக்கிற வண்ணம் கீழே குறித்திருக்கிறோம். அன்பர், அடிகளாருடைய ஆயுள் பாவத்தை இதிலிருந்து கணித்து நமக்கு அனுப்புவாரா? ஆனால், மகான்களெல்லாரும் சிரஞ்சீவிகள் தானே!

—*ஆசிரியர்.*

ஜனன காலம்

1869ம் *வருஷம் அக்டோபர் மாதம்* 2ந் *தேதி சனிவாரம் இரவு* 3½ *மணிக்கு மகம் நான்காம் பாதம்.*

தகப்பனார் பெயர் :—*கரம் சந்திர காந்தி.*

தாயார் பெயர் :—*புத்திரிபாய்.*

	குரு		
	இராசி		ராகு
கேது			ல சந்தி
	சனி	புதன் அங்காரா சுக்கிரன்	சூரிய

முஸ்லீம் கவியரசர்—ஸர் முகமது இக்பாலின்

சில பாடல்கள்

1. பாதிரியார் மேடை மீது நிற்கிறார்.
அவர் மகன் பாடசாலையில் படிக்கிறான்.
ஒருவர் வயோதிக காலத்தில் முட்டாள்.
மற்றவனோ—இளமையில் கிழவன்.
பொய் உண்மையை நாடுகிறது.
வெளவால் சூர்யனைக் கேலி செய்கிறது.
இந்த வேடிக்கையைப் பாருங்கள்.

எழுந்திடுக.

2. தற்கால உலகமெனும் கிண்ணத்தில்
நான் பார்ப்பதென்ன?
விஷம்—ஆம்; அதில் பாம்புகள் சுருண்டு கிடக்கின்றன.

எழுந்திடுக.

3. சில சமயம் சிம்மத்தின் இரத்தம்
பல வீனர் தேகத்திலும் ஓடுவதுண்டு.
நீர்த் துளியிலும் நெருப்பின் உணர்ச்சி தோன்றுவதுண்டு.

எழுந்திடுக. —தி. பி.